ன்ன, வன்றவனுரைப்பான்வன்றுயர்முட்சேர்வன்பவக்குழலின்ம
ன்னுயிரை, யொன்றவீழ்த்ததனேடொக்கவீழ்மாயையுண்டெனி
னுண்மைநோக்கில்லை. (கஅ)

பிறப்பெனுமாயைக்களையதாயெங்கும்பிறிவறுபெரும்பொருடே
ன்றி, விறப்புறுமாயைக்கிச்சையேவடிவாமிதனுடைநாசமேவீடு,
சிறப்பில்சங்கற்பஞ்சிதைந்திடிவிதுதான்றேய்ந்திடுஞ்சித்தெனுங்க
திரோன், புறப்படிவிதயவிசும்பில்வாதனையாம்பொங்கிருள்போமெ
னப்புகல. (கக)

கண்டனவனைத்துமாயையேயென்றாய்கண்ணெனுந்தத்துவத்தா
லே, தண்டறவதுதானீங்கொந்துபோமென்றாய்தத்துவமாவதேதெ
ன்ன,வெண்டவனுரைப்பான்காண்பவற்றிடைசென்றெய்திடாதெ
ங்கணுஞ்சமமா, யுள்ளடனலாகிராமமற்றுயர்ந்தவுணர்வுதற்பரம
மாமுணர்வே. (உ0)

இவையெனுமனைத்துஞ்சிற்கனமாகியிறப்பிலாப்பிரமமேயென்று
நவையுறுமனமாங்கற்பனையில்லைகாசமும்பிறவியுமென்று
மவையெலாம்புவனமூன்றினுமில்லையறுவகைவிகாரமுமில்லைக்
கவையறுசமமாங்குறிபெறுமறிவுமாத்திரங்காணநின்றுளதால். ()

கேவலமாகிக்கேவலவொளியாய்க்கேட்றுசுத்தமாய்விரிவா
யோவலிலறிவுமாத்திரமாகிறுதுயவொன்றுமற்றுறி
மேவருமிரதமனைத்தினுக்கோத்துவிகாரமற்றுளபொருளிடத்தே
தாவருந்தனதுநினைவையேவிரும்பித்தன்வயத்தெழுந்ததோரறிவு.

செப்பியவறிவுமுடிவில்சங்கற்பஞ்செய்ததிற்சென்றிடுமிதுதா
னிப்பிரமத்தின்மனமதாமிதனுக்கெண்ணிலசத்திகளுளவாகுங்
கப்பிலாதெங்குமிரந்தரஞ்செய்யுங்கடுமையாமிம்மனந்தனிலே
யப்பிலேதோன்றுந்திரைகள்போற்பேதமாகியவல்லபந்தோன்றும்.

உள்ளதுசங்கற்பத்தினற்றோன்றுமுள்ளமற்றதனினலொடுங்குந்
தள்ளருகிற்றலெழுந்ததிக்காமுந்துசமிப்பதுங்காற்றினற்போல
நள்ளுறுபரமமன்றுகாளென்கொடுதன்மனத்துறுபந்த
மெள்ளுமிடமும்பிரிவிலாப்பொருளேயாமெனுமழுத்தமேவீடாம்

மடமையுந்துயருமவயவசிறைநந்தவடிவமுமுடையனுனென்றே,
படர்தருமவற்றிற்கேற்றபன்னடையாற்பாசமும்பந்தமுமுளதாஞ்,
சடமுறுமிவற்றிலேதுமொன்றல்லேன்றசைசரம்பென்புநீர்ல்லே,
ஞடலின்மேலானபரமகானென்னுமுறுதியோர்மாயைசெற்றுணர்
ந்தோர். (௨௫)

நானலாதானவுடன்முதற்பொருளிற்றனெனும்பாவனையாய,
வூனமாமாயையுணர்விலோர்விசிக்கவுள்ளதாமுணர்வுளோர்க்கில
தா,மானதகினைத்ததைம்பொதியியலுமன்னவர்க்கமைச்சர்போல
விளைவி, லானநன்மதியான்முயற்சியாற்போகத்தாசைவாதனையை
வேரறுப்பாய். (௨௬)

என்னுடைமைந்தவென்னுடைநிதிநானிவனவனிதுவதுவென்னு,
மின்னுடைநிலைமையிந்த்ரசாலத்தால்வீங்கியவாதனை யோங்கும்,
நன்னுடைநிலையஞ்ஞானமாநிலைபோய்நாசமாயையிற்கருத்தொழி
வாய், நின்னுடைவடிவிலவற்றைநீயென்றேசிலவிலார்போல்வரு
ந்துவதென். (௨௭)

மூகமாய்ச்சடமாய்ச்சுகாசுகங்களிலேமூழ்கியோர்பயனறவருந்
துந்,தேகமார்தீப்பாரகோவகோவீதோர்சித்திரமிருந்தவாகாணு,யே
கமாய்மெய்யாயிலங்கியபிரமமெங்குமாயிருக்கவுந்தோன்றுச், சோ

கமாய்ப்பொய்யாய்விளங்குரு மாயை[illegible]தோன்றுருதிருக்கவுந்தோன்றும். (௨௮)

படிகநன்மணிகள்பற்றிபாய்நிறங்கள்[illegible]ற்றறப்பற்றும்படிபோல், முடிவறுதொழிலிற்பின்விருப்பின்றிமு[illegible]த்தியென்றருந்தவவசிட்ட, னெடிதுரைத்தலுமேபாத்துவகேளாய்[illegible]றைகுணத்திராகவன்கேட்டு, மடியறுவிதயபங்கயமலர்ந்துவசிட்ட[illegible]னைநோக்கியீதுரைத்தான்.

அற்புதமீதொன்றிருந்தவாறென்[illegible]யம்புயனாள்நூலாலே,வெற்பினம்பிணிப்புண்டறநெரிவதுபோல்வெறும்பொ[illegible]யாமாயையாலுலகம், பற்பலதுயரம்பயில்வதாக்[illegible]ணம்பருவயிர்த்தின்வன்புற[illegible]போ, லுற்பவமிலங்குமதனினுலேற்[illegible]முறுதியையென்றுமீட்[illegible]ணாப்பான். (௩௦)

ஈதுமோரையமென்மனத்துளதாகி[illegible]யலவணனுமன்னன் [பான்
மாதுயரடைந்ததென்னெனக்கேட்பவசிட்டமாமுனியதற்குரைப்
நீதகன்மனத்தாலியற்றலாலந்தச்செயல்பயனுடல்புசித்திலதா
லோதுறுமந்தமன்னனோர்காலிலுபல்வனத்தொருவனாயிருந்து. (௩௧)

இருதயத்துணர்வான்பிதாமகன்குருவாமிராசசூயஞ்செய்வோமென்னக், கருதியமனத்தான்மகத்தினுக்குரியகலப்பைகளனைத்துமுண்டாக்கிச், சுருதிநூல்வழியேசாலையிற்புகுந்துதுறவரைவரித்தருச்சித்து,வருதிறொன்றிமையோர்களைமறைமொழியால்வர[illegible]ழைத்தாரழல்கிளப்பி. (௩௨)

கடவுளர்முனிவர்மறையவர்[illegible]சைகடைப்பிடித்தாரொருவருடன், தொடர்புறநடத்தித் தன்பொ[illegible]ருண்முழுதுந்தொலைவுறத்தானமாவழங்கித், திட்டமுறுமக[illegible]தான்முடித்தபின்பகலுஞ்சென்றதுவிழித்தனனிதனு, விடவி[illegible]னமேதுன்பவின்பங்களெய்துறப்புசிப்பதென்றுணர்வாய். (௩௩)

சித்தனதியல்பு[illegible]ப்பிடக்கேண்மோதிருந்தியலவணன்முன்னெய்தி, வித்தையான்[illegible]யக்கஞ்செய்துளசித்தன்மீண்டுபோயொளித்தனனங்கே, யித்[illegible]றஞ்செயலுங்கண்டுடனிருந்தவெம்மையீதென்னெனவில[illegible]வத்திறல்வேந்துமியாவருங்கேட்பவகத்துணர்ந்துரைத்தனமனை[illegible]ம். (௩௪)

ஈங்கிதுபுகலவிராகவகேட்டிராசசூயத்திலேலவணன்,பாங்குறுமனத்தாற்செருக்குசவாயாரும்பன்னிருவருடம்வன்றுயரிற், றீங்கு

றுவருத்தமுறுதலான்மகவான்[illegible]சனிவின்றொருவனையேவ, வாங்
கவன்சித்தனாகியேலவணற்க[illegible]ந்துயரளித்துமீண்டகன்றான்.(௩௫)

மற்றுமொன்றுரைக்கவள்[illegible]லேகேட்பாய்மடமையாம்பூமியேழ்ப
த[illegible]ா, முற்றுளஞானபூமியேழ்[illegible]பதமாமொழிந்தவிப்பதங்கடம்மிற்று
ம், பற்றுளவாகுமொன்றொன்[illegible]டொன்றளாவிப்பயில்வனபதங்கண்மட்
டிலவா, மற்றமில்சொ[illegible]ரூபநிலைபெறல்வீடாமதினமுவுறுதனுனென
லே. (௩௬)

அடக்கமாயுணர்[illegible]தேமஃதறிந்தவர்க்குமறிகிலாதவர்க்குநற்குறிக,
[illegible]டக்கமில்சன்மாத்திரமதா[illegible]றிவின்சொரூபநின்றசைவிலாதவ
ரோ, விடற்கருங்காமமுதற்பகை[illegible]கடந்தோர்மெய்யறிவிலார்கடப்பரி
யோர், நு[illegible]க்குறுகாட்சிவித[illegible]தில்வீழறிவேநோக்கருஞ்சொரூபத்
தினமுவல். (௩௭)

சொரூபம்விட்டகலன்மோகமாம்வேறுசொல்லிடமுன்புபின்பில்
லை, யொருபொருணிலைவையொழித்துமேலப்பாலொருபொருணி
லைவுதிலக்க, விருபொருணடுவுணிலைவறவிருக்குமிதுசொரூபத்தி
யல்பிதுதான், மருவுகற்பனைமாண்டசைவில்கற்போலாய்வருநனைச்
சுழுத்திதீர்வடிவாம். (௩௮)

நானெனும்பிரிவும்பேதமுமற்றுநல்லறிவாயசையாத [பா
மாண[illegible]நிலையேசொருபமாமுன்சொன்மடமையாம்புவிபதங்கேட்
பீனமாம்வித்துநனவுமேனனவும்பி[illegible]றமாநனவுமந்நனவி
லானதோர்கனவுங்கனவுமிக்கனவிலட[illegible]நனவுஞ்சுழுத்தியுமே. ()

இத்திறமேழுமேகமாய்நெருக்குற்றி[illegible]பெயர்களையெய்துஞ்
சித்திலேநின்றோரறிவுபேரின்றிச்செறி[illegible]மேல்வந்து
வத்தியாநிற்குஞ்சித்தசீவாதிவருபெயர்செய்[illegible]களுக்கிடமாய்
வித்துரூபமதாய்நின்றிடுமதனால்விதை[illegible]வா[illegible]தற்பதமே. (௪0)

இதுவறிவுக்குமுதலவத்தையதாமிதனா[illegible]பிறந்தபின்னிவனு,
னிதுவெனதெனப்பண்டிலாமையானெய்த[illegible]ளுநிறுதியோர
னுவா, மிதுதனையொழியவிவனவனனேயிது[illegible]வென்னதென்றெ
ண்ணு, மிதுமுதற்பிறப்பிற்றொடர்ச்சியாய்[illegible]ருக்குமிந்நிச்சயம்
பெருநனவாம். (௪௧)

அறிந்துளதெனினுமறிகிலாதெனினு மழுந்துறத்தானதுவாகிச்
செறிந்துளநனவிற்சித்தராச்சியமே செய்வதுநனுக்கனவாகு [ப்
மெறிந்தகானலினீர்சுத்திகைவெள்ளி யிருமதியிவைமுதற்பலவாய்
பிறிந்தபேதங்களனவிலேபழகும் பெற்றியாற்கனவுபல்விதமாம். ()

அற்பகாலத்திலனேகமாஞ்செயல்கண்டறிந்தனமெனுங்கனவழிந்து, முற்படுசெயலேநினைவதுகனவாமுந்துகண்டதனைநாளகன்று, பிற்படக்காணும்பொருள்களைமறந்து பெரும்பொழுதுணர்வுறநோக்குஞ், சொற்பனநனவுபோனனவுக்கேதோன்றுமிச்செயல்களு னவே. (௪௩)

அறுவகைபவத்தையகற்றியசீவனடைந்துளவவத்தையினியற்கை
யுறுசடமாகிமேல்வருந்துயர்கூருணர்வுளதாமிதுசுழுத்தி
துறுபுவனங்களிதனிடையிருளிற்றொலைவுறுமிப்பதமேழும்
பெறுவனபேதமொன்றுநூறாகும்பேதமையவத்தையிவ்வேழும்.

வேறு.

ஞானபூமியைமுடிவிற்பேதமாகவிலுவர்வாதிபரவற்றினமக்கு நல்ல, தானதிவையிவையறிதன்ஞானமாகுமறிந்தவிவற்றந்தமேய ழிவில்வீடா, மானமுறுசுபம்விரும்பல்விசாரமெய்தன்மனஞ்சிறுக லுண்மையிலேமன்னிநிற்ற, லீனமறுசங்கற்பமறல்பதார்த்தவிவண ணமறுத்திடறுரியமிவையேழாகும். (௪௫)

இவையறிந்தோர்மோகமெனுமளற்றில்வீழாரிவற்றியலாமுத்திவ ரிலிடர்மீண்டிலிலே; [illegible]மோகத்தொடுகாமடைவதென்னேநல் லோரானன்னூலான[illegible]னச், சுவைபெறுதுகிராசையினலெ ன்றுநாடல்சுபம்விரு[illegible]குமிந்தச்சுபேச்சைமுற்றிக், கவையறு நல்லோரியற்கையா[illegible]ராங்கள் கைவருதல்விசாரமாக்கருதல்வேண் டும். (௪௬)

இனி[illegible]பசுபம்விரு[illegible]லாடுவிசாரமென்றவிரண்டுநிறைதலும்விட யத்திச்[illegible]மார்[illegible], கிளைவுகுவிவதுசித்தஞ்சிறுகலாகுநிகழ்த்தியவிம் மூன்றாலுமெ[illegible]ந்தலனில், வளைதருமவ்விரத்தியினாலுண்மைப் போதமன்னுதலே[illegible]னமைகிலேமருவலாகு, மனையனவிந்நான்காலு முண்மைப்போதத்தழுந்தியற்சங்கமறலசங்கமாகும். (௪௭)

அறைந்தபதமைந்தானுந் தனும்போதத்தழுந் தியவின்பத்தமைவற்புறனுமுள்ளூ, முறைந்த தார்த்தங்கண்மறந்தயலோர்வன்பாலுணர்வதுவேபதார்த்தகினைவொழிதலாகு, நிறைந்தவிவையாறுமுபேதம்போக்கினிலைபெறுதற்சுபாவத்தேகிற்றருனே, மறைந்தபொருள்வெளியாக்குந் துரியமாகு மாசறுசிவனின்முத்தர்வழியீதாகும். (௪௮)

சொன்னதன்மேலுடலிறந்தமுத்தர்மேவுந் துரியாதீதப்பதமாந் துரியச்செல்வந், தன்னுணர்வாற்றனையறிந்தபெருமைசான்றதலைவரெய்தலுறுந் தன்மையாகு, மன்னியவிப்பதமடைந்தசிவன்முத்தர்மகிழ்ச்சிமறுக்கத்தழுந்தாமரையினலே, யன்னியர்சொல்வழிதுயில்விட்டெழுந்தார்போலவடுத்தனசெய்குவர்செய்யாராகிவாழ்வார்

இஞ்ஞானபதமேழுமிகவும்புந்தியெய்தினர்க்கல்லதுதோன்றாவிவற்றையெய்தி, லஞ்ஞானமிலேச்சனேயெனினுந்தேகியேதேகியெனினும்முத்தனையமில்லை, மெய்ஞ்ஞானமென்பதுதான்மனத்தின்கட்டுவிடுதலிதுபெறிலிதுவேவீடுபேறும், பொய்ஞ்ஞானக்கானலினீர்முதலாமோகம் பொய்யெனப்போமடமையும் பொய்யென்னிற்போகும். (௫௦)

தனையறியுநிட்டையுளோர்க்கெய்தலாகுந்தத்துவபூமிகளறிந்ததலைமைமேலோர், வினையவுந்தாழவுமுரியார்பொறிகளென்னுநெடும்பகைவென்றோரழியாநிலையினின்றோர், தனைதருபல்லுயிரிறைஞ்சமேலாய்வாழுஞ்சுரேந்திரருநரேந்திரருந் துரும்பாய்த்தோன்று, மனையபெரும்பதம்பெற்றோரவரேயாகுமல்லாதோர்பவக்கடலிலமிழ்ந்தாகிற்போர். (௫௧)

உளமொடுங்குமுபாயமேயோகமாகுமுணர்வுறுபூமிகளிந்தவுபாயமாகும், வளமிகுமிப்பூமிகளாலன்றியிந்தமாதேவபெரியபதமருவலாகா, வளவறநீநான்றான்வேறொன்றுமின்றியபேதமாயகாமயமாயமூலமாகிக், கிளர்சுகமாய்ச்சார்ந்தமாயதிவாயென்றாய்க்கேடின்றிப்பெயரின்றிக்கீழ்மேலின்றி. (௫௨)

பாவனையுமபாவனையுமுதலுமீறும்பற்றுமுற் மிலதும்பலவுந்தேச,மேவதிவுமடமையுமென்றிவைகளின்றின்ணியிலேயிருப்பதாய்விசாலமாகி, யாவதுமாயன்றாகிமனத்தால்வாக்காலெட்டரிதாயி

ன்பத்திலின்பமாகி, யோவரியகிறைநீனிறைவாகியாசையொழிவி
டமாய்த்தன்னுற்றுணருமொன்று. (ருரு)

எழுவகையாம்பூமியினுற்பெறும்பிரமமிதுமாயையேற்றங்கேயா
மோ, விழுமழுதலவனன்றுன்மெய்ம்மறந்துடன்கண்டவிந்தச்சா
ரற், பழுவமனக்கண்ணுடிபயில்கின்றவுடலொடும்போய்ப்பார்க்கிற்
கண்ணிற், றழுவுதுங்கொலெனுமமைச்சருடனெண்ணித்தானியு
டன்சமைந்துபோனுன். (ருச)

தென்றிசைசென்றனன்மீட்டுந்திக்குவிசயஞ்செய்யச்செல்வான்
போல, முன்றிகழும்விந்தகிரிமுற்றிட்டான்வடக்கொழிந்தமூன்று
திக்கிற், முன்றிவளர்வனமெல்லாஞ் சுற்றினனிகொந்தான்சூழ
லொன்றி, லன்றுகருதியகருத்துவடிவெடுத்ததெனப்பழையவடவி
கண்டான். (ருரு)

காலனகர்கிராமக்கடியவனத்துலாவுதலுங்கடையர்செய்கை,
போலவன்முன்சஞ்சரித்ததலங்களுமச்சேரிகளும்பொருந்தக்கண்
டான்,சாலவியந்தானந்தக்கடையர்கடைச்சியர்குடில்கடப்பாவண்
ண, ஞாலநரபதிநோக்கிவியப்பினுன்மனமயக்கன்னணிகின்றுன்.()

கருத்தயருந்துயர்களைப்பக்கண்களைந்துமெய்களைந்துகதருகின்
ற, விருத்தையர்தங்கூட்டத்தின்மிகமெலிவால்வாய்விட்டுவிம்மிவி
ம்மி, யொருத்திமுதனுளிறந்ததன்கிளைஞர்பெயரொல்லாமுறையா
கின்று, பெருத்தகெடுங்குரலாலேயிவ்வாறுபுலம்பினுள்பேதமாக.

மாருனவிதிபாலென்மடிவிட்டுமெடிந்துபோமைந்தர்காளோ
வேறுகியெத்தாயேனீர்யார்முகத்தேவிழிக்கின்றீரோ
கூருனசெந்துன்றின்மணிமாலைத்தோளாலேகுளிரப்புல்லி
யாருதவென்னெருப்பையாற்றுவாரோமகளேயந்தோவந்தோ.

முன்னஞ்செய்தவத்தினுற்றேடாதமாகிதிபோன்முன்வந்தெய்தி
ப், பொன்னனூர்கின்குலத்தோரவர்மயல்விட்டென்மகளைப்புணர்ந்
துவாழ்ந்த, மன்னனுமருமகனேமறந்தனையோமதிமுகத்தைவந்து
காட்டாய், * பின்னைநாயகவுனக்கென்பேதைசெயுஞ்சிறுபிழையா
ற்பேதித்தாயோ. (ருகூ)

---

* பின்ன முறும்படி என்றும் பாடம்.

வன்பிறவிப்பேராற்றில்வல்வினையாகுந்திரைகள்வந்துகூடித்,தன்
பிறவிபாசியற்கைதவிர்த்தெம,துதையனுக்குத்தலைவணுகிப்,புன்பிற
விப்புலையனைப்போற்பூதலத்துப்புரந்தரனும்புன்மைபூண்டான், மி
ன்பிறவிகிற்சரிதமிகக்கொடிதுமிகக்கொடிதுவிதியேயென்றாள்.௬0

என்றழுதுவவள்புலம்பியிசைத்தவெலாநனிகேட்டவவணனங்
கே,நின்றுளதன்சேடியராலவடியரக்தனையாற்றிநேயத்தோடுங்,கன்
றிபநின்விடரோதுயோர்நின்மகளார்நின்காதலோரா, றொன்றுமொ
ழிவறமொழியென்றிவன்வினவப்புலைக்கிழத்தியுரைப்பதானாள். ௬௧

ஈதுபுலைச்சேரியிதிலொருபுலையனென்கணவனிவனுக்கிங்கோர்,
மாதுபிறந்தனளவளையிந்திரன் போலொருமன்னன்வந்துசேர்ந்தா
ன், போதுநெடும்புணர்வித்தவிதியாலேயவண்மூன்றுபுதல்வர்ப்பெ
ற்று, ளேதுறுநல்வினைபோலத்தீவினைவந்தென்கிளைஞரிறந்துபோ
னார். (௬௨)

நெடுங்காலம்வாழ்ந்ததற்பினீலமுகிற்றுளிவறண்டுகிலனீர்சுண்
டிக், கடுங்காலனிகர்கலியாற்றிசைதிசைபோய்க்கடையரொலாங்க
ழிந்துபோனார், நடுங்காகின்றன துயருந்தனிமையுமேதுணையானே
நாங்களென்ன, வடுங்காலவேல்வேந்தனமைச்சரைப்பார்த்ததிசயி
த்தானவசனுகி. (௬௩)

வேண்டுவனகொடுத்திவளைவெந்துயர்தீர்த்தங்ககரின்மீண்டுமேவி,
நீண்டவுலகத்தியல்புமாயையின்வல்லபமுமவனெடிதுகண்டான்,கா
ண்டகைய பரம்பொருளு நாமுரைப்பவதிந்தமைந்தான் கருணைவள்
ளா, லீண்டியவிம்மாமாயைகடப்பரியவன்மோகமியற்றுங்கண்டாய்.

இலதுளதாமுளதிலதாமிம்மாயைவல்லபத்தாலென்னலோடுங்,
கலனமுறுசொற்பனத்திற்கண்டதெலாஞ்சாக்கிரத்திற்கண்டதென்
னே; குலமுனிவவெனக்கேட்டவள்ளலுக்குமுனியுரைப்பான்கொ
டியமாயை,யலகறுமோகம்புரியுங்காதிகதையாலிதுமேலறியலாகும்.

காகதாலியம்போல்வாதனையின்வசத்திலுளங்கலந்துநிற்கு
மேகமுறத்தம்மிற்றுமென்றுணர்வினிலைநின்றோரியம்பாநிற்ப
ராகவினுன்முன்னுளிற்சித்தனுற்புலைச்சேரியாகக்கண்ட
மோகமதேபின்னுளுங்கண்டதுவேறன்றுநாமொழிந்தவேந்தன். ()

மன்னவன்கண்டுளகனவின்மதிம்புக்கந்தன்னையேமலையின்சார, லன்னவருநன்னினைவாலறிவுற்றார்லவணனுமறிவின்றேற்றந், ம ன்னிவருகடையர் மனங்களிற் றோற்றக் கடையனொத் தோன்றும் போத, மின்னரபதிமனத்திற்றோன்றியதான்மாமாலையேது[illegible]ச ய்யா. (சு[illegible])

தோன்றியவைவிளக்கத்தாலுண்மையாமைம்பொறிக்குந்தொடர் பாய்சிற்கு,மான்றுபதார்த்தங்களெலாமறிவினாலொழிந்துண்மையா கமாட்டா, வேன்றறிவானறிபொருளாமிரண்டினிடையறிவானுக் கிசைபந்தருப, மூன்றியறிபொருளறிவானறிவிவிவையுற்றிடுவதுயர் க்தவீடு. (சுஅ)

ஓரிடம்விட்டோரிடத்தேயுள்ளமுறிலவற்றினடுவுண்மையாகிப், பேரிலதாயுணர்விலதாய்ச்சடமிலதாயது நீயாய்ப்பிரியேலென்றுங், கூரியபுந்தியினாலேயூகித்துக்குடும்பியெனுங்குறிப்பைமாற்றித், தூ ரியதாம்படிமனத்தின்றுவக்கறுத்துவிருந்தபடிதுணிந்துநிற்பாய். ()

பிறப்பிறப்பாம்பூட்டைதனைப்பிணித்துழற்றும்வாதனையாம்பெரி யபாச, மறப்பெரியமுயற்சியினாலறுத்திடுவாய்பரமமாமறிவின்முன் னே, புறப்படும்பொய்யாமுள்ளம் புவனவிகற்பங்களெனும்பொய் யைக்காட்டுஞ், சிறப்புளவிண்ணிலதாயுமிலதானீலநிறஞ்செறிவ தேபோல். (எ0)

சோகமுறுசங்கற்பநாசத்தான்மனமாளிற்றொன்றுதொட்ட
மோகமெனுமூடுபனிவிட்டகலுஞ்சாரற்காலமுதிரவந்தான்
மாகம்விளங்குவதென்னநல்லறிவுமாத்திரமாய்மாயாதாகி
யேகமாய்வடிவின்றிப்பிறப்பிறப்பிலாப்பிரமமிலங்குறோய்தாய். ()

உற்பத்திப்பிரகரண முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ருகசு.

திதிப்பிரகரணம்.

சுக்கிரன்கதை.

எழுதவோணுமெழுதிடமுமெதிர்காண்பொருளுமிலதாகி
வழுவிலாதவிண்ணிடையேவந்துதோன்றுமோவியந்தான்
பழுதின்மேவுந்தனைத்தானேபாராநிற்கும்பலபொறியு
நழுவுதுயிலினுலன்றினனவான்மேவுங்கனவொக்கும். (க)

கரியாய்ச்சமமாய்நொய்தாகிக்கலந்தவிகற்பந்தீரறிவிற்
பரியாநின்றவுலகமெலாம்பற்றிபாய்தல்கண்ணாடியிற்
றெரியாநின்றபொருள்போலாஞ்செறிகாரணகாரியமின்றிப்
புரியாநின்றவுலகெல்லாம்பொலிந்தபிரமத்திடையிருக்கும். (உ)

சொன்னவுலகங்களுக்குருவந்தோன்றுநின்றமாத்திரமாம்
பின்னமின்றியாவையுமாய்ப்பேராவறிவாய்ப்பெருவிண்ணாய்
மன்னுபிரமமொன்றென்றேவருந்திமுயன்றுபாவிப்பா
யன்னநிலையேகைவந்தாலவ்வற்றுள்ளமறிவுருவாம். (ங)

நீற்றுப்பலசேரொருகற்போற்கிளருஞ்சகங்கள்செறிபிரமந்
தோற்றப்படுமாவிரண்டென்னத்தொடர்காரணம்வேறிலாமையினு
லாற்றச்சகமென்றொன்றிலதாமறிவேயுளதாமனைத்துலகுந்
தேற்றப்பிரமத்திருக்குமிவைதெளியவெள்ளிகதைகேட்பாய். (ச)

முன்னமொருநாட்பிருகுமுனிமுதுமந்தரமால்வரைச்சாரன்
மன்னுதவஞ்செய்புழியவன்றன்மைந்தன்மதிமான்மதியனையோன்
றன்னதாதைகழற்பிரியான்றனிமெய்ஞ்ஞானமஞ்ஞான
மென்னுமிருபார்வையினடுவேவியங்காநின்றபெரும்பதத்தோன். ()

செறியந்தரத்தேநிற்கின்றதிரிசங்குவைப்போற்சுக்கிரனு
மறிவோடறியாமையினடுவேயமருநாளிலவன்றாதை
பிறிவில்சமாதியுறநிற்பப்பிரியாவெள்ளிதனியிருந்து
வெறியவிசும்பைநோக்குதலும்விண்மாதொருத்திவரக்கண்டான்.

மந்தாநிலத்தாலசைகின்றமந்தாரஞ்சூழ்மலர்க்குழலா
டந்தாவளத்தின்பிடிபோலத்தனியேவரலுமெதிர்நோக்கிச்

சிந்தாவசனுபவள்வடிவைத்தியானித்திருகண்முகிழ்த்திருந்து
முந்தாகின்றவேட்கையினன்முடிவின்மனோராச்சியமுயன்றான். (

பொன்னாட்டணங்கேயிவளந்தப்பொன்னாட்டியானும்போய்ப்புகு
னின்னாட்டமரரிவர்போற்றவெழில்கூர்சிங்காதனத்திலிவன் [தே
மின்னாற்செறியுமுகிலென்னவேந்தாமிவனைச்சூழ்ந்துமதன்
றன்னாற்களிக்குமரம்பையர்தஞ்சமூகமிவையென்றுளத்துணர்ந்து.

இமையோரிறைவயிவன்வணங்கவிவனையவனுமிறைஞ்சியபின்
னமையாவின்பவின்னாட்டிலகலாதுலவுமவ்வளவிற் [லுங்
சுமைவார்கொங்கையரம்பையருட்டோரன்னவவண்முன்றோன்றுத
கமையாவன்பார்க்கண்களிப்பக்கண்டானவளுங்கண்ணுற்றாள். (௯)

இருவர்விழியுநினைவுகளுமேகமாகவுறப்பற்றி
யுருகுமளவிற்சங்கற்பத்தொன்றும்பிழையாவுயர்வெள்ளி
ருகுமிருண்மூடுகவென்றுகற்பித்திடலுங்கற்பாந்தப்
ருவம்போலுமிருள்சூழப்பலருமகன்றார்பலதிசையும். (௧௦)

அன்னாளிவனைவந்தணையவழகார்தருநீழலிலொருபாற்
றன்னாமுயங்கியோருயிராய்த்துன்பமில்லாவின்பத்தி
னன்னாளாகச்சதுரியுகநாலுநாலுநடந்ததற்பின்
முன்னும்புரிந்ததருமமெலாமுடியுமுடியுமெனுங்கருத்தால். (௧௧)

வீழ்ந்தான்புவனமண்டலத்தின்மெய்யைமறந்தானிவன்சீவன்
கொழுந்தார்மதியின்கலைசேர்ந்துகுளிர்ந்தபனியாய்நெல்லாகிச்
செழுந்தாணெல்லைத்தேசார்ணதேசமறையோன்சமைத்தருந்த
வெழுந்தாதுவுமாய்ச்சுக்கிரன்வந்திவன்பாரியையான்மகவானான்.

அன்னான்முனிவர்தொடர்ச்சியினாலரியதவமோர்மனுக்காலம்[மான்
பொன்னார்வரைசூழ்வனத்திடையேபுரிந்தானவனங்கொருபெடை
றன்னாலொருசேய்கரவடிவாய்ச்சாதனானவனன்பாற்
பின்னாசின்றபேதைமையாற்பேராவுண்மைநிலைபெயர்ந்தான். (௧௩)

மற்றுமளவில்பிறவிகளின்மருள்வாதனையாற்பிறந்திறந்து
முற்றுமுயர்கங்கையின்றடத்தோர்முனிவன்மகவாய்முனியானான்
பற்றுமுயிர்போய்முதற்காயம்பவனனாலும்வெயிலாலும்
பெற்றுவளர்த்தபிருகுவின்பாற்பேரிதுமுணங்கியென்பாகி. (௧௪)

பிருகுமுனிவன்பெருமையினற்பிணங்குமிருகம்புள்ளினங்க
ளிருகுமனுகலறமண்மேலங்கமுழுதுங்கெடாதிருப்பத்
திருகுமனத்தீர்சமாதியிலேதெய்வவருடமாயிரம்போ
யிருகண்மலரத்தவமுனிவனிட்டமகவையெதிர்நோக்கி. (௧௫)

அறத்தின்வடிவாயஞ்சலிசெய்தருகேயிருக்குமகற்காணுன்
வறக்குமுடலின்கங்காளம்வறுமைவடிவாயெழுந்ததென,
நிறக்குநிர்ப்பாக்கியம்வடிவாய்நிற்பதென்னவெதிர்கிடப்பத்
துறக்குமனத்தான்பிருகுவெனுந்தூய்யதவத்தோன்றனிநோக்கி. ()

மென்றோல்போர்த்தவெலும்புமனேவெளிகடோறுந்தித்திரிப்புள்.
சென்றோடுவதுமுதரகுகைசெறியுமண்டூகத்திரள்க
ளொன்றோடொன்றுபாய்வதுங்கண்டுற்றவாறென்னெனவறிவா
னின்றோர்கிலன்றுஞ்சினனென்றேசேயமைந்தன்றனைநினைந்தான்:

அடைத்தகாலத்தன்றியெனதரியமகவையகாலத்திற்
றுடைத்தகாலன்றனைக்கணத்திற்றுடைப்பனென்றுவிடைப்பாகன்
விடைத்தவாபோற்பிருகுமுனிவெகுண்டுசாபமிடநினைப்பக்
கிடைத்தகாலனடுநடுங்கிக்கிளரைம்பூதவடிவெடுத்து. (௧

வதனமாறுங்கரமாறும்வாளுங்கயிறுங்குண்டலமும்
பதனகவசத்துடன்மேவிப்பார்த்தசேனைபுடைசூழ
விதனமுனிவைவந்தணுகிவேண்டிக்கொள்வான்மெத்தென்ன
நிதனமூலமெனுங்காலனிமலமுனிவற்கிவையுரைத்தான். (௧

ஈன்றகியதிபாலிக்குமியாங்கணின்னேயீதில்லா
வான்றதவத்தாற்றுதித்திடுதுமல்லாதில்லையாதலினற்
சான்றதவத்தைவெங்கோபத்தழலாற்சுடுதறகின்றாற்
றோன்றுமூழிக்கனலுமெமைச்சுடாதுநின்சொற்சுடவற்றே. (௨௦)

குடும்பவலையிற்பிணிப்புண்டகோடாகோடியுருத்திரு
நெடும்பங்கயக்கண்மாதவருநிலையாமென்னற்றொலைவுற்று
ரிடும்பையுலகிலெனைக்கடந்தாரில்லையாருமெனக்கிரையாம்
படும்பல்லுயிருமியாம்படுத்தல்பகுதியாயபழவிதி. (௨௧)

எமதுவிதியன்றிக்கியதியென்றுமுள்ளபடியாகு
மமலவிழியிற்செய்வோனுமருந்துவோனுமிலவாகும

விமலமல்லாவிழிக்கிவர்கண்மிகவுமுளவாம்விதிவயத்தாற்
றமதுகிளைவாற்பல்லுயிருஞ்சனிக்குங்கற்பமுடிவிற்போம். (உ௨)

கற்பதானமறைதருசிற்கண்ணதெங்கேசிரத்தையதாய்
நிற்பதெங்கேயுயர்வெங்கேநெடியோர்விளங்குமிந்நெறிக்கே
யற்பானகுருடரானவயர்வதென்னத்தம்வினையா
லுற்பவிக்குஞ்செயல்பாராதுருத்துச்சபிக்கவுரியாயோ. (உ௩)

மனமேபுருடன்மற்றில்லைமனத்தின்செயலேசெயலாகுங்
கனசீவனத்தாற்சீவனுமாங்கவர்நிச்சயத்தாற்புந்தியுமாஞ்
சினவுமபிமானத்தாலேதீயவகங்காரமுமாகுந்
தனதுவிகற்பசாலத்தாற்றானேசகமாந்தனிமனமே. (உ௪)

ஆதலாலுன்புதல்வனாயேலைவில்சமாதியமர்போதிற்
காதலாலேசுக்கிரனுங்காயந்தன்னையிவணிருத்தி
மீதில்விச்சுவாசியெனும்விண்ணாட்டணங்கைமேவியபின்
னாதுபுவியிற்றேசார்ணவொருவேதியன்பாலுற்பவித்து. (உ௫)

வேறு.

கோசலதேசந்தன்னிற்கொற்றவனாகத்தோன்றி
வீசலர்வனத்தினூடேவேடனாயுதித்துக்கங்கை
மாசலமருவுபாரின்மராளமாய்ப்பௌண்டரத்திற்
பேசருநிருபனானான்பெருங்கதிர்குலத்துவந்து. (உ௬)

சாலுவநாட்டிற்பானுமந்திரத்தலைவனானான்
மேலுயர்கற்பகாலம்விஞ்சையர்வேந்தனானான்
வாலுணர்வுள்ளியங்கோர்மாதவன்மதலையானான்
சேலுகள்சவ்வீரத்திற்சேர்ந்தசாமந்தனானான். (உ௭)

திரிகத்ததேசந்தன்னிற்றேசிகச்சைவனானான்
முருகார்சூழ்வேடனூரின்மூங்கிலாரணியமானா
னரிணத்தேர்பிறப்பாய்ச்சீர்ணசாங்கலத்தமராலுற்றான்
விரிவில்சூழ்பனையின்காட்டில்வெஞ்சினப்பாந்தளானான். ()

இவ்வண்ணமநந்தயோனியிழிவுயர்வாகவெய்தி
மைவண்ணமனத்தினாலேவாதனைவயத்தினின்று

மெய்வண்ணக்கங்கைமாட்டோர்மெய்ம்முனிக்குமாரனைப்
பொய்வண்ணப்போதிகளென்னும்புன்பகையறுத்துவென்று.

வரிசடைபல்வுங்கட்டிவாசுதேவப்பேர்மேவிப்
புரிதவத்தெண்ணூறாண்டுபொருந்தினனினதுமைந்தன்
திரிதருகணவையொத்தசித்தத்தின்மயக்கந்தன்னைப்
பரிவுறக்காண்டியென்னிற்சிறக்கணுற்பார்த்தியென்றான். (ரு0)

காலனீதுரைப்பக்கேட்டகலைமுனிஞானக்கண்ணாற்
பாலகன்செய்கையெல்லாம்பார்த்தனன்கண்டதினெல்லை
மேலதாமொளியாற்றேற்றமாத்திரம்விளங்கிநல்ல
சீலமார்புத்தியென்னுந்தெளிந்தகண்ணாடியிற்பாய்ந்த. (ருக)

வானதிக்கரையினின்றுமந்தரச்சாரலிற்றன்
மேனியில்வந்துசார்ந்தமெய்ம்முனிவியந்துசால
வூனமில்காலன்றன்னையொன்றலாவேண்டுகோளா
லானதோர்காதலில்லாவருமுனிபகர்வதானான். (ருஉ)

முழுதுணர்தருமநீதிமுதல்வனீகாலமூன்றும்
பழுதறத்தெரிதியேபாலராய்ப்பரமஞான
மெழுதலிலிளைஞராகுமெம்மனோரொன்றலோடுங்
கெழுதகையுலகங்காக்குங்கேடறுநிலைமைக்காலன். (ருங)

மாதவன்கையைப்பற்றிமந்தரக்கந்தரத்தின்
மீதகன்றமரராற்றைமேவினனிவரிலாங்கே
பேதமாம்வாசுதேவப்பெயரொடுமிருந்தசேயைக்
காதலான்முனிவன்கண்டான்காலனுமிதனைச்செய்தான். ()

இங்குற்றசமாதிநீங்கியிவனெமைக்காண்கவென்று
சங்கற்பஞ்செய்தலோடுஞ்சமாதிவிட்டிவனைநோக்கி
வெங்குற்றமில்லாமைந்தன்பணிதலும்விரும்பியாருந்
துங்கத்தோரொருகன்மீதமூவருஞ்சூழ்ந்திருந்தார். (ருரு)

வாசுதேவப்பேர்மைந்தன்மற்றிவர்தம்மைநோக்கித்
தேசுடையுமதுநல்லதெரிசனப்பேற்றினாலே
மாசறுதவத்தாலான்மகங்களாற்றனத்தாற்போகா
வேசறுமோகந்தீர்ந்தேனிதின்முதின்பஞ்செய்யா. (ருசு)

என்றுரைசெய்தோன்றன்னையியன்முனியிவிதுநோக்கி
நன்றுயர்ஞானஞ்சேர்க்கவைதருமடைமைதீர்க
வுன்றனக்கென்றலோடூனக்கண்ணிரண்டுமூடிப்
பொன்றலின்ஞானக்கண்ணாற்புராதனமெல்லாங்கண்டான்.

நீத்தனபிறவியெல்லாநிமிடத்தின்ஞானக்கண்ணாற்
பார்த்தபின்வியந்துசொல்வான்பகுதியாமிருதிமோகங்
கோத்தனுலங்களாகிக்கோரவென்மனத்தினூடே
யாத்தமாய்வளராநின்றதகோவகோவீதொன்றென்னே. ()

கற்பனவனைத்துங்கற்றேன்காண்பனவனைத்துங்கண்டே
னுற்பவத்தநேககாலமுழன்றவெந்துயருந்தீர்ந்தே
னற்பயனதிவைப்பெற்றேனுமினியையவேகி
யெற்படர்மந்தரத்திலிருக்கின்றவுடலைக்காண்பேம். (௩௯)

கருமமேயேதுவாகுங்காயகங்காளந்தன்னை
யிருகணுநோக்கியின்பமெய்துவானினைந்தேனியா
மொருசெயல்வேட்கையில்லையொழிப்புறுசெயலுமில்லை
வருதிராலென்னவன்னார்மந்தரங்கணத்திற்சேர்ந்தார். (௪0)

முந்துறுசகத்தினெல்லைதெளிதருமூவர்தாமும்
வந்துழிமுன்னைச்சென்மமருவியவுடலைமைந்த
னந்தமின்மகிழ்வானோக்கியருந்தவப்பிதாவைநோக்கி
யிந்தவன்கங்காளங்கொலீன்றுநீவளர்த்ததென்றான். (௪௧)

பின்னருமுரைப்பானையபெறலருஞ்சுகங்களாலே
முன்னநீவளர்த்தகாயமொய்துயரனைத்துமாறி
யின்னல்கூர்காதலையமிதாகிதமெல்லாமின்றி
மன்னியசுகமதாகிமனமிறந்திருந்ததன்றே. (௪௨)

மனமிலாநிலையினன்றிமன்னுயிர்க்கின்பமுண்டோ
கனமுறுசுகசம்போகக்கடலிலேதிளைக்கலாகு
மனகபோதிவுசாந்தமதிவுளோர்தாபநீங்கித்
தனதுயர்நிலையாமந்தத்தனியுடல்வாழ்ந்ததன்றே. (௪௩)

அருந்தவப்பயனலிந்தவற்புதங்கண்டேனென்ன
விருந்தவக்காலநோக்கியிவ்வுரையிகந்துமாற்றிப்

பொருந்தியவுடலின்மன்னர்புரிபுகுமதுபோற்புக்குத்
திருந்தியவசுரர்க்கெல்லாந்தேசிகச்செய்கைசெய்வாய். (௬௪)

என்றுசுக்கிரனையேவியிவரிருவரையும்வாழ்த்தி
நின்றுழிமறைந்தான்காலனித்தவர்மறுகின்றார்
பின்றையவாசுதேவப்பேருறுகருத்தைநீக்கி
வன்றகைவெள்ளிமுன்னமருவியவுடலிற்புக்கான். (௬௫)

வினையதுவயத்தினாலேவெள்ளிசேருடலந்தன்னைத்
தனைநிகர்பிருகுவேதமந்திரசலத்தாலாட்ட
நனைதனுநாடியெல்லாநயம்பெறப்பிராணன்றாங்கி
யனையவனெழுந்துதாதையடிபணிந்தருகுநின்றான். (௬௬)

பிருகுவுமைந்தன்றானும்பிறங்குமந்தரத்திற்கானிற்
றிருகியசித்தமென்னுந்தீப்பகைதீரமாற்றி
வருதிரையிலாநீர்போன்மாசறுநிலையில்வாழ்ந்தார்
கருணைமாமுகிலேயென்றுகற்றுணர்வசிட்டன்சொன்னான். ()

சுக்கிரன்கதை முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௫௬௩.

தாமவியாளகடர்கதை.

மீண்டுரைசெய்வான்முற்றும்விசாரத்தோர்தொழிநீர்நெஞ்சோர்
நீண்டதோர்மனனம்விட்டோர்நிகழ்சுகவறிவையுள்ளோர்
பூண்டுளகாட்சிதன்னிற்போவபோய்க்கொள்வகொண்டோர்
காண்டகுதன்னைக்கண்டோர்காணாதோர்தனைக்கா[illegible]ந்தோர். (௧)

சிவனாயிருந்துகாணுஞ்சிற்பரதத்துவத்தே
மேவியநனவையுற்றோர்வெம்பவமோகமார்க்கத்
தோவலில்சுழுத்தியுற்றோரோர்முதிர்கி[illegible]லே[illegible]
பாவனைநலனிற்றீங்கிற்பயிலும்வாதனையை[illegible]வித்தோர். (௨)

வாதனைவலையைச்செற்றுமனப்பந்தமாற்றிவிட்டாற்
காதல்செய்தேற்றின்வித்தின்கலங்குநீர்தெளிவதென்ன

மேதகுவிஞ்ஞானத்தான்மெய்ம்மையாஞ்சுபாவந்தானே
யேதமற்றொளிருமுன்னமியம்பியவியல்பினோர்க்கே. (௩)

சங்கஞ்செய்மயல்போய்த்தொந்தந்தவிர்ந்தொன்றைச்சார்வதின்
சிங்கிசெய்கூட்டினின்றுஞ்சேணுறச்செல்லும்புட்போற் [றிச்
றுங்கமோகத்தினின்றுந்தூய்மனம்வெளியிற்போந்து
பங்கமாமையந்திரப்பற்றெனுமனைத்துந்தீரும். (௪)

ஆன்றவம்மனம்பூர்ணத்தையடைந்துபூரணவெண்டிங்கள்
போன்றுறவிளங்குமிந்தநிலையிலேபொலிவுற்றோர்கண்
மூன்றுமூர்த்திகளாந்தேவமுதல்வர்க்குங்கருணைசெய்வ
ரூன்றிபவிசாரத்தாலேயுயர்பொருளெய்தவேண்டும். (௫)

உலகெதுநாமாரென்னவுற்றுநின்றுணருமட்டுங்
கலகமார்பிறவிமோகங்கங்குல்போன்மூடிநிற்கு
மலகறுமுலகுந்தாமுமழிவில்சிற்சோதியென்றே
சலனமில்கண்ணாற்கண்டோர்தத்துவநிலைமைகண்டோர். (௬)

அகிலசத்தியுமாயொன்றாயநந்தமாமறிவுதானே
சகலபாவனைக்குமுள்ளாமெனக்கண்டோர்தம்மைக்கண்டோர்
பகர்வுறுநானுமில்லைபிறிதிலைபரமேயுண்டென்
றிகமுறவுள்ளதில்லதிடையுறக்கண்டோர்கண்டோர். (௭)

முயல்வுறத்தாமேதோன்றுமொய்திசைப்பொருள்கடம்மின்
மயலறச்செல்லுங்கண்போன்மாசறுநீரார்புந்தி
செயல்களிற்செல்லுமன்றேதெளிந்துபல்போகந்துய்த்தாற்
றுயர்செய்யாதறிந்துசேர்ந்தாற்சோரருந்தோழராவார். (௮)

நெறியிடைவந்தோர்கூட்டநீந்திசெல்வோர்காணுநேர்போற்
செறிதருபோகமெல்லாஞ்சேதனர்காண்பரன்றே
[illegible]ர்மனதைவென்றோரற்பமேபெரிதாய்க்காண்பர்
பிறகது[illegible]மென்றேபெரியனபோகம்வேண்டார். (௯)

நலங்கியசிறைதீர்வுசாந்[illegible]கர்மட்டுமகிழ்வுகூரு
மலங்கல்வேல்வெற்றிவர்த்தனவனியுஞ்சிறிதென்றெண்ணுங்
கலங்குறுமனதைவெல்வோர்கைகையாற்கால்கள்காலா
விலங்குபற்பல்லாவங்கமியாவுமிப்படிமுன்சேர்க்க. (௧௦)

பகைமனவெற்றியல்லாற்பவக்கடல்வங்கமில்லை
வகைபடுமுலகிற்செல்வர்வரிசையோர்மறுவிலாதோர்
மிகையுயர்புருடர்கீர்த்திமிக்கவரென்போருள்ளக்
குகையிடைத்தொழில்கணஞ்சார்கொடுமனப்பாம்பைக்கொன்றார்

மனமெனும்வினையைவென்றோர்மலரடிமுடிமேற்கொள்வா
மினநரகங்களென்னுமிராச்சியத்திருந்துவாழ்ந்த
முனமுறுபாவமென்னுமும்மதக்களிற்றினாலுங்
கனமயற்படைகளாலுங்கரணமாம்பகையைவெல்வாய். (கஉ)

துனிமனச்செருக்குமாய்த்துத்தொடர்பொதிப்பகையைவெல்லிற்
பனிபடுபதமக்கான்போற்படர்ந்தவாதனைகண்மாளுந்
தனியறிவொன்றேயென்றுசாதித்திம்மனம்வென்மட்டுங்
கனியிருள்செறியும்பேய்போற்கருத்தில்வாதனைவந்தெய்தும். (கங)

மந்திரியெனலாமுண்மைமருவுறும்விசாரத்தாலே
யிந்திரியங்களென்னுமிடர்ப்பகையறுத்தலாலே
தந்திரியெனலாமிட்டஞ்சமைத்தலாலேவலாளா
கொந்திரிகிலாதவுள்ளநோக்கியவிவேகத்தோர்க்கே. (கச)

ஆவிக்குமி[illegible]த்தாலேயன்புறுமனைவியாகும்
பாவிக்குமியல்பினாலேபாவனைதந்தையாகுஞ்
சீவிக்குமுறுதியாலேதேடருநட்புமாகுந்
தாவிக்கும்வினைகளில்லாத்தூய்மனம்விவேகத்தோர்க்கே. (கரு)

நல்லனநூல்களாலேநல்லனநெறியைநோக்கி
நல்லனதியானஞ்செய்துநல்லனுபவத்தைநண்ணி
நல்லனசித்திநல்குநல்லதாய்த்தன்னைமாய்க்கு
நல்லதோர்தாதையாகிநல்லவர்க்குள்ளந்தானே. (கசா)

துணிவுறுதிடமாய்ச்சாலத்துகளறநோக்கியாம்
பிணியறக்கண்டுஞானப்பேருணர்வுணர்த்த[illegible]பட்டாற்
பணிவுறுமிதயந்தன்னிற்பழுதிறன்குணத்தி[illegible]லே
மணியெனவிளங்காநிற்குமாசறுமுள்ளந்தா[illegible]. (கஎ)

மனமணிபேதச்சேற்றின்மறைந்தொருவரு[illegible]குத்தோன்றாங்
கனமுறுவிவேகநீராற்கழுவினாற்சித்திகா[illegible]டும்

வினவுறுவிவேகவன்பான்மெய்ம்மையைமதியாற்கண்டு
சினமுறுபொறியைவென்றுதீர்வரும்பிறவிதீர்வாய். (கஅ)

இத்திறத்திவனானென்றேயிறுகியவறுதிவீணா
மத்திறம்புந்தியாலேயழுத்தமாயகற்றிமற்ற
மெய்த்திறம்பற்றியோமதினின்றுவிணழுந்தசெய்வாய்
பொய்த்திறமனத்தினோடேபுசித்தவைபந்தமாகா. (ககூ)

வேறு.

தாமனோடுவியாளகடாசுரர்சாருநீதியைநீயணுகாதொழி
வீமபாசதிடாசுரர்நீதியைமேவிவேதனைதீர்கெனவோதலு
நாமமேபகர்தானவராரொருஞானவீரன்வினவிடமாமுனி
யாமதோதிடவாதாமாகியதேதுநீயதின்மேவெனவோதுவான் (உ0)

சஞ்சரித்துயர்பாதலமேவியசம்பரப்பெயராரொருதானவன்
வஞ்சமுற்றியமாயையில்வாழ்பவன்வன்படைக்கடலாலமரேசனை
யெஞ்சலித்திடவானவர்தாமுமேயிவன்சுழுத்தியிலாகியபோதினும்
விஞ்சவம்பரமேவியபோதினும்வெம்பியெற்றினர்தானவர்மாளவே

ஆயவன்பையறிந்துயர்சம்பரனாகுவன்றுருமன்றிறன்முண்டிக,
னேயவிங்கிவர்தம்படைமுன்செலவேவினன்பெரிதங்செருப்பட,
மேயவண்டரடர்ந்தனரொன்றலும்வேகமிஞ்சியசம்பரன்வந்திட,மா
யைவிஞ்சைநிறைந்தவனென்றெதிர்மாகர்நின்றிடவஞ்சியொதுங்
கினர். (உஉ)

மேருகந்தரமும்பரடைந்தனர்வீதியெங்குமரம்பையர்நின்றழ,யா
ருமின்றியவிந்திரன்றன்பதியீசன்வென்றபுரங்களேனும்படி, நேரு
மங்கிசொரிந்துதிரும்பினனீடகன்றுளவந்தணர்பின்றையு, மூருள்
வந்தனரொன்றுபெரும்படையோய்விலன்பெரிதுந்தினன்விஞ்சை
யால். (உ௩)

ஆவ்தா[illegible]ய்தானவர்பற்றறவாதிதேவர்கண்மோதினர்மற்றது
தாபமாய[illegible]சன்விதித்துளதாமனோடுவியாளகடப்பெயர்
மூவர்மாயையி[illegible]ல்வர்[illegible]ற்றவர்மூரிமேருவுலாவுவதொப்பவர்
பர்வனுவசவாதனைய[illegible]றவர்பாசமாமபிமானநினைப்பிலர். (உச)

சாதல்வாழ்தல்களிப்புறல்சோர்வுறற்றுமவாகைகொள்வெற்றிக
டோல்விகள், [illegible]தாம்மீடலனைத்தையுநாடலர்போர்செய்வோ

ணாமுருக்துவர்கேவல, மாதலாவிவர்பற்றலர்சேனையை யாசுகங்
கொடழிப்பபாழிப்புறூர், பாதலாசுரன்வெற்பினர்வேலையர்பாருளா
ர்வாயிற்செலவேவினன். (௨௫)

தானவாதிபன்விட்டநெடும்படைதாள்களோடுகிரித்திரள்வந்தெ
ன னவேலைபரப்பில்விரிந்தெனமேவினர்கள்சிருட்டிமுடிந்தென,
வாளொடருமப்படிவந்தனர்வாயுவோடுநெருப்புமலைந்தென, வான
சேனைகண்முட்டியுடன்றனவாதலான்மறுகற்பம்விளைந்ததே. (௨௬)

ஆயுதங்களெரிந்துநெருங்கிடவாகமெங்குமவிழ்ந்தனவெற்பென,
மாயுமங்கமுமிழ்குருதிக்கடன்மாதிரங்கடதும்பியலைந்தன, காயம்
வஞ்சரடர்ந்துமுடுக்கினர்காதுமும்பர்தளர்ந்தோடவுற்றனர், சாயு
மண்டர்கள்பின்றொடர்வுற்றனர்தாமனும்பிறருந்திசைமுற்றுமே.()

உம்பரோடிமறைந்தமைகண்டிலருந்துமூவருநின்றுதிரும்பினர்.
சம்பராசுரன்முன்புறவந்தனர்சங்கவானவரொன்செயலென்றுகெ
டம்புயாசனன்முன்புநடந்தனரன்பினோடுபணிந்துபுகன்றனர்,வெ
ம்புதீங்கர்சம்பரன்வஞ்சமும்வெங்கண்மூவர்துரந்துதொடர்ந்ததும்

வேறு.

வேட்டகான்முகனஞ்சலென்றிவ்வுரைகிளத்தா
னீட்டமாகியவருடமோராயிரமிறந்தால்
வாட்டுசம்பரன்போரிலேயசுரனைமகவான்
வீட்டுமவ்வளவுஞ்செயத்தக்கதுவிதிப்பாம். (௨௯)

என்றதாமனும்வியாளனுங்கடனுமென்பவனைச்
சென்றழைத்தமர்செய்வதுதிரும்புவதாகத்
தொன்றுதொட்டுநீர்தொந்திக்கின்வாதனைதொடர்ந்து
நின்றகண்ணடிநிழலெனமனத்திலேநிற்கும். (௩௦)

நிலைபெறும்படிகானனும்வாதனைநின்றால்
வலைபுகுந்தபுள்ளாமெனமூவருமடிவர்
கொலைசெயற்கெளிதாசையேயுயிர்க்கெலாங்கூற்றாய்த்
தொலைவிறுன்பமாநிராசையேதுன்பமின்பம். (௩௧)

வாதனைப்பாசத்தாலேமன்னுயிரெல்லாங்கட்டுண்
டேதமாமந்தப்பாசமிறுகுமேலிடரைச்செய்யும்

வேதனையிலதாந்திரமூவுமேல்வேட்கையாலே
தீதிலோரனேகங்கற்றோர் தீரரொன்னினுங்கட்டுண்பார். (௩௨)

விலங்குறுசிங்கம்போலவேட்கையானுயர்ந்தோர்தாழ்வர்
கலங்கன்மினென்றுவேதாகண்டுழிமறைந்தபின்னர்
புலன்கொளவனைத்துங்கேட்டபுங்கவர்பொன்னாட்டெய்தி
நிலங்கிழிந்தண்டம்பிறகெடியதுந்துமியோடார்த்தார். (௩௩)

ஆர்த்தனைக்கேட்டவந்தவசுரர்பாதலத்தினின்றும்
வேர்த்தனர்பொங்கிவந்துவெம்படையமரர்மீது
தூர்த்தனர்காலம்போக்குஞ்சுரர்பொருதுடைந்துபோகிப்
பேர்த்தும்வந்தமர்செய்தோடிப்பின்னும்வந்ததனைச்செய்தார்

இவ்வகைபலவுபாயமிறந்தநீள்காலஞ்செய்ய
கைவருதிடமதானகானெனும்பழக்கத்தாலே
மெய்வரகானென்றுன்னும்வேட்கையைவிருப்பமுற்று
ரவ்வகையாலேயுள்ளமகப்பட்டுநின்றதன்றே. (௩௫)

பயம்வந்துபிடித்துக்கொள்ளப்படர்தருமோகங்கட்ட
வயர்வுறுமாயாபாசத்தழுந்தியென்செய்துமென்று
துயருறவிளைத்துக்காயந்துஞ்சுறுதிருக்குமாறு
மயலுறுதனத்தாலின்பம்வருவதுமெவ்வாறென்றார். (௩௬)

சந்ததமிவ்வாறெண்ணத்தளைப்புண்டமனத்தராகி
யந்தமிதீரமின்றியமரொன்றலறவுமஞ்சிப்
புந்திகொந்திறப்போமென்றும்புகலிடமெமக்கேதென்றுஞ்
சிந்தனையாலேகெட்டசித்தத்தாற்றியங்கிச்சோர்ந்தார். (௩௭)

வலியெலாமிழந்துமுன்னேவந்தொருபெயர்நின்றுனு
நலிவுறமாட்டாராகிநடுங்கினர்விறகுமாண்டாற்
பலிதருமவியையங்கிபருகிடவல்லதுண்டோ
வொலிதரவுரைத்தெனஞ்சியோடினார்பொன்றிப்போனார். ()

தாமனும்வியாளன்றனுங்கடனுமுன்சரித்தமார்க்கந்
தோமறுமுணர்வுண்டாகச்சொல்லினம்விநோதத்தாலே
மாமனமவிவேகத்தைவரம்பறப்பழகிவிட்டாற்
பாமரப்பிறவித்துன்பம்பற்றறுதிந்தவண்ணம். (௩௯)

இனையவர்கியாயநீயிங்கெய்தலையென்றலோடு
மனையவர்பரத்தினின்றுமுதித்தவாறறியவேண்டு
முனைவகூறென்றிராமன்மொழிதலுமுனிவன்சொல்வான்
றுனையுறுதாமன்முன்னோர்தோற்றமாத்திரமெய்யானோர். ()

ஊதிருறுதோற்றமெய்யாயிவர்கள்போலிங்குயாமும்
விதியதாய்ப்புறத்திலொன்றுமேவலம்விரனேகின்
மதியினுனெனலும்பொய்யேமதியினீயெனலும்பொய்யே
யதிர்குரற்றுமன்முன்னுமவர்களுண்டெனலும்பொய்யே. ()

பரத்தினதொளியேமெய்யாய்ப்பாரித்தோர்சிவசத்தி
திரத்துறுசம்பரன்றன்றியானத்தாலசைந்துமூன்று
யுரத்தவுல்லாசமேவிற்றணைத்தவித்திறத்தினாலே
வரத்துறுமவருநாமும்வாய்மையேயெங்குமில்லை. (௪௨)

அறிவதாயதிவேமெய்யாயமலமாயனைத்தாயாறிப்
பிறிவுறுவரவுபோக்கில்பிரமமேயுளதாமந்தச்
செறிபொருட்சத்திதோற்றமாத்திரஞ்சகமாய்நிற்கும்[ழ்வாய்
பொறிகள்பல்காட்சிபொய்யேபொருண்மெய்யேயென்றுவா

தாமவியாளகடர்கதை முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௯௦௯.

வீமபாசதிடர்கதை.

இதுநமக்கிதுநமக்கென்றிரங்குறுபொல்லாவாழ்வா
லுதவியோர்சாம்பரோனுமுறப்பெறுதுதாரமிக்குச்
சத்முறுமுலகமெல்லாந்துரும்புபோற்காண்போர்தம்பால்
விதனங்களனைத்தும்வாராமிருகங்களுலர்புற்றீண்டா. (௧)

உளத்துறச்சமத்காரஞ்சேருண்மையையுணர்வோர்தம்மை
யளக்கரும்பிரமாண்டம்போலட்டதிக்காளர்காப்பர்
கிளப்பருங்குணத்திலன்பாய்க்கேள்வியில்விருப்பாயுண்மை
விளக்குறுவருத்தமிக்கோர்நார்கின்றோர்மிருகந்தானே. (௨)

செயலருந்துயருற்றலுஞ்செயத்தகாச்செயல்களாகா
வியல்பலாவழியாலுண்ணவிராகுவையமுதங்கொன்ற
தயலெலாம்வசமாயாபத்தனைத்தும்போயென்றுநன்று
முபலுநற்குணங்களாலேமெய்புகழெய்தினோர்க்கே. (௩)

ஒழிவறுமுயற்சிதன்னாலாகத்தாலுயர்ந்தநூலா
விழிவறவியற்றுவோர்கட்கெப்பயனெளிதினெய்தா
வழிபடுநன்னூலாளர்வருபயன்கருத்தாச்செய்யி
லழிவறமுந்துமுற்றிபளவறுபயனைநல்கும். (௪)

வருத்தமற்றச்சஞ்சோகமதமின்றிநன்றாற்பின்போ
யொருத்தராலேவலின்றியுலாவுநசிக்கவேண்டா
வருத்தங்களநர்த்தமாகுமளவில்போகங்களேயாம்
பெருத்தவாபத்தாஞ்செல்வம்பேரின்பநிராசைதானே. (௫)

இடும்பைகூர்சங்கமின்றியியற்கையாசாரமெய்திக்
குடும்பமாந்துயர்சிற்றின்பங்குறித்திடாப்பெருமையோர்க்கு
நெடும்புகழ்வாணாள்செல்வநிறைகுணமனைத்துமுண்டாய்ப்
படும்பலன்வசந்தகாலக்கொடிகள்போற்பலிக்குமன்றே. (௬)

தவங்களாற்றெய்வநீராற்சாத்திரங்களினாற்போகாப்
பவங்களையுயர்ந்தோர்பாதம்பணிந்துபற்றறுக்கவேண்டு
மவங்களாங்காமங்கோபமறவுந்தேய்ந்தியற்கையான
சுவங்களினடந்துநன்றாற்றுறைநின்றேறுயர்ந்தமேலோர். ()

நானெனும்பொருள்காணாதோர்ஞானவாகாயங்காணார்
நானெனும்பொருளைக்கண்டோர்ஞானவாகாயமாவார்
நானெனுமகங்காரக்கார்ஞானவிண்மதியைமூடி
ஞானெனுப்பரமவாம்பனன்மலர்விரியாதன்றே. (௮)

மடிவறுபிறவியென்னுமரத்திரளெனக்கீதென்னு
நெடியபல்பணைகணீட்டிகிரியமாங்காய்கள்காய்க்கு
முடிவறுதுயராங்காரமுளையாகவிளையாகிற்கு
மிடியிலாஞானத்தீயால்வேரொடும்வெந்துபோமே. (௯)

என்றலுமிவ்வாங்காரமெவ்வுருவுடைத்தெவ்வாறு
வென்றிடலாகுந்தேகமேவியுமேவாதாயு

கின்றொருகாலம்வென்றானொருறுபயனேதென்ன
கன்றுணர்வள்ளல்கேட்பஞானமார்வசிட்டன்சொல்வான். ()

மூவகையுலகிலிந்தவகங்காரமும்மையென்று
மேவருமிரண்டென்றாமிகவுமொன்றீனமாகும்
யாவதும்பரமூனாமேயீறிலமெய்மையலாதோர்
பாவனையிலதென்றேரும்போதமேபரமாங்காரம். (கக)

செங்கெல்வாலினுஞ்சற்றாகிச்செகங்களுக்கயலாயென்று
மன்னுதுமெனக்கொள்போதமற்றையாங்காரமாகு
மிக்கிலையிரண்டுஞ்சீவன்முத்தர்பாலிருந்திடேற்றித்
துன்னருமுத்திநல்குஞ்சுழல்வுறுபந்தநல்கா. (கஉ)

[illegible]ணுதிமட்டாகாவிவனென்றுகாணுக்
திரமத்தானேமூன்றுமகங்காரஞ்செகத்தோர்க்கெல்லா
முரியதாகவும்பொல்லாதற்பவமென்னுநச்சு
மரமெழுமூலமாகும்வருந்தியுமொருக்கவேண்டும். (கங)

கொடிதிதுகொடிதுசாலக்கொடிதிதன்கொடுமையாலே
முடிவிறுமுயிர்களெல்லாமோகமுற்றறிவுகெட்டார்
கடிதிலவ்விரண்டினாலுங்கடிந்திதெவ்வளவுவிட்டாய்
படிவுறவ்வளவேயெய்தும்பரமமாந்தற்பதார்த்தம். (கச)

ஏற்றமாமகங்காரங்களிரண்டினாற்பரமமெய்தி
யூற்றமாமவற்றைநீங்கியோரகங்காரமுமின்றி
யாற்றலானிற்றியென்னிலறவுயர்பதமதாகுந்
தோற்றுடனுனைமைசுருதிகள்சொல்லுமுத்தி. (கரு)

இதனியல்புணர்க்கக்கேண்முன்னிசைத்துளதாமன்முன்னோ
ரதமுறமடிந்தபின்னரனையசம்பரன்வேகித்து
மதமுறுமிமையோர்சேனைவதஞ்செய்வானுபாயந்தன்னை
விதமுறவினையவாறுநினைந்தனன்விஞ்சைவல்லான். (கசு)

தானவனெனமுன்னுஞ்செய்தாமனைமுதலாமூவர்
ஞானமில்லாமையாலேநானெனதென்றுபொய்யாய்

வானவர்போரின்மாண்டார்மற்றினிஞானநன்னூற்
போனவர்விவேகத்தோராய்ப்புணர்ந்தமாயத்தாற்செய்வேன். ()

மெய்யுணர்வுறுதலாலேவெறும்பொய்யாமகங்காரத்தி
னையுறூர்விண்ணோர்சேனைநலிவுறவெல்வனென்று
மையுறுமனத்தினெண்ணிமாயையாலவரைச்செய்தான்
மொய்யுறுவேலைதந்தமொக்குள்போன்மூவர்வந்தார். (கஅ)

அனைத்தையுமறிந்தோர்தம்மையறிவெனவறிவாற்கண்டோர்
வினைத்தொடரிலாதோரொன்றின்விருப்பமும்வெறுப்புமில்லோர்
நினைத்துளநிகழ்காலத்திலெய்தியநிலையினிற்போர்
தினைத்துணையெனினுமையமிலாதவர்தெளிவுசான்றோர். (கசு

பேரினல்வீமன்பாசன்றிடனெனப்பிரிக்கப்பட்டோர்
சீரினுலகையெல்லாந்திரணமாய்த்தேருஞ்சுத்தர்
போரிலேபோமினென்றுசம்பரன்புகலப்போகி
நேரிலாவமரரோடுகெடுஞ்சமர்புரியலுற்றார். (உ0

எண்ணிலாவருடம்வெம்போரியற்றினரிவர்களெஞ்சிற்
றுண்ணெனவெனதியானுந்தோற்றரவுதித்தபோது
நுண்ணறிவாலேயாமாறொன்றுறநோக்கலோடும்
புண்ணியமிலாதோர்வாழ்வுபோலதுபொய்யாய்ப்போகும். (உக)

பன்மையாம்விசாரத்தாலேபடாகங்காரமற்றோர்
சன்மமேமரணமேயென்றஞ்சுறுசலிப்பிலாதோர்
நின்மலவொளிதின்வந்தபொருள்கொள்வோர்நிகழ்ந்தவெல்லாந்
தொன்மையாநவமாங்கண்ணுற்றுகளறச்சமமாய்க்காண்போர். ()

ஆதலால்வீரரானவவர்களாலமரர்சேனை
காதலாற்புசித்துமாய்க்குங்காமுகர்செல்வம்போலப்
போதலேபுரிந்துதிக்கிற்போயொளித்துலகமுண்ட
மாதவாசரணமென்றேமாயனைச்சேர்ந்ததன்றே. (உங)

அடைக்கலம்புகுந்தவானோர்க்கஞ்சலென்றபயநல்கி
விடைத்துவந்தமரின்மோதும்விண்டுவோடரும்போர்செய்து

படைக்கலகேமியேவப்பாய்கனநிய்க்கத்தீய்ந்து
தொடைத்துழாய்மார்பன்வாழுந்தூயவைகுந்தம்புக்கார். (உச)

மற்றினியிந்தவாற்றல்வாதனையாலேபந்தம்
பற்றுமதனைநீங்கிற்பந்தம்போம்விவேகத்தாலே
யுற்றவிவுண்மைசேரிதுளத்தில்வாதனைபோம்போது
லற்றமில்சித்தசெய்திர்தீபம்போலாகுமன்றே. (உரு)

விம்பாசதிடர்கதைமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கூஈக.

தாரூரன்கதை.

ஒழியா துயர்மாயையெனுமாபத்தையொழிக்கமனநாசமோரு
பாயமாகு, மழியாதமெய்ஞ்ஞானப்பொருளையெல்லாமியம்பக்கே
ட்டயராமலிதயங்கொள்வாய், பழியானபோகத்தினிச்சைதானே
பந்தமாமதுவிடலேபரமமாகும், வழியானபன்னூலாற்பயன்கோ
வென்னவருந்தாமலிவ்வழியேவருதல்வேண்டும். (க)

இன்பமிதுவின்பமிதாமென்றவெல்லாமெரியெனநெஞ்சனகினை
கவேற்றத்தாழ்வாய்த், துன்புறுபோகம்பலகாற்றோர்ந்துநெஞ்சிற்
றேயாமலெளிதருந்திற்சுகமேயாகும், வன்புபயின்மனத்தோற்றநா
சமாகு மனத்தினதுநாசமேமகத்தாக்தோற்றம், நன்பரமஞானிக
ணெஞ்சிறந்துபோகுநடைவிலங்காமறிவிலர்க்குநவைகூர்நெஞ்சம்

ஆனந்தமிராகந்தமிரண்டுமில்லையசைவுமசைவின்மையுமாமவை
யுமில்லை, யீனந்தீர்சத்தசத்தன்றிவற்றுக்கெல்லாமிடையல்லஞானி
மனமென்றலோடுக், தானந்தமிலாவறிவாயுலகின்மேலாந்தத்துவத்
திலுலகிருக்குந்தன்மைதன்னை, ஞானந்தான்வளர்பொருட்டாயு
ரைப்பாயென்றுநாதனியம்பிடவசிட்டனவில்வதானுன். (ங)

வேறிலாதெவ்விடத்துமேவிநின்றுமேவாமனுண்மையினல்வேறு
ம்விண்போற், கூறிலாச்சிற்பாவமெங்குநின்றுங்கூறுபமேவற்றென்
றுங்கூடிப்பற்றுப், பேறிலாச்சங்கற்பமனைத்துமின்றிப்பேரின்றியழி

வின்றிப்பேதமின்றி, யூறிலாவாகாயங்கோடிகூறுவுரித்தவற்றிலொ
ருகூற்றையொப்பநொய்தாம். (௪)

நன்றிதருமுண்மைமுதற்பெயர்கள்பெற்றுஞானிகள்பானிமலமா
ஞானமாகி, யொன்றுமலவுருவானகுடும்பரூபமொன்றாகித்தனைத்
தெரிவித்துணர்வேமெய்யாய்த், தன்றனைச்சின்மாத்திரத்து[illegible]ய
லற்றிந்தச்சத்தாமாத்திரமயமாஞ்சகங்களெல்லாந், துன்றுதிரைமு
தலாகப்பிறந்தவெல்லாஞ் சூழ்கடலில்வேறாகாத் தொடர்ச்சிபோ
லாம். (௫)

துனைதருபல்பிறப்பாகிக்கொடிதாய்ப்பொல்லாச்சுபாவமாய்த்தனை
யறியாச்சுமடர்க்கென்றுந், தனையறிந்தோர்க்கொளியுருவா யெல்
லாமொன்றாய்த் தானாகவனுபவிக்குந்தன்மையாலே, நினைவொடு
செய்வோன்செய்கைசெயவிம்மூன்றுநிகழ்விக்கும்பாவித்தநினைவுக்
கெல்லா, மனையசுவையாய்நிற்கும்பிறவிப்போகமருந்துவோர்க்கப்
போகமாகிநிற்கும். (௬)

அத்தமனமுதயமில்லையெழுதனிற்றலயல்போதல்வருதலெனும
னைத்துமில்லை, யித்தலத்தினில்லையிலாதிருக்கவில்லையித்திரமாஞ்சி
த்துமலமில்லாமெய்யாய்ச், சுத்தமுறுதானேதன்னிடத்தினிற்குஞ்
சொன்னநெறியேசகமாய்ச்சொல்பேராலே, மெத்தவெகுரூபமாந்
தற்சுபாவம்விரிந்தெங்குஞ்சிற்பெயரால்விளங்கிநிற்கும். (௭)

இன்னசுபாவந்தானேயொளியாய்நிற்குமிருளாகுமொன்றாகுமீ
றில்கூறாந், தன்னுடையதொழிலாலேதானேபூர்ணதத்துவம்விட்டி
வனவனெனென்னுந்தன்மை,யுன்னியபாவனையாலேமெள்ளச்சிவனு
ருவாகிக்குடும்பியெனுமூகத்தாலே, பன்னியநாத்துவத்திலழுந்
திப்பாவாபாவம்பற்றுதல்விடலாம்பதத்தினிற்கும். (௮)

அப்பதத்தினின்றுபுரியட்டகத்தையளவிலசைவாலணைக்குமமை
த்திடாதா, மிப்பரிசினின்றலேவேவடிவமானவெழுபிறவிவகைமா
லையிற்றுமெங்கு, மொப்பரியதற்பிரமசுபாவத்தாலேயுரைத்ததெ
லாமெழுமீண்டுமொடுங்கிப்போகு, மெய்ப்படிவமில்லாதவிண்ணிற்
கானல்விரிவதுபோன்மனநினைவில்விரிந்துதோன்றும். (௯)

படர்மதத்தாற்றனைப்பிறர்போற்றோன்றுமாபோற்பகுத்தலிலாவ
ந்தச்சிற்பாவந்தானே, யடர்பொய்போற்றோன்றியதாற்சத்தமாதி

யைம்புலனுமேதோன்ருலறியாநின்ருய், தொடர்கின்றவதுவிந்த வான்மாவாகுந்தோற்றமெலாந்தானுகித்துன்னிகின்ற, விடமுடை யபரப்பிரமமிதுவேயீதுக்கிப்பிரமப்பெயரியல்பாமிதில்வேறில்லை.

பொருகடலிற்றிரைமுதலாய்ப்பிறந்தவெல்லாம்புனலாகிவிளங் காமற்புழுதியாமோ, வொருபொருளாம்பிரமமாத்திரமேயல்லாலு பயமெனுங்கற்பனைப்பேரொன்றுமில்லை, யெரியிடத்திற்சூடுமாத்தி ரமேயல்லாவிரண்டுண்டோவவ்வகைபோலென்றுமொன்ருஞ், சரி யைகிரியாயோகப் பதத்தின்முற்றிச் சாதனங்களிறைந்தவர்க்கே சாற்றல்வேண்டும். (கக)

இயற்கைகுணஞ்சோதித்துமுன்னேபின்னேயாவையுமாம்பிரமமீ யென்னல்வேண்டும், வியப்புறவாசையிலுழல்வார்க்கிவ்வாறேதின் மீளாதநிரகில்வீழ்த்ததாகும், நிபக்குறுபோகத்தாசைதீர்ந்துபுந்தி தெளிந்தவுணைப்போல்வார்க்கேதிகழத்தோன்றும், மயக்கமறவுணர் த்தவல்லகுருவைக்கிட்டாவருந்தியுந்தன்பிறப்பறுக்குமகனுமாங்கே

விளக்குமிரவியுமலருமுண்டாயுண்டாம்விசொளியும்பகற்பொழு தும்வினையும்போலத், துளக்கமில்சித்துண்டாகிலுண்டாஞாலந் தோற்றமுமாத்திரமேசொரூபமாகும், கிளத்தபரமார்த்தத்தாலில் லையென்னக்கேட்டலுமேபாற்கடல்போற்கெம்பிரத்தா, லளக்கரி தாய்ச்சிதளமாயமலமாகியற்புதமாகின்மொழியென்றண்ணல்சொல் வான். (கங)

இம்மொழிகளாலிமைப்போதிருளாமீளவிமைப்போதுவெளியா குமிவ்வாருகி, மைம்முகிலாலற்பமாய் வெய்யிற்சிதம்வந்து வந்து போகின்றமழைநாளொத்தேன், மெய்ம்முனியேயகந்தமாய்ப்பலவா யொன்ருய்வியாதாயளக்கரிதாய்விளக்கமெய்திச், செம்முறையா மாத்துமத்த்துவத்துக்கிந்தச்செய்தொழில்கள் வந்தவா செப்புகெ ன்ருன். (கச)

மெய்யானபொருளுடையவாக்கியத்தின்மெய்ப்பொருளாய்முன் னுடுபின்விரோதமின்றிக், கையாருநெல்லியெனக்காட்டவல்ல கட்டுரையேயாமிங்குகழறிற்றெல்லா, மெய்யானஞானவிழிவெளி யாய்ப்போதம்விரியவுதித்தாலென்சொலென்னுய்வித்துக், கையார வவிதெளிதென்றுள்ளவாறுகலக்கமறநிலைநின்றுகாண்டியன்றே. ()

தன்னுருவமாய்வதற்கேமுயல்வதாகித்தமமொழித்தவவிச்சையி ஞற்சகலமான, வின்னலுறுகுற்றமிலாவிச்சையெய்துமெய்கணை கள்கணையாலேகஞ்சைகஞ்சாற், றுன்னுபகைபகையாலேதீதுதீ தாற்றுடைப்பதுபோலவித்தைதனைத்துடைத்தல்வேண்டு,முன்னி யுறப்பார்த்தலுமேயிதன்சுபாவமொழிந்துபோய்த்தன்மாய்வாலுத வுமின்பம். (கசு)

கனிமெய்யாய்மாயையிலதென்றிவ்வாறுநாடுவாய்ஞானியாய்ஞா னம்பெற்றாற், றுனிசெயுமீதுளமாயையறிதியன்றேதுகளிலாநற் போதந்தோன்றுமட்டும், பனிமாயையில்லையெனவென்சொல்லா லேபழுதில்லாவறுதியுறப்பற்றிகிற்பாய்,புனிதமுறுபிரமமேயெல்லா மென்றுபுந்தியிற்கண்டோர்முத்திபொருந்தினேரே. (கஎ)

பேதமுறுபுத்தியேமாயையாகும்பெரிதுவருந்தியுமிதனைப்போக் கல்வேண்டும், போதமுறுபேற்றினலன்றி மாயைப்பொருடிதின் கரைதோன்றாப்பொருந்தத்தோன்றி, லேதமறுமப்பதமேயிறவா வீடாமிம்மாயைபிறப்பிடமேதென்னவேண்டாஞ், சேதமுறக்கொ ல்வழியேதென்றுதேர்வாய்சிதைவுற்றாலிதனியல்புதெரியுமன்றே.

யாதினிற்றோன்றியதென்றும்யாதிதென்றுமிறந்ததெதியாதென் றுமிறந்தாற்றோன்று, மாதவினல்வன்றுயரின்சாலையானவவித்தை யெனுநோய்க்குமருந்தருந்தச்செய்தாற், றீதுபயில்பிறப்பென்னுங் கடலின்மூழ்காய்செறிகாற்றுத்தன்னுருவாஞ்சேணிறன்னாற்,சாத முறத்திரிவதுபோற்றன்பாற்றோன்றுஞ்சத்தியினலாத்துமதத்துவ நின்றோல்கும். (கஅ)

நொய்யநெடுஞ்சிற்கடறன்னிடத்தேயற்பநுடக்கத்தாற்கணம்வி ளங்குநுண்மைநோக்கா, லையமறத்தற்பதமொன்றகண்டமென்றே யழுந்துவாயக்கடலிலசைந்துசற்றே,மொய்யறிவாஞ்சிற்சத்திகண காலத்தின்முழுதுறுசத்தியினலுமுழங்கத்தோன்றித். துய்யவிடங் காலமொடுதொழில்கண்மூன்று தூயன சத்திகடம்மைத்துணையாய் ச்சேர்க்கும். (உ௦)

தனதுசுபாவத்தையறிந்தகந்தமானதற்பதத்திலிருந்துஞ்சிற்சத் திதானே, யெனதுருவிவ்வளவென்றேயறிவுற்றாற்போலெண்ணுறு மிப்படியுருவையிதுபாவிக்கி, லனுகதமாயப்பொழுதேபெயர்களை

ல்லையாதியாம்பார்வைகள்வந்தடையாநிற்குங், கனவிகற்பந்தருவடி
வாய்ச்சித்துருபங்கவரிடங்காலந்தொழிற்குக்கலந்தபற்றும். (௨௧)

ஈங்குறைசெய்சித்தினுடையுருவந்தன்னையாவருஞ்சேத்திரக்கிய
னென்றியம்பாநிற்ப, ராங்கதுவும்வாதனையைச்செய்யாநின்றேயக
ங்காரபாவனையையடையாநிற்கும், வாங்கருமாங்காரமுகிச்சயிப்ப
தாகிமலினமுறுபுந்தியாமலஞ்சேர்புந்தி, விங்கியகற்பனைவடிவாய்
மனனநெஞ்சாம்விகற்பமிகுமனம்பொறிபாமெல்லவந்தே. (௨௨)

கரசரணமயவுடலைம்பொறிகளென்பர்கவல்வுற்விப்படியன்றேக
லந்துசிவன், விரவியசங்கற்பமெனும்பாசத்தாலேவீக்குண்டுதன்
பவலைவீசப்பட்டுத்,தாமறவினைதையடைவேயடையாநிற்குஞ்சத்தி
மயமாமனமித்தன்மையாகிப், பொரவகங்காரதைமேவிக்கோசகார
ப்புழுப்போற்றன்னிச்சையினாற்பூணும்பந்தம். (௨௩)

தானேசங்கற்பித்துத்தன்மாத்திரத்தாற்றனிவலையாமுட்டொழி
லகடன்னைக்கட்டக், கானேறுசிங்கம்விலங்குற்றதென்னக்கவலை
யினுன்மிகவுமனங்கரைந்துசோரு, மானுதமனம்புந்திஞானஞ்செ
ய்கையகங்கரம்வாதனையுடலம்பகுதிமாயை, மூனமலங்கருமம்
பந்தஞ்சித்தமோதனித்தையிச்சையெனவுரைப்பரன்றே. (௨௪)

அப்பரிசோரோரிடத்திலோரொன்றாகவாசாபாசத்தினுலமைத்
துச்சொன்ன, வொப்பரியசகவிரிவாமிவற்றையெல்லாமுட்கொள்
ளும்பலமிதனிலொன்றுமில்லை, கப்புடையநெடுவடத்தைவடத்தி
ன்வித்துக்கரந்திருப்பதொக்குமிடர்க்கவலைத்தீயின், வெப்பமிகக்
கோபப்பாம்பெடுத்துநுங்கவேட்கையெனுங்கடற்றிரையான்மெலி
யுமுள்ளம். (௨௫)

பெருகியவித்துயர்களாலவசமாய்த்தன்பிதாமகனைமறந்துமிகப்
பீடையுற்றுக், கருகியவிம்மனந்தன்னையளற்றிலானைக்கரையேற்
றிவிடுவதுபோற்கரையிலேற்றாய், வெருவுசராமரணமெனும்விட
த்தால்வெந்துமிகுநலந்தீங்கெனும்பகையான்மெலியுநெஞ்சுக், கரு
ள்புரியாநரர்மனிதவடிவமானவரக்கரோயருள்வடிவமானவள்ளால்.

இவ்வகையேசிற்பாவசிவபேதமியல்வடிவாம்பிரமத்தினிடையே
நின்று, வவ்வியபாவனையாலேவந்தகோடிவாராநின்றனகோடிவரு

வகோடி; தெய்வவரையருவிநீர்த்துளிபோல்வந்தோர்சிலர்பிறவி
யொன்றிரண்டுமூன்றுசேர்ந்தோர், லைவருசென்மங்கள்சிலர்நூற்
றின்மிக்கோர்நாடரியபவஞ்சிலர்கணண்ணிநின்றோர். (௨௭)

சிலர்சிலர்கள்கின்னரர்கந்திருவரானோர்சிலர்விச்சாதரருரகர்தி
ரளாய்நின்றோர், சிலரருக்கரிமகிரணன்வருணனானோர்சிலர்பிரம
ன்றிருநெடுமால்சிவனாய்நின்றோர், சிலர்மறையோர்சிலரரசராகி
ன்றோர்சிலர்வணிகர்வேளாண்மைச்செயலினின்றோர், சிலர்வில
ங்குபறவைகளூர்வனவாய்வந்தோர்சிலரிலைகாய்ப்பழமூலந்திரணமா
னோர். (௨௮)

சிலர்மயேந்திரசைலஞ்சையமேருதென்மலயமந்தரமாய்ச்சிறந்து
நின்றோர், சிலர்கடம்பஞ்செம்பிரந்தாலஞ்சாலஞ்சிறந்ததமாலங்க
ளாய்ச்செறிந்துநின்றோர், சிலருவரிதயிர்நெய்பாற்கருப்பஞ்சாறு
தேனொடுநீர்பெருங்கடலாய்ச்சேர்ந்துநின்றோர்,சிலர்திசைகள்சில
ர்நதிகளாகிநின்றோர்சிலர்மேலோர்சிலர்கீழோர்சீவரானோர். (௨௯)

கையினாலறையுண்ணும்பந்துபோலக்காலனாலறையுண்டுகணக்
கிலாத, மெய்யிலேபுகுந்தலுத்துவிவேகம்பெற்றும்விரகிலார்சிலர்
பிறப்பின்மீண்டும்வீழ்ந்தார், மையினான்மூன்றுலகாழ்பணதிசெய்
துவருநிற்கும்போமாகிவளர்ந்துவாளாப், பொய்யினான்மிகவிரியும்
வேலையூடேபொருதிரைபோற்பரபதத்தேபுரிந்தமாயை. (௩௦)

தெரிந்துணர்ந்தோனிவ்வாறுசெப்பலோடுஞ்சிவன்றான்மனப்ப
தத்தைச்சேர்ந்துநின்றும், விரிஞ்சனெனும்பெயர்பெற்றதெவ்வா
றென்றுவித்தரத்தாலுள்ளபடிவிளம்புகென்ன, வரிந்தமன்கேட்ட
லும்வசிட்டனுரைப்பான்வள்ளாலந்தநெறிகேட்டலுமேயுகிலஞா
லம்,புரிந்தநெறிபதிதியிதன்றன்மையெல்லாம்புந்தியுறக்கேட்டுணர்
வுபொருந்துவாயே. (௩௧)

வேறு.

திசைகாலமாதிகளாற்றன்னுடையசத்தியினாற்றிரியாச்சிவன்
பசையானவீலையினாற்றிசைகாலமாதிகளாற்பயின்றமேனி
யிசையாநின்றுளபோதேசிவனுக்குப்பரியாயமென்னப்பட்ட
வசையானவாதனையின்வசத்தாலேயுலையுமனம்வந்துதோன்றும். ()

செயல்செயலின்மைகளிரண்டுஞ்சேர்ந்தெழுந்தமனச்சத்திசெயலை
யியல்பின்முதனெய்தாகிச்சத்தவிதையிரதத்திலெழுவதான[மேவி
வுயர்தருவின்பாவனையைப்பாவிக்குங்கணத்திலேயுடனேயந்த
வியனலைவின்றன்னெறியாலந்தமனங்கனதையினைமேவுமன்றே. ()

பரிசவிதையிரதத்திலெழுவதாங்காற்றசைவைப்பாவித்துன்னும்
விரிதருவின்காற்றிரண்டின்மெய்ந்நெருக்கிலேகின்றும்வெந்நீத்தோ
யிருதிறச்சத்தப்பரிசந்திடமாகப்பழக்கமுறுமியல்பினாலே [ன்றி
யுருவதன்மாத்திரைமேவுமிம்மூன்றினுடன்மேவுமுள்ளந்தானே. ()

கணத்தினிரதத்தியல்பைப்பாவிக்கநீரறிவக்கருத்திலுண்டாங்,குணத்தினையத்திறங்களொடுங்கூடுமனங்கணத்திலேகுறித்துநாடி., மணத்தினைப்பாவித்தலுந் தன்மாத்திரத்தாற்பாரறிவு வருமிவ்வாறே, தணத்த பூதத்தன் மாத்திரம் வளைத்து வளைத்துருவாய்ச் சகமாய்த் தோன்றும். (௩௫)

திகழ்ந்தவனற்பொறியென்னத்திகழ்வடிவைவின்னணிலேதெரியக்காணு, மகங்கரமாந்தொழின்மேவிப்புந்தியுடன்விதையோடுமெணுகியந்தப், புகன்றதெலாஞ்சேர்ந்துப்ரியட்டகமாயுயிர்களுளப்பூவில்வண்டா, மிருந்தகடுங் கூட்டரவாற்பாவிக்கு மிகவிளங்குமேனிதன்னை. (௩௧)

பாவனைமுற்றிடத்தூலமேனியாய்வில்வத்தின்பழம்போற்சித்த [ற்
மேவுகருவிற்பாய்ந்தபொன்னிறம்போன்மிகவிளங்கிவிமலவின்னி
ருவரமுண்டாய்கிற்குமந்தவொளிதன்னுடையசுபாவந்தன்னாற்
கேவலமேற்றலைகீழ்காற்பக்கங்கைகடுவெயிருக்கிளர்ந்தோனுகும். ()

முந்தியகாலத்தினல்வெளியாகிநின்மலமாமூர்த்தியாகிப்
புந்தியொடுசத்துவமொய்ம்புச்சாகம்விஞ்ஞானம்பொதியுமேவு
மந்தவவனேயகிலபிதாமகனுய்முழுதுணர்ந்தவயனுமன்னான்
சுந்தரமாயுத்தமமாய்த்திகழ்கின்றதன்வடிவைத்தோன்றநோக்கி.()

குன்றாதவறுகுணத்தோன்மூன்றுகாலமும்வெளியாக்குறிக்கும்வேதா, வொன்றாகிச்சின்மயமேயுருவமாய்க்கணாகாணுவுயர்வானத்தின்,மூன்றாலுண்டாகியதென்னெனநினைந்தானழுக்கிலாமுழுஞானக்கண், ணன்றாவப்போதிதித்தோன்பலகோடிசிருட்டிமுதனடத்தக்கண்டான். (௪௩)

சாதிகுலந்தருமமெலாமுணர்ந்தவற்றைலீலையினற்றன்கற்பித்தா
னேதரியலீலையினற்சங்கற்பத்தாற்பிறக்குமுயிரையெல்லா
மேதமுறுகந்தர்ப்பநகரம்போலநம்பொருள்வீடின்பமெய்த
மேதகையபலகோடிசாத்திரங்களவர்க்காகவிதித்தான்வேதா.(சo)

விரிஞ்சனுருவாமனத்தாலிச்சிருட்டியிற்சிருட்டிமேவி*கின்றும்
புரிந்தலருமலரெல்லாம்வசந்தகாலத்தினற்பூப்பதொக்கும்
பிரிந்தசுரர்நரர்முதலோர்தத்தஞ்சங்கற்பத்தாற்பிறவியுற்றார்
தெரிந்தனையசங்கற்பமறிற்பிறவார்நெய்மாண்டதீபம்போல. (சக)

வானநகராமனைத்துங்கற்பனைமாத்திரம்வாளாவளராநிற்கு
மானசகனவுதனிற்கனவுபோலிராகவனேயறிதியன்றே
யீனமுறப்பிறப்பில்லையிறப்பில்லையெவ்விடத்துமொன்றுமென்றும்
ஞானபரமார்த்தத்தாலிவையெல்லாம்பொய்யாகநண்ணுமன்றே.

வெங்காதற்பெரும்பாம்புநெளிபுற்றாங்குடும்பபாரம்வெறும்பொய்
யென்றே, யிங்காசையறநீக்கியெல்லையிலாப்பரமபதத்திருந்துவாழ்
வாய், சிங்காரக் கந்தர்ப்பநகரிருந்தென் சிதைவுற்றென் னீதோநன்
றே,பங்கானமனைமக்கள்வாழ்ந்தாலென்கெட்டாலென்பாசமாயை

தாரதனமிகுமென்னிற்றளையாகுமப்பாசந்தனைத்துக்கொண்டா,
லாரதனையறுத்தகலும்விரகுடையாரறிவில்லாராசைவிஞ்சிக், கூரி
தையாமப்போகத்துழன்றுழக்குங்கொடுந்துயராக்குறித்தபோதே
தீரதையாமறிஞர்க்குவிரத்தியுளதாய்ச்சித்தந்தெளியுமன்றே.(சச)

ஆனதிறத்தாற்குடும்பபாரவியாபாரத்திலணுகும்போது, போன
பொருட் கிரங்காமற் பொருந்துபொருண் மாத்திரமேபுசித்து வாழ்
வாய், தினமுறவருபொருளைச் சிந்தியார்வந்தபொருட்டீதென்றெ
ண்ணார், ஞானபரரானோர்க்குச் சுபாவமாங்குணமிதுவேநளினக்
கண்ணாய். (சரு)

கண்டனவெல்லாம்பொய்யென்றுள்ளத்திலனைத்தினும்வெங்கா
தனீத்த,பண்டிதராமுழுதுணர்ந்தபெரியோரையீராதுபாசமாயை,
யுண்டிலையென்பவற்றிடையின்சுத்தமாம்பதம்புந்தியூன்றப்பற்றி, வி
ண்டவுடற்குட்புறம்பாமுலகைநீபற்றுதலும்விடலும்வேண்டா. ()

* நின்ற எனவும் பாடம்.

எக்கருமத்திலுமிச்சையனிச்சையறகின்றுணர்வையெய்தினோர்க்கே, யக்கருமங்களிலறிவுபற்றாதாமரையிலைசேரம்புபோலத்,தொக்கபொறிவிடயநலஞ்சுவையறகின்மனமாரத்தோன்றில்வீரா, தக்கவுணர்வுணர்க்தோனுய்ப்பவக்கடல்கள்கடந்தன்றேசகநக்தீர்ந்தாய்.

உச்சமுறுபதம்வேண்டிலுனைத்துவாதனையிலுநின்றுள்ளக்தன்னைநிச்சயமாமுணர்வாலேநீக்குவாய்மலரின்மணநீங்குமாபோற்றுச்சமுறுவாதனையாக்தரங்கநீர்பவக்கடலிற்றுளைவார்க்கெல்லாமச்சமறநல்லறிவுமரக்கலமாய்க்கரையேற்றுமயலென்றுண்டோ.

பாபரங்கண்டோரனைத்தும்பின்செல்வருலகியல்புபற்றார்நீங்கார்சுராலயநக்தனவனத்திம்பற்றார்கள்சூனியத்துக்துயரமெய்தார்[றேவிராவுகியதியுக்தள்ளார்வெய்யவன்போலனுசரிப்பர்மேன்மைசான்றிராகவனேயிவ்வாறுநடத்தியெனவசிட்டமுனியியம்பலோடும். ()

பரத்துவகேளிவ்வாறுபரமமுனிபரமபதம்பகரக்கேட்டுத், திரத்துவமாகிறைந்தான்போற்சீராமனமலமாய்த்தீர்ந்துசித்தக், தரத்துவமையில்லாதமெய்ஞ்ஞானகல்லமுதாற்றதும்பித்தண்ணென், றுரத்துவளர் சந்திரன்போ னிறைவுற்றான் வசிட்டனுமீண் டோப்பதானன். (௫௦)

ஒருகாலமரன்படைப்ப னொருகாலமயன்படைப்ப னுலகமெல்லா,மொருகாலமரிபடைப்பனொருகாலமுனிவர்படைப்புள்ளதாகு,மொருகாலம் புயத்துதிப்பனொருகால்வா ரியினுதிப்பனுயர்க்தவேதா, வொருகாலண்டத்துதிப்பனொருகால்விண்ணகத்திலேயுதிப்பனன்றே (௫௧)

வன்மரங்களேநெருங்குமொருபடைப்பிலொருபடைப்பின்மனிதர்துன்னும், பன்மலைகளேநெருங்குமொருபடைப்பிலொருபடைப்பிற்படர்மண்ணுகுங், கன்மயமாமொருபடைப்பிலொருபடைப்பிற்றசைமயமாய்க்காணலாகும், பொன்மயமாமொருபடைப்பிலிப்படியேபலவிதமாம்பூமிதானே. (௫௨)

வான்முதலாமண்முதலாநீர்முதலாந்தீமுதலாமற்றைவாயுத், தான்முதலாமிப்படியேசிருட்டிதொறுமோரொன்றுதலைமையாகும், யான்முதலோரயன்சிருட்டி சிலேடையாவுனக்குரைத்தேனிக்தவா

ற்றான், ¶ மேன்முதலா கியமமிதற்கொன்றாகவிலது பலவிதமாய்த்
தோன்றும். (௫௩)

கிருதமுதலுககாலுமீண்டுமீண்டுற்பவிக்குங்கிளத்துஞாலத் [லை
தொருபொருளும்வளைத்துவளைத்தகந்தமடங்குற்பவமாயுழலாதில்
யிருள்பெருகுமாமாயைவன்னனைக்குமுன்னிலையாமியாமிங்கோத
வருமறைதேர்தாசூரன்கதைகேட்டிராமவெனவறைவதானான்.

வேறு.

இந்தப்புவனத்தூடேயெழிலார்மலரின்பொழில்வாய்
மந்தக்குளிர்கால்கமழுமகததேசந்தன்னிற்
கந்தக்கதலிகடம்புகன்னிகாரஞ்செறிந்து
சிந்தைக்கினிதாகியதோர்சிறப்பாமலையினிடத்தே. (௫௫)

பரலோகஞ்சேர்தவமேபண்ணியயன்போலுயர்ந்த
சரலோமாவின்மைந்தன்றாசூரப்பெயர்முனிவன்
சுரலோகத்தின்குருவின்றோன்றற்கசனையொப்பா
னரலோகத்தின்மேலானவைதீர்தவத்தாற்பெரியோன். (௫௬)

தனயனொருவனொடுஞ்சரலோமாவாமுனிவ
னனையகிரியின்வனத்திலநேகயுகஞ்சென்றதற்பின்
புனையுங்கூடுகெழிந்துபுட்போவதுபோற்போகி
வினைசெய்யுடலைவிட்டுவிண்ணோர்வடிவையெடுத்தான். (௫௭)

தனியேயந்தவனத்தேதாசூரப்பேர்முனிவ
னினியதாதையிறவுக்கிரங்கியுதகத்தியற்றும்
புனிதமானபிரமபூசைமுழுதும்புரியான்
கனியுநெஞ்சனன்றில்கதறுமாபோற்கதறி. (௫௮)

தந்தையன்னைபிரிவாற்சாலவெம்பித்தளர்ந்த
மைந்தன்றன்னையருளால்வனதேவதைகண்டருளி
முந்துறுமனின்றுமுனிமாமகவாமுனிவா
சிந்தைதெளிந்தோய்தெளியாச்சிறியோனெனநொந்தயரேல். (௫௯)

அனித்தமானகுடும்பத்தபத்தமுணர்கின்றிலையென்
சனித்தபொழுதேமரித்தல்சற்றுந்தப்பாகண்டாய்

பனித்தவிழியோடயர்வாய்பகலோனுதயஞ்செய்தா
னித்தன்னிலையத்தமனத்தெய்தானென்பாருளரோ. (௬௦)

வாளாவயரேலென்றுமறைந்துதெய்வமுரைப்பக்
கேளாவுணர்ந்துதளருங்கேதமொழித்துநிலையாய்
நீளாரணத்தின்படியேநீரின்கடன்கண்முடித்து
மீளாகெதிசேர்தவத்தின்மிகவும்விருப்பமானான். (௬௧)

தக்கபிரமகருமந்தன்னுற்றவமேசெய்வா
னொக்கசங்கற்பத்தாற்சுத்தாசாரமிகுந்தான்
மிக்கஞானமில்லான்விசுத்தமானபுவியிற்
புக்கவிடங்களெல்லாம்புனிதமன்றன்றென்று. (௬௨)

வைஞ்சுத்தமல்லமரத்தினுனியேபுனித
மையபுட்போலாங்கேயமர்தற்கானதவமே
செய்யகிற்போமென்றுச்சிந்தையாரநினைந்து
வெய்யகனலைமூட்டிவிண்ணோர்குழுவைநினைந்து. (௬௩)

உடலையரிந்துவாங்கியோமஞ்செய்யலோடுங்
கடவுளர்க்கென்முகத்தாற்கலைவேதியன்மெய்த்தசைகண்
மிடறும்புயமுமுதலவேவதென்னேயென்னுச்
சுடருங்கனலோனினைந்துசுருதிமுனிமுன்றோன்றி. (௬௪)

கருதிற்றென்னவென்னக்கைகண்முகிழ்த்துத்துதித்துப்
பரிசுத்தமதாமிடமிப்பாரிற்காணேனதனாற்
றருவிற்றலையிற்றளிர்மேற்றலந்தந்தருள்வாயென்ன
வரமுற்றுதவிக்கனலோன்வாரித்திரைபோன்மறைந்தான். (௬௫)

கானத்திடையோர்கடப்பங்காரின்பதத்தைக்கடந்து
வானத்துயர்ந்ததன்மேல்வருபல்லவமென்றவிசின்
றனத்தையமின்றித்தாரூரன்றனிருந்து
மேனற்றவமேசெய்வான்மிகவும்விரும்புமனத்தான். (௬௬)

வேறு.

ஒருகணந்திசைகளனைத்தையுநோக்கியுரைத்தபத்மாதனத்திருந்தான், பெருகியதிசைகண்முழுதினுந்திரும்பிப்பிராமாவனையறிவரிதாய்க், கருமமாத்திரத்தினிற்பதாய்ப்பலமாங்கற்கசம்விரும்புறும

னத்தால், வருடமாதிரண்டுமெகங்களோடத்திவானவர்க்கவியுணவ
ளித்தான். (கூஎ)

கோத்திரள்புரவிமனிதராலியற்றுங்கோதறுவேள்விகண் முற்றுஞ்
சாத்திரவிதியாலியற்றிநீள்காலந்தவறறநடந்தமையாலே
மாத்திரமானமனமிகத்தெளிந்துவரம்பிலதாதலுமாங்கே
நேத்திரமானஞானம்வந்தெய்திநிறைந்தனன்வலிதினன்னெஞ்சம்.

பிறவியாவரணங்கழிந்துவாதனைகள்பேறமாண்டுளபெரியோ,
னிறவியதளிர்போலிருத்தலுமொருநாணிமலமாம் விழிகளுக் கெதி
ரே, யுறவிரிமலரின்மேகலையுடுத்தவுயர்வனதேவதைதோன்ற, வறி
வனுநோக்கியார்கொனீயென்னவழகியவணங்குளாசெய்வாள். ()

பெரியவர்தம்பாற்பெறலருநேயம்பெற்றவர்விரும்பியவெல்லா,
மரியனவெனினுமிமைப்பினிலெளிதிலணுகுமென்றய்யமற்றறிந்தே
ன், றெரிவருண்முனிவரியுறைவனத்திற் செறிவனதேவதையிங்கு
ன், விரியலர்கொடியாம்விகோதவீட்டிடையேவிருப்பொடுமிருப்ப
வளுனே. (எ௦)

மேடமாதத்திற்பிறைபதின்மூன்றுகலையுறமேவிபநாளி, னுடரு
மதனனுயர்திருநாளினந்தனவனத்திலேவந்து,கூடியவனதேவதை
க்கணந்தன்னைக்குறுகினேன்பாங்கியர்முழுதுந், தேடருமைந்தரு
டன்மகிழ்ந்திருந்தார்சிறுவனில்லாதயான்றளர்ந்தேன். (எக)

காதலித்தவர்க்குக்கருதியதளிக்குங்கற்பகமனையநீயிருப்ப
நாதனேநாதரில்லவர்போலநான்மகற்கிரங்குதனலனே
நீதரல்வேண்டும்புதல்வனையன்றிநின்னருளென்பொருட்டிலதேற்
றீதறுமதலையிலதெனுந்துன்பஞ்செந்தழன்மூழ்கியேதீர்ப்பேன்.

என்னலுமுனிவனகைத்தொருமல்லாயிந்தொருமதியிலேயெளி
தா, யன்னமேமகவைப்பெறுதியானீ முன்னருங்கனன்மூழ்குவே
னென்னு, வின்னலால்வலித்துமகவுவேண்டுதலாலினிதுநீயின்றிடு
மகவும்,பின்னுறுவருத்தநெறியினுன்ஞானம்பெறுமெனப்பேசினன்
பெரியோன். (எஉ)

கேட்டவண்மகவுகிடைத்ததேயென்றுகிளர்முகமதிநிலாக்குலா
வ, மீட்டுமம் முனியை நோக்கிநின்னேவல் விரும்பியீண் டுறைகுவ

னென்ன, வாட்டமின்முனிவனியைந்திலன்விடுப்பவந்தனளணங்கு
தன்னிடத்திற், சேட்டமாமகவையளித்தனள்கலையாற்செறிதருமதி
யெனவளர்த்தாள். (௭௪)

இருதுவேயாண்டேயெனுங்குறிகளினுலிறந்தனவாறிரண்டாண்டு
திருமுனிபாதமகவொடுமடைந்துசென்னிதாழ்ந்தேதிருநகின்று
பெருமைகண்டருள்வாய்நீதரயானேபெற்றவிப்பெருங்குணக்குமர
னருமறைநூல்களனைத்தையுநானேயளித்திடவறிவினுலறிந்தான்.

கலையெலாநிறைந்தும்பிறப்பிலாஞானங்கண்டிலன்சடற்பவத்துயரா
லலைவுறுநின்றன்றனையுணர்ஞானமளித்தியென்றணங்குரைசெய்ய
நிலைகொண்மாணுக்கனமக்கிவனுக்கிநீயகல்கெனவவளகன்று
டலைமைசேர்முனிவன்றாளிணைவிடாதுசற்குணமதலையுநின்றான்.

வருந்திமெய்ஞ்ஞானம்பெறத்தருமகவைமாதவனருளினன்மே
லைத், திருந்தியகதைகளளவைகளிதிகாசத்திலேசெப்பியதிறங்கள்,
பெருந்துணைமறையின்முடிவிலேதுணிந்துபேசியபழம்பொருண்ம
ற்றும், பொருந்தியநெறிகளநேகமாய்விரித்துப்பூரணபோதமேபுகன்
றான். (௭௭)

வானதிமூழ்க்கவுதுநெறியாகவானிலேமறைந்துபோயொருநா
ளானவேழ்முனிவர்பதவிநின்றணுகியனையதாசூரன்வாழ்கடம்பின்
றனமேமேவியிருட்பொழுதிருந்துதாபதன்றனயனுக்குரைத்த [ம்.
ஞானநற்பொருள்கள்கேட்டனமதனைநாமுனக்குள்ளவாறுரைப்பா

பிறப்பிலாப்பிரமமிதுவெனவறுதிபிறப்பதோர்கதையிதுகேளாய்
சிறப்பதோரரசன்வீரமும்புகழுஞ்சிறந்தவன்றெளிஞனும்பெயரோ
னிறப்புறுமுலகபாலராயுள்ளாரவனுடையேவலைமுடிமே[டியோன்.
னிறப்புறுமணிபோற்றுங்குவரோவர்க்குநிலைபெறநிறுத்தொணுகெ

சாகசமொன்றும்விரும்புவோன்பலவாச்சாலவும்வியப்புறுதொழி
லோன், சோகமுமகிழ்வுந்தருவதாய்முயலுந்தொழில்களின்றொகு
தியை யெண்ணின், மாகடலலைகளெண்ணினுந்தொலையாவாட்ப
டைவாயுவன்னிகளி, லேகமுமிவனையடர்வுறுதாகுமிருகையால்வி
ண்ணையென்செயலாம். (௮௦)

வரம்பறவிரிக்துலீலையாற்புரியுமட்டறுமுயற்சிகளனைத்துந்
திரம்பெறுதேவர் மூவராலெனினுஞ்சிறிதுமிற்செல்லவுமரிதாம்
பரம்பியவிவனுக்குடலமாயெல்லாம்பரிப்பவர் மூவருண்டனைய
ருரம்பயி லுலகையடர்க்துநிற்பவர்களுத்தமன்மத்திமனதமன. (அக)

முடிவிலாவிசும்பிற்றோன்றியாங்குறைவோன்மூவகையுடனுடை
னெடியவவ்விசும்பிலவன்றருககரநீண்டவிதிகள்பதினுலா[முதல்வ
மொடிவருபகுதிமூன்றினுலெழிலாருபவனம்வனங்கள்செய்குன்றங்
கொடிகிகர்முத்தமாலையேழ்வாவிகுளிர்கொதிப்புனவிருதீபம்.

என்பனநிறைந்தவிந்நகரத்திலிவன்றருபாவறையினங்கண், முன்
புறுகீழ்மேனடுவெனும்பதங்கண்முழுதினுமுழல்வுறவிதித்த, வன்
புறுதூண்கண் மூன்றுளவெனுப்பு மரங்களாற்செறிந்தனபுண்ணீர்,
மென்படர்தோலானெய்த்தினிதானவிரிமயிர்க்கற்றையான்மேய்ந்த

மந்தமாருதஞ்சூழ்சாலகமொன்பான்மருவினவைம்பொறியெ[illegible]ர்
னுஞ்,சுந்தரவிளக்கால்விளங்குவவிரண்டுதோளெனுந்தோற்றமுமு
டைய, வந்தமில்பரமபாவனைக்கஞ்சுமகங்கரப்பேய்சன்காத்தவிப்
பச்,சந்தகமிலாதமாயையாலந்தத்தரணிபன்சபைநீ தபாவறைகள்

அசைதருமினியபாவறைத்திரளிலகங்காப்பேய்களோடுலாவிக்
குசைதருவிநோதம்விவிதமாவியற்றிக்கூடுறைபுள்ளெனவுறைந்து
விசையினுலவற்றைவிட்டகன்றயலேமேல்வருபாவறைவிதித்து
நசையுறமேவிப்பூதவாவேசநண்ணினர்போலவனடிக்கும். (அரு)

இவற்றைவிட்டவற்றையெய்துவமென்றேயெண்ணுறவப்படியெ
ய்து,மவற்றினின்றிறப்போமென்றெனுநினைவாலப்படியிறந்துபோ
ஞ்சித்தங், கவற்றியாலலையப்பிறந்திறந்துழலுங்கனமேயிவற்றினு
க்கிடமாந், தவற்றினையெய்திமீளவுந்தோன்றுந்தவழ்திரைநீரிலேவ
ரல்போல். (அசு)

மேனிமூன்றுடையோன்சிறந்தகந்தர்ப்பவிதித்தவூரனையதற்புரத்
திற், முனினிதிருந்தொலைவறமேன்மேற்றழைப்புறுகாரியவசனு,
யீனமாமொருகானன்மையாமொருகாலென்செய்வோமென்றிடு
மொருகான், மானமாமொருகான்மயக்குறுந்தெளியும்வருந்துறும
கிழ்வுறும்பலகால். (அஎ)

தளர்ந்தனனென்னுந்தடித்தனனென்னுந்தாழ்ந்தனனுயர்ந்தனனென்னும், வளர்ந்தனனென்னுங்குறைந்தனனென்னுமாருதமோதுறுகடல்போ, லுளந்தனுலந்தமன்னவன்சுழல்வதுணாப்பதெனென்றலுமைந்தன்,கிளந்ததாதையைநீதெளிஞனென்றுணாத்தகீர்த்தியோனுரெனக்கேட்டான். (௮௮)

வண்மையாலந்தமன்னனையுணாத்தால்வரும்பிறப்பிறப்பெனும்பொய்யி, னுண்மைநன்குணர்தியென்றுதாரூரனுத்தமமைந்தனுக்குணாப்பா, னெண்மயமாகிப்பொய்யெனத்தோன்றியிடமுறவிரிமுயற்சியதாய்க், கண்மயலானபிறவியினிலையைக்கட்டுரையாகமுன்னுணாத்தோம். (௮௯)

தற்பரவிகற்பிலுதித்தசங்கற்பஞ்சாற்றியதெளிஞனுமன்னன் பற்பலகாலுந்தோன்றியுமறையும்பரம்பியவுலகதன்வடிவா மற்பசங்கற்பமுளதெனிலுலகுண்டதுவிலதெனிலுலகிலதா மற்படுமூவர்முதலியதேவர்மொய்த்தமெய்யவயவமதற்கே. (௯௦)

மேயதன்பத்திப்பாச்சன்மாத்திரத்தால்விரிஞ்சனும்பாவனைமேவியாயசங்கற்பம்வடிவிலாவிண்ணிலமைத்ததுமுப்புவிநகாகாயகரீரேழாகுமீரேழ்ஞாலமேனகருறுதெருக்கநேயஞாலங்கள்செறிபொழிற்றிரள்கள்சொல்லியவனமுபவனமே.()

மேருமந்தரமேமுதலவந்நகரின்மேவியவிநோதவெற்பினமாஞ்சூரியன்றிங்கள்காற்றினலசையாச்சுடர்களாகித்திலமாலைநீருயர்நதியின்றிரள்களாம்வாவிநிகழ்த்தியவேழெனுமவைதான் பேரியல்வடவைகமலமாய்ப்பூத்தபெருங்கடலேழுமேபெரியோய்.

இனையமாநகராஞ்சகத்திடைமுன்னமியம்புசங்கற்பமன்னவனுல்வினையினல்வந்தவுடல்கள்பாவறையாமேற்பதத்திமையவரென்னும்வனையகீழ்பதத்தினரகரேயென்றுமனிதரோகடுப்பதத்தென்றுந்துனைதருவாதவெந்திரவிசையாற்சுழல்வனதசைச்சுவரகங்கள். ()

பல்வகைதானேயியங்குறுமுடலாம்பாவறைதோறுமவ்வேந்தனல்வழியுணர்வைநோக்குறநடுங்குநலமிலாவகங்காமென்னும்[ரேவல்லவிப்பேய்கள்பொய்களாயிருந்தும்வந்துமெய்போலெழுமவற்றொல்வதாம்விநோதம்புரிதருங்கணத்திலுண்டுமோமில்லையுமாகும்.

காயமென் றுரைத்த பாவறைதோறுங் கடலிடையலைகள்போற்
றோன்றி,மாயுமேலியற்றுமனைகளின் விடாமல்வருமிவனியற்றியவெ
ல்லா, மேயதோர்கணத்தில்வீண்களாய்நசிக்கும்வீணிலேதிரிதருமி
வன்றா, னயதன்சங்கற்பத்தினுலிருக்குமவ்வளவருந் துயருழக்கும்.

இறையுமோர்சுகமற்றிரங்குவோன்றானுண்டென்பதோர்பாவனை
யாலே, நிறைசக்கியற்றுந்தானிலதென்றேகினைத்திடிலக்கணத்தி
ந்து, குறைவறுகதிர்முன்னிருளெனப்போகுங்குறித்தசிற்றின்பமு
ற்றமிழு, முறைவுதமிவனுக்குடல்கண்மூன்றுளவாமுத்தமமத்திம
மதமம். (௯௧௨)

முக்குணந்தானேமூன்றுடலாகிமூலமாமூன்றுலகிற்கு
மக்குணந்தன்னிற்றமங்கொள்சங்கற்பமாவதுபகுதியின்செயலாற்
றுக்கமாய்வருந்திப்பாதலப்புழுவாந் தூயசத்துவங்கொள்சங்கற்ப
மிக்கநற்றருமஞானம்விளைதாய்வேந்தர்வேந்தெனமிகவிளங்கும்.

இராசதகுணசங்கற்பமிவ்வுலகினியல்புறுகுடும்பியாயியங்கும்
விராவியவித்தமூன்றையும்விட்டுமெய்ம்மையாய்த்தானிலதென்னி
னிராகுலமாகவனையசங்கற்பநிமலமாம்பரபதமடையுந் [த்தி.()
துராசையாம்பார்வையனைத்தையுநீக்கித்துகண்மனத்தினுனி

உள்ளினும்புறத்துமெழுந்தசங்கற்பமொருக்கிடவொருப்படகினை
யெள்ளருந்தவங்கள்கற்பகோடிகணியற்றினும்பாதலம்பூமி [வா
தள்ளருந்துறக்கமேவினுமுனக்குச்சாற்றுசங்கற்பமாய்வல்லாற்
றெள்ளியபரமபதத்தினைமேவத்தியக்கமினுபாயம்வேறில்லை.(௯௧௩)

துயர்களும்விகாரங்களுமிலாப்பிரமசுகஞ்செய்சங்கற்பநாசத்தை
முயலுதிநனிசங்கற்பமாங்கயிற்றின்முடிவறுபாவனையெல்லா
மியல்புறுகோவையாலெழுமந்தக்கயிற்றினையெளிதினிலறுத்தான்
முயல்கொள்பாவனைகளெங்ஙனேதூளாய்மடியுமோவறிகிலமைந்தா

துனிசெய்சங்கற்பமின்றிமுன்வந்துதோன்றியதொழில்வழிநிற்பாய்
பனிசெய்சங்கற்பமாண்டிடிலறிவுபார்வைகளனைத்தினும்பற்றாத்
தனியுயர்பிரமபதமடைந்தகில்விகற்பமாந்தனையெலாந்தள்ளி
யினியனுபேகத்துவத்திலேசுழுத்தியிதயமுற்றின்பமேபெறுவாய்.()
என்னலுமுயர்சங்கற்பமேதென்னவெழுந்ததும்வளர்ந்ததுமாய்ந்து
சன்னமாவதுமெங்ஙனமென்றுதவஞ்செய்தாசூரனைமைந்தன்

பன்னியேகேட்பவதற்கவனுரைப்பான்பரமமாயுண்டெனல்வடிவா
மின்னியசமமாமறிவுகாண்பவற்றின்மேவுறவெழுதல்சங்கற்பம். [ய்
அற்பமாயெழுந்துதானுளதாகியடைவிலேபையப்பையப்பருத்துத்
தற்பரமனமாக்கெளிவறமுடிச்சடத்துவந்திடத்திலுண்டாக [வி
வுற்பவமுகில்போல் வளர்வுறுமைந்தா வுணர்வுகாண்பவற்றினையுன்
[illegible]ற்பதாந்தனக்குவேறுபோற்கண்டுநிகழ்த்துசங்கற்பமாய்நிகழும்.

அறிவெனும்விதைசங்கற்பமாமுளையாமனையசங்கற்பமாந்தன்னைப்
பிறிவுறத்தனேசெய்துதான்பிறக்கும்பெரிது[illegible]வ[illegible]ர்க்கிடுந்தானே
செறிதுய[illegible]ாழியவின்பமொன்றில்லையாதல[illegible]ற்செப்புசங்கற்ப
செ[illegible]றநினையேனிற்புறுநிலையினிமிடமும்பாவனைநினையேல். ()

இவ்வளவாம்பாவனையாலேயின்பமாமினையசங்கற்பக் [த்த
தவ்வுறப்பெரியமுயற்சிகள்வேண்டாந்தாக்குபாவனையெலாமொழி
வவ்வகையாலேயிறந்துபோந்தன்னெஞ்சலர்வுறுபூவினைக்கசக்கிற்
[illegible]கவருவருத்தமொன்றுளதாகுங்கழறியவிதற்கதுவேண்டா(௧௦௫)

எழுந்தசங்கற்பபாவனைவிட்டாலிறந்துபோமிதனையிங்கிதனு, ல
ழுந்துறமாய்த்து[illegible]னத்திறன்மனத்தையறுத்துநின்னறிவினீநிற்பா,
[illegible]ழுந்துருள்பொழுதின்முடியுமீதரிதோவுலகமும்வானமுமொக்கு,
[illegible]ழுந்தியபொரியாய்ப்போம் விகற்பத்தான் முளைத்தவையன்றிமு
[illegible]னிலதால். (௧௦௬)

தண்டுலத்தோலுஞ்செம்பினிற்களிம்புஞ்சககசமாய்த்தொழில்வி
[illegible]டத்தால்; விண்டுபோமதுபோற்புருடனுமலத்தைமேவியேபோ
க்குதலியல்பாங்,கொண்டசந்தேகமொழித்துநீமுயல்வாய்குருவின்
வல்லபவிளக்கத்தாற், கண்டனமெனல்விஞ்ஞனுநீதானுங்கண்டனப
ரம்பொருட்பொலிவே. (௧௦௭)

எனவவருரைத்தயாவையுங்கேட்டவ்விரவிலங்கவனாரானெய்
த, மனமகிழ்ந்தருச்சித்தென்னுடைத் தளிர்மேல்வதிந்தனனிருவரு
மெய்ம்மைக், கனகதைகளினற்காதலுற்றவர்போற்கங்குலைக்கண
மெனக்கழித்தவ்,வனகனைநீங்கிக்கங்கையுற்றனனவன்கதைபோ
லுமிச்சகமே. (௧௦௮)

தாசூரன்கதைமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௭௩௧.

கசன்கதை.

முடிவறுகாலந்தன்னின்மொழிதருமாண்டுநூறு
கொடியளவெனினும்பற்றுதிதனையேகெடிதாய்நோக்கி
யொடிவறுபாரவேட்கையுறுவதேன்பொருள்களுன்னிப்
படர்வதாமுள்ளத்தாசைபற்றறவொருக்கிநிற்பாய். (௧)

மாலறவெங்ஙனின்றுயங்ஙனேவாழ்வாய்பாரிற்
கோலநன்மலைகள்வேண்டாதிருக்கவுங்குறுகிப்பியுந்
தூலநன்னிழல்போலுண்டாமாத்திரந்தோற்றமான
ஞாலமும்பரமந்தன்னினலம்பெறத்தோன்றுமன்றே. (௨)

ஆதலாற்பரமந்தன்பாலகர்த்தனேகர்த்தனேயென்
றேதுபாவனைகளுண்டாமுற்றபற்றிலாமையாலே
சாதமிலகர்த்தனுஞ்சக்திமாத்திரந்தான்
மேதகுகத்தனுமிவ்விரண்டலால்வேறுமேவா. (௩)

அகத்தனிற்கத்தன்றன்னிலமைந்ததேதனினிற்பாய்
முகத்தமாமிரண்டுமின்றிமுளைத்தெழுமனத்தைநுங்கி
மிகத்தனிதிரமாய்நிற்றியகத்தனுவிளம்புகேளிற்
சுகத்தனுநிற்றியேனுநன்றிதுதுயரொன்றில்லை. (௪)

முன்னியகத்தனுகியான்சகமுறைசெய்கின்றே
னென்னியநினைவிலாமையாலதில்விகாரமில்லை
யென்னதுநோன்செய்தேன்செய்திலேனென்னும்பார்வை
யுன்னியபொழுதேதுன்பமுடலிலானென்பாருண்டோ. (௫)

மொய்யுடனேயென்னின்மூவேழுநரகுமஃதே
வெய்யவன்றுயராமேனுமெய்யையானென்னவேண்டா
வையமில்கேள்விநல்லோர்நினைவரோவனைத்தாமூனுங்
கையுறத்தின்பரோனுநாய்ப்பிணங்கவரார்நீசர். (௬)

காமுடலென்னுமாசான்ஞானக்கண்குருடாய்ப்போகுந்
தோமுறுமதனைத்தூரத்தூர்ப்பரேற்சோதிஞான
மாமுகிலிலாநிலாப்போல்வயங்கிடுமினையகண்ணு
லேமுறுபிறவிவேலையிருங்கரையெளிதுதோன்றும். (௭)

அனைத்தினுங்கத்தனல்லேனவனிவனல்லேனென்ன
நினைத்துளத்துறுதியாகிநிற்றியாலஃதின்றென்னி
லனைத்தினுங்கத்தனுனேயளவறுமதுநானென்ன
நினைத்தசைவொன்றுமின்றிநிச்சயமாகிநிற்பாய். (அ)

அன்றெனிலொன்றுமல்லவொன்றுநாமாகுமென்றே
நின்றவிப்பதத்தினன்றுநின்பதந்தனினிற்பா
யொன்றெனும்பதத்தைக்கண்டவுத்தமர்தன்பானிற்பர்
துன்றுவாதனையேபந்தந்தொல்லைவிட[illegible]த்தீர்தல். (கூ)

பு[illegible]களிற்பழகிச்சித்தம்பூண்டவாத[illegible]கண்முன்னே
புலம்பெறமாற்றிவிட்டிற்கடுத்தவாதனையுந்தீர்வாய்
நலந்திகழருள்சந்தோடநட்புதாசினமிக்காலு
மலந்தவிர்குணங்களாகமனத்தழுந்தாறுசெய்வாய். (க௦)

உள்ளு[illegible]தொழில்கண்முற்றுமொருக்கியோருணர்வைப்பற்றி
மெள்ளவாங்கதுவுமந்தக்கரணங்களுடனேவிட்டுத்
தள்ளுவவெல்லாமெத்தாற்றள்ளினுமதுவுந்தள்ளித்
தெள்ளுண[illegible]வுள்ளஞ்செய்கைதேசிருளனைத்துந்தீர்ந்து. (கக)

வாதனைவடிவமானவிவைகளுமற்றிவற்றைப்
பேதமாய்ப்பழகுவோனும்பிராணனியக்கந்தானு
மியாதுமூலத்தோடீர்த்துவிண்ணகமென்னநின்று
வியாதுதீர்சாந்தனுயென்னுயினையதுநீமெய்யால். (கஉ)

உளத்தினிலனைத்துமாற்றியுலகிலோர்பற்றின்றித்
துளக்கிலாநிலையினின்றோர்துகளறுமுத்தராவா
ரளக்கருமீசராவாரவர்களேசமாதிதானுங்
கொளத்தகுகருமந்தானுங்கூடினும்விடினுமுத்தர். (கங)

இருதயத்தாசையொன்றுமிலாமையாலெண்ணப்பட்ட
கருமங்கள்செய்துந்தீர்ந்துங்கையுறுபயனென்றில்லை
யொருவழிப்படநீள்காலமுளமொருப்படுதலாலே
பெருகுவாதனைதீர்நெஞ்சிற்பேசுநூலனைத்தும்வேண்டா. ()

மறுகுவாதனைகடீர்ந்தமவுனத்தையொழியவேறு
றுறுகதிகல்லதில்லையுணர்வனவுணர்ந்ததாகுந்

துறுதிசைப்பத்துஞ்சுற்றிமீண்டதாங்தொல்லைஞாலத்
தறுதியாயுண்மைகண்டோர்சிலர்நின்றாரவத்தின்மாய்வோர்

தேகத்தைநோக்கியன்றேசெகமெலாந்திரிவதல்லா
லேகத்தைநோக்கியன்றேவெங்கணும்பஞ்சபூத
நாகத்தைமண்ணைக்கீழைநாடினுமாறுகாணா
மோகத்தைவிடுதுமென்றேதிடமுற்றார்முழுதும்பற்றார். (க

ஊகமின்மூகர்க்கெல்லாமூழிவெங்கடலாஞ்சென்ம
மோகமிலுகத்தோர்க்குமுன்னுறுகோவின்றாளாந்
சோகமின்ஞானநெஞ்சிற்றொடர்ந்தசிற்றின்பம்பற்றாப்
போகமில்சிற்றார்ப்புன்பெண்பொலிநகர்விடலைக்கென்னே

பிரமமாஞ்சுத்தவேலைநுரைகளாம்பிறங்கலெல்லாம்
பரமவாதித்தன்முன்னர்க்கானலாம்பரவைஞாலந்
திரமதாமிதனைமுன்னேசெப்பினன்வியாழனுந்த
வரமகன்கசனும்பேரோன்மற்றதுவள்ளல்கேட்பாய். (கஅ)

கசனுயர்சமாதிநீங்கியொருபகற்களிக்குநெஞ்சன்
வசமறத்தழுதழுத்தவசனத்தன்யாதுசெய்வேன்
திசையுறவெங்குசெல்கேன்நீர்ப்பதென்கொள்வதென்னு
மிசையுயர்கற்பநீர்போன்மேதினியெங்குநானே. (க௯)

மேனியிற்புறத்தினுள்ளின்மேலொடுகீழிற்றிக்கில்
வானில்வையகத்திலெங்குநானன்றிமற்றொன்றில்லை
யானிலாவிடமுமில்லையெனதிடத்திலாதுமில்லைத்
தானிகழ்பொருள்வேறில்லைசச்சிதானந்தமென்றான். (உ0)

கசன்கதை முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-எ௫௯.

திதிப்பிரகரணம்.

பெறற்கொணாதசத்துவகுணப்பிறப்பினர்புவிமே
னிறத்துவாழ்வதுவான்றிகழ்நிறைமதிகிரணம்
வறக்குந்துன்பத்தில்வாடலரிரவுதான்வரினுஞ்
சிறக்கும்பொற்கமலத்தலர்குவியுமோசிறிதும். (௧)

பகுதமன்றியேமற்றுளதொழில்களிற்பற்றார்
தகுதியாகியமேலவர்நெறியிலேசரிப்பர்
மிகுதியானிறைந்தசைவறுமுளத்தினன்மிகுவர்
தொகுதியானநட்பருண்முதற்குணத்துளாற்சுடர்வார். (௨)

இயற்கையாகியகுணத்தினரிழிவுயர்விரண்டு
நயக்கலாதவர்சமமுளோர்தன்னெறிகடப்போர்
வியக்குமாறுதன்கரைகடாவேலையையொப்போர்
மயக்கி[illegible]வரிரவிபோலியதியைவழ்ந்தோர். (௩)

கொள்ளற்பாலதுதுயரிலாதவர்நிலைகுறுகத்
தள்ளற்பாலதுதீயவர்நெறியெனுஞ்சழக்கே
யெள்ளற்பாலதாமுலகமேநியாமெவனென்றே
தெள்ளற்பாலதுகுரவராலறிவினுற்றீர. (௪)

வருந்துகிற்பதுதனையறிநெறியிலேமனத்தாற்
றிருந்துகிற்பதுகருமத்திலழுந்திலாச்செய்கை
பொருந்துகிற்பதுதீயவரல்லவர்புணர்ச்சி
யருந்துகிற்பதுநானென்பதாக்குகிற்பதுவே. (௫)

நீக்கத்தக்கதுநாம்பெலும்பெனுமுடற்றியக்கம்
சேர்க்கத்தக்கதுமுழுதுயிர்க்குள்ளுறைபரம
மேர்க்கத்தக்கதேரிரவியினிடத்திலும்பாரி
னீக்கத்தக்கிலாப்புழுவினுஞ்சித்தொன்றேநிற்கும். (௬)

தாமதத்துடனிராசதஞ்சாத்திகமென்னு
நாமமுக்குணப்பிறவியுமுயற்சியாளனுஞ்
சேமமுத்தியைச்செய்திடுஞ்சாத்திகச்செய்கை
யிராமவுத்தமராகவவென்றுமீட்டுரைப்பான். (௭)

திதிப்பிரகரண முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௭௬௬.

உபசாந்திப்பிரகரணம்.

சனகராசன்கதை.

சுரர்குருவின்மகனுரைத்தபடியேயிவ்வுலகெலாஞ்சொரூபமாகும்
விரவியநீள்பிறப்பிறப்பாமிருமையையிராசததாமதத்தைமேவும்
புருடர்தரித்திடவற்றாய்த்தூண்சுமக்குமண்டபமேபோலநிற்குந்
திரமுளசத்துவகுணத்தன் போல்வார்கள்சாகபயந்தீர்ந்துநிற்பார்.

வழுவறுசத்துவகுணத்தோர்தோலுரிக்குமரவென்னம[illegible]யாபாச
நழுவவொல்லாம்பிரம[illegible]தவேயென்றெண்ணிநாமும்[illegible]றே
முழுதுலகம்வேறென் னுமோகமொழிப்பாய்பிரமமூலச்சித்தி
லெழுவனகற்பனையெல்லாங்கடலிலலைபோலமெய்யாயில்லையன்றே

சோகமில்லைமோகமில்லைபிறப்பில்லைபிறப்பிறப்பிற்சுழ[illegible]ரில்லை
யேகமெனவிங்கென்றுமுள்ளபொருளேயுள்ளதிரங்[illegible]வண்டா
மூகமுறவருவனபோவனகிளையேற்றெருந்தனைகளொன்றுமில்லா
மாகனசத்துவகுணத்தோடொருவனுமிடறொல்லாமாற்றிநிற்பாய்.( )

சமமாகிச்சொரூபத்தேநிலையாகித்திரமதியாய்ச்சாந்தனாகி, யமர்
மனனமௌனியாய்கன்மணிபோற்றெளிந்துதுயரனைத்துந்தீர்வாய்,
விமலமுறநிகழ்காலத்தொழிற்செய்தியாவையினுநேயமின்றி,கமலெ
ளக்கொள்ளுதல்விடுதலிரண்டுமேறத்துன்பமெலாநாசஞ்செய்வாய்.

இனிப்பிறவாமுடிவானபிறப்பிலேமெய்ஞ்ஞானமெளிதிலுண்[illegible]ா
ம், பனிச்சுடர்வெண்ணித்திலங்களுத்தமமாமூங்கிலல்லாற்ப[illegible]வது
ண்டோ, செனித்தவரின்மேலோராய்நல்லோராய்மித்திரரா[illegible]த்தெ
ளிந்தோராகி,யனித்தமறமுத்தராய்ஞானிகளாங்குணமெல்லாமவ
னைச்சேரும். (௫)

மெத்தென்றசரித்திரத்தினவர்தம்மையுலகெலாம்விரும்புந்தன்
மை, கொத்தொன்றுவனமூங்கிற்குழலிசையான்மகிழ்விலங்கின்கூ
ட்டம்போலு, மித்தன்மையாவருக்கும்பொதுமையினுலியம்பியதா
மிதனில்வேறாய்ச், சத்தென்றவழியிரண்டேழ்பவந்தீர்ப்பவர்க்கவ
ற்றைச்சாற்றக்கேண்மோ. (௬)

தேசிகன்சொற்பிழையாமலனுட்டிக்கிற்பையப்பையத்நிபக்கநீங்கிப், பேசியசென்மத்தாதலடுத்தசிலபிறப்பினுலாதல்பேரும், மாசறுவிற்பத்திசித்திதுண்டாகுமனத்தாற்றன்மனனத்தாலே, யேசறுமாகாசபலம்வீழ்வதுபோன்மெய்ஞ்ஞானமெளிதிலுண்டாம். (எ)

இவ்விரண்டிலாகாசபலம்போலமெய்ஞ்ஞானமியைத்ததன்மை, செவ்வியவள்ளான்முன்னோர்கதையாலேயான்செப்பத்திருந்தக்கேட்பாய், தெவ்வுலகிலாபத்தென்றென்றுமிலோன்விதரணத்தோன் செல்வமிக்கோ,னவ்வியமில்விதேகநாடரசாள்வோன்சனகனெனுமரசர்கோமான். (அ)

[illegible]த்தாற்கடலனையான்சக்கரத்தானெனவுலகந்தாங்குநீரானற்குணஞ்செய்வசந்தனுணருமலர்சூழ்கந்தனத்தினயக்துமேவிதற்குரியதந்திரர்கள்புறகிற்பத்தனியனுய்ச்சரிக்கும்வேலைசிற்குரியமன[illegible]டையசித்தர்கணம்பாடுவபண்செவியிற்கேட்டான்.

வெதியாரும்பொருப்புறைவோர்விழிப்புலத்தின்மேவாதோர்விளம்புகீத,நெறியார்மன்னவன்கேட்டபடியுரைப்பகெடியவலேகினைவிற்கொள்வா, யறிவானுமறிபொருளுங்கூடியகூட்டரவிலெழுமறிவாகர்தம், பிறியாதவான்மதத்துவத்தெழுந்ததாமதனைப்பேணல்செய்வாம். (க0)

காண்பானுங்காண்பனவுங்காட்சியும்வாதனையுடனேகழலவிட்டுச், சேண்பாவுகாட்சிக்குமுதலொளியாமச்சொருபஞ்சிந்தைசெய்வா, மேண்பாலாமுள்ளதிலதெனுமிரண்டினிடையெய்திபிறவிவாதாம், மாண்பானவொளிக்கெல்லாமொளியாமச்சொரூபத்தைமதித்தல்செய்வாம். (கக)

அகமகமென்றனைத்துயிரினிடத்துமிருந்தனவரதமுரைப்பதாகி, சிகழொளியாயான்மதத்துவமானசொரூபத்தைநினைத்தல்செய்வாம், திகழிதயகுகையுறையுந்தேவதையைவிட்டயலேதெய்வந்தேடன், மிகவரியகவுத்துவத்தையெறிந்துசிறுமணிதேடும்வேட்கைபோலாம். (கஉ)

மாளாதகாதலெனும்வற்சகாபிக்கொடியின்வனத்தைச்சுட்டு, னோசையனைத்துமறுத்தவர்க்கன்றேவிப்பயன்றுனேராகிற்கும், கோ

ளான பொருளனைத்தின் முன்பொடு பின்பினிமையிலாக் குற்றங்க
ண்டு,மீளாதபாவனையாற்கட்டுண்பார்வேசரியேவேறொன்றன்றால்

எழுந்தெழுந்துசிறுகின்றவிந்திரியப்பாம்புகளையிதயந்தன்னி [ன்ன
லழுந்துவிவேகத்தடியால்வச்சிரங்கொண்டிந்திரன்வெற்படர்வதெ
விழுந்திடமோதறவேண்டுஞ்சாந்தியினாற்சமமேவியிடர்தீர்நெஞ்ச
முழுந்துசுகவடிவாந்தற்பதநிலையைப்பெறுமிதுவேமுத்தியென்ன

தெளிவுடையசித்தர்கண்டிகழ்வுறப்பாடியகீதந்தெளியக்கேட்டுக், களிதருவெஞ்சினக்கருடனொலிகேட்டபாம்பென்னக்கலங்கி மன்னன்,குளிர்பொழினின்றகமடைந்தானனைவரையும்விடைகொடுத்துக்கோயில்புக்கா, னொளிர்சுதைசெய்மேனிலத்திலொருவனா யிருந்துனிநாடலுற்றான். (கரு)

பறக்கின்றபறவைகளின்சிறகென்னவனவரதம்பல்கத்துலாவி, யிறக்கின்றவுலகநடைநோக்கிவாய்விட்டிரங்கியழுதலுற்றா,னறக் கன்றியவத்திலுழன்றலமருமிவ்வுலகிடையானந்தோவந்தோ, நிற க்கின்றமயக்கத்தாற்கல்லிடைகற்போலுருண்டுநெரிந்தேனந்தோ.

காலமொருகான்முடியாதிதனிடையெண்ணூறுண்டோர்கணமு மில்லை, சாலவிதுதனைமதித்துவன்காதலிடைவீழ்ந்துதளர்வதேனொ ன், றாலமதியாற்கெட்டவெனைப்போலவினரார்சொல்லற்பாற் றோ, சிலமறுவாணாளைப்பெரிதாகநினைவதேசீசீயந்தோ. (கஎ)

எல்லையிலாவண்டத்திலியாருளும்புவிநோக்கிலிறையுமில்லை,யவ் வல்லுறுமிதுபெரிதாவாதரித்துநிற்பதேயந்தோவந்தோ,புல்லிமையுற் றினிதாகியுதாரமாச்செயப்படாப்பொருளீதென்னத்,தொல்லுலகி லொருபொருளுங்காணேனித்தொடர்ச்சிநிலையென்னேயென்னே.

தலைவர்தலைமேலுறைவோர்நாட்களினூற்றாழ்ந்தோர்க்குத்தாழ் வீழ்வர்,நிலையில்பெருமையையுறுதிநினைக்கின்றநெஞ்சேயின்னினை வீதென்னே, தொலைவில் பெரும்போகங்கள் பெரியோர்கள் கிளை யோடுந்தோன்றித்தோன்றி, யுலைவுறமாண்டார்முன்னாளிங் கிவையனைத்திலுறுதியென்னே. (ககூ)

மண்ணுடுமென்னவருமவர்தனமுமாண்டன நுண்மணலையொக்கும்
விண்ணுடுமிந்திரருமவர்வாழ்வும்போயின வின்மீனையொக்கு

மெண்ணுடும்பிரமருமண்டமும்பூதங்களும்பிறந்தவெல்லையில்லைக்
கண்ணுடுமவையெங்கேகின்வாழ்க்கைநிலையென்னேகவலுநெஞ்சே

செல்லாதமாயையிருளிரவிலேதேகமத்தியக்கமான,பொல்லா
தனேர்கனவாஞ் சூனியத்திவிச்சையிறைபூண்டேனென்னிற், கல்
லாதபுல்லியனேன்சிநொன்னவரதங்காணுநாட்க, ளெல்லாம்போ
யினபோமாலிறவாதொன்றுய்நன்றுமெழிஞட்காணேன். (உக)

நடுவின்முடிவினிலடியினன்றுனபொருளொன்றுஞாலத்தில்லைப்,
படுபொருளெல்லாமிறப்பாமலத்தினுலேபூசப்பட்டதன்றே, கடு
வினைகளுடோறுங்காய்துயரநாடோறுங்கரையொன்றில்லாக்,கொ
டுமைகளோநாடோறுஞ்செய்கின்றாரறிவில்லார்குரம்பைக்கூத்தால்

பாலகனுயஞ்ஞானத்தமுந்துவனற்காளையாய்ப்பாவைமாராற்,
சாலவருந்துவன்விருத்தன்றனுகிக்குடும்பத்தாற்றளர்ந்துசாவன்,
மேலவிவனெக்காலத்தென்செய்வான்மாயக்கூத்திருந்தவாறே,ஞா
லமெலாமாடராங்காய்ப்பொறிமேளமாய்மனப்பேய்கடிக்குமன்றே.()

உள்ளத்தின்முடிமேலேயில்லாமைவிற்றிருக்குமுலகிலென்றுந்
தெள்ளூற்றநல்லறத்தின்சிரத்திலேயெப்பொழுதுந்தீமைவாழு
மெள்ளற்றவின்பத்தின்றலைமேலேதுன்பங்களிருக்குமென்றுற்
கொள்ளத்தக்க[illegible]வானகுற்றமிலாப்பொருளேதருதிப்புளேற்கே.

விழிப்பதுவுமிமைப்பதுவுஞ்சகத்தோற்றமொடுக்கமாமேலோரு
ண்டாற், பழிப்பரியவன்ஞர்முன்னென்போல்வாரொன்னென்றுபக
ரலாவ,ரிழிப்பரியவிசித்திரமாஞ்சம்பத்துமாபத்தாமி,தயங்காயி,லொ
ழிப்பூரியவிசித்திரமாமாபத்துஞ்சம்பத்தாமுள்ளம்வேண்டில்.(உரு)

வெம்மாயவாழ்வன்றோதுயர்க்கெல்லாம்பிறப்பிடமாய்விளம்புகி
ன்ற, தம்மாவிங்கிதனிடையேயமுந்துமவர்க்கின்பமுளதாவதெங்ங
ன், மைம்மாயையென்னுமரம்பணையிலேபூகாய்பழத்தால் வரம்பற்
றோங்க, விம்மால்செய்மனம்வேராமிம்மனந்தான்சங்கற்பமென்ப
தாகும். (உ௬)

சங்கற்பநாசத்தாலெளிதாகமனநாசந்தானேயெய்து, மங்குற்ற
மனமிறக்கிற்சநநமரணங்களெனுமராமுமாயு, மிங்கிப்பாலெனைத்தி
ருடுங்கள்ளனைக்கண்டேன்கண்டேனிவன்பேர்நெஞ்சம், பொங்கு
ற்றநெஞ்சத்தானெடுநாளுணர்ந்தேனின்றுபொன்றுவிப்பேன். (உஎ)

இத்தனைகாண்மனமுழுதைத்துளைத்திலேனின்றுதுளைத்தியைந்த
நூலாற், சித்திரமாய்க்கோத்தணிவன்முழுதுணர்ந்ததேசிகராற்றெ
ளிந்தேனெல்லாஞ், சுத்தபரமாகத்தன்றோற்றுவிக்குநல்லறிவாஞ்
சோதிபெற்றேன்,மெத்தவிவனுனை திங்கிவையெனும்பொய்யுள்
ளொழித்தேன்மீண்டுநோக்கேன். (உஅ)

பேதிக்குமனமென்னும்பெரும்பகையைமுழுவலியாற்பிளந்துவீ
ன்றேன்; வாதித்ததுயரெல்லா மாற்றினேனுபசாந்த வாழ்வுபெற்
றேன், சாதித்தவிவேகமேனியனை வணங்கினேனென்றுசனகர்கோமா
ன், சேதித்தமனவலைவெல்லாமொழித்துத்தானேசித்திரம்போனி
ன்றான். (உகூ)

வாளாசித்திரம்போலநெடிதிருந்துசனகர்பிரான்மாய்த்துநெஞ்சை
மீளாநல்லுபசாந்தநிறைநெஞ்சாலுலகியல்பைமேவிப்பார்த்தான்
றுளதுண்மையாகியற்றும்பொருளேதுகைக்கொள்ளத்தக்கதேது
கோளானகற்பனையென்சுபாவவறிவாமெனக்குக்குறிக்குங்காலே.

சுத்தமாய்ச்சொரூபமாமென்னுருவலால்வேறுதோன்றக்காணேன்
வத்தியான்வாராதபொருணயவேன்வந்தபொருளைத்துந்தள்ளே
னித்தமாய்த்தன்னிலையினிற்குமெனதறிவுருவினிலையாகிற்பே
னுத்தவாறேதுவருமதுவருகவென்றழுந்தியொருமையானேன்.(ஙக)

வானேகுகதிரிரவிநாளியற்றும்வாறென்னவந்துவந்து [ண்ணித்
தானேதோன்றியதொழிலைப்பற்றின்றிச்செய்துமெனச்சனகனெ
நினையவருகாலஞ்செல்காலமிமையளவுஞ்சிந்தைசெய்யா
னானேறுநிகழ்காலத்தோரிமைப்பினைகைதலோடுலாவலுற்றான். ()

பேசியதன்விசாரத்தாற்சனகர்பிரான்பெரும்பேறுபெற்றதல்லது
வாசியுளமற்றொன்றால்வந்ததல்லவாரீசமலர்க்கண்மாலே
யாசிலதாய்ச்செவ்வியதாய்த்தனதானவிசாரத்தாலடைவதல்லாற்
றேசிகரில்லாவினர்செய்தொழிலாற்பெறலாமோசிற்சொரூபம். ()

புறப்பேறுகளைவேண்டியியற்றுகின்றபுண்ணியத்தைப்புவியிலு
ள்ளோர், சிறப்பானநல்லறிவு மிகவேண்டுமென்று முதற்செய்யிற்
பேறு, மிறப்பானவாபத்துவிளைநிலமாயிருந்துதுயர்வேலையாகிப்,
பிறப்பானசச்சுமாவித்தாகும்பேதைமையைப்பிளக்கல்வேண்டும்.

இலங்கியசிந்தாமணியாமிதயமெனுஞ்சாக்கறையிலிருக்கும்போ தங், கலங்கலிலாவிவேகியர்க்குக்கருதுபொருள் கற்பகம்போற்க ணத்தினல்குங், துலங்குவிசாரம்படைத்துப்பேதைமைபோய்நல்ல றிவுதோன்றினோனை, விலங்குகவசத்தோலாயம்புகள்போற்காமா திவிகற்பந்தாக்கா. (௩௫)

பரமாதித்தனைமறைத்துக்கறுத்தரிவற்றுக்களித்துப்படர்ந்துமீ ண்டு, இரமானவகங்கார முகில்விவேகக்காற்றுற் சிதறிப்போகும், வரமானபதம்வேண்டிற்றன்மனத்திலாசைமுதன்மாற்றவேண்டு,மு ரமானபுவியைமுதலுழுதன்றோவிளைபயன்களுறுகின்றாரே. (௩௬)

சனகராசன்கதை முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - அ0உ.

புண்ணியபாவனர்கதை.

மோகவற்சநாபிக்கொடிமுளைத்தெழுமூலஞ்
சோகமாகுணமிருந்தாசாள்வதோர்சூழ
லாகமேருந்தலியானெனக்காணுமஞ்ஞான
மேகமாசியபராபரந்தோன்றினுலிறக்கும். (௧)

அனித்தமிச்சகமென்பதைநாடோறுமகத்தி
னுனித்துநோக்கினர்சனகனைப்போலநுண்ணறிவாற்
றனித்தமெய்ப்பொருள்பக்குவத்தறிகுவர்தனத்தால்
மனித்தராற்கருமத்தினுற்றேவராலவாரா. (௨)

சனனமஞ்சினர்க்கவருடைமுயற்சியேசரணுந்
தினமுமிங்கிவனுனெனுஞ்சிறுமைதான்சிதையி
லனகமாயுலகெங்குமாம்விசாலமுண்டாகு
மனனுறத்தனதுயர்ச்சிதான்காண்புறவருமால். (௩)

பற்றுவீடென்றிரண்டிற்பற்றலும்விடுதலுனு
முற்றவைமனத்தருபமுயர்பந்தமதுவேறில்லை
முற்றுறுபற்றுவிட்டின்மோகமுந்துயரும்விட்டுத்
துற்றுளபற்றுவீடுதுடைத்தசையாதுநிற்பாய். (௪)

மயலின்மையகித்தலின்மைமடமின்மைவருத்தமின்மை
செயலின்மைகருமமின்மைதியக்கின்மைவிகற்பமின்மை [மை
பயமின்மைதுவட்சியின்மைபகையின்மைகுறைவொன்றின்
கயமின்மைகடினமின்மைகடினமாய்க்கழறலின்மை. (ரு)

வீடுபெற்றிரண்டுநீத்தமேலவரிடத்துமேவி
நீடுவாதனைகளின்றிகிழ்த்தியகுணங்கணிற்கும்
பீடுறுகினைவாநாலாற்பணிப்புற்றுப்பிறவிவேலை
யூடுறமயன்மீன்வாருருபர்க்தவாதனையாஞ்சாலம். (சா)

வாதனையென்னுமிக்தவலைபுக்திவாளாவீர்ந்து
மோதுகூறைக்காற்றிற்றழுகிலெனச்சிந்திநிற்பாய்
பாதவங்குடாரத்தாலேபடுப்பபோனெஞ்சைநெஞ்சாற்
றீதறமாய்த்துமேலாம்பதத்திலேதிரமாய்நிற்பாய். (எ)

ஏகுதல்வருதறுஞ்சல்விழித்திடலிருத்தனிற்ற
லாகியவெல்லாம்பொய்யென்றழுந்தியுள்ளாசைதீர்வாய்
சேகுறவலையுஞ்சித்தம்பகுதியாற்சித்தின்பின்னே
போகலூன்மணத்தாற்சிங்கத்னைத்தொடர்பூசைபோலாம்.

மடங்கல்வீரியத்தாற்பெற்றதசைதின்னுமார்ச்சாரம்போற்
றொடர்ந்துசென்மனனுஞ்சித்தாற்றோன்றியபொருளைப்பற்றும்
படர்ந்துகாண்பவற்றைப்பற்றின்மனங்கெடாப்பந்தம்போகாத்,
திடங்கொள்காண்பவற்றைநீக்கிற்சித்தம்போய்முத்தியாகும். (கூ)

யானிவையிரண்டுமில்லென்றெண்ணிமேருவைப்போனிற்பா
யூனிறமில்லாவிண்போலுளத்தனுய்நல்லுளத்தே
தானும்வையமுமாய்க்காண்பான்காண்பனதம்மினூடே
மேனிகழ்காட்சியென்னுகின்னைநீவிடாதுதேர்வாய். (க0)

இனியனவினிமைகொள்வானிரண்டும்விட்டிவற்றினூடே
தனிகிகழினிமைகாடித்தற்பரமயமாய்நிற்பாய்
கனிபலதுய்ப்பான்றுய்ப்பதிரண்டுக்குநடுவேதானே
யனிசம்பற்றின்றிநிற்குமதுபற்றியதனுணிற்பாய். (கக)

காதலாற்கட்டிலுய்யார்கயிற்றினுற்கட்டிலுய்வா
ராதலாலாசைக்கட்டையசங்கற்பத்தறுப்பாய்கானென்

ரேதுபாவனையைநானென்றதடதோர்வாளால்வீட்டி
யேதமில்சுபாவம்பாவித்தெழுபவமிலாவீடெய்தி. (௧௨)

அனைத்துயிர்க்கச்சமில்லாநிலைநிற்பாயதுவென்ன
வினைத்தொடரகம்பாவத்தின்வேட்கையொன்றநின்சொன்
வினைத்திடின்மிகவுமாழநீடகங்காரநாசந்
தனைச்செயிலுடலமென்னுமேதுவைத்தவிர்க்கின்றேனல். (௧௩)

அகமெனலொழிக்கிற்றானேயங்கமுபடியிலீர்ந்த
நகமெனவிறக்குமன்றேயென்றுயர்நாதன்கூற
மகமுனியுரைப்பான்வள்ளால்வாதனைமற்றுமாறு
கெழ்வுறுதேயஞேயமிரண்டெனநினைப்பர்கற்றோர். (௧௪)

இந்தநம்பொருட்குவாணுளியாமிவையெமக்குவாணு
ணாந்துறுமிவற்றாலன்றிநாமில்லைநம்மாலன்றி
வந்தவிப்பொருள்களில்லையெனுமனத்துறுதிமாற்றிப்
புந்தியாலுசாவியாமும்பொருள்களும்வெவ்வேறென்றே. (௧௫)

பொருளினுமெல்லாம்நமதல்லப்பொருளுமென்றே
தெருளுற்றுட்குளிர்ந்தியாவும்விநோதமாய்ச்செய்யுநெஞ்சான்
மருளறநிச்சயத்தால்வாதனைவிடுதருனே
யருள்பொழிமேகமொப்பாய்தேயமென்றறிவாயன்றே. (௧௬)

தனதுவாதனைமாண்டெல்லாஞ்சமமதாநெஞ்சாற்பண்ணி
யெனதெனுதுடலைநீக்கினிந்தவாசனைநாசந்தா
னனகமாஞேயமாகுமகங்காரமயமதான
வினைவுவாதனையைமுற்றும்விநோதமாய்விட்டோர்மேலோர். (௧௭)

நீராமவரோதேயத்தியாகஞ்செய்சீவன்முத்தர்
வோறத்தொழில்களோடேவாதனைவிட்டுள்ளாநித்
தூரமாஞேயம்விட்டோர்திகளறுமுத்தராகும்
வீரனேயிவையிரண்டின்விடுதியுந்தம்மிலொக்கும். (௧௮)

தேயஞேயத்தின்றியாகங்கண்முத்தர்பாற்செறிவ
தேயஞேயத்தின்றியாகங்கள்பிரமத்தைச்சேர்ந்த
தேயஞேயத்தின்றியாகங்களிடரெலாந்தீர்ந்த
தேயஞேயத்தின்றியாகங்கள்தேடருஞ்செல்வம். (௧௯)

சூழுறுமின்பதுன்பந்தொடர்வுறிலொருகாலத்து
மாழுதன்மிதத்தலில்லாவவர்களேசிவன்முத்தர்
கேழுயர்மகிழ்ச்சியச்சஞ்சினமின்மைபொருமைகேத
மூழுறுமிவற்றைநோக்காவுளத்தினர்சீவன்முத்தர். (உ0)

சுழுத்திபோலாகின்றபாவனைத்தொழிலினாலே
பழுத்தநெஞ்சதனைநீங்காச்சாக்கிரம்பயில்வோர்களும்
விழுத்தகுகலைகள்சூழ்ந்தமதியெனமேலோர்மேவ
முழுத்தமும்பிரிவிலோரோமுத்தரொன்றுணரக்கத்தக்கோர். (உக)

புறப்பொருள்விட்டாலுள்ளேபூண்டமாலென்றுசொல்வர்
மறப்பறவனைத்தும்விட்டான்மாண்டமாலென்றுசொல்வர்
திறப்படவெனக்கீதாகவென்றெழுஞ்சிந்தையாசை
துறப்பில்பொன்விலங்காமித்தைத்துவக்கறத்துடைத்தல்வேண்டும்

சத்தசத்தென்னப்பட்டசகலபாவனையிலென்றுங்
கொத்தறவாசைமாற்றிக்குறைவில்பேருளத்தனாகிச்
சுத்தநல்லுதாரமானசொரூபத்தினிற்பாய்பெத்த
முத்தமாமாசையின்பதுன்பங்கண்முழுதுநீக்கி. (உ௩)

பேனமுந்திரையுமில்லாப்பெருங்கடல்போலநிற்பாய்
மானவகேண்மற்றொன்றுமாசிலாவிசாரமுள்ளோர்க்
கானநிச்சயநாலுண்டாமடிதலைமட்டுநானே
யீனலுற்றவர்தாய்தந்தையென்பதோரறுதிதானே. (உச)

கன்றியபந்தமாகுமிதுமெய்ம்மைகருதாவாற்று
னின்றனவனைத்தின்மேலோனெல்லின்வாலினுஞ்சற்றேநா
னென்றிரண்டாவதானநிச்சயமெய்துமென்னி
லொன்றியமுத்தியுண்டாமுத்தமர்க்குடைமையாகும். (உரு)

புவியெலாமெனதுரூபம்பொன்றுதலிலனானென்று
குவிவறக்காண்டன்மூன்றாநிச்சயங்குறைவில்வீடா
மவியுறுமுலகுநானுமனைத்தும்பொய்விண்போலென்றுந்
தவிர்கிலமென்றனாலாநிச்சயந்தனிவீடாகும். (உ௬)

பெத்தவாசையதாமுன்னேபேசுநிச்சயமதொன்றுஞ்
சுத்தவாசைகளாமூன்றுநொய்யவாய்த்துகளில்சீவன்

முத்தர்பால்விளங்குமித்தமூன்றினுள்ளெல்லாகானென்
னுத்ததோர்நிச்சயத்தையுறிற்பின்னையுள்ளஞ்சோரா. (௨௭)

சூனியம்பகுதிமாயைபிரமஞ்சிற்சோதிஞான
மீனமில்புருடனான்மாவீசானன்சிவமேகித்த
மானவிவையென்னலாமொன்றிரண்டெனுமகல்பேதத்தால்
வானுயர்சகம்படைக்கும்விநோதத்தால்வளருமொன்றே.

ஒன்றெனும்பரமரூபத்தொருசத்தியொருமையாலே
நின்றெழுகின்றதன்றேயின்னதும்பிறதென்றும்
பொன்றியதிருந்ததென்றும்பொருள்களிற்கருமந்தன்னி
லென்றுமின்பத்துன்பங்களிதயத்திலூன்றவேண்டாம். (௨௯)

யாதினுமுயர்ந்துமாளாப்பதம்பற்றியிதயமென்றுஞ்
சேதமாயின்பத்துன்பஞ்சேர்கிலார்பிறப்பிற்சேரார்
சாதுகொள்பகைதொளைத்தல்தஞ்சம்வல்லபங்களுள்ளோ
ரோதியநெறியிற்செல்லுமுத்தமர்பிறப்பிற்சேரார். (௩0)

இழிவுயர்விரண்டுமெண்ணுரிச்சைகோபங்களெய்தார்
தொழிறொழிலிலாமைவிட்டோர்துன்னியபிறப்பிற்சேரா
ரொழில்பெறவிளங்கியார்க்குமினியனவினிதிற்சொல்வோ
ரழிபொருளனைத்தின்சால்பையறிந்துளோர்பிறப்பிற்சேரார்.

வேறு.

தேயவாதனைநீங்கிப்பூர்ணமாகித்தெளிந்தவிழிபிமையாமற்சீவன் முத்தி, யாயபாவனையாலேசொரூபமேவியனவரதமுலகில்விளையாடுவீரா, மாயவாசைலயநீங்கிப்பற்றறுத்துவாதனைபோயுள்வெளியாய்வாகியத்தே, மேயவாசாரமெலாமியற்றியென்றும்வேண்டியவாறுலகில்விளையாடுவீரா. (௩௨)

சகத்திலேபுறத்தொழிலாரம்பித்துத்தனியிதயத்தாரம்பஞ்சற்றுமின்றி, யகத்திலேசெயாதோனாய்ப்புறத்தேசெய்வோனாகியேயுலகில்விளையாடுவீரா, வகுத்தவகங்காரம்போய்ச்சித்தந்தேறிவானம்போனெய்தாகிமாசொன்றற்று, வெருத்துவமாமடையாளமனைத்துமின்றிவேண்டியவாறுலகில்விளையாடுவீரா. (௩௩)

இதமானவுதாரியாய்க்கடிஞசாரமின்றியாசாரங்கடகெளிதுமின் போய், விதமானவனைத்துக்குஞ்சார்பைநோக்கிவேண்டியவாறுல கில்விளையாடுவீரா, புதனுகிராசைதனையுள்ளேதேக்கிப்புறத்தே யாசையிற்றொழில்கள்பூண்டான்போலா, யதனுளுட்சீதளமாய்ப்பு றம்வெய்தாகியனவாதமுலகில்விளையாடுவீரா. (௩௪)

இவன்சுற்றனிவன்பகைவனிவனுனென்னுமிவ்வெறும்பொய்யீரா மயிறையுமெண்ணே, லவம்பற்று நொய்யமனத்தவர்க்கிவ்வாறும திங்தோர்க்குச் சகமுழுதுமகலாச்சுற்ற, நிவந்துற்றபலகோடிபலு மோகத்தானீபங்கரீயுறவென்பார்கிமிடந்தோறு, முவந்துற்றமயக்கி துவரம்பரமார்த்தத்தாலுலகெல்லாம்பகையாகுமுறவுமாகும். (௩௫)

இதுபொருட்டாகிதிகாசமொன்றுகேள்பண்டியைந்தநுகங்கை யின்கரையினிருடிமைந்த, ரதுலமயேந்திரகிரியினயலிலவாழ்வோ ரருந்தவத்தோர்தீர்க்கதவனளிக்கவந்தோர், சதுர்மறைதேர்புண் ணியபாவனனொன்றுள்ளார் தந்தையொடுகங்கையின்பாற்றவஞ்செ ய்காளிற், பொதுவறச்செய்தவப்பயனாற்காலமுற்றிப்புண்ணியனும் புண்ணியவான்போதம்பெற்றான். (௩௬)

அங்கவன்பின்னவனுனபாவனென்போனறிவுடைமைபாதியள வாதலாலே, செங்கதிரோனுதிப்பதன்முன்னருணன்றோன்றச்செ ங்கமலங்கிண்கிணிவாய்ச்செய்வதொத்துத், துங்கவறியாமையுமெய் விடுமின்றித்தோளாவெந்திரம்போலத்துவண்டுகின்றான், பொங்கு தவத்தீர்க்கதவனென்னுந்தந்தைபோகத்திலிச்சையெலாம்புந்திதீ ர்ந்தான். (௩௭)

காலமேகாரணமாய்க்குடும்பவாழ்விற்காதலொழித்தறச்செறிந் தகாயந்தன்னைச், சாலமிகுதொழிற்பறவைக்கிடமாங்கூட்டைச்சா ணவியின்கரைவரையிற்றானேதீர்ந்தான், கோலியொருசுமைசுமப் பான் குதித்தவெல்லைக் கொண்டுபோய்ப் போடுவபோற்குரம்பைப் போட்டு, மாலுறுபற்றொன்றின்றிப்பூவினுற்றம்வானுறல்போற்பா மபதவாழ்வுபெற்றான். (௩௮)

தொழிலின்றிக்காட்சியெனுந்துன்பமின்றித்தொல்லறிவுதோன் றிடமாஞ்சொரூபம்பெற்ற, வழிவின்முனியிறத்தலுமேயவன்றன் பன்னியம்புயமின்றகலளிபோலங்கம்விட்டாள், விழிகணிகர்தாய்

தங்கையிறப்பக்கண்டு மேற்செயவேண்டியகிரியைவிதியிற்செய்வான், வழிபடுபுண்ணியன்முயன்றான்பாவன்றானும்வருத்தமெனுங் கடற்புகுந்துமயங்கலுற்றான். (௩௯)

அன்னையன்னையென்னுமென்னையீன்றவையாவையாவென்னு மந்தோவந்தோ, வென்னையென்னையென்னுமாற்றானுகியெரிமிதித்தாற்போற்கானமெங்குமோடுங், தன்னேரின்முன்னவனைநோக்கிந[illegible]தான்றம்பிமிகத்தளர்வுற்றான்றளராமுன்னோன், மின்னோருமுடற்கிறத்தலியல்பேயென்றுவேறொன்றுநினையாமல்விதியேசெய்தான். (௪0)

அறநெறிகண்முடித்ததற்பின்சோகத்தாலேவாய்மூடாவிளவறனைவந்துசார்ந்து, நிறையறிவாம்புண்ணியன்பாவனைநோக்கிநெஞ்சழிக்குந்துயரமைந்தாநீத்தலென்னை, பொறைமிகுநின்பிதாநின்னைத்தன்னையேயொப்பொருந்தியிருந்துளபதத்தின்பொலிவைக்கேளாய், குறைவுநிறைவிலதென்றுந்தனதாய்த்தானாய்க் கோதிலதாம்வீடெனும்பேர்கூறவற்றாம். (௪௧)

அனைவருக்குமேவுமிடமதுவேயாகு மதிஞருக்குமெய்யுருவமதுவேயாகுந், தனையகலாவப்பதத்தில்வாழுந்தாதைதனைநோக்கித்தளருமதுதகவோதம்பி, துனைபுனலினோட்டத்துக்கெய்தும்பள்ளத்தொகுதிபோற்பிறவிதொறுந்தொடர்பாய்ப்போல, வனையுறுநின்றாய்தந்தைக்கிலக்கமுண்டோமனைமக்கள்சுற்றமொருமட்டுண்டாமோ.

பருவங்கடோறும்பெரியவனத்திற்காய்க்கும்பலங்கள்போற்பவங்கடோறும்பரந்தசுற்றங், கருதுங்காலிறந்தவர்க்கிரங்கவேண்டிற்கற்பமளவலதினுமோர்கரையுண்டாமோ, சொருபமிலாவஞ்ஞானக்கானன்மேட்டிற்றொடர்ந்த வாதனைக்கோடைச் சுழல்வெங்கானற், பெருகுநீர்சுகாசுகமாந்திரைகண்மோதிப்பேதமொருகரையின்றிப்பிறழுமன்றே. (௪௩)

இல்லுறவுபகைநேயங் கோபமாசையிழிவுயர்வாதிகள்வடிவாயெழுந்தஞாலம், புல்லுறுதன்னுமமாத்திரத்தினாலேபொலிந்துவிரிகின்றதல்லாற்புறனிலுண்டோ, கல்லுறவாகினைத்திடினல்லுறவேயாவர்கண்ணாராய்ப்பாவிக்கினன்னாராவர், கொல்லுறுநஞ்சமுதிரண்டின்குணங்கள்போலுங் குறித்திடுபாவனைக்கட்டுக்குலைந்தாலுண்டோ. (௪௪)

ஒன்றிலேதோன்றியனைத்துருவமானவுணர்வுக்குப்பகையு[illegible]வெ
ன்றுரைப்பதெங்ங, னின்றியொழிதசைபுண்ணீர்தோல்கண்மேய்
ந்தவெலும்புப்பஞ்சரந்தன்னிலியாமாமொன்று, நின்றிவணிநின்மன
த்தானினைந்துநோக்காய்நிமலமாம்பரமவிழிநெறியானோக்கிற், பொ
ன்றுதுயர் நீயில்லைகாணுமில்லைப் புண்ணியபாவன னெனல்பொ[illegible]ப்
போதத்தோன்றும். ([illegible])

ஏகியதிவுகடோறும்பிறந்தசென்மமெண்ணவொண்ணவிங்[illegible]வற்
பெருந்தீவத்திற், கோகிலமாய்முன்பிறந்தாய்விலங்குமேகங்குன்று
மாரூர்வனபுட்குலங்கடம்மிற், போகிய சென்மத் தொகுதி பு[illegible]ல
வொண்ணுப்பொருந்துமவற்றுன்கிளையாய்ப்போனூர்க்கெல்லா[illegible]ா
குலமுற்றிலையென்னீயவ[illegible]தின்மட்டோ வனந்ததேசப்பிறவியளை
யக்கேளாய். (சுகூ)

கோசலத்துந்தெசார்ணவத்தும்பௌண்டரத்துங்குச்சரத்துந்
துழாரத்துங்கோகனத்தும், போசலத்துமேகையத்துஞ்சாளுவத்
தும்பூபதியாய்வானரமாய்ப்புழுவாய்ப்புல்வாய், மாசலத்திற்கரண்
டமாய்ப்பதங்கமாகிமாசுணமாய்வேசரியாய்மட்டில்சென்ம, நீசகல
வாதனையாற் பிறந்தபோதினின்கிளைஞர்க்கிரங்காதநீதியென்னே.

அளவிறந்தபிறவிதொறும்பிறந்தோர்க்கெல்லாமன்னைதாதையை
யெண்ணிலகன்றகாலிற், கிளர்மரங்கடருஞ்சருகையெண்ணவற்று
ங்கேதமுறக்கணக்கில்லைக்கேளாய்மைந்தா, தளர்வின்றிப்பாவாபா
வனைகளின்றிச்சராமரணமற்றவுனைச்சங்கியாதே, யுளமுறநோக்
காய்துயர்விட் டஞ்ஞானத்தையொழித்துணரிலுள்ளபடியுன்னைக்
காண்டி. (சுஅ)

உன்னுருவைநீகாணுஞானக்கண்ணிலொன்றலாவாசையெனுங்
காசமூறு, மன்னதுநீர்த்துளக்கமலத்துள்ளேகொய்யவறிவுடைய[illegible]
ன்மனத்தாலுன்றனுள்ளே, பின்னபடியெனநோக்கிமயக்கமெல்லா
மிறையுமறவொழித்தின்பமெய்திநிற்பாய், பின்னவனேயெனமுன்
னோனுரைத்தானென்றுபெருந்தகைக்குவசிட்டமுனிபேசினனே.

புண்ணியபாவனர்கதை முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-அறுக.



மாவலிகதை.

புண்ணியனுரைத்தஞானம்பொலிந்தபாவனன்றனுள்ள
நண்ணியவிடியற்கண்டஞாலம்போல்விளங்கித்தோன்றத்
திண்ணியவிருவர்தாமுஞ்சித்தராய்விவேகஞானத்
தண்ணியகரையையெய்தியம்பியவனத்திருந்தார். (க)

வேண்டியகாலமெல்லாம்விநோதமாம்விளையாட்டெய்தி
[illegible]ண்டியகாலஞ்செல்லயாக்கைதீர்வீட்டிவெய்தித்
[illegible]ண்டிடுதிரிநெய்யில்லாச்சுடர்கள்போற்சாந்தமுற்றார்
மாண்டிடுமுயிர்கட்கெல்லாமரபிந்தமர்புபோலாம். (உ)

அனந்தமாழ்பிறப்புற்றுருக்கிலமுமயலன்றாகிற்
சினந்திடனயத்தல்வேண்டாவாதலாற்செறிந்தவாசைக்
கனந்தனைவிடுவதல்லாற்கதித்துறவளர்க்கலாகா
மனந்தனில்வளர்க்கிற்சிந்தைவன்னிக்குவிறகாமன்றே. (ந)

இச்சையாம்விறகுமாண்டாலெண்ணமாம்வன்னிமாளு
நிச்சயமாகுந்[illegible]யத்தியாகமாநெடுந்தேரோதி
மெச்சியவுதாரக்கண்ணால்வேட்கையான்மிகவும்வாடுங்
கொச்சைஞா[illegible]த்தைநோக்கிக்குறைவறவிருப்பாய்நீரா. (ச)

வேறு.

நொய்யதாயொருமயலின்றிநோயெலாநீங்கி
மெய்யதாகியபிரமமாகிலையிதுவிரா
வையமின்றியிந்நிலையுநிலறிவிலரோனு
மையன்மேவலரிராமநீயிவ்வகைவாழ்வாய். (ரு)

நல்லபுந்தியும்விவேகமுமெனவிருநண்பா
லல்லநீர்க்கிடுமொருவரையென்னினுமணுகிற்
சொல்லுபல்பொருட்சுற்றங்கடெக்கறத்தீர்ந்து
புல்லுதின்மையினுலன்றித்துயரொலாம்போகா. (சு)

மயலிலாமையாநூல்களான்மகத்துவமுதலா
முயர்குணங்களால்வருந்தியுமனத்தினையுய்க்கிற்

றுயர்கணீங்குமூவுலகுறுசெல்வமுந்தொக்குப்
பயனளிக்கினுமுயர்வுறுமனமெனப்பயிலா. (எ)

மனநிறைந்திடிலமுதமாய்நிறைந்திடும்வையந்
தனதுதாட்செருப்புலகெலாந்தோன்முச்சுந்தரம்போற்
கனநிராசையானிறையுநெஞ்சாசையிற்கனிழா
தினமுமாசையானிற்றமனங்குறைவென்றுந்திரா. (அ)

அகத்தியன்கவர்கடலெனநன்னெஞ்சையழிக்கு
மிருத்தமாலிலாமனமெனநிறைமதிவிளங்காப்
பருத்தபாற்கடனிறைவுருப்பரிமளக்கோக
னகத்தினுயநிருமுகமலம்பெறத்தோன்ரு. (கூ)

மதியைமேகம்போல்வெண்டலச்சுதையினைமைபோ
லதிகநன்னெஞ்சையாசையாம்பேயழகழிக்கும்
பொதியுமாவெலாநீக்கிவன்பவப்பயம்போக்கி
முதிர்மனத்தின்மால்பிணிப்பறின்முத்திவேறுளதோ. (க0)

இன்னதன்றெனிவிராகவமாபலியென்ன
நன்னதாகியபுந்தியான்ஞானமேநேர்வா
யன்னதேநலனென்றலுமனையதேதென்று
சொன்னமாமுனிதன்னையேயிராமனுஞ்சொற்ருன். (கக)

வினயவள்ளலுக்கருந்தவனுத்தரம்விளம்புந்
தனுதோள்களாலுலகெலாமஞ்சுறச்சயித்தோன்
பினகிசார்ங்கியைமுதவினர்தாழ்வுறப்பெரியோ
னனுதியாமெனப்பாதலத்தரசுசெய்பதுலன். (கஉ)

மாவலிப்பெயரானுயர்விரோசனன்மைந்த
னுவலிப்புறுகோடிபத்தாண்டரசானேன்
காவலிற்றிகழ்மேருவின்சிரமணிகதுவு
மேவலிற்பொலிசாளரமேனிலமேவி. (கங)

ஒருபகற்றனியிருந்தனனிவையிவையுணர்ந்தான்
பெருகுபோகங்கண்முனிந்தனன்பிறவியைநினைந்தான்
பொருவின்மூவுலகங்களிற்போகங்கணெடுநாட்
பருகல்குரம்போரசாவென்கொல்பயனே. (கச)

எய்துபோ தினிவினியவா யெங்ஙனேயெனினு
னொய்தினீங்குமிப்போகத்தினின்பமேநுவலி
னெய்தனோக்கியரின்பமுநெருநல்போலின்றுஞ்
செய்தசெய்வதேயல்லதுகண்டிலஞ்செயல்கள். (க௫)

உண்டவின்பமேமீளவுமுண்கின்றதொருநாட்
கண்டகாட்சியேமீளவுங்காண்கின்றதுவந்து
கொண்டகோலமேமீளவுங்கொள்கின்றதென்றால்
விண்டமேலவர்காணுறுதொழிவரோவெறுத்து. (க௬)

அருந்துமட்டினிதென்றதேமீண்டுமீண்டருந்தித்
திருந்திடாதபுன்சிறுவர்போற்செயலறியாது
வருந்துகின்றனநாள்பக்கமாதமாண்டுகெங்கள்
பொருந்திவந்ததேயல்லதுபுதிதொன்றும்வாரா. (க௭)

செய்யத்தக்கனயாவையுஞ்செய்துமிச்செயலா
லுய்யப்பெற்றதென்செயன்மறுத்திலாததொன்றுலகி
லையப்பாடறயாதிஞலெய்துமப்பொருடான்
மையப்போகத்தாலொழிந்துமேல்வருநெறியாதே. (க௮)

அழிவிலாததாயன்வியமாகியவ்துசேர்
வழியதேதெனச்சிந்திப்பான்மனத்தொன்றைநினைந்து
மொழியலுற்றனனதிந்தனமென்றொருகொடியில்
விழிபெருத்திடப்புருவமேலேற்றினன்வியந்தான். (க௯)

தன்னதுள்ளுறநினைத்ததுவிளம்பினன்றானே
முன்னமிங்கியான்கேட்டனன்முழுதுணர்முதன்மை
யென்னரும்பிதாவிரோசனன்றன்னையிப்படியே
யன்னவன்புகன்றனனெனவிவையெலாமறைவான். (௨௦)

ஐயதுன்பமுமின்பமுமென்பனவனைத்தின்
மையலியாவையுமடிந்ததோரிடமெதுமனத்தின்
வெய்யமோகந்திரிடமெதுவேட்கைகளெல்லாங்
கையறப்பட்டவிடமெதுகருணையாலுரையாய். (௨க)

கிராசையாகியேயினிப்பெலாநீங்கிடமேது
விராவுபேரின்பத்தழகிதாய்விரிவிடமேது

பராபரந்தெளிந்துணர்ந்தபேகர்தியென்னெஞ்சை
யாராவுதன்பம்விட்டிலைப்பெலாமாறுதற்கென்றேன். (உஉ)

எந்தையப்பொழுதுரைசெய்வான்மைந்தகேளியம்ப
வந்தமற்றறவிசாலமாயளவறவகன்று
சுந்தரத்ததாந்தேசமுண்டண்டத்தின்றெருகுதி
வந்துதித்திருந்திறப்பதற்கிடமதாய்வயங்கும். (உங)

ஆயதேயத்திலேம்பெரும்பூதமுமில்லைச்
சேயகுன்றில்லைவனமில்லைத்தீர்த்தங்களில்லைத்
தூயதேவரோமுதலியதொல்லுயிரில்லை
நாயகன்பெருஞ்சுடரெனுமொருவனேநண்ணும். (உச)

முழுதுங்காண்பவன்முழுதினுஞ்செறிபவன்முதல்வன்
பழுதில்சாந்தனுய்நிறைந்துவாளாவுறைபண்போன்
வழுவிலாவிவனுக்கியமந்திரிவசத்தாற்
றழுவுசெய்கைகளியாவையுநடத்திடுந்தானே. (உரு)

இல்லதுள்ளதாமுள்ளதுமில்லதாமிமைப்பிற்
புல்லுமந்திரிகினேத்திடிலிவனென்றும்புசிக்க
வல்லதில்லையொன்றறிகிலன்மன்னனைவிடாது
செல்லுந்தன்மையாற்கேவலமனைத்தையுஞ்செய்யும். (உசு)

இந்தமந்திரிதன்னெதிரியாவையுமியற்ற
வந்தமன்னவனென்றுமேகாந்தத்தனுகு
மைந்தவென்றுரைத்தருளியபிதாவைநான்மகிழ்ந்து
புந்தியாலந்தவகையெலாம்வினவினேன்புகழ்ந்து. (உஎ)

அறவிலாசமாயாதியும்வியாதியுமின்றி
நிறைவிதானவத்தேசமேதததனைநேருந்
திறவியாததுயாதினுலெய்துமத்தேசத்
திறவிலாதவம்மன்னனூர்மந்திரியாவன். (உஅ)

புவனமியாவையும்விநோதத்தாலடர்த்தவென்புயத்தா
லவனம்மந்திரியுடனடர்ப்புருவலியமர்ந்த
தெவனறைந்தருள்கென்றலுமென்பிதாவிசைப்பான்
சுவனநீள்வலிமந்திரிவேகமார்கடப்பார். (உகூ)

தேவர்தானவரெண்ணறுகோடிகடிரண்டு
மேவவென்றலர்சூலகேமிகண்முதலென்ற
மேவரும்படைக்கலமெலாமவன்மிசைவிட்டான்
மாவருங்கல்விலறைந்தபூவெனமுனைமடியும். (௩௦)

விளிவருந்திறலந்தமந்திரியந்தவேந்தா
லெளிதுவென்றிடில்வணங்குறுமிவ்வகையின்றே
லளியமேருவையசைப்பினுமசைப்பரிதாகு
மொளிகொளுகபுத்தியினலால்வெலப்படானெருங்கே. (௩௧)

ஊகபுத்தியாலல்லதவ்வமைச்சனையுற்றால்
வேகாகம்போலெரித்திடும்வேந்தனுடைமைச்ச
னேகாராச்சியஞ்செய்யுமத்தேசமுமியாவுஞ்
சோகமேற்றிடக்கேளெனவிரித்திதுசொன்னான். (௩௨)

முன்னநாஞ்சொன்னதேசமோர்முடிவிலாமுத்தி
மன்னனென்றதுமாசிலாமணியெனவயங்குந்
தன்னில்வேறிலாவாத்துமதத்துவந்தானே
யன்னவேந்தனுலமைத்தமந்திரிமனமாகும். (௩௩)

விடையமியாவையுமொருப்படவொருக்கிகல்விராக
முடைமையாவதுபரமமாம்யூகமென்றுணாத்தேந்
தடையில்மனம்விராகத்தால்வெலப்பட்டதன்மை
படைசெய்மத்தமாதொழுவத்துளகப்பட்டபண்பே. (௩௪)

கற்றறிந்திலஙர்மனத்தைநாற்கூறெனக்கற்பித்
துற்றபோகத்திலுபயமுநல்வழியொன்றும்
பெற்றதேசிகன்பூசையிலொன்றுமாய்ப்பேணிற்
றுற்றகங்குல்போய்விவேகமாஞ்சுடர்வந்துதோன்றும். (௩௫)

சிறிதறிந்தவர்மனத்தைநாற்கூறெனச்செய்து
பொதிவசத்தொன்றுந்தேசிகர்பூசையிலிரண்டு
மறியுநூற்பொருண்மனனத்தோர்கூறுமேயாக்கி
னெறிவிவேகத்தாலொன்றுணர்ஞானமேகிரம்பும். (௩௬)

ஞானமுற்றவர்மனத்தைநாற்கூறெனநாட்டி
யானநூலினும்விராகத்துமனுபவந்தனிலு

மானகற்குருபூசையின்வழியினுஞ்செலுத்தி
வீனமற்றநன்முத்திவந்தெய்திடுமெளிதின். (௩௰எ)

வேறு.

மிக்கவறிவால்விசாரத்தான்மெய்ம்மையுணர்வுகிராசையுநீ
யொக்கவென்றுங்கைக்கொள்வாயூற்றமானகிராசையினுற்
றக்கவிசாரம்விசாரத்தாற்றனிராகிராசைதம்மாற்குந்
தொக்குநிரம்பும்வாரிதியுக்தொடர்மேகமுந்தன்னுதல்போலாம். ()

காட்டினியல்புவழுவாமனட்டோர்க்கிதமாகப்பொருள்க
வீட்டிமுன்னமதனுலேயினியகுணத்திலுயர்க்தோரைக்
கூட்டியவராவிராசையினைக்கூடியதனுல்விசாரத்தைத்
தீட்டியதனுன்மெய்ஞ்ஞானக்கெளிக்தான்முத்திசித்திக்கும். (௩௰௯)

என்றுமுன்னமென்றந்தையிசைத்தான்றெய்வசகாயத்தா
லொன்றுமொழியாதின்றுணர்க்தேனுணர்வுபெற்றேன்போகத்தி
னின்றவாசையின்றொழித்துகிராசையென்னுநதியாலே
துன்றிநொய்தாயுபசாந்தச்சுதையிற்குளிர்ந்தசுகம்பெற்றேன்.(௪௰)

அந்தோவந்தோவிதுநெடுநாளதிக்திலேனின்றறிவு
சந்தோடத்தையென்சொல்வேன்சகலவினைவுஞ்சமித்தாறி
னொக்தோரின்பதுன்பத்தானேவாதிருக்குமிடமிதுவே
யுய்ந்தோருறையும்பதமிதுவேயுபசாந்தத்தினுயர்விதுவே. (௪௧)

என்னவுரைத்துநானுரென்னுருவமேதென்றியான்விளங்கத்
தன்னையறியுஞ்சுக்கிரனைத்தாழ்ந்துவினவித்தத்துவத்தை
யுன்னும்பொழுதேயஞ்ஞானமோடுமென்னவுச்சுவை [ல்.
முன்னவேண்டுமெனக்கண்கண்முகிழ்த்துகினைந்தான்முழுதல்ப.

மெய்யாகியசச்சிதாநந்தவெளியேவடிவாகியவெள்ளி
யய்யாகின்றமாவலிமுன்னுதிப்பவவனுமுவந்திறைஞ்சிக்
கையார்மணியாலுயர்மலராற்காவிலருச்சித்துரைசெய்வா
னையாகின்னன்பேனையெழுப்பவடியேனுரைப்பதறிந்தருள்வாய்.()

என்னிங்குள்ளதப்பாலென்னெல்லைசொல்லப்பட்டுளதென்
றுன்னுமெல்லையில்லாதென்சொல்லுநானுர்கீயாரிம்

மன்னுமுலகமேதென்றுமயக்கந்தீரவருளென்ன
வன்னி[illegible]தெல்லாந்தெரியவிரித்தவனுக்கிவனன்றறிவித்தான். (சச)

வருங்க[illegible]ற்பகவின்விளைந்தேகவந்தேன்பலசொல்லியும்பயனென்
சுருங்கச்சொல்லும்பயன்கேளாய்தோன்றவிங்குள்ளதுவுஞ்சித்
தொருங்கப்புறத்துஞ்சித்தெல்லையுள்ளதுஞ்சித்தெல்லையற
நெருங்குற்றதுஞ்சித்தியான்சித்துசிசித்துலகநிறைசித்தே. (சரு)

இதுவேசுருக்கமிவ்வறுதியிதயங்கொண்டிவ்வகைக்கேற்ற
ம[illegible]பாவின்னேகினேயேமாறு துணர்ந்துநோக்குதியே
[illegible]லக்தமாம்பதத்தையடைதியோரோ[illegible]ருந்தவரும்
புதிதோ[illegible]தெய்வகாரியத்திற்புகுந்தாரிய[illegible]மும்போகுதுமால். (சசு)

என்[illegible]வெள்ளியேகியபின்னெல்லா[illegible]றிவாமுலகினைப்பார்த்
துன்னுவொக்குமொக்குமெனக்குசனுவுளைத்ததுண்மையதே
முன்னுமவனிசித்துலகுமூன்றுஞ்சித்துநான்சித்து
நன்னுலானநிசைசித்துகாட்டுகின்றதெலாஞ்சித்தே. (சஎ)

தெரிக்கும்பொருளுந்தரிசனமுந்தீர்ந்துவெறுகின்மலவடிவாய்ப்
புரிக்குமுதயம்வி[illegible]ாதென்றும்பொலியும்பரமப்பொருளானேன்
வரிக்குங்காட்சியிலாவறிவேவடிவாயொருகாலேயெங்கும்
விரிக்குநிறைவாய[illegible]சாந்தவெளியாயறிவாமிகுபொருளுன். (சஅ)

ஓங்குஞ்சின்மாத்[illegible]ரப்பொருளாமோங்காரத்தையுண்ணினைந்து
தூங்குந்தியானபரனுகித்தொடர்சங்கற்பமெல்லாம்போய்
வாங்குந்தொழிலேட[illegible]ணையையமனனஞானஞேயமிவை
தாங்குனூதாவ[illegible]த்[illegible]றத்தனிச்சித்திரம்போனெடிதிருந்தான்.

கா[illegible]தவி[illegible]க்கொள்ளிபோற்கலங்காதிருந்தமாவலிதான்
சி[illegible]யதீர்[illegible]றநிறைந்துசிந்தையென்னுமாசின்றித்
தோ[illegible]சத்தாமாத்திரத்தாற்சுடர்விட்டெறித்தபடிசொல்லி
லா[illegible]முகிநீர்சாற்காலத்தறவேதெளிந்தவிண்போலும். (ருo)

ஆங்கப்படியேயவனிருப்பவவனதேவற்புரியசுர
ரோங்கற்கோயின்மேனிலத்தையுற்றுருயர்மாவலிதானு
நீங்கற்கரியநிருவிகற்பநிலேகூர்சமாதிகெடும்போது
தேங்குற்றதற்பின்விழித்துணர்ந்துமமதைதீர்ந்தசிந்தையனும்(ருக)

பற்றிலாதமனத்தாலேபயின்றிராசகாரியங்கண்
முற்றுமியற்றியாபத்துமுநிர்சம்பத்துஞ்சமமாகக்
குற்றமில்லாக்குறிப்பாலேகுறிப்புற்றின்பதுன்பத்திற்
சற்றுமிதவாதமிழாதுசமபாவனையிற்றுறனுன். (ருஉ)

ஓவாதவன்றனுள்ளெழுந்தவூகாபோகம்பலகோடி
பாவாபாவம்பலகோடிபார்த்தெல்லாமிளைப்பாறி
மேவாநின்றுனெவ்விடத்தென்விண்ணின்மண்ணில்வேட்கைகளிற்
றூவாநின்றமனந்தன்னைத்தன்னதிதயத்துள்வைப்பாய். (ருங)

எங்கேயெங்கேமனமோழுபிளையோரொன்னவீழ்ந்தழுந்து
மங்கேயங்கேகின்றெழுப்பிக்கண்டவறிவிலடைவிப்பாய்
சங்கேதமதாயிவ்வாறுசாதித்துளமாமதகரியை
வெங்கேதமறத்தளைத்தெல்லாவிசாரத்தாலும்விடனேர்வாம். (ருச)

மாவலிகதை முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-சுoரு.

பிரகலாதன்கதை.

பின்னுமீதோர்கதைகேட்பாய்பிரகலாதப்பெயரோனுந்
தன்னதுணர்வான்மெய்ஞ்ஞானதத்துவத்தைச்சாதித்தா
னன்னதுரைப்பாமிரணியனுமசுரவேந்தனிறந்தன்வே
யின்னல்கூருமவன்மைந்தனிதயநடுங்கியிவையுணர்ந்தான். (ச)

எனதுதாதைமுதலசுரரொனதுகுலத்தோரெண்ணிறந்தோர்
கனகமேருவனுவென்னக்காயநிலைமைபெரிதுடையோர்
வனசயோனியதிகாரமாற்றவல்லோர்தாவல்லோர்
புனைவண்டுளவோனெனுங்கனலிற்பூளைவிபோற்போயழிந்தார்.

அன்னொரொக்கும்போகாரழியுமூழிப்பெருங்காற்றாற்
சின்னுகங்கள்போன்மடிந்தார்செறிநுண்மணலிற்பலகோடி
யின்னுளவனுக்கஞ்சாதாரியாருமில்லையெம்பகையா
மின்னுர்நேமிப்படையோனைவெல்வானுபாயமீதொன்றே. (ரு)

எத்தன்மையினுவென்னுகினுமிதில்வேறுயர்ந்தநெறியில்லை
தத்துந்திரைப்பாற்கடலுறைவோன்சரணமன்றிச்சரணில்லை

சித்தமிக்கக்கணத்தொடங்கிச்சேர்கநாராயணன்சரணம்
பத்திநூகினானவனுய்ப்பகிராதொழிகபாவனேயே. (ச)

நயந்ததெல்லாமெளிதருளுநாராயணுயநமவென்னு
முயர்ந்ததிருமந்திரமென்றனுளத்தில்விண்ணின்மாருதம்போற்
பெயர்ந்துநீங்காதுள்ளுறைகப்பேணியரியைப்பூசிப்போ
ரியைந்தவரிதாமப்பூசையியற்றிற்பலனுமலதில்லை. (ரு)

அந்தநெறியாலரியுருநாணுகியரியைப்பூசிப்ப
ரிந்தவுடன்மாதவன்வடிவாமிதனில்வாயுவடிவாகிப்
பந்தமுறுவோன்பராபரனுமிவனேபிராணபவனத்தின்
மூந்துமோட்டத்தாவிரண்டாமுருக்[illegible]ப்புறத்துறைவான். (சு)

அவ்வாறுனவிவ்வரியையகிலவுபசாரங்களையுந்
தவ்வாமனத்தாளுளதாக்கிச்சதாபூசனேயேசமைப்பனெனு
விவ்வாறெண்ணிப்பாரமெலாமெடுத்துச்சுமக்குமனத்தாலே
செவ்வான்மணிப்பாத்திரதூபதீபங்கந்தமெலாஞ்செறித்து. (எ)

மணிப்பூண்களும்பீதாம்பரமும்வாடாமலருநல்லமுதுங்
கணிப்பிலாதபொருளெல்லாங்கருத்தாற்பாவித்தருச்சித்துத்
தணிப்பிலாதவன்பான்முன்றகத்தப்புறத்தின்பொருட்டிரளாற்
பணிப்பாயவனேயுட்போலப்பரிந்துபுறத்தும்பூசித்தான். (அ)

ஆயவாறக்கணந்தொடங்கிக்கண்டவடிவப்பரம்பொருளா
மாயனடிகளருச்சித்தானவனேப்போலவாளசுரர்
நியகுணம்விட்டெல்லோருந்திருமாற்கடிமைத்திறம்பூண்டார்
மேயமன்னன்[illegible]ரேவிரிந்தவுயிரின்குணந்தானே. (கூ)

[illegible]தலருமவர்க்[illegible]ராசுஞ்செங்கண்மான்மேற்சினந்தீர்த்து
[illegible]சிநாகியபத்தியி[illegible]மைபுக்காரொன்றபுரந்தரனுந்
[illegible]னவருங்கேட்டுமேதனுக்கமோடிவியப்பெய்தி
யதிபாதகர்க[illegible]பெருமாற்கன்பாகியதென்னெனவயிர்த்தார். ()

திருப்பாற்கடலிற்கண்வளருந்திருமான்முன்புசென்றணுகி
விருப்பாற்றுதித்திந்திரன்முதலோர்மேகமேனியனேநோக்கி
நெருப்பார்தன்மையசுரரெலாநினேப்பாவித்துநின்வடிவா
யிருப்பாராலுன்மாயையெனவெண்ணினேமீதென்னென்று. (கக)

கொடியகொலைசெய்வல்லசுரர்குணங்களெங்கேபெறவரிய
முடிவதானபிறப்பெங்கேமுகுந்தன்பத்திப்பேறெங்கே
கடியதீயோர்கற்குணங்கள்கலவாரென்றுகதையல்லா
னெடியமாலேகின்பத்திசேர்க்கெல்லாநேருமதே. (கஉ)

என்றவின்னோர்க்கெம்பெருமானிமையோரஞ்சாதொழிமின்கள்
வென்றிபயிலும்பிரகலாதன்மீண்டும்பிறவாப்பிறப்புற்றான்
கன்றுதுயர்போய்மெய்ஞ்ஞானக்கண்ணால்வீடுகாண்குவனு
லொன்றுமிதனிற்கைதவமென்றுணரற்பாலதிலதாகும். (கங)

நல்லோர்தீமையுறிற்கேடாந்தீயோர்நன்மையுறினன்று
மெல்லோரும்போமெனவருந்தியெம்மானுங்கேமறைதலுமே
கல்லோலஞ்சூழ்கடனின்றுங்க[illegible]லயஞ்சேர்ந்தமரரெலாம்
புல்லாரென்றவசுரருடன்புரையிலாததமரானார். (கச)

என்புகுளிரும்பத்தியினுவமைப்போதொழியாதெப்போது
மன்புகூரநெடுமாலையசுரர்வேந்தனருச்சித்தான்
வன்புபயிலுமுக்கரணம்வழுவாப்பூசாபலத்தாலே
முன்புவிவேகமாநக்தமுதிர்வும்விராகமுளைத்தெழுந்த. (கரு)

சாதனங்கண்முதற்குணங்கள்சாலவுண்டாயிவனெஞ்சங்
காதலானபோகத்திற்கவலும்பற்றுக்கழன்றனவாற்
சீதமுத்தமுத்துடனேசேர்ந்தாற்பற்றுச்சேர்வுறுமோ
வாதலாலேபோகத்திலழுந்தாதுள்ளமாறினதே. (கசு)

பூன்றவடிவுங்காணுமற்போகத்துள்ளுமழுந்தாம[illegible]
னன்றவூசலாடுவபோனல்லோனுள்ளந்திரிவத[illegible]ல
மூன்றுசகத்தின்சான்றானமுகுந்தன்றிருவுள்ள[illegible]ந்துணர்ந்து
சான்றகுணத்தோன்பூசிக்குந்தனிமாமனையிற்ற[illegible]னடைந்தான் (கஎ)

மூவராகிநின்றமுதன்மூலமடைந்தபடியறிந்து
தேவதேவன்றனைமுன்னர்ச்செயவினிரட்டிப்பூச[illegible]ாசெய்
தியாவராலுங்காண்பரியவெம்மானம்மாவெதிர்ந்தனனென்
றுவதானபடியன்பாலவனைத்துதித்தானசுரேசன். (கஅ)

அண்டமென்னுமொருவீட்டிலரியபொருள்சேர்சரக்கறையே
சண்டபானுவெனவுதயாத்தமமற்றொளிருந்தற்பரமே

கண்டவுயிர்களனைத்[illegible]ற்குங்களைகணைவான்றுணையே
புண்டரீகைநாயக[illegible]போற்றிபோற்றிமிகப்போற்றி. (க௯)

மேலோனுகிச்சகம்[illegible]டைக்கும்விளையாட்டுடையவித்தகனே
நாலோடொருபத்[illegible]னுமுலகினண்ணுவுயர்ந்தநற்பொருளே
ய[illegible]லோனுகிக்கண்வளர்ந்தவையாமெய்யாவருண்மூர்த்தி
பூ[illegible]லோகத்தினுயகமேபோற்றிபோற்றிமிகப்போற்றி. (௨௦)

[illegible]கமிகுந்தவசுரரொனுங்கிளைத்தாமரைக்குநெடும்பனியே
வேதநெறிச்செல்லமரரொனும்கிரிதாமரைக்குவெய்யோனே
[illegible]தமறுத்தோருள்ளமெனும்பெருந்தாமரையிற்பிரமரமே
பூதமனைத்தினுயகமேபோற்றிபோற்றி[illegible]கப்போற்றி. (௨௧)

என்பதானதுதிபலவுமிசைப்பவிதயங்குளிர்ந்தருளி
யன்பமறுத்துப்பிறவாவாறுயவரங்கேளெனக்கருணை
முன்பனுரைப்பவனைத்திதயமுளரியினுஞ்சேர்முதற்பொருளே
துன்பமில்லாவுயர்பதமேதவேயருள்வாயெனச்சொன்னன். ()

சித்தப்பிரமமெல்லாம்போய்த்தெளிந்தபரமசுகம்பெற்றுச்
சுத்தப்பிரமத்திளைப்பாறமுடிவாம்விசாரந்தோன்றுகவென்
றத்தப்பதுமமமைத்தருளியமலனேகவவன்றுநியான்
மெத்தப்பரவிமலர்தூவித்தொழுதான்விவேகிகளின்மிக்கோன். ()

பனிவார்கடலி[illegible]திரையென்னப்பரமபுருடன்மறைந்ததற்பின்
னினிதாம்பதும[illegible]தனத்திலிருந்திறைவன்றுதிகளேத்தியபின்
சனியாவிசாரந்த[illegible]ளித்தான்சகமறுக்குந்தனிமூர்த்தி
கனிகாநம்மையாரொ[illegible]றுகாடுவோமுள்ளெனநினைவான். (௨௪)

யா[illegible]ர்முன்னமெவ[illegible]றனேனிந்தப்புவியாடம்பரத்தி
லா[illegible]றிருந்துநின்[illegible]றடியழுதுசிரித்துமகிழ்ந்தயர்ந்தே
ஞனுவானசகமல்[illegible]லனகங்கல்புல்லுமண்மரங்க
டானுப்புறம்பா[illegible]சேதனமாஞ்சகநானென்னத்தக்கதுவோ. (௨௫)

இல்லாவிடத்துண்டாய்மூகமெனலாய்க்காற்றிலியங்குவதாய்ச்
செல்லாகின்றசிலகாளிற்சிதைந்துசடமாமுடனுனே
நில்லாதாய்ப்பொய்க்கேதோன்றிகிராகாரமதாயறிவின்றிப்
புல்லாவறிவிற்செவிக்குணவாய்ப்பொன்றுஞ்சந்தநானுமோ. (௨௬)

தோவிலன்றியறிவரிதாய்த்தோற்றமின்றிக்கணத்திறந்து
கோலுமறிவாலதிர்தறிவுகூடாப்பரிசகானல்ல
காவிலசைந்துவசித்துருவாய்க்காதன்மிக்குக்கணத்திறக்குந்
தாலுவணவாய்த்திரவியத்திற்சனித்துச்சடமாஞ்சுவைநானே. ()

கணத்தினிறக்குங்காண்பவற்றிற்காட்சிதன்னிற்பற்றாகிப்
புணர்ப்பில்காண்பானிடத்திறக்கும்போதமில்லாவொளிநானே
குணக்குழக்காமசேதனத்தாற்குறிப்பதாகிச்சடமாகி
மணக்குநொய்ம்மைமிகியமங்கள்மருவுகந்தகானுமோ. (உ[illegible])

எனதற்றென்னமெல்லாம்போயினைப்பற்றைத்துப்பொறிமயல்போ
யனகவறிவாய்த்தொழிலின்றியறியும்பொருளறிவேயாய்க்
கணமாயுள்ளும்புறம்பினுகிட்சுமமாயுண்டாமாத்திரமாய்ச்
சகமரணமிலாவென்னைத்தயங்கக்கண்டேன்சத்தியமே. (உகூ)

ஆவாவிப்போதுள்ளபடியறியுநெறியிலெனையறிந்தே
னேவாவிகற்பமற்றறிவுள்ளொளியாஞ்சிவனுருவிதுவோ
தாவாதெங்குமுளனானந்தத்துவத்திற்சகமெல்லா
மேவாகின்றவிரவிமுதற்சுடமீறாகவிளங்கியதால். (௩0)

உள்ளிலொளியாற்கனற்பொறிகளொளிர்வதென்னைவம்பொறியு
தெள்ளியறியுமென்னாலேசெறிசித்திரமாய்த்திகழ்ந்தனவாற் [ந்
றள்ளிலயனேடெட்டபட்டதனிக்கற்பாந்தத்துயிரனைத்தும்
வெள்ளவெளியாமப்போதுமீளாதொளிருமென்வடிவே. (௩௧)

இவனென்றுள்ளேபற்றுமெண்ணமெங்கேயெல்லையறப்
புவனமெல்லாநிறைந்தொளிரும்போதவடிவமென்றனக்குக்
கவருமனப்பாவனைதானேகருதிலுண்டோமுழுவில்சுகத்
துவமையில்லாவுபசாந்தவுணர்வாங்கண்ணேயலகெங்கும். (௩௨)

நோக்கப்பட்டநோக்கெல்லா நுண்மையறிவாநோக்கொன்றே
யாக்கப்பட்டவுயிரனைத்தினகத்தாயறிவதிலாவறிவாய்த்
தாக்கப்பட்டதொன்றில்லாத்தனித்தத்துவமாய்த்தனையன்றிப்
போக்கப்பட்டதில்லாவெம்பொருட்டுவணங்கிப்புகழுதுமால். (௩௩)

அறவுநொய்தாய்ச்சமமாகியவிகாரமதாயதீதமதா
யிறவுநிகழ்வோடெதிர்வென்னவெண்ணுங்காலமூன்றிலதாய்ப்

பிறவுநினைக்குநினைவின்றிப்பேதமற்றவறிவாலே
நிறைவிதானசத்தியலாநேரேசெய்யப்பட்டனவே. (௩௪)

தாக்கற்றொன்றிலளவுக்குச்சமமேயொழிந்துகண்டதிலே
வாக்குக்கெட்டாமையினாலேவசனங்களினாற்சமந்தோன்று [த்
நோக்கற்கரி[illegible]பொய்ப்பொருள்போனெய்தாயழியாநிராசைதனை
தக்கி[illegible]பாவனைதானேதிரைதீர்கடல்போற்சேடிக்கும். (௩௫)

செயலுஞ்செயலிலாமையுமாய்த்தியங்குஞ்செயலிற்சேரறிவு
பெயிலும்வளையிற்புட்போலப்பந்தமடையுமாதலினான்
மயல்வெங்கோபமிரண்டாலும்வருந்தொந்தனையாமயக்காலே
யுயிர்களெல்லாநிலப்புழுப்போலொன்றுமகலாதாகுவதாம். (௩௬)

நீடத்தருமன்னுயிர்க்கெல்லாநெஞ்சத்துறைவாய்நெடுநாளாக்
கூடப்பெற்றேனுனையிந்தக்குறைவில்பேற்றையார்பெற்றார்
தேடப்பட்டாய்பெறப்பெற்றாய்தெரியநின்றாய்விகற்பமெலாம்
விடப்பட்டாயெதுவானாயதுவாய்நின்றாய்மிகத்துதிப்பாம். (௩௭)

நானேநீயாய்நீநானாய்ஞானவடிவாய்முடிவின்றித்
தானேயாகியண்டத்தின்றலையாய்ப்பரமதத்துவமாங் [போ
கோனேயுன்னைத்தொழுகின்றேன்கொண்டன்மறையாநிறைமதி
லானோர்நினைவுகளின்மறையாவொளியாமுருவேயுனைப்பணிசேன்

உன்னலென்னுமாவரணமொன்றுமில்லாவெளியாகித்
தன்னதானசுகவடிவிற்றானேவிளங்கித்தன்வசமா
மென்னதுருவைநான்பணிகேனிருந்துகடந்துஞ்சாந்தமுற்று
மன்னதன்னிலதாகுமனைத்துஞ்செய்தும்பற்றிலதாம். (௩௯)

பல்லவங்கடனையசைக்கும்பவனன்போலமனமுதலாய்ச்
செல்லுங்கரணங்களையிந்தச்சித்தாம்புருடனசைத்திடுமால்
வல்லபாகர்கடத்துநின்றவாசித்திரள்போற்றனதான
வல்லன்மேவப்பொறியெல்லாமவனேபரிக்குமசுவரதம். (௪0)

இவனேதேடப்படுகிற்போனிவனேதுதிக்கப்படுகிற்போ
னிவனேதியானிக்கப்படுவோனிவனான்மரணமயக்கொழிந்த
திவனேயெளிதினெய்திடுவோனிவனேநன்றாயறிகிற்போ
னிவனேயெல்லார்மனக்கமலத்திடையிலிருக்குமிசைவண்டே. ()

மேவலுற்றபோகத்தில்விருப்புவெறுப்புமெனக்கில்லை
யாவதெய்துமதுவருகயாதுபோகுமதுபோகப்
பாவமிகுமிவ்வஞ்ஞானப்பகைவனுலேவிவேகமென்னு
மேவமில்லாப்பொருளெல்லாமிறந்தேனுணர்வானவைபெற்றேன்.

துனையுமனத்தான்மனமறுத்துத்துயர்செய்யகங்காரமிறந்து
தினைவானினைவுபோயசையாநிலைக்கேதனிக்கேவலநின்றேன்
வினையாநினைவற்றகங்கரம்போய்மேவுமனம்போய்த்தொழிலின்றித்
தனையேசிகர்கேவலத்தொடர்ச்சித்தத்துவத்தென்வடிவிருக்கும்.( )

காதலென்னுங்கட்டறுத்துக்காயமென்னுங்கூடகன்று
சாதன்மேவுமகங்கரமாக்தனிப்புள்ளெங்கேபறந்துளதோ
வேதமறிஞானியென்னுமொருமையிருமையதா
யோதும்விதியான்மீண்டொன்றியுயர்ஞானியானேம். (சச)

ஒழிவிலுலகின்சிறொல்லாமுண்டாயிருந்துமியிலையேல்
விழியிலவர்க்குப்பேரொழில்கூர்மின்னைப்போல்விளங்காதால்
வழுவிறேவேசயசாந்திமன்னுமிடமேசயவேத
முழுதுக்கயலேசயவேதமுளைத்தவிடமேசயவென்னை. (சரு)

பிறக்குமுதலேசயவென்றும்பிறவாமுதலேசயகாரு
மிறக்குமுதலேசயவென்றுமிறவாமுதலேசயவென்று
சிறக்குமனத்தாற்சிந்தித்துச்செம்பொற்பெயரோன்றிருமதலை
பறக்கும்விகற்பமில்லாதபரமசமாதிச்சுகமுற்றுன். (சகூ)

நிருவிகற்பசமாதியிலேநிகழ்சித்திரம்போனிலைபெற்று
வருடமையாயிரஞ்செல்லமாறுவொருபார்வையினிற்ப
வருணமணிசூழ்பாதலத்திலரசிலாமலசுரரெலாங்
கருடன்முதற்புள்ளினங்கவரக்கலங்குகுளமீனினையொத்தார். (சஎ)

ஆவதாயகாலத்திலனைத்தாமுலகினெறியனைத்துங்
காவல்புரியுந்திருநெடுமால்கடல்வாய்விழித்துக்கண்வளர்வான்
றாவல்வருடக்கார்நாளின்றுயிலைத்தவிர்த்துவொருகாலைச்
சேவல்கூருந்திருவுளத்திற்செகத்தினெறியைச்சிந்தித்தான். (சஅ)

பேதமில்லாச்சாந்திபதம்பிரகலாதன்பெற்றிருப்ப
வேதன்சிருட்டியழிந்துளவால்வெவ்வாளசுரரிலாமையினு

லேதவசுரரில்லையெனிவிகலற்றிமையோரெல்லோரும்
போதவுபசாந்தியாகிப்பொருவில்வீடுபொருந்துவரால். (சகூ)

தேவருபசாந்தியையடையிற்செந்தீவேள்விதவமெல்லாம்
போவதாகிப்பயனெல்லாம்பொருந்தாதெவையும்போன்றிடுமா
லாவலுற்றனவையெலாமொழிந்தாற்பூமியொடுங்கிடுமாற்
கேவலப்புவியொடுங்கிற்கிளருஞ்சிருட்டியற்றிடுமோல். (ருo)

இன்னசிருட்டிசூனியமாயிரவிமதியோடெலாமிறக்கிற்
பின்னர்யாமும்வடிவொழித்துப்பேதமில்லாப்பதமடைவோஞ்
சொன்னகாலத்தலாதிடையேதொல்லைஞாலமெலாமிறக்கி
ன்னகலங்காண்கிலமிதனுக்குறுதியுபாயமுணர்ந்தனமால். (ருக)

தானவருய்கவுய்ந்தாற்சமருண்டாஞ்சமருமுண்டேல்
வானவருண்டாமுண்டேன்மகத்துமுண்டாமுண்டே
லானதோர்சிருட்டியுண்டாமன்றெனிற்சிருட்டிமாளு
மூனமிலசுரர்கோனிவ்வுடலொடூழிவாழ்க. (ருஉ)

பரமமாமீசனாலேபாலிக்குங்கடவுணீதி
திரமுறவிவ்வாறென்றுசிந்தித்தசெங்கண்மாய
னரவணைப்பாயனீங்கியசுரர்கோனருகுசேர்ந்தான்
பிரமலோகத்தையோக்கும்பெரியபாதலநகர்க்கே. (ருங)

கருடவாகனத்துறைபவன்கவரிசேர்செங்கைத்
திருமடந்தைவாழ்வலத்தினனைம்படைசெறியு
மிருபுறத்தினின்றேவருமுனிவருமிறைஞ்ச
வருளுநாயகனசுரனையுணர்தியென்றருளி. (ருச)

வலம்புரித்தொனிகிளைப்பினன்மாதிரம்பிளப்ப
நிலம்பிளப்புறநெடுந்திசைபிளப்புறநிமிர்ந்த
வலம்புமோதையான்மெல்லெனமெல்லெனவதிர்ந்தா
னலம்பயப்புறுகற்பகத்தொன்றியநல்லோன். (ருரு)

பிராணசத்திநான்பிரமரந்திரநின்றுபெயர்ந்து
புராதனப்படிநாடிகளாலெங்கும்பொருந்தி
விராவலுற்றனவொன்பதுதுவாரத்துமேவப்
பராபரத்தினைபதிந்துளோனறிவுசம்பவித்த. (ருசு)

அறிவுதோன்றியுட்பிராண தர்ப்பணகிழவர்க்கி
யறிவதாம்பொருளுக்குற்றதன்னதாம[illegible]வு
பிறிவதாமதிபொருளிலேமனத்தன்மைபெற்ற
பிறிவிலாமுகக்தர்ப்பணத்திருமைபெற்றதுபோல். (ருஎ)

அற்பமுள்ளமங்குரித்தலுமரும்பவிழ்வுற்ற
வுற்பலங்கள்போன்மெல்லெனமலர்வுற்றவொண்க[illegible]
ணிற்பதாய்நரம்புறுபொறியறிவுகணிறைய
நற்பிராணனுமபானனுமெங்கணுநடந்த. (ருஅ)

அமைவில்காற்றுற்றபதுமம்போலசைவினையடைந்தா
னிமைகளுக்கிடையுளவிலேமனந்தடித்தெழுந்த
சமைவுறத்தெரிகண்மனம்பிராணன்மெய்தயங்கக்
கமையின்மிக்கவன்விளங்கினான்கருணைமால்காணு. (ருகூ)

பரந்துநாட்டங்களுக்கினமனமும்பருமை
நிரந்தரித்தனவவ்வயினவன்றனைநெடுமால்
சுரந்தவன்புடனுக்கியேயருள்செய்வான்றூயோய்
புரந்தான்புகழுனதுசிர்நோக்குவாய்புரிந்து. (சுO)

உடலைநோக்குதியகாலத்திலுன்னுடையுடலை
விடகினைப்பதென்பற்றுதல்விடுதல்சங்கற்பம்
படர்கிலாவுனக்கபாவமும்பாவமுமுடலிற்
றொடரிற்சேதமென்னெழுதியாவிருத்தியாற்றூயோய். (சுக)

சீவன்முத்தனுநீயிந்தவுடலொடுஞ்செங்கோற்
காவலாளனுய்ச்சுமையறக்கற்பமட்டிருப்பாய்
பாவகன்சுடப்பன்னிருகதிர்சுடவுலகம்
யாவதுங்கெடாதிருப்பநீயிறப்பதென்வாளா. (சுஉ)

ஒங்குமாசையாம்பாசத்தாலுறப்பிணிப்புண்டு
வீங்குமுள்ளுணர்வதன்வழியோடியேமெலிந்து
தாங்குசெய்கையான்மனமிகச்சலிப்பவர்க்கன்றே
தீங்குமேவியமரணந்தான்சிறப்பதுசகத்தில். (சுங)

அகங்காரத்தினையகற்றியோர்பற்றின்றியபனேத்துஞ்
சுகந்தருஞ்சமமானவராயுவேசுகமா

முகந்தவாசையஞ்சினமுமற்றுட்குளிர்மதியாற்
செகங்களின்கா[illegible]யானவராயுவேசிறக்கும். (௬௪)

பற்றுவான்பற்[illegible]பொருளிரண்டும்பயில்பந்த
மற்றபோது[illegible]ங்கிதோன்றிடு[illegible]துகிலேமை
பெற்ற[illegible]துவீடெனும்பெயராக்கிலேபெறுமால்
[illegible]விராலிங்காதனத்திருத்தியால்விளங்க. (௬௫)

குறைசெய்சங்கினதோசையாற்குமுறுறவந்த
புரையில்வானவர்மங்கலப்பணிசெய்துபுகழ
விரைவினின்றனைமாமுடிமிசைச்சுவணனே
யரசுசெய்கவூழியின்னளவெனவருளி. (௬௬)

மங்கலப்புனல்கொணர்கெனமஞ்சனமாட்டிச்
சங்குசக்கரந்தரித்தனகைகளிற்றனே
புங்கவத்திரள்போற்றிடப்பொன்முடிசூட்டி
யங்கணச்சுதனசுரர்கோனுக்கிவையறைந்தான். (௬௭)

தள்ளின்மேருவும்புவனமுமருக்கனுஞ்சசியு
முள்ளகாலெலாமரசுசெய்துயர்கெனவருளிக்
கள்ளமாயையின்சிருட்டியொன்றெளித்தல்போற்கணத்தில்
வெள்ளவானவர்குழாத்தொடுமறைந்தனன்விண்டு. (௬௮)

என்னவோதியவசிட்டனையிராகவனோக்கி
யன்னதானவர்க்கரசனாய்வீடுற்றவதிஞன்
தன்னதுள்ளமெய்ப்பரத்திலேதன்மயமான
பின்னர்மால்சங்கினோசையாற்பிறந்ததெப்பரிசோ. (௬௯)

எனவினவலுமிராமனுக்கருந்தவனுரைப்பா
னல்பயின்றவித்தாமெனவமலவாதனைதான்
கனமில்சீவன்முத்தருக்கெலாமிதயத்தின்கண்ணே
சனனவங்குரமீண்டிலதாகியேசாரும். (௭௰)

சுத்தமாய்ப்பரமமாகித்தோற்றஞ்சாலுதாரமாகிச்
சுத்தமாஞ்சாத்திகத்தைத்துன்றியேவிடாமலொன்றிச்
சுத்தவாத்துமத்தியானமயமதாய்த்துவக்கொன்றில்லாச்
சுத்தவாதனைகணித்தஞ்சமுத்திவாதனைபோனிற்கும். (௭௧)

ஆயிரவருடஞ்சென்றுமங்கயேயிருக்கினுள்ளே
மேயதாமவ்வவத்தைமெல்லெனவொருபானின்று
தேயலதாகித்தோன்றுஞ்செறியுமவ்வவத்தையாலே
தூயகற்பீவன்முத்தருணர்ச்சியைத்தொடங்குவரொன்றான் (எ௨)

பிரகலாதன்கதை முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-கூஎஎ.

காதிகதை.

பிறப்பிறப்பாம்பெயருடையவிக்தமாயைப்பெருமையினைமுடிவு பெறப்பேசவொண்ணு, வறப்பெரியதன்மனத்தைவென்றான்மாளு மல்லதொருவகையாலுமகற்றலாகாச், சிறப்புடையவுன்மாயைவி ரிவினுள்ளசித்திரக்தோன்றிடவினைக்குச்செப்புங்காதை, மறப்பறு சிக்தையனுகிக்கேட்டியென்னுமனுகுலநாயகனுக்குவசிட்டன்சொ ல்வான். (க)

மண்ணுலகிற்கோசலமாமண்டலத்தின்மறையவர்கோன்காதி யெனவழங்கும்பேரோ, னுண்ணினைக்தோர்கருத்தைக்கிளையை நீக்கியொருவனம்புக்கொருவாவியுதகத்தூடே, கண்ணியணிகழுத் தனவாயமிழுகின்றுநற்றவஞ்செய்தெண்டிங்கணடக்தவெல்லை, கண் ணருளான்மாயவன்வக்தவன்முன்றேன்றிக்கருத்திதன்கொலளித் துமெனக்கழறலோடும். (உ)

சலகின்றங்கரையேறிக்காதியென்னுக்தவமறையோன்கைதொ ழுதுசகமண்டத்தி, லலகிலுயிர்மனக்கமலத்தகலாவண்டேயச்சுத னேயகக்தாவென்றன்பாற்போற்றிச், சலனமறுதற்பரத்திற்சம்பக் தித்துச்சககமரணத்துருவாற்சகங்களாகி, யலமருநீடாச்சரியஞ்செ ய்வதாய்நீயளித்தமாயையைக்காணவருடியென்றான். (ந)

அக்தணன்வேண்டலுமாயைகாண்டிகண்டாலகற்றுதியேலகற் றுகெனவருளிமாயன், கக்தருவககரம்போன்மறைதலோடுங்கருணை மூர்த்தியைக்கண்டகளிப்பினுலே, சக்ததமுட்குளிர்காதியக்தக்கா னிற்றவத்தொடுசென்னுளிருக்துதானேயோர்காட், சிக்தனையிலரியு ளைத்தவுனையைகாடித்தேமலரோடையின்மூழ்கச்சென்றானன்றே

வணம்படிந்தங்கதனுட்செய்விதிக்கேவேதமந்திரமுந்தியானமுந்தான்மறந்துகாதி, யினம்பயிறன்மனைக்கேதான்றன்னைநோயாலிறந்தவனுகக்கண்டானினத்தோரெல்லாங், கனம்படமொய்த்திருபுறத்துமலறத்தேனிகாக்கடைக்கேவீழ்ந்தலறக்காதன்மாதா, தனய்பருந்த் தருவனை லணைத்துக்கொண்டு தழன்மிதித்தாள் போற்பதைத்துக்கிடக்கண்டான். (ரு)

தூமௗவிலடுத்தனசெய்தழுஞ்சுற்றத்தாரனல்கொளுத்தச்சாம்பராயங்கமெல்லா, மீமமுறக்கண்டானச்சலத்திஞேடேயிருக்கின்றகாதிதனதிதயத்துள்ளே, தோமுறுமாகுலமிருந்தபுந்தியாலேதுகளறத்தன்பாற்றன்ஞற்றோன்றக்கண்ட, வேமுறுசெய்கைகண்மேலுமுள்ளவெல்லாமிராகவகேளெனமுனிவனிசைப்பதாஞன். (சு)

இப்பாரிஞணநாட்டோரூரிலெல்லையிருக்கின்றகீசனுய்க்கதிப்போர்தங்கண், மைப்பாவையொருத்திவயிற்றெருருகுலாகிவருந்திவளர்ந்துறுகாலம்வந்தவெல்லை, கைப்பாலனுய்ப்பிறந்துவளர்ந்துவெந்தகரிக்கட்டைபோனிறத்துக்காளையாகி, யொப்பாகிஞய்க்கதிப்போர்குலத்தில்வந்தவொருகடைச்சிதனைமணஞ்செய்தொருமையாஞன். (எ)

வரைகளினும்வனங்களினுமுதலாயெங்குமவமுமுமிரும்போலவாழுநாளிற், றனாமிசைதன்குலம்விளங்கமைந்தர்தம்மைச்சனிப்பித்தான்சிலநாளிற்சரைவந்தெய்தி, நரைபெருகவருதலுமேதழையாற்செய்புன்மனைநூரத்தியற்றிகண்ணலுற்ருன், புரையறுமாதவீபோலங்குறையுநாளிற்புந்திரர்க்குஞ்சரைவந்துபுகுந்ததன்றே.

மனையவட்கும்புத்திரர்க்குந்தனக்குஞ்சேரவார்த்திகம்வந்தநோக்கிவருந்துநாளிற், றனையொழியவனைவரையுங்காலன்மாய்ப்பச்சந்தநம்வாய்விட்டலறித்தனியாற்ருது, கினைவழிந்தோராசையுமற்றநேகதேசநெடிதுழல்வான்கீரபெனுந்திநாட்டிற், புனைமுடிமன்னவனகரிற்புகுந்து வாணிற் பொற்றெருப்போலொரு தெருவிற்போகும்போதில். (கூ)

இறையவன்மாண்டனனுலகங்காக்கவேறேரிறைவனைக்கொண்டேகுதியென்றேவிச்செம்பொ, னிறைமணியாலலங்கரித்துவிடுத்ததந்திருபதியாரெனத்தேடிநேரேபோதக், கறைவடிவோடிவன்

கண்டாலிவனையந்தக்கறையடிகாணனுங்கரத்தாற்கழுத்திலேற்ற,
வுறைதருபானுவினுடன்செல்லுதயாகமொத்ததுபல்லியஞ்சூழ்ந்
ததுவரியொத்த. (௧௦)

எண்டிசையுஞ்சயசயவென்றிறைஞ்சவந்தா[illegible]லிவனிறையென்ற
லங்கரித்தாரெழில்கொண்மானார், பண்டையமை[illegible]ருஞ்சேனைத்
தலைவர்தாமும்பணிதலைக்கொண்டார்தரணிபாலனாகி,ம[illegible]லமெ
ங்கணுஞ்செங்கோன்முறையினோச்சிமாயினாற் கவலனெனும[illegible]ன்
பேர்பெற்றுத், தொண்டைமிதழார்விரும்பக்கீரநாட்டிற்சுடர்மணி
ச்சிங்காதனமேற்றோற்றமிக்கான். (௧௧)

காவிரண்டுவெருட்டுமுயர்கவலனென்னுமாய்க்கறிக்குங்கடையனர
பதியாய்வாழ்ந்து, மேலதற்பின்னொருநாளிற்றனியனாகிமெய்யலங்
காரங்களெல்லாம்விட்டுத்தானே, காவினடந்துயர்மலையின்புறமு
ற்றத்திற் கடைவேடர்த்துடனுலவுகாலையாங்கே, நீலிமையாநிறத்
தோர்காய்க்கறிக்குசேர்நோர்வந்தார்வினையிசைகிரப்புங்கையார்.()

யாழுடையகாளைக்குன்பேலாமற்றோரிருண்டநிறச்சிவந்தவிழி
விருத்தனெய்திக், காழுடையகற்சிரமகிபன்றன்னைக்காண்டலுமே
காதலுடன்கடைஞ்சனென்னு, மூழுறுதொல்பெயர்வினவிநெடுங்
காலத்தினுறவாநீயெங்ககன்றாயுறைவதெங்ஙன்,சூழுறுகல்வியிய
லேகண்டேனென்னுத்தொடர்பெல்லாமுள்ளபடிதோன்றச்சொ
ன்னான். (௧௩)

அதுபுகன்றவவன்றன்னைக்கவலனாவரசனிகழ்ந்ததிர்ந்தரப்பி
யவனின்றாங்கே, கதுமெனவுள்ளேகுதலுமிவற்றையெல்லாங்கூ
ங்குழையார்சாளரத்திற்கண்ணிற்கண்டார், புதுமையினாநின்றார்
நின்றுழியேகண்டு பூபதியாமிவன்கடைஞ்சப்புலையனுமே, லெது
செயப்பாற் றினியென்றே அனுக்குற்றேங்கி யிடருற்றாரிவன்க[illegible]
காதிதயத்தெண்ணி. (௧௪)

அறியான்போலவற்றையெல்லாமறைத்துமுன்போலாதனத்தி
லிருக்கவுமங்கவனைமுன்னஞ், செறிவானவஞ்சியர்மந்திரியர்யாரு
ந்தீண்டாதசவத்தைப்போற்றெரிசியாராய்ப், பிறியாதுநின்றனரச்
சனத்துடன்சேர்ந்தும்பேதமாயிவன்றனித்தபெற்றிகூறிற், பொறியா
ருங்கல்விதனமியாதுமின்றிப்புறநாட்டிலுறும்பதிகன்போலுமன்றே

ஆயிடையாவரும்புலைகாய்க்கறிப்போனலேயகேகாட்பாதகமே யடைதலானேனும்,போயினியோர்சாந்தியினுமுய்யமாட்டோம்புனி தமாம்படி தீயிற்புகுதுமென்னத், தீயில்விழக்கிச்சயித்தங்ககரோ ரெல்லாஞ்சிசுக்கண்முதல்விருத்தர்களுடசேரக்கூடி, வீயிலுறைவண் டுகள் போலெரியில் வீழ்ந்தார் வேந்தனும் புலைக்கடைஞ்சன் மிகவு நொந்தான். (௧௬)

நல்வினைஞ்சேர்தலிற்சித்தந்தெளிந்தகன்றுகாய்க்கறிக்கும்புலைசி ருபனுடுகிற்பான், புல்வியகந்தொடர்பாலித்தேசத்துள்ளோர்புரிய ராயனல்புகுந்துபொன்றிப்போன, ரல்லலுடனினியமையுமென்ன காடியாவிவிடத்துணிந்தனவில்வீழும்போதிற், பல்லவம்போலெரிக டைஞ்சனுடலிற்றுக்கப்படிபுனலுட்காதியுடல்பதைத்ததன்றே. ()

மாமாலியகின்றகன்றுதெளிந்ததாதிவருமுகுர்த்தமோரிரண்டின் மயக்கநீங்கி, யாமாரொன்காண்கின்றோமென்செய்தோமென் றெல் லாமுண்ணினைந்துசலத்திடைநின்றேறி, யாமாவிப்படியன்றோவு யிர்களெல்லாமிரணியத்துட்சினப்புலிபோலவாவியோடித், தோமா ருநெடுமயக்கின்மனமோகித்துத் தவள்கின்றோனெனக்கருதித்துயரந் தீர்ந்தான். (௧௮)

அக்கருத்தினுடன்சிலநாளகற்றிநின்றானச்சிரமத்தவ்வயினோரதி தியெய்த, மிக்கமகிழ் வுடன் றேன்காய் விரும்பியூட்டி வெய்யவன் போஞ்சந்தியிற்றம்விதிகள்செய்து,தக்கசயனங்கள்பயின்றிருவர்தா மூந்தத்துவநூற்கதைகண்மொழிசமயந்தன்னி, லொக்கவுறையதிதி தனைக்காதிநோக்கியுத்தமகின்னுடனுணங்கியோய்ந்ததென்றே. ()

உறுவாயெனுங்காதிக்கதிதிசொல்வான்குவலயத்துத்தரதிசையி ற்குலவுசெல்வத், தேறுபுகழ் ரோமெனுந்தேசந்தன்னி லியான்மாத மொன்றிருந்தேனினியோர்வேண்ட, வாறுறயானுறைநகரிலொரு வனென்பானனுகியுரைப்பானிக்காட்டரசாயிவ்வூர், மாறுபடாதெ ட்டாண்டிங்கொருவன் வாழ்ந்துமற்றவனுய்க் கறிப்பவனுமரபுதோ ன்ற. (௨௦)

வேறு.

அனையவன்கனல்புக்கிறந்தனனுங்கேயந்தணரனல்புகுந்தவிந்தா, ரெனையரொன் றிசைக்கேனென்றனுமதுகேட்டியம்பியதேசம்விட்

டேகிக், நனிதிளைக்கடவுட்புனற்பிரயாகைக்கரையிலப்பாதகங்கழி
ப்பான், றனைகிகர்மறையாற்சாந்திகள்செய்துசாந்தராயணஞ்சரித்
திளைத்தேன். (உக)

என்றுகொண்டதிதியம்பூங்காதியெம்முனைடச்சரிதையீதெ
ன்னத், தன்றனியுளத்திலதிசயமிக்குத்தன்னுடைப்பிலேச்சரித்திர
மாய், முன்திகழியற்கைகாண்பதுவிரும்பிமுந்துளநாடுகள்கன்று,
சென்றுபுக்கூனமண்டலந்தனிற்றன்சௌனித்துறையிடமெலாங்க
ண்டான். (உஉ)

முந்துதான்கண்டபடியெலாங்கண்டுமொய்சடைமுடிமிகத்துளக்
கிச், சிந்தையில்வியந்துநான்முகன்விதித்தசெய்கையைநோக்கிமே
ற்சென்று, னந்தல்லூனமண்டலநீங்கியணிதிகழ்கீரநாட்டணுகி, வ
ந்துதான்முன்னஞ் செய்தனவெல்லாம் வழுவறக்கண்டுகேட்டறிந்
தான். (உங)

இதுகொலோமுன்னமியம்பியமாயோனெமக்கறிவித்தமாமாயை
புதுமையாமிதனைநன்குறவறிந்தோம்புந்தியாலென்பதுகருதிக்
கதுமெனவந்தத்தேசநின்றகன்றுகனவரைச்சாரலினணுகி
யதுலமாதவனேரங்கைநேருணவாயரிமகிழருந்தவம்புரிந்தான்.(உச)

ஆண்டுசென்றளவேயம்மலைச்சாரலருந்தவனுச்சிரமந்தி, னீண்
டமானீலமுகிலெனத்தோன்றிநிறைதவக்காதியைநோக்கி, யீண்டி
யவெமதுமாயையின்பெருமையியல்புறக்கண்டனையினிமேல், யிவண்
டியதென்னைக்கிரித்தடத்தியற்றுமெய்த்தவமேதுபொருட்டென்னை.

துதித்தனனிலறைஞ்சித்தொழுதனன்கரியதுங்கமாமுகிலினைக்க
ண்டு, கதித்த சாதகம்போற் களிப்புறுகாதி கருணையங் கண்ணனை
நோக்கி, விதித்துநீகாட்டும்வினையிருண்மாயைவிளங்குறவிதுவென
க்கண்டேன், மதித்தவம்மாயைமருமகானறியேன்மயக்கமெய்யான
தென்னென்றான். (உசு)

மாலதற்குரைப்பானந்தணவித்தமண்முதலியாவையுமனத்தின்
பாலுறவிருப்பதன்றியேபுறத்திற்பயில்வதோர்காலமுமிலதா
மூலமில்கனவுமயக்கமுமதமுமுதலியநெறிகளிலியாருஞ்
சீலமாய்நோக்கியனுபவிக்கின்றார்சிந்தையுட்சகமிருப்பதுவே.(உஎ)

அனந்தமாய்விரிந்தசகத்திரளெல்லாமயர்வறவமர்வதற்கிடமா,ம
னத்தனுவிந்த காய்ப்புலேத்தன்மை வெளிசெயின்மற்றிதில் வியப்பெ
ன், கனந்தருபத்திப்பாச்சலின்வயத்தாற்கடைப்புலேத்திறந்தெரிந்
துளதா, முனந்தொடரதிதிதானுமப்படியேமோகங்கஷ்முழுவதுங்
கண்டான். (உஅ)

கண்டவப்படியேகாய்ப்புலேத்தன்மைகாகதாலியயோகத்தால்,வ
ண்டுறைபூண கிரமண்டலத்தோர் மனத்திலும் பத்திபாய்ந் துளதா,
லெண்டருபத்திப்பாச்சூழிலான்றெருகா லெண்ணறுபெயர்க்குமு
ன்றேன்றும், விண்டகெஞ்சியற்கைகாகதாலியநிலைமைபோல்விசி
த்திரகதியாம். (உகூ)

அப்படியன்றேசொற்பனமொன்றையநேகமானிடர்தனிகாண்பர்
கைப்படுவிசோதமொன்றிலேமகிழ்வர்காதலரநேகமானவர்கள்
செப்பியகடைஞ்சனுனவப்புலேயன்றிருமனேயூணமண்டலத்தே
தப்பறவந்தக்குறியினுன்முன்னேசனித்துளனப்படித்தானே. (ங.0)

அத்திறந்தானேதமரொலாமிறப்பவன்னியதேசத்தையடைந்தான்
சத்திரமிழற்றக்கீரதேசத்திற்றலேவனுய்ப்பின்கனல்புக்கா
னுத்தமமாகின்னுளத்திலேவெறிதேயுன்னுசம்பந்தமாயதனுற்
பத்திபாய்ந்துளதாலப்படியாகப்பகர்புலேக்கடைஞ்சனதியற்கை.()

இவனவனுனீதீவெனதென்றேயிடரின்மூழ்குவாறிவில்லா
ரவனியாமுழுதுநாமெனுமுண்மையறிந்தவராழுங்கின்றயரார்
பவளமார்பொருளிற்பகிர்வுறுமனர்த்தபாவனேபுந்தியிற்பொருந்திக்
கவ்ருறுரதனிவிவர்கண்மோகத்திற்கவல்வுறூர்தத்துவங்கண்டோர்

ஞான்பூரணமெய்தாமையான்மனத்தினண்ணியமோகத்தைகாடி
யினமென்றகற்றவறிகிலேயிதனுவிந்தமோகத்திலேகணத்தி
னீகனியமிழலுற்றனேயிந்தகெடியமோகத்திகிரிக்கு
மானதந்தானேயச்சதாமதனேவலிந்தடர்வுறிலதுகவியா. (ஙங)

எழுதிநீகிரியின்முறைழயிடைவருடமீனாந்துதவகனியியற்றின்,மு
ழுதுமாய்முடிவொன்றிலாதமெய்ஞ்ஞானமுற்றுதியென்றுபின்முகு
ந்தன்,றெழுதருதோற்றமெழுந்துழிமறையத்துயருறுமோகங்கணீ
ங்கிப்,பழுதறுகாதிகற்பனேயெல்லாம்பற்றறுத்தருந்தவம்புரிந்தான்

வருடமோர்பத்தின் ஞானபூரணனுய்வாழ்ந்தனன்பின்னரோதனதாம், பொருவில்சற்பாவமடைந்துயர்ந்தோனுய்ப்பொருந்தியபயந்துயர்கழுவிப், பருகுறுபோகத்திச்சையற்றுள்ளபடியிலேசந்ததஞ்சுகமே, யுருவமாஞ்சிவன்முத்தனுயாதியுவாமதியெனவுளகிலறந்தான். (கூ௫)

காதிகதை முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-க0கஉ.

உத்தாலகன்கதை.

இவ்வகையேயிம்மாயையறநெடிதாய்வெலற்கரிதாயேறித்தாழ்ந்து
வெவ்வியமாமோகங்கள்விளைவித்துப்பரமத்தின்மேவிநிற்கு [மைப்
மவ்வகையாலுணைக்கின்றேனவராதஞ்சொரூபத்தையடையாதா
பவ்வமெனவருந்துயரின்மூழ்குவிக்குமிம்மாயைப்பண்புதானே. (க)

சித்தசயமாத்திரமாந்தெய்வமருந்தாலன்றிச்சென்மவெங்கோய்
சத்தியமேபிறமுயற்சியாவையினுந்தீராதுதகைமைமிக்கோய்
வைத்தநிகழ்காலத்துக்கணத்தில்வருமியல்புறவாகியத்தாற்பற்றி
யொத்துவருமெதிர்காலமிறந்தகாலங்கருதாருளமிலாதார். (உ)

சங்கற்பம்வேட்கையனுசந்தானங்கணந்தோறுந்தவிர்த்தியென்னி
மங்குற்றமனோலயந்தானதுவாகுமனோலயத்தைமருவுபோதம் [ல
பங்கற்றபிரத்தியச்சேதனமாகுமதற்குமனோபாவமென்ப
தங்குத்தானிலாவியல்பாமாதலினுன்மனோவிகற்பமின்றிப்போ[illegible]

அற்றமறுசத்தியமுமுயர்சிவமுந்தற்பரமவவத்தைதானு
முற்றறிவுநிறைசுகமுமலமறலுமனப்பந்தமுமூதுந்தீர்த
லற்றவவிவேகத்தையொழித்துறுதியூகத்தாலுறுதியாகக்
குற்றமறுசற்புருடர்கோதறுநூல்களின்மனத்தைக்கூட்டியென்றும்

அனவரதமுணைத்தல்விடல்பற்றவிமைப்புறல்விழித்தலனைத்துஞ்செய்து, மனனமறுசுகவானுய்ச்சற்சின்மாத்திரபானுய்வாழ்திமைந்தா, கனமலமாங்காண்பவைதீர்ந்துள்ளத்தின்மலமறுத்துக்காதற்பாச, மெனவுயர்கோளையையறுத்துகின்னதிவிற்றற்பானுயிருத்தியன்றே. (ரு)

நலனிழிவாஞ்சங்கேதத்தாசையெனும்விடுசிகையைநண்ணுயாகிச்
சலனமுறுவிருப்புவெறுப்பறவுணர்வின்சாரபரந்தானுய்வாழ்வா
யலகறநானிவனவனீததுவெனதாம்வாதனைகளறுத்தொன்றென்றே
நிலவியகிட்டையிலாநிச்சற்சின்மாத்திரபரனுய்நின்றுவாழ்வாய் (சு)

எனதுபிறாதுவென்னுமெண்ணமற்சசகிலையிலிரண்டற்றொன்று
கனவயிரத்தம்பமெனவுணர்வுருவைப்பற்றிநிலைகண்டுநிற்பா [ய்க்
யினக [illegible] னமலமாயகண்டமாந்தன்னறிவிலமைவென்றுண்டாஞ்
சனனமயக [illegible] ரிவன்றுகவிர்ந்துபோமே. (எ)

பேரானந்தத்தின்பரிலையினியல்பினைநோக்காய்பின்னைநிற்கும்
வாராதகல்லமுதம்வந்தாலுமுயிர்தொலைக்கவருநஞ்சொக்குஞ்
சோராமெய்யுணர்வுடைமைதூரிதாமனந்தடித்துத்துன்றுமாகிற்
காரானமுகில்சூழமறைத்தாலுண்டோமதியங்கண்ணின்காட்சி. ()

சரீரமாத்திரத்தாசைபுந்தியாற்றுனல்லாதனதானென்றே [ம்
பரிவுறலான்மக்கண்மனைகுடும்பமெனும்பாவனையாற்பருக்குமுள்ள
விரியுமகங்காரவிகாரத்தினுன்மமதைதமலவிநோதந்தன்னு [னே.
லுரியவெனதிதுவென்னும் பாவனையான் மிகப்பருக்குமுள்ளந்தா

ஆதிவியாதியின்விரிவாலவைமாறித்தேறுதலாலகற்றல்பற்ற
லாதியமாமுயற்சியினுற்பிறவிதொறுமிகப்பருக்குமுள்ளமைந்தா
மாதர்மணிதனமுதலாநேயத்தாலாபத்தால்வருலோபத்தாற்
போதுபொழுதிவைகன்றுநலத்தினுற்பருத்துள்ளம்பூரிப்பாமே. ()

துராசையெனும்பால்பருகித்தொல்போகமெனுங்காற்றுற்றெட்
ர்மொய்ம்புண்டா, யிராகமுறுவழியுலவிமனப்பாம்புமிகப்பருக்குமி
ராமகளாய், புராதனவுத்தாலகன்போலைம்பூதத்தையும்பொடியா
ய்ப்போகப்பண்ணி, நிராகுலமாம்புந்தியினுலிதயத்தேகினைத்தியென
நிகழ்த்தலோடும். (கக)

அருளியவுத்தாலகனுசெங்நெறியாலைம்பூதமறுத்துத்தன்னுட்
கருதியதென்னென்றிராகவன்கேட்பவசிட்டமுனிகருணைவள்ளால்
பெருகியவைம்பூதத்தைவிசாரத்தாற்பேதித்துப்பிரமமெய்தி [பாய்
யொருமைபெறுநிலையுடையவுத்தாலகன் கதையாமுறைப்பக்கேட்

கந்தமாதனமென்னுங்கனவரையிற்கற்பூரங்கமழாநின்ற
கொந்தலர்சோலைச்சாரலுறைபவனுத்தாலகப்பேர்கோதிலாதோ

ணந்தமுனிவரன்முன்னேசிற்றறிவன்விசாரத்தோனகண்டவாழ்விற்
சிந்தையிடர்தீரவிளைப்பாறுதோன்புந்திகலந்திருந்தப்பெற்றோன் ()

பூதநெறியாற்றவத்தானற்பொருளால்யமநியமம்பொருந்துநீராற்
நீதறுநல்விவேகந்தான்சேர்தலுமேயவனினையசிந்தைசெய்தான்
கேதமறவிளைப்பாறும்பதமேதுன்றுபிறவிக்கேடிலாத
மேதகையபதமேதிங்கிதுவன்றேமுதல்வினாவின்மேவற்பாற்றே.

உளங்கிளைவிலாவிமலபரபதத்தேநெடுங்காலமொன்றிமொ[illegible]ன்றுய
க், கிளர்கனகவரைச்சிகரத்துறைமுகில[illegible]றக்கிடைப்ப
தேக்காட், டளர்வறவிதியற்றினமேலெலவையியற்றத்தக்கதெனச்ச
வித்துச்செல்லு, மளவறுபோகச்செல்வமெனதுளகின்றெக்காலம
விழ்ந்துபோமே. (௧௫)

மனனமெனுந்திரைமோதிமதத்தெழுந்தபேராசைவாரிதன்னிற்
புனிதமுறும்புந்தியினாலழுந்தாமற்கரையேறிப்போவதெந்நா
ளனவரதந்தொழிறொழிலாமைகள்போய்ப்பற்றுவிடின்றியுள்ளே
தனதொளியாம்பதமேவியெக்காலமகிழ்வுறுவேன்றளராநின்றேன்.

கருதுகிளைவொழித்தொடுங்கிக்கார்வரையின்முழையிடத்திற்கரு
ங்கற்போல, நிருவிகற்பசமாதியினாலெக்காலமசைவற்றநிலையினிற்
பே, னொருமைபெறுதியானத்தாலிளைப்பாறுமென்னுடையவுச்சிமீ
தே,குருவியினங்கூடமைத்துக்குடியிருப்பதெக்கா[illegible]ங்குஞ்சியாலே

வேறு.

ஊகத்திவ்வாறுன்னிமிகவுத்தாலகனுட்பரவசனா
யேகத்தியானஞ்சாதிப்பானிருந்தவிருந்தவிடந்தோறும்
வேகத்துகளுமனக்குரங்குவிடயக்கொம்புகளிற்பாயச்
சோகத்திறந்தீர்மகிழ்ச்சிபெறுஞ்சொருபசமாதிபெற்றிலனால். ()

திறனார்கானிவ்வகையேநிலையற்றலைவோன்பின்னொருகாற்
புறனார்காட்சியொழிந்திடலாற்பொல்லாமனமாம்வன்குரங்கு
திறனாரிருண்மூடியதென்னத்தியானங்களிலேயுள்ளழியா
வறனார்கிரியிலுலைந்துழல்வுற்றறவேவாடியலமந்தான். (௧௬)

யாருமின்றியாராலுமெய்தற்கரிதாகியமுழைதான்
சாருமுத்திப்பதமெனலாந்தன்னிலொருகாற்றனிமேவி

யாருமலைக்குன்றியின்றழைமேலருணச்சருமம்விரித்ததன்மே
லோருமனத்தின்செயல்குறுக்கியுணர்வான்புத்தன்போலாகி. (உ௦)

புண்டரீகவாதனத்திற்புத்தன்போனுத்தாமுகனு
யண்டமிரண்டுமிருகுதிமேலாக்கிப்பிரமாஞ்சலிபண்ணி
மண்டுகின்றவாதனையின்மருளுமனத்தைமீள்வித்துத்
தண்டலில்லாநிருவிகற்பசமாதிப்பொருட்டிவ்வகைநினைந்தான். ()

வாராய்மூ[illegible]னமேகின்[illegible]ழ்க்கைகளிற்பயனென்
நீராவிடரேமுடிவில்லவருஞ்செயலிற்பெரியோர்சேருவரோ
வாராவமுதாஞ்சாந்தியைவிட்டழியும்போகமாதரிப்போ
ரோரார்மலர்க்கற்பகக்கான்விட்டெரிகூர்விடவெங்கானுறுவார். ()

அயனுடற்றூய்பாதலத்திலனுகினுயாகினுஞ்சாந்தி
வியனுரமுதையொழிந்தக்தமிக்கநிருவாணம்பயிலாய்
பயனுயதுபோல்விசித்திரமாய்ப்பாவாபாவமயவடிவே
யியல்பாமிந்தச்செயல்கள்பெரிதிடராமென்றுமினிதாகா. (உ௩)

சத்தாதிகளாமித்தொழில்கடம்மான்மண்டுகம்போலப்
பித்தாய்மூர்க்கமனமேயேன்பிரமிக்கின்றாய்விடாதவமே
யெத்தாற்சிறிதுதனையடைந்தாயெதிலேயின்பமுறுகின்றாய்
நித்தாமுதருட்சமமாகுமதினிநிலைசேராநெறியென். (உ௪)

வேறு.

படர்மூர்க்கமாமனமேவிணைய்த்தோன்றிப்பருக்கின்றசெவித்தொ
ழில்கள்பயின்றுசத்தர், தொடர்கின்றபுந்தியினுலசுணமாப்போற்று
ஞ்சு வேண்டாதோவின்றொழிலேமேவி, யடர்பரிசமூகமாமதனூற்
றுள்பமடியாகப்பிடிக்கன்பாமியானைபோல, மடமைமிகுமூர்க்கமா
மனமேயென்றுமாறாதவாபத்தைமருவவேண்டாம். (உ௫)

ஒளியுருவத்திரணேக்குவிழியின்செய்கையுற்றுநீவெவ்விளக்கை
யுணராதாகி, விளிதலுறும்விட்டில்போல்வேசவேண்டாவெய்யம
னமேகாவின்விருத்திமேவி, யெளிதருந்தியுணவுகளின்மணத்தினு
லேயிணைத்தூண்டிற்கவர்மீன்போலிறக்கவேண்டா, நளினவிதயத்
துளுயிர்கெதிபோய்க்கந்தகாட்டத்தாற்கட்டுண்ணேனனைவண்டே
போல். (உ௬)

உரைத்தவசனங்களிறுவிட்டின்மீன்றேனேசையூறெளியிாதகாற்
றமென்ன,நினைத்தவிவற்றென்றென்றுன்மாய்ந்துபோகுநிலையழி
க்குமவையைந்துநேரோகூடிக், கனைத்தலுறுபவர்க்கின்பமெங்கேயு
ன்றன்கட்டுக்குவாதனையேகயிற்றுச்சாலம், புரைத்தெழுநெஞ்சே
யதுவேபோகுமாகிற்பொருவிஷயமஃதுனக்குப்புகலுங்காலே. ()

வேறு.

எதுபயனுகிற்கிங்கித்தண்டமியான்செய்கின்றேன்
முதுவிசாரத்தின்மிக்கமூதன்மையே[illegible]லலே
யதிகமாமுடிவில்சித்துக்கற்பமாகிலேயென்னெஞ்சில்
விதியதாயுளதோயானேவில்வக்காய்புகுதலுண்டோ. (௨௮)

தசைபயில்பாதந்தொட்டுத்தலைமட்டும்வெவ்வேறாய்ந்து
மிசைவுறயானங்கில்லையானெனுநிலையெங்குண்டோ
திசையெலாம்விழுங்கிமேலாஞ்சித்ததாய்க்காண்பதின்றி
யசைவறவெங்குந்தானுமென்றுலகனைத்துங்காண்கேன். (௨௯)

உயர்வுறுமதற்குநாமகற்பனையொருமைபன்மை
வியன்மகத்தனுவென்றேதும்விதமுறுகுறிகள்காணே
னியலறிவாதலாலேயான்காணுமென்பானீயே
துயர்தருமேதுவாகத்தோன்றினைபேதைநெஞ்சே. (௩௦)

முதுவிவேகத்தாற்போதமொய்ம்பினுலிந்தவுன்னைக்
கதுமெனக்கொல்லாகின்றேன்காணுதிகவலைநெஞ்சே
யிதுதசையிதுபுண்ணீரீதென்பிவையுளவுயிர்ப்பாய்ப்
பொதுளியவாதமிங்கேயகமெனல்பொருந்திற்றெங்கே (௩௧)

தசைகள்வேறுதிரம்வேறுதடியென்புவேறுமெய்யி
லசைவுவேறறிவுவேறுவகமெனல்பொருந்திற்றெங்கே
விசைவிழியிதுதோலீதுவியன்செவியிதுமூக்கீது
பசைவுறுநாவிதிங்கேயகமெனல்பயின்றதெங்கே. (௩௨)

அகமெனவெங்குமாகுமற்பமிங்ககமன்றுகு
நிகழுமிக்கல்லநோக்கேநோக்கயனெறிவேறில்லைப்
புகரில்சின்மயனுமென்னைப்போதமிற்றூர்த்தநெஞ்சே
மிகவருத்தினையான்கன்றைவனச்சேர்நாய்வெருட்டுமாப்போல்.()

தெய்வயோகத்தாலின்றுதேறினன்சொரூபச்செம்பொன்
கைவழிகவரஞ்ஞானக்கள்வன்மீண்டிவனைச்சேரோ
னைவகைப்பொறிகளொன்றுவாதனையற்றிருந்துந்
தைவருபுறனிற்றத்தம்புலன்களிற்றுவாகின்ற. (ரு.ச)

வாதனைபொறிகட்கெல்லாமன்னுகாரணமன்றுகு
மூதலான்மூர்க்கமானவைம்பொறிநீவிர்நெஞ்சி
னேதவா கனைகண்மாற்றிக்கருமங்களெல்லாஞ்செய்வீர்
வேதனைத்துன்ப[illegible]ஞ்சிலுமேவாதென்றும். (ரு.ரு)

வேறு.

கூடுசெயுந்தன்வாயினூலாற்பொன்றுங்கோசகாரக்கிருமிக்கூட்டம்போல, வோடுபொறியெனுஞ்சிசுக்கான்மயலால்வினையுலர்த்திடுவீர்பொறிக்கெல்லாமுறையுளான, நீடுமனனேயொடுங்கிப்பொறிகளோடுநீவேறற்றுத்துமதத்துவத்தைநேரோ, நாடுதிபற்றற்றொன்றாய்முத்தியானஞானவடிவினைநிலையாய்நண்ணுவா[illegible] (ரு.சு)

ஆசகலாவிடயவிடவிடுசேயாகியனந்தமாகானேனும்வாதனையைத்தீர, மாசறவிட்டிச்சையெலாமொழிப்பதென்னுமந்திரயுத்தியினுலேமறுசென்மம்போய்த், தேசமுறுபகவானுயச்சமெல்லாந்தீர்விடமாவாய்மனமேதிரள்சங்கற்பம், வீசுதருமயல்கொடியாய்நீயாங்காட்டைவெ[illegible]டிநெடும்பூமியிலேவிநோதஞ்செய்வேன். (ரு.எ)

வேண்டியவாவிளையாடித்தற்பதத்தைமேவினன்கேவலமானேன்வெற்றியுற்றேன், வீண்டுவெயர் நிருவாணமானேன் செய்வதிலதானேன்[illegible]வற்றேனிடம்வேறற்றேன், வீண்டதெளிவுடைமையொளியுடைமை யுண்மைநிகழ்வுடைமை யறிவுடைமை நீங்காமெய்ம்மை, ம[illegible]ண்டகமுடைமை யுபசாந்தநீர்மைமகிழ் வுடைமைநிறைவுடைமைமகிமைபான்மை. (ரு.அ)

ஆவரணமில்லாமையுதாரத்தன்மையழியாததேசுடைமையகண்டநீர்மை, யாவதுந்தானுமுறைமையச்சமின்மையேகமாந்தன்மைமனமெழுந்தோடாமை, யோவலிலாதுடனுறையிக்குணங்களென்னுமுத்தமிகள் சுமங்கலிகளொப்பிலாதார், பாவனையொன்றுஞ்சொரூபமடைந்தேற்கென்றும்பன்னியராயுளங்கவரும்பாவைமாரே

தேங்காதுதன்வசமாய்விரிந்தபுந்திச்செயலாலேயிவ்வாறுதிறத்தி
லெண்ணிப், பூங்காவிசிறிதலர்ந்தாற்போலப்பாதிப்புனைவிழியோன்
புண்டரிகாதனத்திற்புல்கி, யோங்காரமேனேக்குந்தொனியதான
வுத்தமனீண்முழக்காலேயுச்சரித்தான், பாங்காககாவறையுமணியி
னாடெயின்றுதடையற்றோசைபடர்வதேபோல். (சo)

சான்றபிரணவமோதுமவன்றன்சித்தத்தற்பதத்தைநோக்குத
லுந்தனியோங்கார, மூன்றறவெவ்வளவுமேலுற்றுநின்றதுயர்ந்தநி
ன்றுவிமலமாமுணர்வின்கண்ணே, [illegible]மாத்திரையுடையபி
ரணவத்தின்முற்கூறுவெளியாகமுழங்கியெங்கு, மான்றபிராணங்
கடொனிகிளப்புமெய்யிலமிழ்தாய்க்கிளர்ந்தோங்கியதிருமெல்லை.()

இன்னுயிரைப்புறத்தகற்றவல்லதானவிரோசகப்பேர்கிரமந்தானி
யாக்கைமுற்றுங், கொன்றுறுபாழாக்கினதானிறைந்துயர்ந்தரும்
பழுனிகுளைகடலைக்குறைத்ததேபோற், பின்னமில்சிற்சுவைநிறை
ந்தவராகுநந்திற்பிராணனிறைந்துளவிதயப்பெருந்தீமண்டி, யன்ன
வுடன்முழுதுமெரித்துளதோங்காரத்தாதியாங்கிரமத்திலவத்தை
யிதே. (சஉ)

அவ்வவத்தைவேண்டளவுநிகழ்ந்ததன்றேயடையோகத்தாலல்
லவடையோகத்தான், வெவ்விடர்கல்குவதன்றேவதற்குப்பின்பு
வியனோங்காரத்தினதுவேற்றுக்கூறு, தவ்வலறச்சமநிலையாமவதர
த்திற்சலனமிலாக்கும்பகப்பேர்தரிக்கப்பட்ட, வெவ்வமறுகிரமமு
ளதானதன்றேயியம்பிபவிப்பிராணங்களெல்லாற்றிற்கும். (சங)

புறத்தகத்துங்கீழ்மேறிக்காகாசத்திற்புரிந்தசையாப்பிராணங்க
ள்புரணமாகித், தறத்துருத்தியிடைதடைப்பட்டனபோனின்று
தோன்றிமுதலேயுடலைச்சுட்டவங்கி, நிறத்தவிடிபோற்கணத்திலவி
ந்ததன்றேநீகாரவெளிறெனவெண்ணீருயங்க, மூறத்தெரிந்ததால
தற்கேயுடலென்பெல்லாமொழுங்காகத்தோன்றிகரம்புடனேநின்ற.

சுகமாயகருப்பூரப்பாயறன்னிற்றுயில்வதுபோலெலும்புநிரைதோ
ன்றிற்றன்றே, மிகமோதுபவனத்தாலந்தநீறுவிசைந்தெழுந்துகண
ப்போதிவ்விசும்பைச்சுற்றித், திகழ்வானசரற்காலந்தன்னின்மேக
ஞ்செதிபனிபோலோரிடத்திற்சென்றுசேர்ந்த, விகலாதவிவ்வவத்
தைவேண்டுமேட்டுமியலோங்காரத்திரண்டாங்கிரமத்தெய்த. (சரு)

அவத்தையினிகழ்ந்ததடையோகத்தன்றாலடையோகம்பேரிட
ரையளிப்பதன்றோ, வவற்றினிற்பின்பிரணவத்தின்மூன்றாங்கூறு
யமையுமுபசாந்திதருமவதாரத்தி, லுவப்புறுபூரணத்தாலேபூரகப்
பேருளகிரமம்பிராணங்கட்குண்டாயிற்றன்றே, யுவத்திரமிலாவக்
தவவதாரத்திலுயிரெல்லாமுணர்விற்முதத்துட்புக்க. (௪௬)

உருகுபனிதோய்ந்தாலொப்பவதிசீதத்தையுற்றபிராணங்களெலா
மொழுங்கினாலே, ககனமுறுபுகைதன்காராகுமாபோற்ககனநடுவு
றமதியாய்க்கலையின்கூட்ட, மிகவுநிறைந்தந்தமதிமண்டலத்தில்வி
யன்சுதைதாரையையுயிர்கண்மேவப்பெற்ற, திகழ்விசும்பினின்றி
ழிந்தவமுததாரைசேடமாமுடனீற்றிற்சென்றுவீழ்ந்த. (௪௭)

அரன்சிரசின்றிழியமுதகங்கைபோன்றவமுததாரையினாலேயம
லமாகிக், கரங்களொருநான்குடன்வெண்மதித்தேசாகிக்கருணை
மால்வடிவென்னக்காணலாகி, யுரங்கிளருத்தாலகன்மெய்தோன்றி
ற்றன்றேயுயாமுதமயமானவுயிர்களெல்லாங், குரம்பையதுதனை
றைத்துச்சூழ்ந்துள்ளனகுண்டலிமற்றினைப்பூசைகுயிற்றிகின்ற.()

இத்திறத்திற்பங்கயவாதனத்திருந்தோனியாக்கைநிலையழியா
மலியற்றிப்பின்னர், மத்தமுறுபிரமரம்போற்சுழலுநெஞ்சைவன்பி
னாற்றகைவுற்றானுமவுனியாகி, மெத்துபிராணாபானவேகநோக்கி
மெல்லெனவுண்டாக்கினன்வல்விடயகின்று, தத்துபொறிகளைவரு
ந்திவேறுசெய்தான்சற்றுமறப்புறப்பரிசந்தள்ளினானே. (௪௯)

பற்றறுதிண்ணியமதியோனுள்ளேதோன்றும்பரிசமெலாந்தள்ளு
கின்ற[illegible]ர்வையாலே, யற்றனவாக்கினன்மூலவாயில்செம்பியங்கத்
தெ[illegible]பதுவாயிலனிலமெல்லாங், குற்றமறமுகமடைத்தாற்புறத்
துவாரங்கும்பத்துக்கடைபடல்போற்குறித்தடைத்தா, னுற்றலய
மெனுங்குணத்தைச்சேர்ந்தநெஞ்சையுரிதயவாகாயத்தொடுக்கி
னானே. (௫௰)

உரத்தமதகரியையுபாயத்தால்விர்தத்துட்குழியிற்சேர்ப்பதுபோ
லொடுக்கிநெஞ்சைச், சாற்ககனம்போனிமலதெளிவைச்சேர்ந்து
தள்ளினன்பற்றிபாய்தன்மையாலே,வரத்துடையவிகற்பமெலாமீ
ளமீளவருவனவேண்டினபடியேவந்துதோன்ற, பாப்புறுதோற்றங்

கனைவன்னெஞ்சான் மாய்த்தான்பகைவரை வாளாற்சூரன்படுப்ப
தேபோல். (ருக)

விகற்பமெலாமிறத்தலுமேயிதயவிண்ணில்விவேகபானுவைம
றைத்துவிரிந்தகங்குல், சகத்தினினுளஞ்சனத்தின்பார்த்தப்போ
தேதன்னுள்விவேகத்தாலேதவிர்த்தானத்தை, யகத்திருணன்ரு
ய்க்கெடலுஞ் சுடர்வந்தெய்தவம்முனிவ னதனையுங்கண்டகற்றிமா
ய்த்தான், திகழ்ச்சியொளியகலுதலுஞ்சுழன்றுநெஞ்சநிசியினடுப்
போலுறக்கநேர்ந்ததன்றே. (ருஉ)

போகாததுயிலினையுமறுத்தான்றூக்கம்போகுதலுமாகாசபோத
ம்வந்த, தாகாசபோதமழிந்திடலும்வல்லையவன்மனமோகஞ்சேர்ந்
தவந்தமோக, நோகாமன்மனத்தினைவிட்டேகுமாறுநாக்கினன்பே
ரிதயநோக்குமிக்கோ, னேகாதவிரவுதருமந்தகாரமிவ்வுலகினின்ற
கற்றுமிரவிபோல. (ருங)

வேறு.

அன்னகாலையிலிருள்சுடர் துயில்மயக்கனைத்தையுமறுத்தோட்டி
மன்னுமோரவத்தையையடைந்தொருகணம்வருத்தமாறியதுள்ள
மின்னநீர்த்துடனேயனைத்துருவமாமறிவையெய்தியதன்றே
நன்னெடுங்கனாதடுக்கநின்றெதிர்த்துமுற்றலகிறைந்திடுநீர்போல்.

விஞ்சுநீள்பகற்பரிசயத்தாலுந்தன்மெய்யறிவுணர்வீனும்
நெஞ்சுசின்மயமடைந்தாவிரணியநிகழ்சிலம்பாமாபோல்
வஞ்சவன்மனத்தன்மைபோய்ச்சின்மயமருவியமனந்திரசச்
செஞ்செவ்வேவல்லேவேற்றுமையானதாற்சேற்றினுட்சுடபெரினை

தங்குகாட்சிவிட்டமலமாய்ஞானத்தின்சமமடைந்ததுபோதல்
பொங்குவாரிதிரைமுதற்பகிர்ச்சிபோய்ப்புனல்சமமடைந்தென
வெங்குமோர்மதியாயறிவுற்றவனீறில்போகத்தெண்ண [ள
மங்கியாண்டண்டம்பரித்துயர்ந்தமலசின்மயவிசும்புருவானன். ()

அவ்விடத்தினிற்காண்பதுகாட்சியற்றனந்தமாகல்லின்பஞ்
செவ்வியாநந்தமுற்றனனமுதமார்தெண்கடற்குளித்தென்ன
மெய்விடக்கழன்றதீதனுயொருதலமேவினன்சதாநந்தப்
பௌவமாயினனெங்கணுமொத்தாற்பாவமேவடிவானன். (ருஎ)

அந்தணன்றனதறிவெனுமன்னமாகந்தமாநிலேயோடை, வந்தம
ர்ந்ததுசரற்ககனத்திலேவயங்குமாமதியென்ன, வுந்துகாற்றிலாவி
ளக்கெனவோவியத்துருவெனத்திலாயில்லாச், சிந்துவென்னநீர்க
ருக்கொண்டுபொழியலாச்சேண்முகிலெனநின்ருன். (௫௮)

இந்தமிக்கபேருலகினிற்றற்பதத்திருக்குமம்முனியைக்கண்
டந்தரஞ்செறிசித்தர்விண்ணவர்குழுவற்புதப்பலபேரும்
வந்துசுற்றினரரம்பையர்கிரம்பினர்வாசவன்றனிழுதார்
தந்தளிப்பவனங்கவையனைத்தையுந்தள்ளினன்விருப்பின்றி. (௫௯)

அலங்கன்மாதரிங்கிதங்களைச்சைசவத்தறிகிலானென்ச்சற்றுங்
கலங்கலாதகெம்பீரமாமதியினன்கடவுள்வான்பேற்றெண்ணம்
விலங்கியன்னதன்ஞநந்தவிட்டிலேமேவினன்மதியாறு
துலங்கியோங்கியவுத்தராயணத்திலேசுடர்விடுகதிரொன்ன. (௬௦)

மூவராகியமுதல்வருமமரருமொய்த்தசித்தரும்வாழுஞ்
சீவன்முத்தியாம்பதமடைந்தருந்தவன்செறியுமாநந்தத்
ஞேவலின்றியநிறைவினுலாநந்தமுதிர்ச்சியாம்பதமுற்ரு
ஞவதானபேராநந்தமதுவிலவ்வறிவினுற்றிகழ்வுற்ருன். (௬௧)

ஒருகணஞ்செறிவருடநூறென்னினுமுயர்ந்தவப்பதமுற்ருேர்
வருபவந்தருமேதுவாய்க்காண்பனமருவுமிவ்விழிமேவார்
பெருமையாவவிப்பதத்திலுத்தாலகன்பிறைகளோராருலே
யருகுருவகைசித்திபூமியைக்கடிந்தமைந்திருந்துணர்வுற்ருன். ()

விழித்துநோக்கினன்சித்தரையவர்களுமிக்குயரிவன்றனைப்
ப[illegible]ச்சியன்பொடுபகவநீகாண்டியெம்பணிதல்பொன்னுலகத்தி
வி[illegible]ச்சுமவ்விமானத்துவந்தேறுதியிந்திரபதத்தின்பங்
க[illegible]த்தபூமிகளனைத்தினுமில்லதோர்கற்பமப்பயன்றுய்ப்பாய். (௬௩)

பகல்செய்தனதவமெலாமிந்திரபதமுறற்பொருட்டேயென்
றகமலர்ந்துரைபன்னியசித்தரையதிதியோனநோக்கி
முகமலர்ந்துபூசித்தனன்மயங்கலன்முந்துறுபெருஞ்செல்வ
மிகவிரும்பலன்வெறுக்கலன்றிண்ணியோன்விபுதரோகுதிசொன்ருன்

மொய்த்தகூட்டத்தைவிடுத்தனன்றன்செயன்முயன்றிருந்தனன்
பெத்தநீங்கியவவனையச்சித்தரும்பின்புசென்றுட்பேணி [போக

சித்தம்விட்டனர்தாங்களேயன்றனர்சீவன்முத்தனுங்காணின்
மெய்த்தமாதவரிடங்களிற்சுகத்திலேவேண்டளவுலாவுற்றான். ()

ஒருதினத்தெல்லையொருமதியெல்லைமற்றோர்வருடத்தெல்லை,
பெருகுமாண்டெல்லையெல்லையோரோர்காற்பேதமிற்றியானத்தின்
மருவியொன்றிடும்விழிக்குமக்கண்முதல்வருக்தொழில்களிற்சேர்
ந்து, நிருவிகற்பமேயாயினனொருமையாய்நின்றனன்சித்தோடும். ()
பரந்தவுள்ளத்தினொருமையின்செறிவினைப்பழகலாற்பெருஞ்சித்து
நிரந்தரித்தெங்குஞ்சமமதாயினன்புவிநிறைவுறும்வெயிலென்னத்
திரந்தருஞ்சித்தினொருமையைநெடும்பகற்செறிபரிசயஞ்செய்ய
வரந்தைதீர்ந்தசற்பாவசாமானியமடைந்தனனதனாலே. (௧௭)

தெரிவதாமிவற்றுதயமத்தமமுறான்சித்திரரவிபோலப்
பெரியதாய்ச்சமவின்பமாம்பதவியின்பேற்றினாலுபசாந்தி
புரியுநெஞ்சினன்பிறவியுமையமும்போய்ச்சரற்ககனம்போல்
[illegible]ய்யொளிநிறைவேதனவடிவானான். (௧௮)

வேறு.

என்றவசிட்டன்றனைவள்ளலெதுசத்தாசாமானியமென்
றன்றுழினவவனுரைப்பானகல்சிற்சாமானியவடிவா
யொன்றுவொன்றுமில்லாமையுறுபாவனையினுறைப்பாலே
தன்றனுள்ளங்கரைந்தேகிற்சத்தாசாமானியமதுவே. (௧௯)

தோற்றமாங்காண்பனநீங்கிச்சித்தினிடையேசித்திறக்கிற்
சாற்றுமுயற்கொம்பெனநோய்தாஞ்சத்தாசாமானியமதுவே
தோற்றும்புறனுள்ளாய்ப்பலவாய்த்துவக்குமாகுமிவையனைத்து
மாற்றியகன்றுமனசிற்கிலதுசத்தாசாமானியமே. (௨௰)

உன்னுவெதிர்காண்பனவொன்றுமொழியாதியாமையுறப்பெ[illegible]த்
தன்னுற்றன்பாலிறக்குமெனிற்சத்தாசாமானியமதுவே
முன்னுமுடல்சேர்முத்தருடலிலதாமுத்தரிருவர்க்கு
மென்னுளினுஞ்சேர்பெருங்கண்ணீதிதன்பேர்துரியாதீதபதம். ()

அறிந்துசமாதியடைந்தோர்க்குமனுபூதியினின்றெழுந்தோர்க்குஞ்
செறிந்துதோன்றுமூடர்க்குத்தெரியாதாமிப்பெருங்கண்ணு
முறிந்துபிறவியறுஞ்சீவன்முத்தரானசித்தரெலாம்
பிறிந்திடார்விண்பயில்காற்றும்பெரிதாமண்ணிவிரதமும்போல். ()

மூவர்முதல்வானவரொன்னை முதனாதனை முதன்முனிவர்
மேவலுற்றதிப்பெருங்கண் வேற்றுப்பதமெல்லாகசெப்பித்
தோவவில்லாவிப்பதத்திலுத்தாலகனாற்றிருந்தனனா
லாவநீர்வதெவ்வளவவ்வளவுஞ்சகமாமகத்திடையே. (எங)

காலமநேகஞ்சென்றதற்பின் கந்தனாதனக்கிரியிற்
கோலமுழையிலம்முனிவன் குகைபைவிட்டுக்குரம்பையிலாச்
சீலமுத்தனாயிருப்பேன்நீர்வென்றென்றேசிந்தித்துச்
சாலநல்லதளிர்த்தவிசிற்றனைத்தபதுமாசனத்திருந்தான். (எச)

அனைநோக்காகநோக்கியிருந்தபானவாயிலடைத்ததனாற்
புனையொன்பதுவாயடைத்துளத்தாற்பொறியும்புலனுமொன்றாக்கி
திரையில்கடல்போற்றன்சித்தின்செறிவைப்பாவித்தாருயிரின்
விளைவைநிறுத்திவணங்காமன்மேனோக்கிபகந்தாத்தினனாய். (எரு)

நாவினடிச்சென்றுறச்செறியுண்ணாவினடியையுடையோனா
யோவின்முகக்காந்தியனாகியுள்ளிற்புறனின்மெய்கீழ்
வாவும்விடயத்தினிற்பாழின்மனமுங்கண்ணுமுறானாகி
வீவதானவெயிற்றினிளையெயிற்றினிளையைமேவானாய். (எசு)

அங்கத்துயிரின்மிருதிதகைந்ததனாறெனாய்தாயவிர்முகத்தோ
னங்கத்துருவுள்ளுணர்வுருவேயாகியெழலாற்புளகிப்போ
னங்கத்துருவுள்ளுணர்வுருவேயாகிப்பழகியறிவொன்று
யங்கப்பொழுதப்பழக்கத்தாலகத்துத்தமமாஞ்சுகமடைந்தான். ()

ஆனந்தத்தின்பெருக்கைநுகர்ந்ததனாற்சிற்சாமானியம்போய்த்
தானந்தமறவெலாம்பரிக்குஞ்சத்தாசாமானியமடைந்தான்
நீங்கதனிர்சமனாயிருந்தான்சிந்தாகுலமெல்லாந்தீர்ந்தான்
மாறாத்தருமாரத்தமிலாமகாநந்தத்தான்முகமலர்ந்தான். (எஅ)

அனகபதமுற்றுடல்புளகமாறிநெடுகாலிற்கரைந்து
மனமும்பிறப்பின்மயக்கமும்போய்மகாசத்துவமாயோவியம்போற்
கனமில்ககனத்துவாமதிபோற்கதியிற்சின்னாளினிற்சுவதி
யினனதொளியான்மரப்பசைகளிறப்புப்போலாயிறப்புற்றான். ()

உத்தாலகன்கதை முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-கOசுக.

சூரகுகதை.

இத்தவொழுங்காலுணர்வைபுணர்வினாலுணர்ந்துலகிலியங்காநி
ன்றே, யந்தமறும்பெரும்பதத்தேயாறுதியாற்காண்கின்றவனைத்து
மாளச், சந்ததஞ்சாதித்ததனைப்பெறுமளவுநால்குரவன்றனிநெஞ்
சாலே, பந்தமறுதத்துவத்தைவிசாரித்தேபெறவேண்டும்பதுமக்க
ண்ணாய். (௧)

மயலின்மைசாதனைநாற்பொருட்போதங்குருபமமாம்வழிகளாலே
யுயர்பதவிபெறலாகுமன்றியுணர்வொன்றினாலுறுதற்காமா
வியலுபதேசம்பெற்றுக்கூரியதாய்க்களங்கமிலாதிருக்குமாகில்
வியனுறுசாதனமுழுதுமிலதேனும்புத்தியினால்வீடுகூடும். (௨)

என்றானைமுகநோக்கிமிகத்தொழிலோடிருந்தேயுஞ்சமாதியெய்
தி, பொன்றானவுணர்வுற்றான்போலிடர்தீர்ந்தா னொருவனொருவ
ன்செய்கை, யின்றானாய்த்தனியிடத்திற்சமாதியடைந்தானிவரின்
மிக்கோனெவ, னென்றாகவருளுகெனவிராகவன்கேட்டலும்வசிட்
டனவில்வதானான். (௩)

ஆற்றுமதத்துவமன்றான்முக்குணத்தால்வருஞ்சகமென்றறிந்தோ
ர்க்குள்ளே, தோற்றுகின்றசித்தமேதத்தனையேசமாதியெனச்சொ
ல்லுமன்றே, யூற்றமறக்காண்பவற்றோடுறவுநமக்கிலதென்றேயுரத்
தத்தன்னோன், றேற்றசமாதியிலிருப்பனொருவனொருவன்றொழி
லோடிருப்பனன்றே. (௪)

இவ்விருவரிதயமுந்தன்னோன்றிருக்கில்வேற்றுமையோரிறையு
மில்லை, யவ்விதயசீதளமேயகத்தவப்பயனுமவ்வனுபூதி[illegible]கே, கவ்
வியிருப்போனுள்ளங்காரியத்தாலலையுமெனிற்கவலையாக்குஞ், செ
வ்வியவச்சமாதானமுன்மத்தகடனம்போற்சிறப்பின்றாகும். (௫)

வருத்தமிலாவுன்மத்தகடத்தினன்வாதனைமாய்ந்தமனத்தோனா
கிற், றிருத்தமுறவவன்கூடத்துத்தெளிவுற்றோன்சமாதிக்குத்திரனே
ராம், பெருத்ததொழிற்சேரறிஞர்பெரியவனுஞ்சேரறிஞர்பேதநா
டி, லொருத்தரொருத்தரைவிஞ்சாரிருவருமொத்தையமில்வீடுற்
றாரன்றே. (௬)

சாலவும்வாதனைபோகிவிம்மனஞ்செய்தொழில்புரிந்துந்தான்செ
ய்யாதாஞ், சிலமனகெடிதக்கிலருகிருந்தார்செப்புமொழிதெரியா
தாப்போற், றாலமனத்தொழில்விடினுஞ்செய்ததாம்வாதனையேது
ன்னுமாகிற், கோலவுடலசைவதினுங்கனவிலேவனாகின்றுங்குழி
வீழ்வார்போல். (௭)

தொலைவிருமுழிற்செய்யுமனத்தொழிவீக்கிலதுதானேசுகசமாதி
யலைவறுகைவல்லியமும்பரமாகந்தமுமென்றேயதிவாய்நெஞ்சி
னுலைவுதிரமெனுமிரண்டுமேத்தியானத்தியானமெனுமுபயத்துக்கு
நிலையுறுகாரணங்களாமாதலிவ்விம்மனமுளைக்குநேர்மைநீர்ப்பாய். ()

சிந்தனைவாதனையின்றித்திரமானமனத்தினையேதியானமென்ப,
ரந்தவுபசாந்தமுமக்கேவலத்தன்மையுமென்றுமதுவேயாகு, மிந்த
வுயர்பதப்பொருட்டுவாதனைசாலவுகோர்மையெய்தவேண்டுஞ், சந்
ததம்வாதனையில்லாமனத்தொழிவில்லாப்பதத்தைச்சாருமத்தால்.

நெருக்கமுறுவாசனையேநெஞ்சினதுதொழிற்றிரமாநீங்காத்துன்
பம், பெருக்கவிடுமாதலினல்வாதனையைமிககோர்மைபிறக்கச்செ
ய்வாய், வருக்கமுறுபலபொருளினுனெனும்பாவனைமனத்தான்மா
ற்றியெங்கு, மிருக்குதியங்ஙனமிருப்பாய்வரையிலேமனையிலேயெ
ங்கேயேனும். (௧௦)

இல்லுறைவோர்சமாதானவிதயத்தோரகங்காரமாமேதந்தீர்த்தோ
ர்,புல்லுமனையேகாந்தவனமாகுங்கடைவீதிபுக்கிக்கான்போர், செ
ல்லவரவுலாவியும்பற்றுமையினற்கடைவழிச்செல்லாதார்போல்வா
ர், நல்லறிவுநிறைந்தோர்க்குமப்படியேகாடொக்குநாடுதானே. ()

துயில்விட்டுச்சொலல்செலவுதொடர்ந்தாலுமகமுகமார்தொட
ர்பாலென்றும், பயின்மனையூர்காடெல்லாம்பழுவம்போற்காண்பவ
ரோபரமசிவர், செயிரிலாவகமுகத்தாலெல்லாமாகாசமாய்த்தீருஞ்
சித்த, முயிரனையாய்சிதளம்வந்துண்ணிறையிற்சிதளமாமுலகமெ
ல்லாம். (௧௨)

இதையமயலாலெரியிலுலகெலாங்காட்டெரிபோலெரிந்துதோன்
று, முதையமுறுமுயிர்க்கெல்லாமுள்ளிருப்பதேபுறத்துமுண்டாய்
கிற்குஞ், சுதைபயிலூர்புவிகால்விண்டொகுவனாகிணைநிநிக்குச்சு

ழ்ந்தவெல்லாம், புதைதருமுட்காரணதத்துவத்தின்பங்குகளாய் பிறத்தினிற்ப. (கங)

உள்ளுணர்வின்புறவோன்பொறிகளாற்கருமங்களுய்ப்போனு யுந், தன்னுசுகதுக்கவசஞ்சாராதோனநவரதஞ்சமாதியுற்றே,னுள் ளுகின்றதனைப்போலெவ்வுயிருமேனைப் பிறர்பொருள்களோடேயெ ன்ன,வெள்ளுடையத்தாலன்றியியல்பாலேகண்டானேயெல்லாங்கண் டோன். (கச)

இன்றிறவுவந்தாலுங்கற்பாந்தத்தெய்துகினுமிலங்குஞானி, கன் றியசேற்றுறுபொன்போற்களங்கமுறானெல்லாமாய்க்கண்ணுயாறி ப், பொன்றலடிமுடியின்றியொன்றாயின்பத் தளவாய்ப்பொலிதே சாகித், துன்றியகாட்சிகளில்லாக்குறியுடைத்தாமெனச்சுருதிசொ ல்லுமன்றே. (கரு)

எல்லாமென்றுணர்த்ததெலாமறிவித்தற்பொருட்டேயாமிசையச் சொன்ன, சொல்லாலெவ்வினைன்றேயாதலினுலோமென்றுதுணி கவித்தை, நல்லாயிங்கிதற்குமுதனுளதோரிதிகாசநவிலக்கேட் பாய், புல்லாரொன்வேடர்குலச்சுரகுவப்பேரோன்சரிதைபுதுமைத் தன்றே. (கசு)

இமகிரியின்கோடானகைலைவரையினிலேமசடர்களென்று மமர்வரிவில்வேடருளரவர்க்கரசன்சுரகுவெனுமசையாவீரச் சமகிலையாற்கோமுறையாலருண்முனிவாலுலகநெறிசமைக்குநாளி னமதுவலியாலுலகைநலிகுதுமேலவர்சோகமெக்கேயன்றே. (கள)

அல்லாதுதண்டமுறையியற்றேமேலுயிர்காப்பற்றவத்தின்மீயு ம், பொல்லாதிவ்வரசென்றேயுசலாடுளத்தினனுய்ப்பட [illegible] நைந்தா ன், மல்லாரும்புயத்தவன்பான்மாண்டவியமுனிவரனும்வணங்கிப் போற்றி, நல்லாயுன்வரவினுன்மிகவாழ்ந்தேனல்லோனுடைப்ப ட்டேன். (கஅ)

தருமமுழுதையுமுணர்ந்தபகவனெடுங்காலந்தளர்வுதீர்ந்தா,மரு வினையேனையப்பாடறுத்தியாலேயம்போலரக்கையுண்டோ, விருநி லத்தென்கோற்கீழோரொன்கருணைமுனிவுகளாலின்பதுன்ப, மருவு கின்றகவலையைக்கண்டரியேற்றின்முன்கரிபோன்மறுகுகின்றேன்.

அருணன்வெயில்போலெங்குநிறைசமமென்மதியிலேயனுகுமா று, கருணையினுலுணர்த்தியெனுங்காவலத்குமாண்டவியன்கழற் கிற்பான், பொருவறுதன்விசாரத்தாலிமைப்போதின்மனவழுக்கு ப்போகாகிற்கும், வருசரற்காலத்தோன்றுமாத்திரத்துமூடுபனிமா ய்வதேபோல். (உ0)

யானிச்சகமெங்ஙன்பிறப்பிறப்பெங்ஙனமென்றேயிதயத்துள்ளே
யானுமலிப்படியேயாராயின்மகத்துவமேயடைதிசாலத்
தானுனசுபாவனுயிருக்துளகின்விசாரத்தாற்றனேசெஞ்ச
நீரோடும்படிதோன்றித்தன்னுருவிட்டிளைப்பாறித்துன்பநீங்கும். ()

வெம்புதல்போய்த்தண்ணென்றவுன்மனதுக்கிவ்வுலகின்வியாபா ரங்கள், செம்புகர்வேழத்தினுக்கான்குளப்படிபோற்றேன்றுமாதீ ரசெஞ்சுக், கம்புவியிற்றெழில்சிறிதேயாகினுநீத்திடவரிதாமாவின் பாதப், பைம்புனலுங்கிழக்கொழுகுக்கெல்லைகரைகாணுதபரவைய ன்றே. (உஉ)

எத்தனையெத்தனைநீத்தாயகிலத்தைப்பரஞ்சுடராய்நிக்குஞ் சோதி, யத்தனையத்தனைதோன்றுமெக்காண்மட்டனைத்தும்விடாய ங்காண்மட்டுங், தத்துவமாம்பொருளெய்தாச்சகலமும்போனுற்சே டக்த[illegible]ஞ்சித்தங், தொத்தறவேற்றுமையெல்லாம்போகாதேற்ச மமால[illegible]சோதிதோன்று. (உங)

[illegible]முறுபொருளொருமைதோன்றுதேற்றன்னைத்தான்பெறுவ தெங்கே, யாதனிறுற்றனைப்பெறுதற்பொருட்டாகவனைத்தினையும கற்றல்வேண்டு, மேதமறவனைத்தையும்விட்டாயென்னிற்சேடித்த திறவா[illegible]விடா, மேதகையபதமதுவாஞ்சாருவெனும்பெயர்கீர்த்தி வேட[illegible]வக்தே. (உச)

வேறு.

சக[illegible]ணகாரியபரம்பரைத்தன்மையாஞ்சகமேனி
மிக[illegible]ர்ந்தவத்துவின்மலவாதனைமனத்தினைமிகநீக்கித்
தி[illegible]ங்கமாமறையுமேல்விடுதியேற்நீதறுகலனுண்டாம்
புகழ்சாரநிபவென்றுதன்னிடமுறப்போயினன்றவப்பாலன். (உரு)

முனியகன்றபின்னெயினர்கோன்றனியிடமுந்திகன்மதியாலே
யனிசநாளென்பதாரொனநாடினனடிமுதன்முடியீருக்

தனியுடம்பைநானென்பதுபுதுமையாஞ்சடவுடல்காண்டேகனுன்
றுனிசெயிவ்வுடலசேதனந்தசைமுதற்றுன்னுமாதலினன்றே. ()

கரணமீரைந்துமன்னியஞ்சடமெனுங்கணக்கினுனென்றித்
திரளெனக்கிலவுடன்முதனலன்சேடமேதெனநோக்கில்
விரவுசிவனேசேடமாமின்னதும்வேறென்றூற்றெரிகின்ற
துரவிதானவேறென்றினுற்றெரியுமீதுயர்ந்தத்துவமாகா. (௨௭)

தெரிவதாகியவிதனையுமகற்றுவன்றெரிபொருணுனுமோ
பெரிதுசேடமாய்விகற்பமற்றமலமாம்பேரறிவியானுகு
மரியயன்சிவனிந்திரனக்கனுதியாமிடந்தோறுஞ் [ம்·
சரிகொண்முத்தினுண்ணூலெனநிற்குமாற்றென்றுமிவ்வுயர்போ[illegible]

பகவனுகுமிவ்வாத்துமதத்துவம்பரமமாஞ்சிற்சத்தி
சகிகழ்ச்சியாகோயின்றிவெருவுறுந்தனிவடிவுடைத்தாகிக்
கருப்புமுற்றையுமிழுங்கியெப்பொருளினுங்கலந்துநுண்ணியதாகி
மிகுமபர்விபாவங்களற்றயனுறைவிடளவுளதாகி. (௨௯)

சத்தியாவுக்குமுறைவிடமாமிதுதனித்தனிச்சத்தாகிப்
பத்தியாகியிச்சகத்தினிற்காண்பனயாவையும்பலவாகச்
சித்தசைந்துளவிசாலமாமல்லதுசிறிதும்வேறிலதாகுந்
தொத்துபற்றின்றிக்காண்பதற்றெழுபவந்தொடர்மயக்கமுற்றே.

சுழுத்தியிற்றிரமுற்றவன்றெழிலெனத்துகளறுசமனுகி
யழுத்தமாகியவாத்துமதத்துவத்தமர்ந்தனனெனத்தீர்ந்து
விழுத்தகும்பதமெய்தினன்விவேகத்தின்மெய்மைநிச்சயத்தாலே
வழுத்தருந்தவக்கவுசிகன்விப்பிரமரபினையடைந்தென்ன. (௩௧)

வரகுணங்களாமனைத்துமிற்றுயில்பவன்மனத்தொழினீ[illegible]
சரகுவென்பவனசைவறுசிகையினுற்றுலங்குறுசுடரொத்[illegible]
விரவுநல்லருளருளின்மைவிருப்பொடுவெறுப்புமச்சரந்தொ[illegible]ழ்
பாவுநன்மதிமூடமென்றினையவும்பயில்வறநிகழ்வுற்றுன். (௩௨)

வேறு.

ஒன்றுயுணர்ந்தசுரகுப்பெயருத்தமற்கும்
பன்னுதனெனும்பெயர்ப்பார்த்திபமாமுனிக்கு

நன்றானவன்பால்வருநன்மையந்துகேட்பாய்
குன்றூர்புயத்தாயெனமாதவன்கூறலுற்றான். (௩௩)

பாரக்கர்குலப்பரிசுப்பெயர்பாரின்வேந்தாம்
வீரக்கழலோன்சூரகுப்பெயர்வேந்தனன்ப
னீரைக்கனமாரிமறுத்தவிவிட்டோருந்துஞசக்
கோரக்கனன்மண்டுதல்கண்டுருலேந்துகொந்தான். (௩௪)

இன்னுதனகாடுவிட்டேகிவனத்திலெய்தி
யன்னாதரம்போய்த்தவஞ்செய்தவிழ்பன்னமுணுய்ப்
பன்னுதகாமம்படைத்துத்தவப்பான்மையாலே
நன்னுதலும்பெற்றனனற்றவமொப்பதுண்டோ. (௩௫)

ஒருமூவுலகென்னுமடத்தொருமித்திருந்தான்
பொருண்மேவுகின்றசூரகுப்பெயர்பூபன்றன்பால்
வருவானெதிர்ந்தோன்றலுமற்றவனன்போடெய்தி
யிருவோருமன்புற்றிருந்தின்னனபேசலுற்றார். (௩௬)

கிளையிற்பொழுதெய்தலினிங்கருமின்பமுற்று
[illegible]லையற்றதென்றசூரகுப்பெயர்வேந்தைநோக்கி
யு[illegible]யுற்றுமாண்டவ்வியனேதியஞானமொப்பத்
[illegible]யுக்குமெய்ம்மைப்பதஞ்சார்ந்தனனியானுமென்னு. ()

வேறு.

மி[illegible]த்தெளிந்துகெம்பீரமாய்ச்சமமதாம்விழியா
[illegible]த்துறுத்தொழின்மன்னவவியற்றுதிகொல்லோ
ப[illegible]த்தகாலத்தையறிவுறுகினதுபாவனைதான்
[illegible]த்தவாதியும்வியாதியுந்தொடர்கிலேகொல்லோ. (௩௭)

[illegible]யும்போதினிதாகியபோகத்திலழுந்தா
[illegible]டகிலாய்கொலோசங்கற்பமற்றினைப்பாதித்
[illegible]டயில்சாந்தமாய்முத்தியாய்ச்சலனமொன்றில்லா
நடையின்றுயர்சமாதியைநண்ணினைகொல்லோ. (௩௮)

வெறிதிருக்கினுந்தொழில்வினைமேவினும்விடாம
லறிஞனென்றுதான்சமாதிவிட்டகன்றவனுக்கு

செறிபுஞானஞ்சேர்மனத்தினர்சகத்தொழில்செயினும்
பிறிவிறத்துவசிட்டராய்ச்சமாதியிற்பெயரார். (சo)

பிரமவஞ்சலியுடன்பதுமாதனம்பெறினும்
விரவசாந்தர்கள்சமாதியின்மேவலராசைத்
திரணபாவகனுகியசிற்றுணர்வொன்றே
வரசமாதியாம்வெறிதிருக்குமீஃதன்றுவள்ளால். (சக)

ஒருமையாயென்றுமனமிறந்துண்மையையுணரில்
வரசமாதியாஞ்சொல்லினர்மனத்தினினிறைந்தோர்
மருளின்மெய்ம்மையோர்மதிதம்மைமறக்கிலாசிறிதுந்
தருந்தொழிற்றிறமறக்கிலாக்காலமேசமமாம். ([illegible])

நெறிகொள்காற்றுத்தன்கதியினைமறப்பிலாநெறிபோ
லறிஞர்புந்திவேறறிவதில்லறிவையேயயரார்
பிறிவிற்புந்தியிலொருமையோர்சமத்துவப்பெரியோர்
செறிதொழிற்பிறிவகற்றினேர்தற்பதம்பெற்ளுர். (சங)

ஆதலாற்பன்மையொருமையாமுடற்றொழிலனைத்திற்
போதுசெய்கிலாவுத்தமவாக்கினுற்பொலிந்த
சேதனத்தவரெங்குளர்சித்திரமாகப்
பேதமற்றறிவதிந்தனைதற்பதம்பெற்ளுய். (சச)

உள்ளுறக்குளிர்ந்தனையுவாமதியெனவுள்ளத்
துள்ளகங்கரத்துயரறத்துரிசறநிறைந்தாய்
தள்ளலாசிலேபெற்றெங்கும்விளங்குதிதானே
தெள்ளியோயென்றபரிகற்குச்சுரகுமேற்செப்பும். (சரு)

பரந்தசொற்களாற்பயனென்கொல்பயனெலாம்பராதி
கிரந்தாஞ்சமமாய்மனந்தன்னுளேகிகழ்ந்து
சுரந்தவின்பமாய்க்கரிலாவொருவிழிதோன்றித்
திரந்தனிற்றெரிகின்றதாலென்றனன்றெளிந்தோன். (சசு)

சுரகுகதை முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ககஙஎ.

———

பாசவிபாசர்கதை.

இத்திறஞ்சுரகுபரிகனென்றிசைத்தவிருவருஞ்சகத்தொழு[illegible]கெ
ண்ணிப், பத்திசெய்தொருவர்க்கொருவர்பூசித்துப்பரிந்த[illegible]பணி
தலைநின்று, ரத்தியாத்துமமேகித்தமும்வடிவாயகமுகமாய்மகிழ்வெ
ய்திச், சித்தினைவிடாமலனுப[illegible]ப்பவர்க்குச்சிறிதுமோராகுலஞ்சே
ரா. (௧)

ஆசைவன்பாசத்திரளினற்கட்டுண்டரும்பிணியிக்கடிக்கணுங்கி
[illegible]சுறுபோகக்கந்தைகளான்மொத்துண்டிச்சைமுட்கோலினலுலைந்
[illegible]கருமச்சேற்றிலேயழுந்திக்கடுஞ்சகக்காட்டிலேசுழன்று [அ
வி[illegible]மாமோகத்தளிர்கிழற்றாயிலும்வீரனேசிவனுமெருது. (௨)

[illegible]வுறுதுன்பப்பெருஞ்சுமைசுமந்துமீட்சிபோக்கிலையுடற்புண்ணு
யிவீழ்ந்துழிறவிக்குழியில்வீழ்சிவவெருத்தினையிக்குழிநின்று [தே
மோவலின்முயல்வாலெடுப்பதேவலியாமுயர்ந்தஞானிகளுறவுள
ளுவிகர்த்தாவாய்தருவபோலூககல்குவர்பவக்கடல்கடக்க. (௩)

எவ்வ[illegible]த்திலேகல்லஞானிகளாமீர்ங்கனிமலர்குளிர்சோலை
யவ்விட[illegible]கானன்மேடதாமாங்கேயமர்பவரறிவிலாரன்றே
கவ்[illegible]ய[illegible]செல்வகட்புநால்சுற்றங்கருமமாதிகளெலாமுதவாச்
செ[illegible]மனமேயுதவுறல்வேண்டுஞ்சிவனைச்செல்கதியேற்ற. (௪)

நெறியுற[illegible]டாமலுடனுறைநட்பாநெஞ்சமாத்திரத்தினைக்கூடிச்
சிறிது[illegible]டுதலுஞ்சிவனுய்வுறுமாற்சிங்கியாமிந்தவூனுடலை
முறிந்[illegible]ட்டமோட்டினோராகமுற்றுறுகருத்தினுளேக்கி [வை.
யறிவிலிவ்வுளவாலறிந்துசேர்ந்திடலாமண்டருமிறைஞ்சுபோறி

நிறைபெருங்கடலொத்துறையெலாங்கடந்துநிகரறப்பற்றறவெறி
தாய்க், குறைவில்சிற்சுடரின்கொழுந்துடன்கூடிக்கோதறவசைவ
றக்குலாவு, மறைவறுதுரியவிழிவெளிப்படுமேன்மற்றதனுடனதுசி
கரா, முறைமையிற்றுய்[illegible]வோர்க்கண்ணிதாவுவமைமொழியலாய்
த்தோன்றிடுமன்றே. (௬)

ஆனவவ்வவத்தைவடிவெலாம்பரிக்குமம்பரம்போலகன்றனதா,மீ
னநெஞ்சுடன்சேரகங்காமிறந்தாலெப்பொருளிடத்தினுமிருக்கு,

தினமில்பரமாநந்தமாய்த்தோன்றுந் திகழ்பரமாத்துமவடிவாந், தா
னனிமுயலிற் கிடைத்திடுக் துயில்வோர் தன்மைபோற் றம்மினுடுவ
தன். (எ)

உணர்ந்தளுக்கெட்டாதுளத்தனுபவிக்கிலுறுவதாமுறைத்தவத்துரி
யங், கரைந்றுமிவைகண்முழுதுமப்பொருளாங்கனபரிணமியாமு
ள்ளம்,வரைவறவொடுங்கிலுட்புறமெங்குமன்னியசராசரவடிவாம்,
புரையறுதேவதேவனும்பரமப்பொருளனுபவப்படுந்தானே. (அ)

அதற்பின்விடயவாதனைகளறுவதாகுமதற்பின்னர்
விதப்பிலாதபொருளினுடைவிளக்கமாகுமதற்பின்னர்
சுதப்பண்பில்லாச்சமத்துவத்தாற்சொரூபந்தன்னிற்பரிணம
மிதத்திலுளதாமுயர்ந்தோர்க்குமெண்ணவொண்ணுவடிவிதுவே. ()

மனத்தைமனத்தான்மாய்வித்துமாசில்பொருளுணுக்காரோமேலோர்
தினத்துறுமலின்றுயர்மாயாச்சித்தமிறக்கிற்செறிசுகத்தார்
கனத்தவுணர்வின்மதிகிழுங்கழறுமிதற்கோரிதிகாச
மினத்திவினியாய்கேட்டியெனவிசைத்தான்வசிட்டனிராமனுக்கே.

சையமென்னுநெடுங்கிரிமேற்றவவத்திரிமாமுனியுறைய
ஞப்பவதன்பாலிருமுனிவர்சூழலொன்றினுறைகிற்போர்
மெய்யாகுமவ்விருவர்க்கிருவர்பிறந்தார்வியன்புதல்வர்
செய்யவிபாசன்பாசனெனச்செப்பும்பெயரோர்செறிகண்ணோர். ()

ஒழுங்காலிருத்திபெற்றிருந்தோரொன்றேயிரண்டாயினவென்ன
வழுங்காவுளத்தோரவர்தந்தையன்னையென்போருயிரிறப்ப
விழுங்காரின்றபொருமலொடுமேற்செய்பிதாக்கள்விதிகண்முடித்
தெழுங்காதலினுணெந்திரங்கியிருபாலகன்மாரிருவருமே. (கஉ)

அளவில்காலம்வனத்துறைந்தாரரியதவத்தாலுடல்வாட்டிக்
கிளருமாசைவிட்டகன்றார்கிட்டப்பெற்றார்கேண்மையினு
ளுளமுங்கண்ணுங்களிப்பெய்தியுயர்ந்தபாசனுரைசெய்வான்
வளருமுலகினல்லுறவேமன்னுமுயிர்போல்வந்தனையால். (கந)

இதுநீள்காலமெங்குறைந்தாயிகயவிடர்தீர்ந்தனைகொல்லோ
பொதுவாயுனையேயிந்தனையோபோதவிஞ்சைபவித்தனவோ

சதுராகலனுண்டாயினேயோசாற்றுமென்றமொழிகேட்டு
முதுவாய்மையினுற்பாசனிவைமொழிந்தான்விபாசன்முகநோக்கி
உயிர்போலுறவேவிதிவயத்தாலுன்னைக்கண்டேனுளங்குளிர்ந்த
செயிர்சேர்பிறப்பிலுழல்வேற்குச்சிறந்தகலனுந்திறனெங்கே [ன்
பயில்வதறி தறிவளவும்பாயுமுள்ளங்கெடாதளவும்
வெயில்வெம்பவநீங்காதளவுமிக்கநன்மைத்திறமெங்கே. (கரு)

மனத்தின்மூளைக்குமாசையெலாம்வடித்தகுடாரத்தான்மரம்போற்
கனத்தவேரோடறுமளவுங்கண்ணுஞானம்பெறுமளவு
மனத்தபேதம்போய்ச்சமமாமளவும்போதமுறுமளவுஞ்
[illegible]சளித்துமரிக்குந்துயரல்லாற்சிறந்தநன்மைத்திறமெங்கே. (கசு)

மடைமைநோய்க்குமாமருந்தாய்வருமாத்துமதத்துவப்பேற்றை
[illegible]கின்றவர்க்குவன்பிறப்பாம்விடுசிமேன்மேல்வந்திடுமோ
[illegible]ன்பத்தினிடைப்பட்டுமிறப்புப்பிறப்பில்விழ்ந்தலைந்து
தடமா[illegible]லுழலுயிர்கள்சருகினுலர்வரென்றிசைத்தான். (கஎ)

பாசவிபாசர்கதை முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-ககடுச.

வீதகவ்வியன்கதை.

ஐ[illegible]ணைமேகன்மைவினுத்தம்மிற்றுமியம்பியுறையிருவருக்கு, முன்னி[illegible]நற்காலத்தான்முத்திதருமெய்ஞ்ஞானமுந்திற்றன்றே,யன்ன[illegible]னுலுரைக்கின்றேன்வெம்பவத்தைஞானத்தாலன்றிமாய்க்கப், பின்னையொருநெறியில்லைப்பாசத்தாற்பிணிப்புண்டபிணிநெஞ்சுக்கே. (க)

பற்றிலதாய்நின்மலமா மனம்விவகாரம்பயின்றும்பந்தமேவாப்,பற்றுளநெஞ்சளவிறவம்ப[illegible]டத்தாலும்பந்தமேபயிலுமுள்ளிற், பற்றிலதாயினியதொழில்பயில்[illegible]வன்புறத்தொழில்கள்பண்ணினும்,பற்றறப்பண்ணுவிடினும்ப[illegible]னுவோன்புசிப்போனும்பான்மைமேவா,

என்னலுமேபற்றுவதே[illegible]ன்மையெப்பற்றுலெய்தும்பந்தம், அன்னரும்விடேப்பற்றுலெய்த[illegible] தொடர்பற்றைத் துடைக்குமாறென், பன்னுகெனுமிராமனுக்குமுனிபகர்வானுடலுயிரைப்பகுப்ப

பதோன்று, முன்னுகிலா துடலினைகம்புதல்பற்றுமதனுலேயுளதாம்
பந்தம். (௩)

ஈதனைத்துஞ்சொரூபமேயானிங்கெத்தையிச்சிப்பேனெனைதயிக
ம்[illegible]னெனல்பற்றின்மை, மாதுயர்தீரிதுசிவன்முத்தர்மெய்யின்ம
ன்னும[illegible]யானில்லைப்பிறருமில்லை,மேதகுமின்பங்களெலாமேவின்
மேவமேவி[illegible]தேன்மேவாதாயிடுகவென்றே, யோதியவாறுள்ளேபற்
றின்மையுண்டேலுயர்விட்டுக்கிது[illegible]றியென்றுணர்தியன்றே. (௪)

கருமமிலாமையைவிரும்பார்கரும[illegible]பற்றூர்கருதுபலன்விட்டிரா
ண்டுங்கண்டாலொப்போர், மருவியபற்றிலாதவரொன்றுரைப்பர்மே
லோர்வருகருமபலாதிகளைக்கருமத்தாலே, யொருவலறமனத்தா
லேநிபுணமாகவொருவுதல்பற்றின்மையெனவுணர்தியித்தாற், பெ
ருகவளர் தொழிலனைத்துங் குற்றந்தீர்த்துபெறலரிய முத்தி[illegible]
பேறுகலகும். ([illegible])

புழுமுதலரம்பல்பிறப்பிற்றோன்றிப்பல்காற்பூதமெலாங்க[illegible]றி
ணைபோற்பேர்ன்றுந்தன்மை, பழுதுதரும்பற்றினதுபட[illegible]சியாகு
ம்பற்றுத்தானிருவகையாமவற்றினென்று, கழுவுப[illegible]ளிலியொன்று
வணங்கற்பாற்றாகவின்றபயனிலிமூடர்கண்ணற்[illegible]ம், வ[illegible]
தத்துவமுணர்ந்தோர்க்குடைமையாகவணங்கற்பாற்[illegible]மரு
வுந்தானே. (௬)

ஆத்துமதத்துவவுணர்வால்விவேகந்தன்னுலடைய[illegible]ம
பின்பனுகாச்சென்ம, மேற்றமுளதொழுதகைய[illegible]தன்
றிப்பயனிலியாம்பற்றேதென்னி, னூற்றமுதமுணர[illegible]டலமு
ன்னுமுறுபொருளினுலுண்டாமுலகந்தன்னிற், றே[illegible]றவி
னீண்டுள்ளதாக்குத்தோன்றலேயிவையிரண்டுந்துணிந்து[illegible]ளே.

வளையாழிகைதரித்தசெங்கண்மேனிவண[illegible]கப்பாற்றும்பற்றின்வ
சத்தினுலே, யிளையாமல்விவிதமாந்தொழி[illegible]லினுலேயெவ்வுலகுநன்
றாகவிரங்கிக்காக்கு,முளையாதவிஞ்ஞானசித்திசேர்சித்தருலகபால
காரதியுரைத்தவாறே, விளையாடிவணங்க[illegible]பாற்றென்னும்பற்றுல்
விரிந்தசகமூர்த்தத்தின்மேவிநின்றார். (௮)

கேடானகல்லதெனுநினைவினு[illegible]ளர்போகவசத்தாலேகிட்டி
நெஞ்சம், விடாதபயனிலியாம்பற்றினுலேவெறும்பிணத்துக்கழுகு

போல்வீழுமன்றே, பாடானபயனிவியாம்பற்றுளோர்க்குப்பன்னா
கங்களும்விடாய்ப்பண்ணப்பட்ட,வீடானபயனிலிப்பற்றுள்ளோரொ
ன்னுமிளவிறகானரகவெரியெரியுமன்றே. (கூ)

விச்சையெனும்விழிகன்றுய்விளங்கப்பட்டுவெம்[illegible]யத்தின்
மீட்சியெய்தி,யிச்சையுறுபற்றென்பதெங்குமில்லாவியன்மனத்தோ
டிருப்பவரேயிறவாமுத்தர், [illegible]சயமாயெப்போதுமெவற்றின்பாலு
நிற்பவனையனைத்துட னுநிற்[illegible]னுகி, யெச்செயலுஞ்செய்வோரு
ஞ்சீவன்முத்தனியற்றியவிம்மனத்தின்றனியல்புகேளாய். (கo)

தொழிலினினைவிற்பொருளில்விண்ணின்மேல்கீழ்சூழ்திசையிற
புறப்போகத்தொகுதிதம்மி, விழிதருமைம்பொறிகடையிலுள்ளினி
ற்றமின்னுயிரிற்சென்னியிலாநந்திறுவி, லழியும்விழிகளின்மூக்
[illegible]புருவக்தன்னிலகங்காரத்திற்சிவனிலுள்ளாகாசத்தில், விழிகன
விற[illegible]பனத்திற் சுழுத்திதன்னில்வெள்ளை முதன்றமைக்தின்வி
யன்வண்ண[illegible]தில். (கக)

[illegible]னத்திற்[illegible]லடிகடுவிலிற்றிற்சமீபத்திற்றூரத்திற்சரீராங்க
ய்பேதாய், மண்டுகின்றவாநந்தநிறைந்தனைபோற்பொலிகின்றாய்மா
சிலாளே. (௧௯)

போகத்துக்கிரங்காதுசாந்தமாயூற்றமாய்ப்பொலிவுண்டாகி
யேகத்திற்சமமாய்க்கெம்பீரமாயுளதுமனதிருப்பதென்னே
தேகத்திற்பெறுமழகுஞ்சித்தத்திற்பேரழகுஞ்சேர்ந்ததெங்ஙு
னீகற்பாலுரையென்னக்காதலற்குச்சூடாலைகிளத்தலுற்றாள். ()

கிஞ்சிலுமின்றிக்கிஞ்சில்வடிவானவிதுவிட்டுக்கிஞ்சிலன்றி [ன்
விஞ்சுமொருவடிவுற்றேனதனாலேசீருடைத்தாய்விளங்காநின்றே
கிஞ்சிலேகிஞ்சிலெனச்சுபாவநிலையாயுதயங்கெடுதியின்றாய் [ன்.
விஞ்சுவதேததையறிந்தேனதனாலேசீருடைத்தாய்விளங்காநின்றே

அருந்தாமற்றாரிதாம்போகங்களருந்தினபோலமைந்தின்புற்று,
வருந்தாமல் விருப்புவெறுப் பிலவதனாற் சீருடைத்தாய் வாழுகின்
றேன், பெருங்கோபம்பற்றிரண்டுஞ்சிறுதொழிற்பாங்கியரறிவாம்
பெரியபெண்கள், மருங்கேசாத்திரநோக்கிற்களிக்கின்றேனத
னாற்சீர்வாழ்வுபெற்றேன். (௨௨)

கிஞ்சின்மாத்திரமுருவிலாதவுலகுக்கெல்லாங்கிளர்தேவாகி,யெ
ஞ்சலிலனென்றென்பா லின்புறுவனதனாற்சீரெழில்பெற்றேனான்,
புஞ்சமுறுமிவையெல்லாம் விட்டனன்வேறேபொய்யுமெய்யுமாகி,
விஞ்சுமது முற்றுமடைந் தேனதனாற் சீருடைத்தாய் விளங்காநின்
றேன். (௨௩)

கண்ணாற்பல்காரணத்தாற்கருத்தாலிங்கெதுகாண்கேனதுதான்
கிஞ்சி, னண்ணுமலதற்பிறிதாய்க்கிஞ்சிலாதொன்றுள்ளேகன்றாய
க்காண்கேன், பண்ணுனசிறிதெனச்சூடாலைசொன்னவற்றைப்பற்
றிப்பாரா,னெண்ணுமனைத்தவளைச்சிகித்துவசன்[illegible]றான்கிற
யியம்பலுற்றான். (௨௪)

வஞ்சியிடையாயிசையாததுசொன்னாய்சிறியர்போன்மருளா
நின்றாய், விஞ்சுதாரதிபர்வாழ்வின்மிளிர்கின்றாயுன்னிலேமிளிரா
நிற்பாய், கிஞ்சிலேவிட்டுக்கிஞ்சிலாதடைந்தேர்முன்னிலையைக்கி
ட்டாரென்னிற், பஞ்சிலடியாயவர்தாமுன்னிலையாய்விளங்குவதெ
ப்படியேசொல்வாய். (௨௫)

அருந்தலுறாப்போகத்தாலகமகிழ்ந்தேனென்றதனையகற்றுகிற்
பார், பொருந்துமிடியினர்போனிர்ப்பாக்கியராமவரெங்ஙன்போலி
வார்சொல்வாய், திருந்துறக்காண்பலவுகாணேம்வேறேகாண்கு
துமென்றுசெப்புகிற்பா, ரிருந்துரைக்குமிவ்வுரையைவிடாமலவர்
விளங்குவதெப்படியேசொல்வாய். (௨௬)

ஆதலாற்பேதையாயறிவிலியாயலைபவளாயநேகஞ்சொல்லாற்,
போதநீகளிக்கின்றாயெனவெடித்தகைத்தயலேபோனான்மன்னன்
மாதராளதற்கிரங்கித்தன்னறிவிலிளைப்பாறிமகிழானாகிப்
பேதமாயென்னுரையைமன்னனறிந்திலனென்றுபேசுற்றாளே. ()

பின்னருமன்னனுந்தானுந்தலைநாட்போற்பேதமறப்பெருநாள்
வாழ்ந்தார், தன்னுமமைவாபாசையொன்றுமிலாதிருந்துஞ்சூடா
லைதானே, யுன்னியுபராகாசந்தனினடக்கவியற்றுதுமென்றுறுபோ
கந்த, ளின்னலறவனைத்தையும்விட்டேகாந்தச்சுகாசனத்திலிருக்
கைசெய்தி. (௨௮)

பெரியபிராணனைநேரேமேனோக்கப்பழகினாள்பெருநாளென்னக்
கரியமுகில்கேட்டருளிமிகவருந்திநெடுங்காலங்கையாண்டக்கா

லரியவிசும்பினினடத்தன்முதலானசித்தியெலாமளிக்கத்தக்க [ன்.
வுரியவழியெதுசொல்வாயெனக்கேட்பவசிட்டமுனியுரைப்பதானு

சீமானுஞ்சிகித்துவசன்கதைக்கிடையேவினவுதலாற்செப்புகின்
றேன், கோமானேபிராணுதிபவனத்தின்பரிசயத்தின்கொள்கை
யாகிச், சாமாதில்லாப்பயன்செய்நெறிகேட்பாய்வாதனைகள்சற்று
மின்றிப், போமாறுசேப்துளத்திலிதற்குடுத்தவாதனையேபொருந்
திநின்று. (கூo)

ஒதமுதலாந்துவாரத்தின்சிறுமையாற்றானமுதற்குறிக்குஞ்செ
ய்கை, விதவொழுங்காற்போசனத்தாற்சுகாதனத்தாற்சுத்தத்தா
ன்மிக்கநன்னூ, லுதவுபொருட்பாவனையாலதனுசாரத்தினலுயர்ந்
தோர்சார்வா, லிதனையொழிந்தனவெல்லாம்விடுத்தலாலடுத்தபி
ராணுயாமத்தால். (கூக)

கோவலோபாதியும்போகமும்விடுத்தலாற்சிலர்க்குக்குறித்தகாளி
லோவிலாப்பற்றுவிட்டொழிந்தகாட்சைகவசமாயுயிர்கடாமே
தேவரூபிகளாதலாற்றங்கள்குணமறிந்துசேர்ந்துளோருக்
கேவலாட்போனுலகையாள்விக்கும்விடளிக்குமெல்லாகல்கும். ()

ஆந்திரவேட்டனிகையென்றோர்தனிநாடிநாடிகணூறணுகிநிற்
கும், வாய்ந்தவிசைவீணையுடல்வட்டம்போனீர்ச்சுழிபோல்வட்ட
மேயா, மேய்ந்துளதானங்களெலாமெய்தலூறுமயனிடத்துமேறு
ம்பின்பாலும், போந்துளபல்லுயிரிடத்துமூடலேறுந்தோன்றியே
பொருந்திநிற்கும். (கூஙு)

சீதவருத்தத்தினற்றுயில்பாம்பினுடல்போற்சிக்கெனவளைந்தெ
ப், போதுமசைவுறுங்காற்றனிலைநிற்குங்கதலியின்மென்பூப்போ
லுள்ளு, மேதகுமெல்லியதாகுமதனூடேயோருசத்திவிசுத்தமாகி,
யேதமறுபரமமாய்ச்சத்திகட்கெல்லாம்வெற்றியெய்தநல்கும்(கூச)

முனிவுறுபெண்பாம்புபோன்மூச்செறியுமெய்போதுமுகமேலா
கு, மனிசமசைவுக்கேதுவாமிதயகோசத்தையடைந்தாரு மெ
னையவுமிங்கிதனிடையேகட்டுனனுங்குண்டலினியிதன்பேராகுந்,
தனைதலுறவசைகின்றபரிசவறிவின்கலையாற்சுத்தமாகும். (கூரு)

சிந்தனையாற்கலையாகுஞ்சேதனத்தாற்சித்தாகுஞ்சிவனத்தாற்
சந்தமுறுசிவனுமனனத்தான்மனமாகுஞ்சங்கற்பத்தா
லந்தமில்சங்கற்பமாம்போதத்தாற்புந்தியாமகங்காரத்தால்
வந்தவகங்காரமாமிவையபுரியட்டகப்பேர்மருவுந்தானே. (௩௬)

குண்டலினியெனுஞ்சிவசத்திமிகநல்லதாய்க்கூடிநிற்கு
மண்டபிராணனுபானவடிவமாயவிற்கீழ்மேல்வந்துபோகு [ஞந்
மிண்டறமேற்போகிலுமெல்லாமாய்ப்போமீளினுமெல்லாமாய்நீ
தண்டலிலாப்புமானுகிச்சாமேவும்பிராணனுமச்சத்திதானே. (௩௭)

தன்னிடத்தேயெப்படியும்போக்குவரத்தொழித்திந்தச்சத்திநிற்
கின்,மன்னுயிர்க்குநோய்வாராதுள்ளுறவேமாருதத்தைமறுத்தலா
லே, யென்னனுமேயாதிவியாதிகளிரண்டுந்தோன்றுதலுமிறத்தரு
ளு, நின்னருளாலுரையென்னவிராகவன்கேட்டலும்வசிட்டனிக
ழ்த்தலுற்றான். (௩௮)

அங்கத்தின்வருத்தத்தைநோயென்பர்வாதனையையாதியென்பர்
பங்கற்றஞானலயத்தோசிமூலத்தேடயிலுமாதி [ரூற்
பொங்குற்றஞானமிலாமையிற்பொறிகடமையடக்கப்போகாவாற்
றங்குற்றவிதயத்திற்சிறுமையறமால்கோபூந்தழைத்தலாலே(௩௯)

இதுபெற்றேமீதில்லையென்னுமவதானத்தாலிறுகுமோக
மதுமெத்தவுண்டாகமழைநாளிற்செறிபனிபோலாதிதன்னு
முதிரிச்சைவெளியாகிமூர்க்கபாவனைசாலமுற்றும்போதில் [டாம்.
விதியுற்றதொழிலவிதித்தீத்தொழில்கள்செய்தலினுல்வியாதியுண்

பொல்லாதவுணவினுற்பொல்லாததேசத்திற்போகைதன்னுற்,
பொல்லாதகாலவிவகாரத்தாற்செய்தொழில்கள்புரிபொல்லாப்பா
ற், பொல்லாதகயவருறுகூட்டத்தாற்பொல்லாதபொருளெண்ண
த்தாற், பொல்லாதவிச்சையாற்பொல்லாதவெண்ணிக்கைபொரு
ந்தறன்னுல். (௪௧)

நாடிகளின்வெளிகளுக்கள்சிறுகுதலாற்பெருகுதலானற்பிரா
ண, டிமிகச்சிதறலுமேயுடருனுஞ்சிதறுதலையுமுற்றக்காற்,
கேடிதென முன்னுரைத்தகுற்றங்கள் காரணமாய்க்கிளர்நோயுண்
டா,நீடியகோடையுமழையுநதிக்குறைநிறைவுகளைநேருமாபோல்

தொல்லையதாகினுமிங்குள்ளனவெனினுஞ்சுபமெனினுமசுபமென
மெல்லையறமிகுந்ததேததுதன்பாலப்படியேயிழுத்துக்கொள்ளும்
புல்லுறவிவ்வலையாகியாதிவியாதிகளைத் தூத்துண்டாஞ் [பாய்.
சொல்லியவிவ்வாதிகடாமிருவகையாயிறக்குநெறிசொல்லக்கேட்

மேவியசாமானியமுஞ்சாரமுமென்றிருவகையாமாதியென்பரி
தாவுறுசாமானியந்தானுடற்பிணியாஞ்சாரந்தான்சகனமாகும், தே
[illegible]ழிவ் வுடற்பிணிதான் றனக்கடுத்த பொருட் பேற்றாற் கெட்டுப்
போ[illegible]ம். பாவனையாமாதிகளில்லாதாகிற்றேன்றுபிணிபறந்து
போமே. (சச)

சாரமெனும்பிறவிநோய்தத்துவஞானத்தன்றிச்சற்றும்போகா
தீரவிதுகயிறென்னும்போதத்தாலன்றியராச்சிலைதவதுண்டோ
பாரமுறுமாதியிற்றேன்றுப்பிணிமந்திரமருந்துபலநால்கற்ற [டா.
கூறதிவின்மருத்துவரென்றிவ்வகையாற்போமிதுநாங்கூறவேண்

என்றலுமேயாதியினின்றெவ்வகையுண்டாம்பிணிமற்றெவையா
ன்மாளுங், குன்றனையாயுரையென்னவிராமன்கேட்டலும்வசிட்ட
ன்கூறுகிற்பா, வின்றமனங்கலங்குதலுமுடல்கலங்குமுடல்கலங்
கினேர்வந்தற்ற,தொன்றுமதிபாமனோர்வழிவிலங்கித்திவழியிலோ
டாகிற்கும். (சசா)

பிறையம்புபடுமான்போன்றுறிந்தோடுங்கலக்கத்தாற்பிராணவாயு
நிறைகின்றசமமின்றிப்பரந்தோடுநாடிகளுக்கிலையினில்லா
வறைகின்றகுசீரணமாபசீரணமாயதிசீர்ணமாகியன்ன
முறைகின்றவுடலுக்குக்கூற்றமாநாடியுயிருலைவினுலே. (சஎ)

உடலுள்ளேவிரோதத்தாலுறைகின்றவன்னம்வேற்றுருவமாகி,
விடலுறுநோயாகுமிவ்வகையாலாதியினல்வியாதியுண்டாக், தொ
டர்வுறுவாதிநசித்திடுமோகில்வியாதிகளுந்துஞ்சிப்போகும், கடவ
தாமந்திரத்தால்வியாதிகளிங்கிடுநெறியைக்கழறக்கேட்பாய். ()

எப்படியேகடுக்காய்கள்விரோசனத்தைப்பண்ணுகின்றதியல்பினு
லே, யப்படியேபாவனையால்யரலவவாதிகள்காரியங்களாக்கு, மெ
ய்ப்படிபுண்ணியமாகிச்சுத்தமாங்கிரியையான் மேலோர்[illegible]ர்வாற்,
றப்பின் மனந் தெளிவெய்தும் புடம்வைத்த லானன்றுந் தமனியம்
போல். (சகூ)

சுத்தமுறமனந்தெளியிலுடலிலேயாகந் தந்தோன்றுமிற்கு
மெத்துமறியுதித்தக்காலுலகமெலாகன்றுகவிளங்கிடாதோ
சத்துவமாமனந்தெளியிற்பிராணவாயுவுமொழுங்கிற்சரித்துலாவு
முய்த்துள்வங்கமுநெறியிற்சிரணிக்குமதனுனேயொன்றுந்தோன்று

ஆதிவியாதிகளிரண்டுந்தோன்றியொடுங்கிடுநெறிகளறைந்தோமன்றே, யோதியகுண்டலினிதனதொழுங்கான்மூன்னுரைப்புற் யோகங்கேளாய், நிதில்புரியட்டகமென்றொருபெயர்கொள்வினுக்குத்திகழ்பிராண, வாதமெனும்பெயர்பெற்றகுண்டலினிமலைத் துக்குமலர்போனிற்கும். (௫௧)

புகல்வுறுகுண்டலிதன்னைப்பூரகத்தின்பரிசயத்தாற்பூர்ணமாக்கித்
திகழ்வுறநின்றுலன்றவடமேருகிகரானதிண்மையுண்டா
மிகவுடலந்தடிப்பெய்தும்பூரகத்தாற்பிராணனிறைவுற்றமெய்யைப்
பகரறிவுமேனேக்கிலொருக்காலேவிண்செல்லப்படரவிக்கும். ()

பாம்புபோல்விளைந்துதடிபோனிமிர்ந்துகுண்டலினிபடர்ந்துமேற்போந், தாம்புபோலுடல்பிணித்தநரம்பெல்லாந்தான்கவர்ந்துசரீரமெல்லாந், தேம்புறுவகைமேலேயெழுப்புவிக்குங்காற்றினுற்செறிந்தபைதான், றூம்புசூழ்நீரிடைமேலெழுந்துகினுமேற்கிளப்புந்தொடர்ச்சிபோல. (௫௩)

இத்திறனேமிகப்பழகுமியோகத்தாலியோகிகடாமெழுந்துவின்மேற், கொத்திகவர்தூண்டில்சேர்மீன்போலவுலாவுவர்குண்டலினியென்னுஞ், சத்தியதுபிரமகாடியிலோடிக்கபாலத்தின்றனிப்புறம்போ, யுய்த்துளமேலேவிரலோர்பன்னிரண்டினெல்லையினிலுறவதாகி. (௫௪)

நாடிகளெல்லாந்தகையுமிரேசகத்தாலொருமுகூர்த்தகண்ணிற்கி
னீடியவின்சரிப்பவரைக்காணலாம்விஞ்ஞானநேர்மையாலே
கூடுறதாரத்தோடம்புந்நிவிழியால்விண்ணினூன்றத்தோன்றும்
பீடுறுநற்பொருளுதவுஞ்சித்தர்கண்ங்களுவிலேயிறங்குமாபோல்()

பன்னிரண்டங்குலத்தின்முகத்தின்புறம்போயிரேசகத்தின்பழக்கத்தாலே, மன்னுயிர்தானெடிதுகிலேகிற்குமேல்வேற்றுடலைமருவுமென்னச், சொன்னமுனிவனைவள்ளல்குக்கவழிசெல்கைக்குத்தூல

மாய்வின், டன்னைநிறைகைக்குமனுத்துவந்தாலத்துவமுடற்குத்
தருமாறெங்ஙன். (௫௬)

அருள்வாயென்றலுமுனிவனுரைசெய்வானேகமாயறிவொன்
றேயா, யொருவாதசமமாகிச்சாந்தமாய்ச்சுத்தமாயொருபற்றில்
லாப், பொருளாய்நுண்மையின்மிகவுநுண்மையாய்ப்புவியன்றுய்ப்
[illegible]விசேராதாய், மருவாநின்றுளததுநன்சங்கற்பமுறத்தனைத்தா
ன்வி[illegible]கயாய்ச்செய்யும். (௫௭)

[illegible]பல[illegible]ஞ்சூழ்வுறச்சீவனும்பொய்யேசங்கற்பம்பயின்மயக்காற்,
கூலங்குஞ்சி[illegible]ன்சடமாயிவ்வுடல்காணும்பாலர்காணும்பேய்போற்,
குலவும்பல்லுயிர்களுமிவ்வகையேயெப்படியெத்தைக்குறிக்கின்று
ர்க, ளுலகின்கணப்படியேயதைக்காண்பார்நினைவின்கணூற்றத்
தாலே. (௫அ)

ஊற்றமுறுபாவனையின்பரிசயத்தான்மூடர்களுமொன்றையொன்
மாற்றிவிடமமுதாக்கியமுதத்தைநஞ்சாக்கிமருவாநிற்ப [றன்
சேற்றமுறுஞ்சத்தியபாவனையாலேயித்தேகந்தேகமான [போம்.
தோற்றியவித்தேகமீண்டசத்தியபாவனையால்வின்சொரூபமாய்ப்

அணிமாதிகுணப்பேற்றின்பாவனையூகங்களுமிவ்வடைவேயாகுந்
துணிவாலேயோகத்தின்சித்தியறிவார்க்கிதுதான்சுலபமாகுங்
குணியானவணிமாதிகுணச்செல்வமிகப்பழகுங்குறிப்பாற்பெற்று
மணியாழியுலகெல்லாங்கணத்தில்விளையாடினண்மறுவிலாதாள்.()

நாயகனைமிமை[illegible]போதுநீங்காதாணல்லமுதாஞானத்தன்னை
யாயவனுக்கநேகவுபாயத்தினலறிவித்துமனையமன்னன்
றாயறிவிளைப்பாறப்பெற்றிலன்மாயோகினியாஞ்சூடாலைக்கு
மேயகுணங்களுமறிந்தானில்லைப்பாலகர்விஞ்சைமேவாதாப்போல்

தன்னறிவிளைப்பாறவிலாமையினலவனுக்குத்தனதுயோக[டோ
நன்னிதியையுரைத்திலளாற்சூத்திரர்க்குயாகநெறிநவில்வாருண்
டென்னலுமேமகத்தானசித்தயோகினிவருந்தியயம்பவேயு
மன்னசிகித்துவசனறிவுற்றிலனூற்பிறரெங்ஙனறிவாரையா (௬உ)

ஒல்லும்வகையுரையென்னவிராகவன்கேட்டலும்வசிட்டனுத்த
ரிப்பா, னல்லவுபதேசந்தானம்பிக்கைமாத்திரத்தைநன்றாய்ச்செ

ய்த, லெல்லையிலாவறிவுக்குச் சுத்தமாமகனறிவே யேதுவென்று,
சொல்லுதலுமீண்டந்தமுனிதனக்குரகுநாதன்சொல்லுகிற்பான்.

மகனறிவேயேதுவெனிற்குருவசனமேதுவாய்வருவதெங்ஙன்,
மிகுமறிவுக்கெனக்கேட்பவசிட்டனதற்குரைசெய்வான்வித்தவெற்
பி, னகல்வனத்திலொருவேடன்பெருங்குடும்பியவனொருநாளடவி
தன்னிற், புகுநெறியிற்பலகறையொன்றினைக்கெடுத்துத்தேடினன்
புலம்பலோடும். (௬௪)

மூன்றுநாடேடியபின்முழுமதிநேர்மணியொன்றுமுன்னேகண்
டா, னென்றுபலகறைதேடவேழுலகும்பெறுமணியையெதிர்ந்தா
ன்வேடன், ஞான்றவுபதேசத்தாற்கல்வியான்ஞானமுறுமதுவே
போல, வூன்றுறவொன்றைக்கருதவொன்றுவெளிப்படுங்குருவினு
பதேசத்தால். (௬௫)

கலனுறுபேரறிவுக்குக்குருவசனங்காரணத்தைநண்ணுதேனும்,ப
லகறைநன்மணிக்கேதுவானுப்போலேதுவாய்ப்பலத்தைநல்குங்,கு
லவுசிகித்துவசன்றான்ஞானமிலாமையின்மோகங்கூடிச்சாலச், சு
லபமுறுதன்செல்வம்பெருங்கனவென்றெண்ணியேதுன்பமுற்றான்

அருந்தானம்பலகொடுத்தான்றவமிகச்செய்தான்றீர்த்தமனைத்
துந்தோய்ந்தான், வருந்தாமையவற்றாலும்பெற்றிலன்பேரிடரா
லேமனநொந்தோர்நா, ளிருந்தானேகாந்தத்தின்மடிமேலேசூடா
லையிருக்கச்செய்து, பெருந்தாபமுறுகின்றதுயரொல்லாமவளுக்கு
ப்பேசலுற்றான். (௬௭)

ஆண்டவரசினும்புசித்தசெல்வத்துமின்றுகாணாசையற்றே, னீ
ண்டவனம்புகயுந்தேன்றுக்கசுகமாபத்துநிதிகளெல்லா, மாண்ட
வனத்துறைவோரைத்துயர் செய்யாபுவி பொருட்டான்மயங்கவே
ண்டா, காண்டகுதங்கிளைநாசந்தோன்றுதநாட்டினும்வன்காடு
நன்றே. (௬௮)

பற்றின்றித்தனியிருக்குமனத்தைப்போற்பனிமதியும்பதுமத்தோ
னும், பொற்றிரள்சேரிந்திரனுஞ்சுகமடையாராதலிற்கான்போகு
மென்னுக், குற்றமெனவிலக்கலேகணவர்நயந்ததுவிலக்கார்குல
த்தின்மாதர், சிற்றிடையாயென்றுரைத்தமன்னனுக்குச்சூடாலை
செப்பலுற்றாள். (௬௯)

வசந்தகாண் மலர்விளங்குஞ்சரற்காலங்காய்விளங்குமாபுபோல,
விசைந்தகாட்செய்ததொழில்விளங்குமாற்சாயாலேயாக்கைகை
ந்தாற், பசைந்தமாலறவனமேபோகலாமிளமைகாட்பான்மையன்
று, மசைந்திடாதொழிகவெனச்சூடாலைசொல்லியதற்கரசன்சொ
ல்வான். (௭௦)

தடாதொழிவாயேகாந்தவனம்புகுந்தேசிற்பேனுன்சற்றுந்தாழே
ன், படாமுலைநீசிறுமையாலுடன்வருதற்காகாபோணைத்தாங்கி,
விடாதிருத்திநன்மனையிற்கணவரகன்றாற்குடும்பமெலிவுறுமற், கெ
டாதளித்தல்குலமகளிர்விரதமெனநீர்படிவான்கிளந்துபோனான்()

பகற்பொழுது சென்றதற்பின் சந்தியதிகள் பண்ணிப்பாவை
யோடுஞ், சுகித்தமளியெனநிலத்திற்றுயில்வுற்றானள்ளிரவிற்றுயி
லும்வஞ்சி, யகத்திருப்பமெல்லவெழுந்தவளதியாவகையேகியதிந்
தோர்க்கெல்லா,நகர்க்குளுலாவுதுமென்னுயாவரையுநிறுத்திப்போ
ய்நகரைநீத்தான். (௭௨)

சடமகலாப்பெருந்திருவேயுனைத்தொழுதேனில்லென்றுதன்னே
டேகி, யடவிபுகுந்தான்றினமோர்பன்னிரண்டிற்பலகிரியுமாறுநீங்
கிப், படர்சனங்கள்செலற்கரிதாப்மந்தரவெற்புக்கருகாம்பழுவம்
புக்கான், மடலவிழ்பங்கயவாவிமலர்ப்பொழில்சூழவ்விடத்தில்வ
சிப்பதானான். (௭௩)

சாலையமைத்தான்மூங்கிற்றண்டிழைத்தான்கமண்டலமுஞ்சமை
த்தானக்கு, மாலையுங்கந்தையுங்கனிகாயமைப்பனபாத்திரங்களு
மான்றோலுஞ்சேர்த்தான், மேலையுயர்தவந்தொடங்கிச்சந்தியம
முஞ்செபமும்விடிக்தசாமஞ், சோலைமலர்பறித்தலிரண்டாஞ்சாம
மிவ்வகையேதொழில்களாக்கி. (௭௪)

கடவுள்பூசனைமூன்றாஞ்சாமநாலாஞ்சாமங்கனிகாய்கொள்ளல்,
படரிரவெல்லாஞ் செபமாமிவ்வாறுதவம்புரிந்தான்பகர்ந்தவேந்த
ன்,மடவரலிங்கணாயிரவிற்கண்விழித்தாடன்னருகுமன்னனைக்காணு,
ளிடர்மருவிவாழ்வகன்றுவனம்புகுந்தானரசனெனவிரங்கிவாடி.()

பதியொழிந்துகதியில்லைக்குலமகளிர்க்கரசனைகாம்பயிறுமென்
று, மதிநினைந்துசாளரத்தாற்புறப்பட்டுவானேகிவானிற்சித்த, ரதி

சமிதோர்மதியென்ன முகந்திகழப்போகின்றாளாங்கேகண்டாள்,
கதிர்வடிவாளுடனிரவிற்றனிப்போமன்னனைக்கண்டுகருதுகிற்பாள்
இனியிவன்செய்வனவென்னென்றெண்ணுதலுமேற்செய்வதெ
ல்லாங்கண்டாள், கனிமொழியாடிரும்பினளின்றிவனைநாஞ்சேரு
ங்காலமல்லத், துனிபறப்பின்சேர்வதேவிதிநெறியாமெனமீண்டு
தொல்விடுற்றாள், வினைஞர்க்குமன்னவனோர்காரணத்தேகின
னென்றுவிளம்பியார்க்கும். (௭௭)

அரசனெழுங்காற்புவியைத்தனிகாத்தாள்சமகோக்காலணங்கு
போல்வாள், வரிசையுடன்பதினெட்டாண்டகன்றகூடாலேயுந்த
ன்மனையில்வாழ்ந்தாள், புரைசெறிகானகத்திருந்தான்சிகித்துவச
னவன்பாலும்போவதற்கு, விதிவியகாளிதுவென்னவிருளிலேபுற
ப்பட்டுவிண்ணிற்போனாள். (௭௮)

மாருதத்தின்கழுத்தேறிமறைந்துபோய்மந்தரமாமலையைச்சேர்
ந்தா,ளாரமறமணிப்பூண்களின்றியேகறுத்துலர்ந்தவங்கமாகி,யோ
ருடனின்றதுகண்டாளறிந்திலண்மாயோகத்தாலுணர்ந்துமன்னைக்,
கூருமிடர்சிறந்தடைந்தன்னிலேமனத்தோடுகூறலுற்றாள். (௭௯)

அறியாமையற்கொடிதந்தோவந்தோவதனுலிவ்வரசனெந்தா
ன், பிறியாதஞானமும்போகமும்விம்மின்றளிப்பேன்பிறிதொன்றி
ல்லைச், சிறியாணம்மனைவியிவளென்றிகழாவகைவேறோர்தேகமே
வி, நெறியாகவுணர்த்துவன்பெண்மைதீருநெஞ்சினனுய்கிருபனி
ன்றான். (௮௦)

பக்குவமாதலினிந்தவிமலமனத்தேயறிவுபற்றிபாயுந், தக்கதிது
வென்றெண்ணிப்பொருசிறிதுநியானத்தாற்றன்வேறாகி,மிக்கதொ
ருவேதியன்சேயாய்க்கணவன்முற்குதித்தாள்விண்ணினின்று,மக்க
ணமேயவனேக்கிக்கடிதெழுந்தங்கீகாரமனைத்துஞ்செய்தான். ()

பொன்னிறத்தன்வெண்டாளமாலையன்வெண்டுகிலுடையன்புரி
வெண்ணூலோ, னன்னிலத்தைவிடச்சிறிதுமேனிற்போன்றனை
நோக்கிநடவிங்கென்று, தன்னிடத்தாதனங்கொடுத்தான்சிகித்து
வசன்மறையவன்சேய்தானுமீண்டு, மன்னியற்கைத்தவமுனியே
யுனைத்தொழுதேனென்றுமறுமாற்றஞ்சொல்லி. (௮௨)

ஆதனத்திலிருத்தலுமேமன்னுரைப்பான்கடவுண்மகனுனதீதா
ல், போதவினற்பயன்பெற்றேனின்றன்றேவென்றுபலபூசைபண்
ணி, யேதமறவிட்டதேவதையென்றேகருதினனிவனுமந்தப், பூத
லமன்னனைநோக்கிநின்குணமும்விநயமுமார்பொருந்துகிற்பார். ()

அதனாலேநீடூழிவாழ்தியானுபசாந்தமானநெஞ்சால்
விதமானகற்பனையற்றரியதவம்வீடுபெறமிகச்செய்தாயோ
சதவேள்விவாசவனேர்வேந்தனும்பதம்விட்டுத்தவவனத்தை
பிரமாதகினைந்துறைதலசிதாரவிரதமெனுமியற்கையொக்கும். ()

என்றமறையவன்றனைப்பார்த்தரசனுரைப்பானிங்கென்னியற்
கையெல்லா, நன்றுணர்வுற்றாய்தேவனுதலாலிதில்வியப்புகண்ண
ற்பாற்று, நின்றனைநீபார்ப்புல்வனின்பெயரொன்வருபொருளெனி
கழ்த்துகென்ன, வொன்றுமொழியத்துரைப்பக்கேட்டியெனமறை
யவன்சேயுரைக்கலுற்றான். (அ௫)

நாரதனென்றொருமுனிவன்மெய்ஞ்ஞானவிளக்கொப்பானனன்
னீர்க்கங்கைத், தீரமுறுபொற்றலத்திற்சமாதியிருந்தானந்தத்தியா
னம்விட்டோர், நேரமிருப்புழிவிளையாட்டொலியொன்றுசெவியுற
வந்நெறியைப்பார்த்தான், பேரழகிலரம்பைதிலோத்தமைபோப்
பார்திரண்டுசிலபெண்கள்வந்தார். (அ௬)

கங்கையினீர்விளையாட்டிற்களிப்புறுவார்புருடரயல்காணுவாற்
றாற், சங்கையறத்துகிலில்லாரவர்வாத்தைக்கண்டுமனந்தாவியோ
டித், துங்கவிவேகர்துறந்துசுகமுடையவுயிரலைந்துதொடர்ந்துநிற்
கும், பங்கமிலாநாரதன்றன்மனநழுவிச்சுக்கிலமும்பாய்ந்ததன்றே.

என்னலுமேகின்மொழியாமின்னமுதாலுளங்குளிர்ந்தேனெனி
னும்வேறு, பன்னுமொழிபரம்பொருள்போலறிவரிதாற்குவித்து
னதுற்பத்திசொல்வாய், பின்னருபர்பரம்பொருளைவருந்தியுங்கே
ட்கின்றேன்மேற்பேசுகென்ன, மன்னனுரைசெயக்கேட்டுச்சூடா
லையாமறையோன்மைந்தன்சொல்வான். (அஅ)

நழுவுமனமெனுமத்தமதகயத்தைநாரதனூர்நல்விவேகப், பழுதி
ல்பெருந்தூணிலேநற்புத்தித்தோட்டியாற்பற்றிக்கட்டித், தழுவுப

டிகக்குடத்திற்றூதுவைவிட்டான்பாலைச்சாலவார்த்தான், செழுமதியம்பாற்கடலில்வளர்வதுபோற்கருவளர்ந்துசிறந்ததன்றே.

குடகின்றுபுறப்பட்டகுமரனுக்குவிஞ்சையெனுங்குறைவில்செல்வப், படலங்களுண்டாக்கிப்பிதாமகன்பாற்கொடுபோகப்பதுமத்தோனுங், கடனென்றுபோனுக்குமெய்ஞ்ஞானக்கலைகாணக்காட்டிவிட்டா, னுடனக்கள்ளன்னவனுற்குடம்பெறலாற்கும்பனெனுமொருபேர்பெற்றேன். (௯0)

செய்யகலைமகளெனக்குத்தாயங்காயத்திரிதான்சிறியதாயா, மையில்சதுர்வேதமெனுந்தோழருடனே விளையாடிவந்தேனென்ன, வையவுனைத்தெரிசித்தேன்பெறவேண்டும்பேறெல்லாமமையப்பெற்றேன், மெய்யிதுவென்றான்பின்னருக்குமுனைதற்கிவ்வாறுவிளம்பலுற்றான். (௯௧)

எனையுரைத்தேனுனக்குமுதனீயாரோன்செய்கின்றாயெனக்குநீயு, முனையுரைப்பாயென்றலுமேமன்னனுரைப்பான்பிறவிக்குளமஞ்சி, வினையறுகானகம்புகுந்தேன்சிகித்துவசன்பேர்நாட்டில்வேந்தாந்தன்மை, தனையிகழ்ந்திங்கிருக்கின்றேன்பிறவிக்கேவிடாமலுளந்தவியாநின்றேன். (௯௨)

இப்பரிசேதவத்தொழிற்குவேண்டுவனவெல்லாந்தேடியியற்றாநின்றாஞ், செப்பரியதுயர்விட்டுப்பெருந்துயர்சேர்ந்தேனமுதந்தீகஞ்சான, தொப்பரியாயென்றலுமேநம்பனுரைப்பான்குரவனுணர்த்துஞான, மெய்ப்படவந்தாற்சுகமாம்போதுபோக்குங்கிரியைவிகோதமன்றோ. (௯௩)

ஞானமில்லாதவர்க்கெல்லாங்கிரியையேகதியாகற்கிரியைவேந்தா
வீனமுறுவாதனைமாத்திரம்பலமாதவிற்பலமுமெய்தகல்கு
மானமுறுமிருதுவரின்றிமுன்பலங்களங்ஙனேமாய்தல்போல
வூனமுறுவாதனைமாய்ந்தாற்கிரியையுறுபலமுமொழிந்துபோமே.

பலமதனையொருக்காலும்பவியாதசரவணத்தின்பரிசுபோல,வலமருவாதனைதீர்ந்தகிரியையுமேற்பலந்தன்னையளிக்கமாட்டா, வுலகமெலாம்பிரமமெனும்பாவனையாலஞ்ஞானமொழிந்துபோனன், மலமுறுவாதனைதோன்றாகானலினீருண்டென்று மதிப்பாருண்டோ. (௯௪)

வாதனைமாத்திரம்விட்டாற்சனனமரணமுறுபிறவிமருவாதான
நீதில்பதமுண்டாகும்வாதனையோடேசேர்ந்தசித்தந்தானே
பேதமையஞ்ஞானமாம்வாதனைதீர்மனந்தானேபிறவாஞான
மேதமறுஞானத்தானேயமுணர்ந்தாற்பிறவியெய்தாதன்றே(௯௬)

ஞானமிகவன்றென்றேயயன்முதலாகல்லோர்கணவிலாகிற்க,நீய
வாதிருந்தனை யென்யானுரிவ் வுலகெங்ஙனேர்ந்ததெங்ஙன், ஞான
முறவிறக்குமெனநினைகிலே[illegible]யென் பேதையர்போற்றளர்கின்றாயெ,
ஞானகுரவனையிறைஞ்சிப்பர[illegible]ம்விடெப்படியென்றறிகிலாயென்.()

நிறையறிவின் சமமான[illegible]ோக்கினைச் சேவித்துநிரந்தரித்துப்,
பொறையுடனேவினவினன்[illegible]முத்திபெறுநுண்ணறிவுபொருந்துமெ
ன்று, மறையவன்போதிக்[illegible]வும்மே[illegible]கண்கணீர் சொரிந்திரங்கிமன்
னன்சொல்வா, னிறையவ[illegible]யறப்[illegible]துமையுன்னுலேயுணர்வுற்றே
னேழையானே. (௯௮)

மடமையாற்பெரியவர்தஞ்சேவையைவிட்டுத்தனியேவனத்தில்
வந்தே, னிடர்மேவுபாவமொ[illegible]ாமின்றொழிந்தேன்வனத்தினீயெய்
தியென்னைக், கடனுகவுணர்[illegible]துதலாற்குருநீயென்பிதாநீயென்கா
தலோனீ, திடமானமானுக்க[illegible]றுத்தொழுகின்றேன்கருணைசெய்
யவேண்டும். (௯௯)

உதாரமிகவுண்டாகியுணர்வு[illegible]ற்றுன்பமெலாமொழிப்பதாகிச்,
சதாசுகமாம்பொருளாகநீயதி[illegible]த்ததனைச்சாற்றுகிற்பாய், பிதா
மகனெப்பாயென்றமன்னனுக்குக்கும்பன்றான்பேசுகிற்பான், கதா
வியெழுமனமொருப்பட்டுணர்தியேனுனக்குண்மைகழறுகிற்பேன்.

சொன்னதனைக்கொள்ளாதுவினோதத்தாற்கேட்பவர்க்குச்சொ
ன்னவார்த்தை, பன்னியுமோர்பயனுகாதி[illegible]ளிலே விழிக்குணர்வு
ப்பலிப்பதுண்டோ, வென்னனுமன்னவனுரைப்பான்வேதவிதியேநீ
யிங்கிசைத்தவெல்லா, நின்னருளாற்கைக்கொண்டுசெத்தியமேநன்
றாகநினையாநிற்பேன். (௱௧)

வேறு.

என்றுமன்னனுரைசெய்யவெழிலார்கும்பனுரைசெய்வா
னென்றுமதியிர்ப்பாலகனுக்குரியதந்தையுரைப்பதுபோல்

வென்றிமன்னானுனக்குவிளம்புமுறையைவினவாது
கன்றிதென்றேகேளென்றுஞானத்தோன்றநவில்வுற்றான். (௧௦௨)

மன்னவீதோர்கதைகேட்பாய்மற்றிக்கதையினுறுபொருளைப்
பின்னுணாக்கேன்முன்னாளிற்பெரியோனொருவன்பெருஞ்செல்
ன்னநின்றகலைநூல்கள்பலவும்வல்லோன்ஞானமிலோ [வன்
னன்னுயிர்சிந்தாமணியைப்பறவேமுயன்றுதேடுற்றான். (௧௦௩)

மிக்கவருத்தத்தாற்றீரமேவவேண்டுமென்றுமுயல்வாற்
றக்கமணிகிட்டினவருந்திச்சாலமுயன்றார்க்கேன்கிடையா
தொக்கசுடர்மாமணிதன்முன்றோன்றிநதியின்விளங்கிடவு
நக்கமணியைக்கைக்கொள்ளாகாதாவிதமாய்நாடுற்றான். (௧௦௪)

சிந்தாமணியன்றிதுவேறோர்சிறுகாமணிசிந்தாமணிதா
னெந்தாராய்ந்துவாணாட்போய்நடங்கும்போதல்லால்வருமோ
னைந்தாலும்பாவியர்க்கெய்தாநல்லோர்சிலர்க்குகண்ணலுறுக்
தந்தாம்வினையைவினையாமற்றளர்ந்தாற்கடிதினெய்திடுமோ (௧௦௫)

மனிதனுனென்றவமற்பம்வல்லபங்கள்சிறிதில்லைத் [மோ
துனிசெய்நிர்ப்பாக்கியனெனக்குத்தோன்றுமணிமுன்றோன்றிடு
கனியின்னமுந்தேடுதுமென்றுகன்மாமணியையெடுத்திலனாற்
புனிதமணியும்போயினதாற்பொல்லாதார்க்குநலனுறுமோ. (௧௦௬)

மீண்டும்வருந்தித்தேடுற்றான்வெம்பிச்சிலநாளுழன்றளவே
யாண்டுமறைந்துநிலசித்தரவனைக்கண்டான்காட்டுவிக்கக்
கீண்டவனையின்முறியொன்றுகிடப்பக்கண்டானறிவில்லான்
மாண்டசிந்தாமணியிதெனமகிழ்ந்துவியந்துகைக்கொண்டான். ()

வெந்தமணியைமிகப்பேணிமிக்கநிதியெல்லாம்விட்டான்
வந்தமணியெல்லாமளிக்குமற்றநிதிகளென்னென்றே
சிந்தைசெய்தானித்தேசந்தியோருண்டுசுகமில்லை
யிந்தவிடந்திதெனவனத்திலிருந்துசுகிப்போமென்றகன்றான். ()

வாழலாமென்றெண்ணிப்புன்மணியால்வருத்தமேலாமுற்றுத்
தாழகின்றான்வேறென்றுசாற்றக்கேளாய்புந்திக்குச்
சூழவறிவுண்டாக்குவிக்குந்தொல்லைவிந்தவனத்திடையே
வேழமொன்றுகரிகட்குமேலாமிகவுமுயர்ந்ததுவே. (௧௦௯)

வயிரத்தினுநீண்டறக்கூராய்வலிதாகியகோடிரண்டுளது
பயில்வுற்றிருப்புக்கயிற்றாலேபாகன்பிணித்துவிலங்கிட்டான்
செயிர்பற்றியபல்பிணிப்பாலேசிந்தைதளர்ந்துகொம்பிரண்டாற்
குயில்வித்துளவன்கட்டெல்லாங்குலைத்ததொருநாற்கடிகையிலே ()

விலங்குமுறிந்தபடிகண்டான்வேழத்தலைவீழ்ந்துயர்பாகன்
கலங்கிவீழ்ந்தானவன்விழக்கண்டகளிறுகருணையினான்
மலங்கவதஞ்செய்யாதகல[illegible]றப்பாகன்மீண்டெழுந்து
[illegible]லங்கொண்டேகியக்களிற்றைத்தானேதேடியெதிருற்றான் (ககக)

ஒருகானிடையேயக்கரியைப்புற்றான்குழியொன்றுண்டாக்கிச்
சருகாற்கொடியான்மறைத்தான்றந்திசிலநாடிரிந்தங்கே
வருகாலையில்வீழ்ந்ததுகுழியில்வந்தபாகனுறப்பிணித்தான்
கருதாகின்றதுயரோடுங்களிறுகிடந்திப்போதும். (ககஉ)

தனதுவீட்டிற்சிறையிருக்குந்தனிமாவலிபோனின்றகரி
முனமுன்வீழ்ந்தபகைப்பாகன்மூளைசிதறிற்றெனில்வந்து
வனவெங்குழியிற்கட்டுண்டேமயங்கவேண்டாமதுபோல
வினைநிகழ்காலத்தான்மேல்வினைநோக்காதார்மெலிகுவரோ (ககங)

என்றலோடுஞ்சிகித்துவசனோர்ந்தாய்சிந்தாமணியாலும்
வென்றிவேழந்தன்னாலும்விரும்புகதையைவிளக்குகென
நின்றகும்பனுரைசெய்வானெந்நூற்பொருள்கள்பலவுணர்ந்தோ
னன்றிஞானமில்லாதோன[illegible]மணிதேடியவன்றான். (ககச)

என்னவுரைத்தனையாநீயெல்லாநூலுங்கற்றுணர்ந்து
மன்னுசாந்திபெற்றிலைவான்மணியென்றதுதானேதென்னி
லுன்னுவஞ்சமறவெல்லாமொழிதலாகுந்துயரனைத்துந்
துன்னவில்லாவதுதேடத்தொடங்கியரசுதுறந்தனையால்." (ககரு)

மனையுங்கிளையுந்துறந்திங்ஙன்வனத்தில்வந்தாய்காடன்று
யனையசகலத்தியாகஞ்சிறைவாகுமளவிலதன்விகற்ப
நினைவில்வளர்ந்துவிண்மூடுநீலமுகில்போலுனைமறைக்க
வினையசகலத்தியாகமுயரின்பமல்லமகத்தல்ல. (ககசு)

பிறிதொன்றுயர்ந்ததுளத்ததுதான்பெருநாண்முயன்றாலெய்துமென
வெறியவிகற்பமனச்சிறையமிக்கதியாகம்போயினதாம்

நெறிகொள்சகலத்தியாகம்போய்கினதுதவமாம்வளையின்முறி
யறிவில்விகற்பவிழியாற்கண்டதுநன்றென்றேயழுங்குதியால். ()

அளவற்றெளிதாஞ்சுகமகற்றியரிதாயற்பமாம்பொருளி
லுளமுற்றவரோயுயிர்க்கொலைஞருயர்வஞ்சகரொன்றலருரைக்கும்
வளமிக்குயர்சிந்தாமணிநீவந்ததென்றெண்ணியதவத்தாற்
றளர்வற்றிலைபெற்றிலையொன்றுந்தக்கதியென்றதினிக்கேளாய். ()

மதமாவென்றதுனையாகும்வயிராக்கியமும்விவேகமுமே
யதனீள்கொம்பாமுன்குணங்களானைமேற்கொண்டுழல்பாகன்
விதமாவுன்னைமெலிவிக்குமிகுமஞ்ஞானமதனாலே
சிதருகின்றுயரங்கைதகளாற்செலுத்துமவனுற்கரிபோல. (௧௧௯)

இருப்புக்கயிறும்விலங்குகளுமிச்சாபாசமென்பனவாம்
பெருக்கவிவற்றாற்கட்டுண்டாய்ப்பேசுமிரும்பின்மிகவன்பா
மிருப்புக்கயிறும்விலங்குகளுங்குநாட்செல்விற்றேய்ந்தொழியுஞ்
செருக்குமாசைமேன்மேலேதிடமாய்வளருந்தீர்க்கமுற. (௧௨௦)

மூரிக்கயிறும்விலங்குகளுமுறித்ததானையென்றதுதான்
பாரிச்சுகமெல்லாநீமுன்பற்றறத்துறந்தபடியாகுஞ்
சூர்ப்பாகன்வீழ்ந்ததுநின்றறவின்மடமைவீழ்ந்ததுவாம்
பேரிச்சையைநீக்கிடிற்பின்னைப்பிறவிதரும்பேதைமையுண்டோ()

போகமயலைவிரத்தியினாற்போக்கியாயிலஞ்ஞான
மேகிளைந்துவெட்டுமொத்திருக்குமப்பேய்போனின்றலையு
மோகமுறவேபோகங்கண்முற்றும்விவேகத்தால்விட்டால்
வேகமுறப்போமஞ்ஞானம்வெட்டிவீழ்ந்தமரப்பேய்போல்.(௧௨௨)

பூட்டில்போகமெலாமொழித்தான்மடமைத்தொடர்ச்சியெல்லாம்
வெட்டிவீழ்ந்தமரநின்றுவீழ்ந்துபோம்புட்கூடுகள்போற் [போம்
கிட்டிவனமீயடைந்தவேகிளரஞ்ஞானம்வீழ்ந்துளதாற்
றட்டில்சகலத்தியாகமெனுந்தனிவாளாற்கொன்றிலையதனை(௧௨௩)

அதனுன்மீளமுளைத்தெழுந்தவஞ்ஞானத்தாலறக்கோந்தாய்
மதமாவுக்குப்படுகுழியைவகுத்தான்பாகனென்றதுதான்
றிதமாவுனக்குத்தவத்துன்பஞ்செறியஞ்ஞானஞ்சேர்த்தியதாஞ்
சுதமார்குழிமேன்மென்கொடிகடயர்கூர்தவஞ்சேர்ந்தொழில்கள்

இவ்வாறின்றுமிடர்தவமாமிந்தக்குழியிலுழக்கின்றாய்
வெவ்வாள்வலிமாவலிசிறையாய்மிகுபாதலத்திலிருப்பதுபோற்
றவ்வாமொழிமென்சூடாலைசாற்றுஞானமிழந்தனையே
யீனவாய்சகலத்தியாகத்தைகழுவினையேனவில்கென்ன. (கஉரு)

வேந்தனுரைப்பான்பார்விட்டேன்வீடுவிட்டேனிதிவிட்டேன்
காந்தைதனைவிட்டேன்சகலத்யாகங்கிகவிட்டதுமற்றென்
றேர்ந்துபுகலென்றனுங்கும்பன்செப்புவானீதேசமுதற்
சார்ந்தவெல்லாம்விட்டாலுஞ்சகலத்யாகமன்றாகும். (கஉசு)

ஏல்வாத்திலும்பற்றுண்டெனக்கவ்விச்சையெல்லாமறவிட்டு
கல்லார்க்குரியகல்வின்பகண்ணுகென்னமன்னுரைப்பான்
மல்லார்புவிவிட்டதுசகலமன்றேல்வனமேயெனக்குளது
கல்லாற்றருவானிறைகாட்டிற்காதலுறுவாதனைவிட்டேன். (கஉஎ)

இனிநான்சகலத்தியாகத்தையெய்தினேனென்றனுங்கும்பன்
கனியார்மாமுநெடுமலையுங்கமன்றாஞ்சகலமன்றுனக்குத்
துனியார்பற்றுண்டனைத்திலுமத்தின்பந்துறந்தாற்சுகமெனப்
புனிதாவிதுவுமன்றாகிற்புகல்வேனெனப்பூபதிபுகலும். (கஉஅ)

கந்தைதண்டுசெபமாலைகலைத்தோல்பாண்டங்கமண்டலமுன்
டெந்தையிவற்றைவிடுகின்றேனென்றுகூட்டியெரிகொளுத்திச்
சிந்தைகளித்துவெற்றுடலாய்ச்சிக்கற்றனன்பற்றிலனென்றே
முந்தையறிஞன்முகநோக்கிமொழியலுற்றான்சிகித்துவசன். ( )

அம்மவம்மகடவுண்மகனுனவுன்னுலதிவுற்றேன்
மம்மரொழிந்தேன்கேவலமாய்மலங்களற்றேனிதுவென்று
விம்முசங்கற்பத்தெய்தாவேறொன்றறயாவையும்விட்டேன்
செம்முபொருளின்றிரளெல்லாஞ்செகமளிக்கும்பந்தனையே. ( )

பொருள்களெம்மட்டெம்மட்டுப்போனதம்மட்டம்மட்டுந்
தெருளுமனந்தான்சுகமடையுஞ்செயித்தேயந்தச்சுகம்பெற்றேன்
மருள்செய்பந்தங்களுமற்றேன்மாசிலாததிகம்பரனு
யருள்செய்சகலத்யாகத்தையடைந்தேன்வேறென்னுளவென்றான்
கும்பனுரைப்பான்சகலமும்விட்டிலையிந்தக்கூத்தாடல்
வம்புகாவென்றனுமன்னன்மனத்திலினைந்துமீண்டுரைப்பான்

வெம்புகரணப்பாம்புகள்சேர்வெள்ளென்பூனுமுடலொன்றே
யிம்பர்மீந்ததெனக்கிதனையின்றேயெளிதின்விடுகின்றேன். (௧௩௨)

காண்டியென்றோர்வரையேறிக்கவிழுமளவிலுயர்கும்ப
னீண்டிதென்னேயிவ்வுடலூனென்னகுறைசெய்ததுபேதாய்
மாண்டபயனென்னிளங்கன்றைவல்லேறடர்ந்துமுனிவதுபோற்
றூண்டிவிழுந்துமெய்விடினுஞ்சகலத்யாகியாகாயே. (௧௩௩)

எத்தாலுடலமசைகின்றதெதுதான்பிறவிகருமத்தின்
வித்தாய்நின்றதுவிட்டால்வேந்தாவெல்லாம்விட்டனவா
நித்தாரமிதென்றவுமுடலையசைத்துப்பிறவிசிறைவித்தாய்த்
தத்தாநின்றதேததனைத்தவிருமாறுசொல்லென்ன. (௧௩௪)

இயலார்கும்பனுரைசெய்வானெல்லாச்சகமுமிதுவாகி
வியனார்சிவன்பிராணனெனமேவுபெயர்கள்பலபெற்றுப்
பயனார்சடமுமசடமுமன்றுகிப்பிரந்தசித்தத்தை
யுயர்வோர்சகலமென்றுரைப்பருலகுமிதுபந்தமுமிதுவே. (௧௩௫)

சன்னகருமங்களின்வித்தாய்த்தருவையசைக்குங்காற்றேபோற்
றினமுமுடலையசைப்பதுவுஞ்சித்தமிதனைத்தீர்வதுவே
யனகசகலத்யாகமதாமதுவேபரமவாநந்தம்
வினவிபிறவெல்லாமிகவும்வெருவுகின்றவெந்துயரோ. (௧௩௬)

சகலத்யாகந்தனைச்செய்துசாந்தனய்மச்சரமின்றிப்
பகுதிநிலையாற்றெளிவுற்றூற்பயின்றவடிவேததுபோய்
நிகழுமாயென்றவுமன்னனுரைப்பானீசொன்னெஞ்சுக்குப்
பகருமுதலாம்வடிவேதெப்படிநான்றீர்ப்பதுரையென்ன. (௧௩௭)

மற்றுங்கும்பனுரைசெய்வான்மனத்துக்குருவம்வாதனையே
பேறமனமென்றுரைக்குமுறையுறுவாதனையின்பரியாயங்
குற்றமெல்லாங்குவிந்திருக்குங்கூடாகாவனென்பதுதானே
செற்றமனமாமரத்துக்குத்திகழும்விதையாக்தேர்வேந்தே. (௧௩௮)

வேறு.

ஆதியிலுண்டானவந்தங்குரந்தானனுபவமெய்யாயறுதியிடுவே
தாகி,யோர்திருமுருவன்றியிலேயுதிக்குமத்தையுரைசெய்வர்புந்தியெ
னவுரைத்தவிந்த, நீதியுறுபுந்தியெனுமங்குரத்தினிறைவளர்வை

கொம்பைச்சங்கற்பமென்பர், பேதமிவையாதலாற்சித்தம்புத்திபெரியமனமென்பதெலாம்பேர்கடானே. (கஙகூ)

இனையமனமெனும்பொல்லாமரத்தின்கொம்பையெப்பொழுதும் வெட்டிவேரீர்த்துமாய்ப்பாய், வினையுறுவாதனைபணைகள்பலகாய் காய்க்கும்வேதனைவாளானுள்ளேவெட்டின்மாயு, நினைவறப்பற்றற மவுனமாகிவந்துநேர்ந்ததுசெய்வாருள்ளேநெஞ்சைச்செற்றோர், ரனையமரப்பணைவெட்டற்கேவனமென்பரதன்வேரையறுத்தலேயறகன்றென்பார். (க௪0)

ஆதலினன்மிகநல்லநெறியாலேயிக்தமனமரத்தின்வேரறுத்துச் சுட்டாற், சாதமுறுதென்றலுமேமன்னன்சொல்வான்றனிமரத்தின்வித்தாகுமகம்பாவத்தை, மாதவனேசுடக்கனலேதெனலுங்கும் பன்மறுத்துரைப்பானுறொன்றெண்ணுகின்ற, போதவிசாரந்தானேமனத்தின்வித்தைப்பொன்றுவிக்குங்கனலெனவும்பூபன்சொல்வான். (க௪க)

என்னுடையபுத்தியினுலென்னிலினைனிச்சகானல்லமலவுடனில்ல, துன்னுபொறிகளுமல்லமனமுமல்லதொடர்புத்தியல்லவகங்காரமல்ல, வின்னசடமாதலினுமெனலுங்குப்பனிவையன்றேல்வேறூர்சீயிம்புகென்னு, மன்னனுரைப்பானெல்லாம்பகுட்த்தளித்தமாசறுசின்மாத்திரமாம்வடிவகானே. (க௪உ)

இந்தவடிவாமெனக்கோரோதுகாணேனிடர்மனத்தாருவின்விதையாமகங்காரத்தை, யுந்தும்வகையறிகிலேனுந்தவந்துவோமருமிதனுள்ளுடைக்தேனென்ன, வந்தணன்சொல்வான்மனுகாரணத்தையன்றியோர்காரியமுண்டாகமாட்டா, முந்துமகங்காரகாரணத்தைநாடிமொழியென்னமீண்டரசன்மொழிவதானன்.

அகமென்னுங்குற்றத்தின்காரணந்தான்றிவாகுமவ்வறிவிங்கடங்குமாறென், மிகவுங்காண்பவற்றின்மேவுழுதலாலேமெலிகின்றேன்காணபவற்றைவிடுமாறெங்ஙன், புகலென்னமீண்டந்தக்குறும்பன்சொல்வான்போதத்தின்காரணநீபுகன்றாற்பின்னை, நிகழுங்காரணமுமகாரணமுஞ்சொல்வேனினக்குநானெனவதற்குநிருபன்சொல்வான். (க௪௩)

புகன்றவுடன்முதற்பொருளுண்டாதலாலேபோதமுளதாமவை
பொய்யானாலில்லை, யகங்கரவேதனமென்னுமனத்தின்வித்துமடங்
கிவிடுமெனவதற்குக்கும்பன்சொல்வா, னுகந்தவுடலாதியுளதேற்
சித்துண்டாமுடலாதிபல்பொருள்களிலாதபோதி, னிகழ்ந்தவறி
வெப்படியேநின்றதென்று நிகழ்த்தென்னமீண்டந்த நிருபன்சொல்
வான். (கசரு)

கரசரணமுதலங்கமுதலாய்ச்செய்யுங்கருமபலமுளதாய்க்கை
யாளுங்காயம், குரவவிலதெனும்படியென்னெனக்கும்பன்கூறு
வான்காரணத்தைக்கூடாதென்னில், விரவியகாரியந்தானுமிலதா
மந்தவேதனமுமயக்கமேமிகுமயக்கால், வருவனவெல்லாமிலதா
மேதுவின்றிவருபொருள்பொய்யாங்கயிற்றில்வருநாகம்போல். ()

என்றலுமேயாதிமுதலுள்ளவேதாவியற்றியபல்படைப்பாகுமிக்
தனால, நின்றவவனிதற்குக்காரணமல்லாதநெறியேதென்றலுங்
கும்பனிகழ்த்துகிற்பான், றன்றுசிருட்டியின்முன்புவெறிதாய்ச்சா
ந்தத்தொடர்பிரமமேயுளதாய்த் துலங்குமந்த, வொன்றேயழியவிர
ண்டில்லாக்காரணத்தாலுயர்வேதாகாரணத்தையுறுனென்றேத.

காவலன்பார்த்து[illegible]ம்மவேதாவுக்குக்காரணமன்றேவென்ன
க்கும்பன்சொல்வான், கேவலமச்சுதமநந்தஞ்சாந்தஞ்சுத்தங்கேடு
பிறப்பிடர்தோற்றங்கிட்டாதென்றும், பாவனையற்றடிமுடிவற்றொ
ன்றாய்த்துன்றிப்பகர்வரிதாய்காடரிதாய்ப்பரமநிற்குந், தாவரியவது
வெங்ஙனேதுவெத்தாற்சமைப்பவனாய்ப்புசிப்பவனாய்ச்சாருமாறே.

ஆ[illegible]லிதொன்றுஞ்செய்ததல்லவடுத்துளவிச்சகமில்லையறிவு
மட்டு, மே[illegible]குசங்கற்பிதமேவேதாவாகுமெய்யாகவறிவன்றிவே
றொன்றில்லைச், சேதனமாத்திரத்துதித்தசிருட்டியந்தச்சேதனமே
வடிவென்[illegible]செப்பலாகு, மோதியசெய்வோன்புசிப்போனிரண்டுமே
ல்லனுறு[illegible]வந்திர்பிரமமேயுள்ளவெல்லாம். (கசசு)

திட[illegible]நிச்சயித்துள்ளேபஞ்ஞானத்தைச்சிதைவித்தாலஞ்ஞா
[illegible]ஞ்சிதைந்ததேயாம், படர்கருமச்சிதைவினாலன்றிமேதிகம்பகர்
நிலைமைநழுவாதுபகரஞ்ஞான,மடைவுறத்தேய்ந்திடிற்பழையநிலை
மைநீங்காவாதிபதமாமதனாலாதிதேவன், றடமுறுசிற்சொருபத்
தாற்றன்மனத்தாற்றானேநித்தலுஞ்சிருட்டிதந்துநல்கும். (கசஎ)

ஆற்றுமதத்துவமானவதனுற்றனேயயனென்றுசொலப்பட்டத லிலமாகித், தோற்றுமிவையுபசாந்தச்சொருபமாகுந்தோன்றலே யெனவொக்குஞ்சொன்னவெல்லா, மேற்றனவேபடைப்பவனின் மையினல்வையமில்லையாமதனுற்பல்பொருளுக்கில்லைத், தேற் றுகின்றவிவ்வகையாலறிந்தேனன்றுய்ச்சிவமானேன்வேறென்று ந்தெரியக்காணேன். (௧௫௧)

எனைத்தொழுதேன்பல்பொருளுக்கறிவினலேயிப்படிபொய்யா [illegible]த்தோன்றிற்றிப்போதத்தா, வினைப்பிலுபசாந்தமாய்விசும்பினை ப்போலிற்கின்றேனெனகிருபனிகழ்த்தலோடுந், தனைத்தருகும்ப னுஞ்சொல்வான்றேசகாலந்தடந்திசைச்சிந்தனைத்தொழில்கள்சா ர்ந்தவெல்லா, மனைத்தையுங்காண்பதுசகத்தைப்பிறித்துக்காண் கையதுநெடுகொளிற்சாந்தமாகிப்போகும். (௧௫௨)

சாந்தமுறவழிவற்றபிரமமாங்கே[illegible]னிற்குமெனக்கும்பன்சாற்ற லோடும், வேந்தனறிவுற்றுமிகவிளங்[illegible]கின்றன்வெம்மாயைக்குகை நின்றுவெளியிலான, ஞ்திறமேய[illegible] தியறக்கும்பன்சொ[illegible]ன்னவது குமித்துத்தனதாமித்தற்பதத்தே, [illegible]ந்தியுறச்சேர்க்தொளித்தான் மனமுங்கண்ணுங்கட்டுரையற்றனிறை[illegible]கணத்திலாங்கே. ()

ஒருமுகுர்த்தமிருந்துணர்ந்துவிழித்தலோடுமுயா[illegible]ம்பனுரை[illegible]ச ய்வானுளதாய்கன்றய், நிருமலமாய்ச்சுத்தமாய்மிகமெத்தென்று நிருவிகற்பங்களுக்கெல்லாநிலயமாகித், திருமிகும்ப்பதத்திலேசுக மாய்த்துன்பந்திர்ந்தனையோவுள்ளுணர்வுதெளிவுற்ற[illegible], வருமை யக்கமொழிந்தனையோஞேயநன்றயறிந்தனையே[illegible]காண்பனகண்ட னையோவென்றன். (௧௫௪)

நரபாலனதற்குரைப்பான்பகவனேகின்னருளாலே[illegible]பருஞ்செல் வநலத்தான்மிக்குப், பரமாகியனை[illegible]திற்குமேலாய்விஞ்[illegible]தங்கண் டேனகோவகோபரமஞானந், தி[illegible]பெரும்பெரியோ[illegible]கூட்டங் கிட்டாத்தெள்ளமுதாய்ப்[illegible]பந்தேங்கநல்கும், வரமா[illegible]கூட் டத்தா[illegible]ருகாலத்[illegible]வாராதநல்லமுதுவரப்பெற்றேனல். ()

அனந்தமாயிவ்வமுதமெனக்குமுன்னளரிதானதென்[illegible]வெனக் கும்பன்செ[illegible]வான், மனந்தனிலேசாந்தியாய்ப்போகங்கைத்துவ

ன்பொறிமீண்டுளமடமைமாய்ந்தபோதே, புனக்தருசெங்குசும்பை நீரழுக்குப்போனபுடவையிலே நிறமுறல்போற்புதல்வர்நெஞ்சிற், கனக்தருநற்குருவசனங்கலந்துநன்றாங்காயமலங்களுமரத்தின்காய் கள்போற்போம். (௧௫௬)

உள்ளத்திலிருமையெனவொருமையென்னவுன்னுதலஞ்ஞான மிவையொழிதன்ஞானந், தெள்ளுற்றதிதியுமதுதெளிந்துமுத்திசேர்ந்தனைசித்தமும்விட்டாய்செல்வனாகித், தள்ளுற்றமலநீங்கிமௌனியாகித்தனிநிற்பாயென்றலுமேதமையுணர்ந்தோர், கொள்ளுற்றதொழிலெல்லாமனத்ததன்றோ கொள்மனமன்றியினடக்குங்கொள்கையென்னோ. (௧௫௭)

உரையெனமன்னவன்கேட்பக் கும்பன்சொல்வானுளமென்று சொன்னதுவேறொன்றுமன்று, கரையறுபல்பவந்தருவாதனையே யுள்ளங்கண்டதனையறிந்தாலக்கவலையில்லை, வரையறக்கண்டவர் கருமங்களிற் சரிக்கும்வாதனைதான் மறுபிறப்பை வழங்காதந்தப், புரைமனஞ் சத்துவமென்பர் சித்தமென்று போதமில்லாச்சித்தத் தைப்புகல்வரன்றே. (௧௫௮)

ஞானமனஞ்சத்துவமேயென்றுசொல்வர்ஞானமிலாதார்சித்த நடையினிற்பரீனமாஞானிகள்சத்துவத்தேநிற்பரோதொன்றுசுவர்க்கம்வீடெல்லாமல்கு, மானவையெல்லாம்விட்டுச்சமமாஞ்சோதியானவேதாகுதியிங்கதுநீயாகு,மூனமுறுபொருளொன்றுங்கைக் கொள்ளாமலுள்ளனுமசைவறநிற்பாயுறுதியாக. (௧௫௯)

[illegible]சிலாதவர்பிறவிநெடுந்தூரம்போநீணிலத்திற்றுயமொன்று நேர்ந்ததல்ல, வஞ்சுமனமசைதலினுண்டானதாகுமசைவசையா [illegible]களிரண்டுமியிக்கமாக்கிச், சஞ்சலமாற்றிச்சித்தாம்படிநில்லென்னத்தாணிபன்சொல்வானயிக்கஞ்சார்வதெங்ஙன், விஞ்சுமசைவசையாமையிரண்டுமொன்றாய்விடும்படி சொல்லெனக்கும்பன்விளம்பலுற்றான். (௧௬௦)

உவ்விநீர்போலுலகெல்லாமொன்றாவுணர்வுமாத்திரமதுதானுற்றபுந்தி, சுவர்வுறுநுவாலசையுநிறையுநீரானகல்லோலத்தாலசையுங்கணக்கேபோலச், சிவமுணர்வுமாத்திரமெய்ப்பிரமமாதித் திரள்பெயராய்ப்புகல்பொருளேச்சகமென்றெண்ணித், தவமறுபே

ழையர்காண்பரறிவுதானேசற்றசைக்தமாத்திரத்தாற்சருக்கமுண்டாம். (கசுக)

உண்டானசிருட்டிதானன்றுப்பார்க்கிலொழிந்துபோமுறுதியாயுணராவாற்றாற், கண்டார்கள்கதிற்றிலேபாம்பென்பார்போற்காட்சியுறுங்கலேநூலாற்கற்றோர்சார்வாற், றண்டாதபரிசயத்தாற்சிலகாலத்திற்றூவுமனதின்மலமாய்ச்சசிபோனிற்கிற், பண்டாயவநுபூதிமயமாய்த்தானேபாக்கியவான்களுக்கிந்தப்பார்வைதோன்றும்.

வேறு.

உலகதனுதயநாசமுண்மையையுரைத்தேனித்தை
நலனுறச்செய்துநாடிநழுவுறுநயந்தவண்ணம்
விலகலற்றெதிர்ந்தவெல்லாமெய்ப்பதத்தாக்கிநிற்பாய்
திலகமாஞ்சொன்னநாடுசேர்வனுன்காலமீதே. (கசுங)

அயனுலகினும்பொன்னுடற்றங்கெனைக்காணுனென்னிற்
பயமுறமுனியுமெக்தைநாரதன்பரிந்தமைந்த
ருயர்குருமுனியப்பண்ணவென்றுசற்றுமொண்ணுமின்னு
மயலறப்பேதநீக்கிமகிழ்ந்திதைநோக்கிநிற்பாய். (கசுச)

போதநாமென்னக்கும்பன்மறைதலும்பூனொனுவுஞ்
சீதளஞ்சுத்தஞ்சாந்தந்தெள்ளமுதாறலொக்கு
மீதொருபதவியென்னுளிருந்தவாறென்னேயென்னே
கோதிலென்சத்துவத்திற்குளிர்வுறச்செய்தனென்றான். ( )

ஆனவாதனைகளின்றியசைவற்றுப்பேரானுகி
மோனமாய்கிருவிகற்பமாய்ப்பற்றுமுற்றுமற்ற [ன்
தானமேயமூர்த்திக்கற்போற்றருவைப்போற்சுவர்போனின்
போனகூடாலேபண்டைப்பொற்கொடிவடிவமெய்தி. (கசுசு)

அம்பரத்தேகியந்தப்புரம்புக்காவனிகாவ
ணம்பரமென்றுகார்த்தாணடந்ததுவருடமூன்று
கும்பனுய்க்கணவன்றானடைக்குறுகியாங்கவனைக்கண்டா.
டம்பமாய்கிருவிகற்பசமாதியிவிருத்தல்கண்டு. (கசுஎ)

அறிவிப்போமென்றுசிங்கநாதத்தாலார்த்தமட்டிற்
பொறியுற்றதில்லேமேன்மேற்றெனித்திவள்பூபன்றன்னை

மறியத்தள்ளுதலும்வீழ்ந்துமறிந்திலன்மற்றென்னென்று
நெறியுய்க்குங்கும்பன்மேனிநேரிழைநினைப்பதானள்.(கசுஅ)

உத்தமன்றற்பதத்தோடொன்றின[ன்]வியப்பிதம்மா
வித்தகனியுடலைப்பார்த்தாலிதயத்தி[ன]றின்வித்தாஞ்
சத்துவசேடமுண்டே[ற்]றலைவனைப்புணர்வமெல்லென்
றத்தியால்வாழ்துமன்றேலங்கனைவடிவம்விட்டு. (கசுகூ)

மறுபவமுறாதவண்ணமாசறுபதத்தைச்சேர்து
மறுதியீதென்னவன்னிப்பரிசத்தால்விழியாலன்று
னுறுமறிவுக்குவித்தாயுற்றசத்துவசேடந்தா
னிறுதியற்றிதயந்தன்னிலிருந்ததுகண்டாளென்ன. (கஎ0)

கேட்டலுமிராமன்சொல்வான்கிளர்மனந்தீரமாய்ந்து
காட்டலோட்டம்போற்சுத்தக்கண்ணிலேகலந்துளோருக்
கிட்டுசத்துவசேடந்தானெங்ஙனேயிருக்குமென்ன
வாட்டமின்ஞானமிக்கவ[சி]ட்டமாமுனிவன்சொல்வான். ()

வித்திலுட்பூவுங்காயுமேவி[ய]போலிதயந்தன்னிற்
சித்தின்காரணமதானசத்துவசேடநிற்கு
முத்தனுப்மனமிறந்தான்மொய்யுடல்போகாபோகத்
தொ[ழி]தலின்பத்துன்பங்கள்சார்தலற்றொருமைத்தாகும். ()

ஆதலாலிர[ா]மனேயவ்வணங்களுளந்தமெய்விட்
டேதமி[ல்ல]தியந்தமின்றியவறிவினுட்போய்
[மேதகு]சத்துவஞ்சேர்வேந்தனைஞ்சசையப்பண்ணித்
தீதிறன்னுடலின்மீளச்சேர்ந்தனள்கூடார்புட்போல்.(கஎங)

[இ]கும்பன்மெய்யாகிப்பூமேலிருந்தனள்குழல்போற்பாடத்
தம்பமாயிருந்தோன்மெய்யிற்சத்துவகுணஞ்சார்போதந்
தும்பிநேர்பாட்[டு]டைக்கேட்டுப்பையப்பையச்சூரியன்சே
ரம்புயம்போல்விரிந்துவன்மனநிலையாயிற்றே. (கஎச)

கண்டனன்கும்பன்றன்னைக்களிப்புறுமனத்தனாகித்
தண்டலிலருளாலென்னைவாழ்விப்பான்றானைவந்தான்
பண்டையர்[ந்]தரவனென்றுபராவிகள்மலர்தூயேத்த
மண்டலவேந்தன்றன்னைமற்றவனோக்கிச்சொலவரான் (கஎரு)

இங்குநின்றகன்றநாடொட்டின்றளவுன்பாற்சித்தம்
பங்கறநின்றதண்டர்பதியுநின்கூட்டம்போல
வங்கிதமல்லவென்னச்சண்ணலேவாழ்ந்தேனின்னுற்
றுங்கமாயுற்றவின்பசமாதியிற்றுயரந்தீர்ந்தேன். (கஎசு)

நிருவிகற்பத்திலின்பநிறைந்தபெரன்றொட்டுமில்லை
யொருமையுற்றதனைமேவியும்பரிலிம்பர்தன்னிற்
றிரிவனென்றரசன்சொல்லக்கும்பனுஞ்செப்புகிற்பா
னரியவாநந்தவாழ்விலயர்வெலாமறவாழ்ந்தாயோ. (கஎஎ)

பேதமேவடிவமானதுன்பங்கள்பேதித்தாயோ
போதல்போதினிதாஞ்சங்கற்பத்தினிற்பூண்டவின்பந்
தீதெனவேருஞ்செற்றுச்சமதரிசனமுற்றாயோ
யாதினும்விடுபற்றற்றியைந்தசெய்தின்புற்றாயோ. (கஎஅ)

எனலுநின்னருளாற்பங்கிற்றெய்வத்தாலெலாம்விட்டப்பான்
மனநிலைநின்றேன்மாயைக்கணாகண்டேன்வருபேறெல்லாங்
கனமுறப்பெற்றேன்கேட்கக்காணவேண்டுவதொன்றில்லை
யனவரதமுநிறைந்தேனயர்வற்றேன்பிறவியற்றேன். (கஎகூ)

பயமற்றேன்மோகமற்றேன்பற்றற்றேன்சமமாய்நின்றே
னுயர்வற்றேனெல்லாமானேனொருசெயலற்றேனின்னுஞ்
ளியலொத்ததெளிவாய்ச்சாந்தமெய்தினேனென்றான்மோ
செயன்முற்றுங்கடந்தசிந்தைச்சிகித்துவசப்பேர்மன்னன்.

அவ்வகையிரண்டுபேருமாத்துமதத்துவத்தின்
செவ்வியவிசாரத்தாலுந்தெளிதருமொழிகளாலுந்
தவ்வறுநேயமிக்கோர்தம்மிற்றாமுணர்தலுற்று
வெவ்வனமோடைகுன்றுவேறறவெங்கும்வாழ்ந்தார். (கஅக)

இயலறிவன்புசெய்கையிணையற்றோர்பிற்றும்வீடு
மயலறவிட்டுத்தென்றற்கசைவுறுவடகுன்றொப்பார்
பயிலுடலொருகாற்றூளிபடர்விப்பாரொருகானீறு
வியனுறவணிவரோர்காற்சந்தனவிரையேசேர்வார். (கஅஉ)

சிறிதுகாலூடனேவாழ்ந்துதேமொழிவேந்தைநோக்கிப்
பிறிவுறுகணவன்சாலவுதாரமாய்ப்பீடையற்றான்

செறியெழில்விடலையாகுஞ்செல்வம்பூமணையுமெல்லாம்
வறியபோலவமாய்ப்போமால்வாழுநரிலாமையாலே. (கஅங)

இழிவறுஞானம்பெற்றோரியல்புறந்தானேவந்த
தொழிவுறவிடுவரொன்னிலுண்மையையுணர்ந்ததென்னும்
வழிபடுமென்னனம்பான்மனஞ்செயற்கானதொன்றை
யழிவறுமறிவினாலிங்கமைத்துமென்றுளத்திலெண்ணி (கஅச)

தலைவனைநோக்கிச்சொல்வாள்சதமகனுலகினின்றோர்
நிலைபெறவிழாவுண்டாங்கேநேருநாரதரோடியானு
மூலைவறநிற்றல்வேண்டுமுயர்வீதிவலியார்வெல்வர்
மலைமிசையிரவிபோங்கால்வருவனிவ்வினைவிலிங்கே. (கஅரு)

நீங்கருமுணர்வினோடுநீயிவணிருத்தியென்றோர்
தேங்கமழ்மலரின்கொத்தைச்சிகித்துவசனுக்குநல்கி
யோங்கினள்விசும்பிலேகியவன்விழியுறாதமட்டிற்
றூங்கியகும்பன்மேனிதவிர்ந்துதன்வடிவமானாள். (கஅசு)

இந்திரனிருக்கையேய்ந்தவில்லம்புக்கறியாவண்ண
மந்திரநெறியின்மன்னன்கிரியமாபிற்செய்து
சந்திரவதனிமீண்டுங்கும்பனாய்த்தலைவன்றன்பால்
வந்திழிவுற்றுச்சாலவாடியமுகத்தள்போலாய். (கஅஎ)

பனிபடர்மதியமென்னப்பங்கயமென்னச்சோம்பி
நனிமுகம்வாடிச்சிந்தையயர்விலாணனுகலோடும்
புனிதநாயகனுநோக்கிப்பொருக்கெனவருந்தியெந்தாய்
துனியுறுகின்றார்போன்றாய்துயரொனத்துடைத்தியென்று. ()

தத்துவஞானமுற்றோர்தளர்வுறார்மகிழார்கஞ்சப்
பத்திரம்பயின்றநீரிற்பற்றுமோவென்றலோடுங்
குத்திரமேனிக்கும்பன்விளம்புறுகுழலின்பண்போற்
சித்திரமாகவொன்றைச்சிகித்துவசனுக்குச்செப்பும். (கஅகூ)

உடலுளவளவுங்கன்மமந்தியத்துடனுறல்செய்யாரேற்
றிடமுறச்சமசித்தத்தேசெறிபவரறிஞரல்லார்
சடங்களேயாவர்தானேசார்வுறுமவத்தையென்று
விடநினைத்தறிவிலாதார்வீணிலேமெலிந்துழைவர். (ககூ0)

நிலமுளவளவும்போகாத்தயிலம்போற்றேகமட்டும்
பலபலவவத்தைநீங்காபற்றறவிவற்றைத்தீர்ப்போ
ரலகிலாவிண்ணைவா[illegible]லறுப்பவரொக்குமன்று
மலவுடலவத்தைநீக்[illegible]லதற்கொக்கும்வாழ்வுண்டாமோ. ()

வேறு

ஒருபான்ஞானேந்தியத்துடனுமொருபால்கன்மேந்தியத்துடனும்
வருமாறுளதாமுடலுக்குமலரோன்முதலாமெல்லோருந்
தெருள்பான்மையராயினுந்தேகவவத்தைதீராதென்றுணர்கை
யருகாநின்றுவழுவாமலறுதியானவிதிநெறியே. (௧௧௯௨)

கற்றவறிஞரறிவில்லோரெல்லாங்காணப்படுபொருளா
யுற்றபடியால்விதிவசத்தேயுறுவர்கடலிலுறுநீர்போ
னித்தமறிஞர்சம்புக்திநிலையார்க்கைகாலசைதலினுற்
பெற்றவுடலம்விடுமளவும்பெயராவிதியைப்பின்செல்வர். (௧௧௯௩)

இரங்கித்தேம்பியறிவில்லோரின்பதுன்பங்களின்மூழ்கிக்
குரம்பைத்திரள்களெடுத்தவற்று[illegible]குறையாவிதியைப்பின்செல்வர்
நிரம்பப்புகன்றெனுன்பட்டநெறியிற்றுன்பந்தனைக்களா
யரங்கட்குவமையார்துன்பமன்பர்க்குரைத்தாலாறுதோ. (௧௧௯௪)

கொத்தார்மலர்தத்துணையகன்றுகுதித்துவிண்போய்ப்போனா[illegible]
கின், மெய்த்தாதையைச்சேர்த்திந்திரன்முன்மே[illegible]ண்டிங்குறவெ
ண்ணித், தத்தாவிண்ணின்றிழிந்திரவிக்கருகேகா[illegible]நின்றடநெ
யா, வித்தாரணிசேர்வுறவருவானெழில்விப்பதத்திலேகுதலும். ()

ஏகலுற்றதுர்வாசனென்னுமுனியையெதிர்கண்டு
மாகமட்டிலடிதொழுதுமற்றுமுனிவன்றனைநோக்கி
நீகறுத்ததுகிலுடுத்தாய்நெறிதீர்பிறனைவிழைபவர்போற்
போகலுற்றாயென்றவெனைப்போதமுனிவுற்றம்முனிவன். (௧௧௯௫)

இதுசொல்லுதலாவிரவுதொறுமெழில்வேந்திழையாயிருத்தியென
முதுவன்சாபமுரைத்தலுமம்மொழிகேட்டிரங்கிமுனிதாளாம் [தா
பதுமம்புகழ்ந்[illegible]வேண்டுதற்குப்பார்த்தேதனிமைப்பின்முனிமறைந்
னதுகண்டுள[illegible]நொந்திங்கணைந்தேனணங்கார்தன்மையகலாதே.

குருவானவர்மாதவர்முதலோர்கூட்டங்காணக்கூசாம
லிருள்வாய்மகளாயெவ்வண்ணமிருப்பேனெனவுஞ்சிகித்துவசன்
வெருவாதொழிநீபுலம்புதலான்மேவுபயனென்விதிவலியால்
வருமேவருகவுடற்கல்லான்மாசிலதிவிருப்பற்றுதே. (௧௯௮)

அறிவாலுயர்ந்தநீதுன்பத்தமிழ்ந்தற்குறிந்தோவறிவற்ற
சிறியாரன்றோவுள்ளயர்வாரொன்றுதேற்றித்தம்மிற்றும்
பிறியாவின்பதுன்பங்கள்பிறிவற்றிருந்தாரவ்வளவி
னெறியார்கும்பற்கணங்குருவநேர்வான்போல்வெய்யவனொளித் [தான் ()

அந்திவராலுவியமங்களாற்றியிருந்தாரதுகாலை
முந்துமரசன்முகநோக்கிமொழிவான்கும்பன்றளர்ச்சியொடு
மிந்தவுடல்வீழ்வதுபோன்மேலெழுதல்போனின்றியங்குதல்போல்
வந்துபெருநாளுமெம்பெண்மைமன்றவென்னைவளைந்ததுவே. ()

கூந்தல்வளர்கின்றதுபாராய்கொங்கையெழுகின்றதுபாராய்
சேர்ந்துவருமேகலைபாராய்செறியுமுன்பினுண்டான
காந்தைவடிவானதுபாராய்காவலாவென்றிரங்கினனைச்
சாந்தமுறுகும்பனுமிருந்தான்றலைவன்றனுந்தளர்ந்திருந்தான். ()

ஞானவானீவிதிநெறியைநன்றாயறிந்தாயுறற்பால
தானதுற்றாலிரங்கலையென்றரசனுரைப்பவுயர்கும்பன்
றானுஞ்சொல்வாளினிச்செயலென்றப்பாவிதியையார்தடுப்பார்
மேனிபெண்மைப்பாயிரவுமேவக்கடவேனென்றுரைத்து. (௨௦௨)

பாயலொன்றிலவ்விரவுபயின்றார்வெறிதேவிடியளவின்
மேயபெண்மைதனைவிட்டுமீண்டுகும்பவடிவாக
வேயவிவ்வாறிரப்பெண்ணாயிரவுபோனாற்கும்பனுமா
யாயுமன்னியழியாமலமர்ந்தாள்சின்னாட்கூடாலே. (௨௦௩)

அன்னாள்கும்பமேனியளாயரசன்றனைப்பார்த்தொருபகலின்
மன்னாநித்தமிராப்பெண்மைவருமேன்மடவாரியல்பின்றி
யென்னாளிருப்பதொருகணவனெய்தவேண்டுமுனையலது
பின்னாரையுமுவ்வுலகினுமியான்பேணேனன்பாற்பெருமையினால். ()

மனைவியாகிவிவாகத்தால்வரிப்பாய்சிசிக்கெப்போதுமனை
யினையதியற்றிற்றீங்குநலமிரண்டுமில்லையெனவோடு

மனையவிருப்பேனென்றனரசனதுகேட்டலுங்கும்பன்
புனையுநலத்தாவணிமாதப்புராணையின்றுபுரவலனே. (௨௦௬)

திங்களுதிக்குங்காலத்திற்செய்கவிவாகமெனச்செப்பி
யங்கணரசனெடுமேனியணியுமணிப்பூண்சந்தனங்க
டுங்கமலையிற்கொடுவந்துதூய்நீர்க்கலசதனின்மூழ்கிப் [றி
பொங்குநெறியாற்கடவுளர்தென்புலத்தோர்தவத்தோர்கழல்போற்
கிரியையொழியார்பலம்விரும்பார்கிளர்கற்பகநல்கியவெண்பட்
டுரியதெனச்சாத்தினர்வெய்யோனுயர்ந்தவெற்பினிடைச்சென்று
பெரியவிந்துதோன்றுதலும்பேசுமுறைமைக்கிரியைகளா [ன்
லரியநியமஞ்செய்துமணஞ்செய்தானரசனப்போது. (௨௦௭)

வேறு

இவ்வாறுயர்மந்தரவெற்பிடையேமணஞ்செய்திவர்கள்
கவ்வாவின்பந்துய்த்துக்கடஞ்சூழ்வனங்கடோறுஞ்
செவ்வாய்மயின்மன்னவனுந்திரிந்தார்தினமும்மூன்றில்
வெவ்வாளரசன்றுயிலுமவேலைதனிற்சூடாலை. (௨௦௮)

சென்றுசென்றுமன்னன்றேசநீநிடாத்தி
யொன்றும்பாயறன்னிலொழியாதவள்போன்மீளு
மன்றன்மதனிகைப்பேர்மனைவியானமாது
நின்றசிலநாளிற்பின்னெஞ்சிலொன்றைநினைப்பாள். (௨௦௯)

உற்றபோகங்களிற்பற்றொன்றுமிவனுக்கென்றுந்
துற்றபோகங்களினுற்சோதிப்போமென்றெண்ணிக்
கற்றமாயையாலேகைதவமொன்றிழைத்தாட்
கற்றுத்தேவர்நெருங்கச்சுரர்கோன்வனத்திற்றோன்ற. (௨௧௦)

வந்தமகவான்றன்னைமன்னன்கண்டுவணங்கி
மூர்த்துபூசைசெய்துமுதல்வநீயிங்கெய்த
வெந்தவறமுன்செய்தேனென்னவிமையோரிறையு
மந்தமன்னைநோக்கியன்பாலிவ்வாறறைவான். (௨௧௧)

உனதுகுணத்தினலத்தாலும்பருடனன்வந்தேன்
கனகவுலகமுமக்கேகடவதாமங்குள்ளோர்

வினதுவரவுநோக்கிநின்றாரம்பைமுதலோர்
வனசவதனமலரமார்த்தாண்டனைப்போல்வருவாய். (உகஉ)

கற்பமளவுமிருந்துகடவுட்போகமெல்லாஞ்
சிற்பமன்றித்துய்க்கச்சிவன்முத்திமன்னு
வற்புந்தாழாதடைவாயமைப்பான்வந்தேனென்ற
சொற்பங்கிகளைக்கேட்டுத்தூயமன்னன்சொல்வான். (உகங)

அங்குந்துறக்கத்தின்பமனைத்துமறிவேனெந்தா
யிங்கென்றங்கென்றில்லையெங்குஞ்சுவர்க்கமெனக்குப்
பொங்குஞ்சுகமேயெங்கும்பொன்னாடதனால்வேண்டேன்
றங்கும்பதமேவென்றேசற்றும்பற்றற்றுளாப்ப. (உகச)

மடங்கியமரர்கூட்டம்வந்தவழியேபோகத்
தொடங்குமாயைபலவாற்சோதித்திடவுநெஞ்ச
மடங்கிவிடுதல்கண்டுமயலோர்மாயையாலே
தடங்கண்மயில்ரூடாலேதனிச்சோதனைசெய்தனளே. (உகரு)

திங்களுதித்தவளவிற்செபித்துக்கங்கைக்கரையிற்
றுங்கவரசனிருப்பத்தோகையன்னாள்புறம்போய்க்
கொங்குமலரானிறைந்தகோலவல்லியொன்றிற்
றங்குமொருதார்த்தனைத்தான்சங்கற்பித்துப்புணர்ந்தாள். ()

சந்திமுடித்துமாதைச்சாரரேறுந்தேடி
வந்தவழியிற்புணர்ந்துமகிழுமவளைநோக்கிச்
சிந்தைவிகற்பமின்றிச்சித்தமகிழ்ந்தங்கவளை
மூந்தவிடையூறறநீர்முயங்குமென்றுபோனான். (உகஎ)

போகிம்மறைந்துமுகுர்த்தம்போனபின்னரிவளும்
வேகியாதுபோனான்விகற்பமின்மைகாண்பா
னேகியமளித்தொடர்ச்சியெழிலும்வடிவுந்தோன்ற
யோகிமுன்னர்நின்றாளொதுங்கிநாணிவணங்கி. (உகஅ)

வேறு

மதனிகைப்பெயர்மங்கையுமிவ்வணம்வருந்தி
விதனமுற்றனள்போனிற்பவேந்தனுஞ்சமாதி

யதனையுற்றிருந்தானதிவுற்றனன்பார்த்துக்
கதமறக்குளிர்புந்தியன்மெல்லெனக்கழறும். (௨௧௯

விரைவில்வந்ததென்றுயங்குறுமகிணனைவிட்டு
நிரைவளைக்கையாய்மீண்டுபோயின்பமேநிறையென்
றுரைசெய்காலையின்மதனிகையுரைசெய்வாளுயர்ந்த
புரையிலாதவர்பிழைபலபொறுப்பதுபுகழே. (௨௨௦)

மாதராரியலளவறுபேதமாய்மருளுங்
காதலோவெனிவெண்மடிகருமமொன்றறியா
ராதலாலெனதரும்பிழைபொறுத்தருளென்னப்
போதபாரகன்மதனிகைக்கிவ்வுரைபுகன்றான். (௨௨௧)

வானிலேமரமுளைக்கினுமுனிவென்கண்வாரா
தானமேலவரிகழ்வொன்றன்னமேயுன்னை
மேனயந்துபெண்ணெனவிரும்பலனென்றுவேந்த
னினமில்லதோர்சமமுறுபார்வையோடிருப்ப. (௨௨௨)

கண்டுநின்றசூடாலையுங்கருத்[illegible]ஞனினைவாண்
மண்டிராகமுங்கோபமும்வே[illegible]றமாய்த்தான்
மீண்டுபோகமுஞ்செல்வமுமேவிடாதிவனைத்
தீண்டிடற்புயன்ஞானத்தின்களைகண்டுசேர்ந்தான். (௨௨௩)

மறைதன்மட்டினிமதனிகைவடிவினைமாற்றி
முறைமையானசூடாலையாய்முன்னிற்பனென்று
விறைவன்முன்புசூடாலையாய்த்தோன்றவுமிவளைப்
பொறையினின்றவனோக்கிநல்வியப்பொடுபுகலும். (௨௨௪)

வடிவும்வார்த்தையுமொடுக்கமுமற்றுளகுணமு
முடிவிலாதசூடாலைபோற்றோன்றினைமுன்னே
கொடியகண்ணிநீயாரெனநிருபதிகேட்பக்
கடிமணஞ்செய்சூடாலைநானெனமற்றுங்கழறும். (௨௨௫)

கும்பவேடமுமதனிகைவேடமுங்கொடுநா
னம்மனேயுனையுணர்த்தினேன்ஞானத்தினி[illegible]மை
யிம்பர்மாயையாற்சோதனைபண்ணினேனிவற்றுக்
கம்பமின்றியதியானத்தாற்காண்டியென்ன. (௨௨௬)

ஞானயோகமாந்தியானத்தாரபதிநோக்கி
மானராச்சியந்துறந்ததுமுதலிவண்வந்து
தானவஞ்செய்குடாலையாய்த்தோன்றியதளவா
யீனமின்றியேயாவையுமுணர்ந்தனனிருந்து. (உஉஎ)

தியானநீங்கினன்புளகமேனிறைந்தனன்றிண்டோ
டயாவுமன்புமீதென்னெனத்தயங்குகுடாலைக்
குயாசலந்தழீஇநெடிதிருந்தொன்றுமேற்கூறு
னியாயமன்னவனுகந்தத்தமிழ்ந்தனனிமிடம். (உஉஅ)

மடியின்மேலந்தவஞ்சியைவைத்தவனுரைப்பான்
முடிவில்பேரிருட்குகைநிகர்மோகநின்றென்னை
நெடியபுந்தியாலுய்த்தனையுனக்கெவர்நிகரோ
கொடிமருங்குலாயியற்றுகைம்மாறுமொன்றுளதோ. (உஉகூ)

வருபவக்கடற்கரையிலாய்நிராசையைமருவுந்
தருமமேயிதற்கென்கைம்மாறுளதெனச்சாற்றத்
தெரிவையோதுவாளுன[illegible]ங்குபல்கிரியையிற்றியங்குங்
கருமங்கண்டுனையுய்விக்கநாடினேன்கவன்று. (உ௩௦)

நீயிதற்கெனைமேம்படநிகழ்த்துவழிதன்னை
மேயபுன்றொழினினைவுகள்சங்கற்பவிகற்ப
ம[illegible]யதெத்தனையவையெலாமகற்றினையன்றே
தூயநாயகவென்னலும்வேந்தனுஞ்சொல்வான். (உ௩க)

ஐயமற்றனனுசையற்றேன்பிறிவற்றே
னெய்யவிண்ணையொத்தேன்பெரு[illegible]ள்வடிவமாய்நுடங்கேன்
செய்யலாவதோர்கிட்டையுற்றேன்சித்தமகிழ்ச்சி
வெய்யதுன்பமொன்றிலனிதுவதுவெனவிளங்கேன். (உ௩உ)

சோதிமண்டலத்தெழுந்ததாய்ச்சுவரினிற்படாமன்
மீதுவிஞ்சுதல்குறைதலற்றிருப்பதோர்விளக்கந்
தீதிலாவெனக்குவமையாஞ்சகத்தினைத்தீர்ந்து
யாதுமே[illegible]விண்ணிற்பதற்கிணையொத்துநின்றேன். (உ௩௩)

உ[illegible]டனுந்தன்[illegible]யென்னுருவேறென்றுமுரைக்கக்
கண்டிலேனதனுடனெனைக்கருணைசெய்குருநீ

முண்டகப்பதந்தொழுதனனென்றவன்மொழியத்
தொண்டைவாயவண்மேற்செயல்சொல்லுதியென்றாள். ()

பற்றுவிடிலன்படிகமேற்பாயொளியென்ன
நிற்றநீசொன்னசெய்குவனென்றனனிருப
னுற்றதிதெனிற்பேதைமையொன்றையுமொழித்து
மற்றைமுன்னுளவியற்கையிலிருப்பதுவழக்கே. (௨௩௫)

சிறிதுகாலநாமிவ்வகையிருந்துபின்றேகம்
பிறியுநாளந்தநிலையினைப்பெறுதுமாலென்ன
நெறிசெல்வேந்தனுமியைந்தனனேரிழையெழுந்து
குறிகொள்சங்கற்பவிதியினாலிவையிவைகொணர்ந்தாள். ()

ஏழுவாரிநீர்மணிக்குடத்திவனைநீராட்டிக்
கேழுலாமணித்தவிசிடைக்கிளர்வுறவைத்து
வாழியென்றனளளவறுசேனையும்வகுத்தார்
வேழவெம்பரித்தேரொடும்வீரரால்விளங்க. (௨௩௭)

இனையவேலையிலிதயமொத்திர்பமேயியற்று
மனையதேவிசூடாலையுமரசனுமெழுந்து
புனையும்வேழமேற்கொண்டனர்பொன்னகர்நோக்கி
வினைசெய்காற்பெரும்படையொடுமகிழ்வுறமீண்டார். ()

புரியைநண்ணலூகருறுதானைபோமென்று
வரிசையாலெதிர்கொளவிருதானையும்வயங்கப்
பரிவினண்ணினர்தற்பதினாயிரம்வருடந்
தெரிவையோடிருந்தழிவிலாப்பதம்பின்புசேர்ந்தான். (௨௩௯)

வள்ளலேயிந்தமரபினாற்றொழில்களின்மருவித்
துள்ளுமின்பமிற்சாந்தமெய்ப்போதினுந்தொடர்ந்தாற்
றெள்ளுபோகமும்வீடுமுண்டாமென்றுகளிந்த
வுள்ளமாதவவசிட்டமாமுனிவரனுரைத்தான். (௨௪௦)

சிகித்துவசன்கதை முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் [illegible]

கசன்கதை.

தெளிவின்மிக்குயர்சிகித்துவசன்கதைசெப்பினனிவ்வாறே
யளியகிற்றியாலருந்துயராணுகலையனையவனெறிபோலக்
குளிர்முகச்சுரர்குருமகனுணர்ந்தனனதுகுறித்துணர்கென்ன
வெளிப்படவவனுணர்ந்துளநெறியினைவிளம்புதியெனக்கேட்டான்

குருசில்கேட்டலும்வசிட்டனங்குரைசெய்வான்குருமகன்கசனெ
ன்பான், றெரிபதத்தொடுபதப்பொருடெரிந்துளோன்றேவர்தேசி
கன்முன்போய், விரிசிறப்பெனுங்கூட்டினின்றுயிரொணும்வெங்கரி
புறம்போகைக், குரியவாறெதுகூறெனக்கேட்டலுமும்பர்மந்திரி
சொல்வான். (௨)

